உ

## பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் அருளிச் செய்த நூல்கள்

- **முதல் மண்டலம் :**
  குமரகுருதாச சுவாமிகள் பாடல்கள்
- **இரண்டாம் மண்டலம் :**
  திருவலங்கற்றிரட்டு
  1. முதல் கண்டம் : இசைத் தமிழ்
  2. இரண்டாம் கண்டம் : பல்சந்தப் பரிமளம்
- **மூன்றாம் மண்டலம் :**
  1. காசி யாத்திரை
  2. பரிபூரணானந்த போதம் – சிவசூரியப் பிரகாசம்
  3. தகராலய ரகசியம் – சதானந்த சாகரம்
- **நான்காம் மண்டலம் :**
  1. சிறுநூற்றிரட்டு
  2. குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி
  3. சேந்தன் செந்தமிழ்
  4. பத்துப் பிரபந்தம்
  5. குமாரஸ்தவம்
  6. செக்கர்வேள் செம்மாப்பு, செக்கர் வேளிறுமாப்பு, கனவதிகாரம்
  7. சீவயாதனா வியாசம்
  8. திருத்தல தரிசன காலங்களில் பாடியருளிய கட்டளைக்கலித்துறைகள்
- **ஐந்தாம் மண்டலம் :**
  திருப்பா – திட்பம்
- **ஆறாம் மண்டலம் :**
  ஸ்ரீமத் குமாரசுவாமியம்
- **வசன நூல்கள் :**
  சிவஞான தீபம்
- **சிவஞான தேசிகம் :**
  1. கடவுளைக் குறித்த வியாசம்
  2. தேவர்களைக் குறித்த வியாசம்
  3. பரமசிவ மென்பதைக் குறித்த வியாசம்
  4. வேதத்தைக் குறித்த வியாசம்
  5. சமயங்களைக் குறித்த வியாசம்
  6. ஸ்ரீ சுப்பிரமணிய வியாசம்
  7. குருசிஷ்ய சம்பவ வரலாற்று வியாசம்
- **செவியறிவுறூஉ**
- **சைவசமய சரபம்**
- **நாலாயிரப்பிரபந்த விசாரம்**
- **சுத்தாத்வைத நிர்ணயம்**
- **ஸ்ரீ சண்முக சகச்சிர நாமார்ச்சனை (தமிழில்)**
- **சைவ மகிமை**
- **ஸ்ரீ அருணகிரிநாதர் வரலாற்றுச்சுருக்கம்**

**Rs. 75/-**

செக்கர்வேள் செம்மாப்பு செக்கர்வேளிறுமாப்பு சைவ மகிமை - ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள்

உ

# செக்கர்வேள் செம்மாப்பு
# செக்கர்வேளிறுமாப்பு
# சைவ மகிமை



**பாம்பன்**

**ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்**

உ

சிவமயம்

ஓம் குஹப்ரஹ்மணே நம :

அத்தியாச்சிரம சுத்தாத்வைத
வைதிக சைவ சித்தாந்த ஞானபானு
**பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்**
அருளிச்செய்த

**(1) செக்கர்வேள் செம்மாப்பு - முதற்காண்டம்**

**(2) செக்கர்வேளிறுமாப்பு**

**(3) செக்கர்வேள் செம்மாப்பு - இரண்டாம் காண்டம் (கனவதிகாரம்)**
(சைவசமய சண்டமாருதம் - சைவ சமயக் காவலர் - நக்கீரன் வழியடிமை - புலவர் **பி.மா. சோமசுந்தரனார்** அவர்கள் ஆக்கிய உரையுடன்)

**(4) சைவ மகிமை (17.02.1919 அன்று ஸ்ரீமத் சுவாமிகள் ஆற்றிய உபந்நியாசம்)**

**மகாதேஜோ மண்டல வெளியீடு**
திருவான்மியூர், சென்னை - 600 041.

2020

முதற் பதிப்பு - 1924
இரண்டாம் பதிப்பு - 1979
மூன்றாம் பதிப்பு - 1991
நான்காம் பதிப்பு - 2003
ஐந்தாம் பதிப்பு - 2009
ஆறாம் பதிப்பு - 2020

**விலை ரூ. 75.00**

உ

# அணிந்துரை

குமாரஜெயம்
திருச்சிற்றம்பலம்

ஒரு பூரண சிவனார் செவி யொருநுண்பொருள் சொன்னா
யுரமாரரு ளிருதேவிய ரொருசேர விழைந்தாய்
ஒரு சூருட லிருகூறுற வொளிவேலெறி தந்தா
யுணர்வேறிடு முத்தேவரு மிருதாடொழ நின்றாய்
ஒரு மாமுனி யறிவேயுற யொருபோதனை செய்தா
யுரைமாமறை யிருசம்பவர் முத்தீ முதலானாய்
திருநான்முகன் முக்கண்ணுள னிருமாலுரு வொன்றாத்
திகழுந்திரு வுருவாயினை யெனையும் படர் குகனே.

– திருவலங்கற்றிரட்டு.

*தேவரையு மாலயன் திருவின்மிக்கார் யாவரையும் வேறடிமையாவுடைய எம்மான், நாலுமுகன் ஆதிமறை ஓமென வாதாரமுரையாத பிரமாவை விழமோதி பொருளோதுகென நாலு சிரமோடு சிகை தூளிபட தாளமிடு இளைய பெருமான், அசுரர் பெருங்குலத்தை மாய்ப்ப அஞ்சுமுக மமையாதென் றாறு முகமாக எழுந்தருளிய எந்தை செவ்வேட்பரமன் திருவடித் திருவருளே துணையெனக் கொண்டு சைவப்பயிர் வளர்த்த அருட்கொண்டல், சித்தாந்த சாகரத் தெள்ளமிர்த ஊற்று, சைவ பரிபாலனமே தமக்குரிய கடப்பாடாகக் கொண்ட ஞான வீரர், அத்தியாச்சிரம சுத்தாத்வைத வைதிக சைவசித்தாந்த ஞானபானு பாம்பன் : ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகள் தோத்திர சாத்திரங்களாக அருளிய பன்னூற்களுள் செக்கர்வேள் செம்மாப்பு-செக்கர்வேளிறுமாப்பு எனப் பெயரிய நூலும் ஒன்றாகும். இந்நூல் செக்கர்வேள் செம்மாப்பில் 140 செய்யுட்களையும், செக்கர்வேளிறுமாப்பில் 64 செய்யுட்களையும், ஆக 204 செய்யுட்களைக் கொண்டு திகழ்வது. செக்கர்வேள் செம்மாப்பு முழுமுதலிலக்கணவதிகாரமும் செக்கர்வேளிறுமாப்பு வீடுபேறுங் கூறுவதால் முறையே முழுமுதலிலக்கணவதிகாரம் வீடுபேற்றதிகாரம் என இரண்டு அதிகாரங்களையுடையன. (வீடு:முத்தி - விடுதலை).*

*எத்திறத் தோரும் ஒப்ப வீடுபேறாகிய முத்தியடைதற் பொருட்டு சிவபிரானால் ஆக்கப் பெற்ற முதல் நூல்களே - வேதங்கள் நான்கும், சிவாகமங்கள் இருபத்தெட்டுமாகிய வேத சிவாகமங்களே - பிரமாண நூல்களாம். வேறு எந்த நூலும் பிரமாணமாகமாட்டாது.*

*சான் றோர்களாகிய பெரியோர் இவ்விருநூல்களின் வரம்பை மனத்தினாலும் கடத்தல் செய்யார். வேதாகமங்களால் உணர்த்தப்படும் வடித்த பொருள் நம் போன்றோர் தெள்ளத் தெளிய உணர்ந்து கொள்ளப்படுவதன்று. ஆதலின் ஸ்ரீமத் - சுவாமிகள் 64 செய்யுட்களில் விளக்கியருளியதே வீடுபேற்றதிகாரம் ஆகும்.*

*முழுமுதலிலக்கணவதிகாரத்தில் சொரூபசம்பந்த (சொரூப லட்சண)மும், தடத்த சம்பந்த (தடத்தலட்சண)மும், ஆகிய இரண்டு நிலைகளையும் விளக்கிச் சொரூப சம்பந்தவாரம் 74 செய்யுட்களிலும் தடத்தசம்பந்த வாரம் 66 செய்யுட்களிலும் கூறுகிறார். (வாரம்-பக்கம்) சிவம் தன்னில் தானாய் தன்னையே நோக்கி நிற்கும் நிலை சொரூப சம்பந்தம். உலகை நோக்கிநிற்கும் நிலை தடத்தசம்பந்தம் எனப் பெறும்.*

*ஸ்ரீமத் - சுவாமிகள் புறச்சமய நிராகரணமும் சைவ சமயத்தாபனமுமே தம் வாழ்நாளின் பரம லட்சியமெனக் கொண்டவராகையால் வேலேந்திய விமலன்-குமார பரமேசுவரனைச் சிந்தியாது, வழிபடாது சிறு தெய்வங்களை வழிபடுவதன் பயன் எத்தகையதாமெனின் தமது உள்ளங்கையில் நிரம்பியுள்ள தேனைத் தானே கவிழ்த்துவிட்டுப் புறங்கையில் சிறிதே வழியுந் தேனை நாக்கினால் நக்கிச் சுவைக்கும் செய்கையினை ஒத்ததாகும் என்று செக்கர்வேள் செம்மாப்பு 83-வது பாடலில் ‘செங்கை வேலிறை யெண்ணாது செய்பிற தேவர் பூசை அங்கையால் தேன் கவிழ்த்துப் புறங்கை நக்குதல் போலாம்’ என்று கூறிச் சைவ நெறியின் நுண் பொருள் விளக்கி உண்மை தெரித்து வழிப்படுத்துகின்றார். சைவ மக்கள் உள்ளத்தில் இருத்தத்தக்க உபதேச உரையாமிது,*

*மகாதேசோமண்டலத்தார் யார் எனக்கூறும் முறையில் 110 திருப்பதிகங்களாய் 1100 திருப்பாடல்களாயமைந்துள்ள ‘திருப்பா’வில் கடவுள் வணக்கப் பாடல் 3-ஆவதாயுள்ள தூர்த்தகுணமுள்ள எனத் தொடங்கும் திருப்பாடற்கு ஸ்ரீமத் சுவாமிகள் 80 பக்கங்களில் பேருரை வரைந்துள்ளார்; அவ்வுரைக்கண் ஸ்காந்த மகா புராணம்*

*யுத்தகாண்டத்து 23-ஆம் அத்தியாயத்தில் குமாரப் பெருமான் தன்னுடைய பாரமேச்சுர வடிவாய்க் காட்டியருளிய பான்மையைக் கூறுமிடத்து தனது பரமாற்புத வுறையுளான அப்பாரமேசுரவடிவினை அளப்பறு மகிமையுடைய அரகுமாரனாகிய சுப்பிரமணியன் காட்டியருளினன்; அவ்வடிவினொளியினாற் றரிசித்த தேவர்களுடைய விழிகள் (கணப்போது) பார்வையின்றி மாழ்கின! 'சுரர்களாகிய பிரமவிட்டுணுக்கள் முதலிய தேவசிரேட்ட ரனைவருங் கந்தபிரானாகிய அவனது அளவிலா தேஜோ மண்டலத்தில் ஆயிரத்தில் ஓரமிசவளவே யறிந்தனரென்றும், ஆயிரத்தில் ஒரு கூறே தரிசிக்குமாறு நின்றருளிய அளவிலாத் தேஜோமண்டல விறைவனையே ஆசாரத்தோடும் அன்போடும் வழிபடூஉம் அடியாரனைவரும் எத்தேசத்தாராய் எங்குலத் தாராயிருப்பினும் அவர் 'மகாதேஜோமண்டலத்தார்' ஆவராகலின் யாமவரை யிப்பெயர் தரித்து நிற்குங் கடன்மைக்குட்படுத்தி யுள்ளோம் என்றும் ஸ்ரீமத் - சுவாமிகள் வரைந்துள்ளார்கள்.*

*குமாரபிரானின் பாரமேசுர வடிவினைத் திருவலங்கல்திரட்டு (முதற்கண்டம்) 'சுப்பிரமணிய ரகசியம்' என்ற பத்தின் பத்தாவது பாடலில்,*

**உருநிலையிற் குழவிவடி வுடனி ருந்தே**
**யுயர்தந்தைக் கோம்பொருள்சொன் னதுவி யப்பே**
**அருநிலையி லுயிர்தோறு மிருந்து மந்த**
**வாவிகட்கெட் டாதிருத்த லதிவி யப்பே**
**பெருநிலையி லரியனுமான் வீர வாகுப்**
**பெயருடையார் கொண்டவுருக் களைக்கடந்து**
**கரசிரங்கள் பலவோங்க நின்ற நீர்மை**
**கணிப்பவரார் திருப்புகழ்சொன் னவனாண் மன்னே.**

*என்று காட்டுவது காண்க.*

*மேலும் ஸ்ரீமத் - சுவாமிகள் மகாதேஜோமண்டலத்தார் நின்று ஒழுக வேண்டிய நிலைபற்றி செக்கர்வேள் செம்மாப்பு 92,93,128 பாடல்களில் முறையே,*

**இச்சைசெல் கிரியை ஞான**
**மென்னுமூ வகையாஞ் சத்தி**
**நச்சர வணிந்தோன் கையி**
**னறியமூ விலையாய் நிற்கும்**

அச்சமி லவைகண் முக்கூ
றாய்ப்பிளப் புண்ணா தேக
நிச்சய சத்தி யேயாய்
நிகழ்தலின் வலிது வேலே.

வகைப்படா திருக்கும் வைவேல்
வலியதா யிலங்கு மாறு
பகைப்படா வைந்து மொன்றும்
பகுபடா தொருங்கு கூடித்
தகைச்சடா னனனாய் நிற்றல்
சரதபூ ரணனென் றோர்வார்
தொகைப்படா மாதே சோமண்
டலத்தராய்ச் சுடரு நீரார்.

அவனரு ளொன்றே வேட்டெவ்
வரந்தைவந் துறினு நிற்போர்
எவணுறு பதியிற் றோன்றி
யெங்கிருந் திடினுஞ் சாதி
எவனென வினவு வார்முன்
யாதுரைத் திடினு மன்னோர்
கவனமின் மாதே சோமண்
டலத்தராய்க் களிப்பார் மன்னோ.

*என்று விளக்கிக் கூறிய தோடன்றி மகா தேஜோ மண்டலத்தார் நால் வகை முத்திகளில் ஒன்றை யடைந்து கந்தவுலகில் உயிர்த் துன்பங்கள் பன்னிரண்டுமின்றி இன்பப் பேற்றில் திளைத்திருப்பா ரென்பதனை செக்கர் வேளிறுமாப்பு' 57-ஆம் பாடற் கண்.*

நீண்டவிப் பேறி யாண்டு
நிகரறு மின்பே யாகக்
காண்டலி னிறுமாப் பென்று
கழறலா மிதனை யேற்பார்
யாண்டுநின் றிடினு மெம்மான்
யாணரே பராய்நின் றேதந்
தாண்டிடு மாதே சோமண்
டலத்தராந் தகைமை யோரே.

*என்று அருளியது உன்னி இவர்கள் மகாதேஜோ மண்டலத்தார் களெனக் கூறுமாறு எம்பிரான் அறுமுகச் சிவபிரான் திருவடிக் கடிமைத்திறம் பூண்டு நிற்போமாக.*

140 செய்யுட்களா யமைந்த செக்கர்வேள் செம்மாப்பில் 139, 140-ஆவது செய்யுள்களில் முறையே,

"செவ்வேள் போற்றுதல் செம்மாப் பென்னும் பொருவில் பேரின்பப்பீடு" என்றும், "பேரின்பு உமிழொரு செக்கர்வேள் செம்மாப்பென உலாம் இஃது" என்றும்,

செம்மாப்பெனும் சீர்மைப்பற்றியும், 64 செய்யுட் களைக் கொண்ட செக்கர்வேளிறுமாப்பில் 58,59,60,61,62 - பாடல்களில் முறையே 'நூலுலாம் இறுமாப் போர்ந்தார் நுணங்கியோர் மகிழச் சொல்வார்', 'இக்கறாஇறுமாப்பார்ந்தார் இழைப்பரே இன்பக் கூத்து' 'நலனெனும் இறுமாப்போர்ந்தார் நகைமுக மலரலாமே' 'உளஞ்செயும் இறுமாப்புற்றார் ஓதுநூல் அவன் நூலன்றோ', 'வேலிறை தொழுவோ மென்னும் விவேகமும் இறுமாப்பாமே' என்றுங் கூறி திருவடிச்சார்புத்திறம் காட்டுவது எண்ணுந்தொறும் மகிழ்வைத் தருவதாம்.

ஸ்ரீமத் - சுவாமிகள் கனவு (சொப்பனம்) உண்மை கூறுமுகத்தால் 58 செய்யுள்களில் கனவதிகாரம் எழுதியுள்ளார். இஃது செக்கர்வேள் செம்மாப்பின் இரண்டாங்காண்டமாகத் திகழ்வது. கொற்றவன்குடி ஸ்ரீ உமாபதி சிவம் அருளிய 'சங்கற்ப நிராகரணம்' எனும் சைவசித்தாந்த சாத்திர நூலில் 'கனவின் பயனும் நனவின் பயனும் வினையின் பயன் அவை பொய்யென வேண்டா' என்று கூறியவண்ணம் சுவாமிகள் கனவு பொய்யன்று எனத் தாமெழுதிய கனவதிகார முன்னுரையின் பிற்பகுதியில் கனவதிகாரச் செய்யுள் 38, 48, 49, 50, 56, 57-ன் பொருளை அறியுமாறு கூறி, கனவைப் பொய்யென்பவனுக்கு இறைவன் அனுக்கிரக நிலைகளில் ஒன்றாயுள்ள கனவின்கண் இறைவன் அனுக்கிரகிப்பதும் பொய்யாகிவிடும் என்றும், இவ்வுண்மை ஓராமை பெருங்கேட்டை விளைவிப்பதாகு மென்றும், இதனை அறிவுறுத்தவே இக்கனவதிகாரம் எழுந்ததென்றும் சுவாமிகள் வரைந்துள்ளமை காண்க.

'அத்தேவர் தேவர் அவர் தேவர் என்றிங்ஙன் பொய்த்தேவு (பொய்த்தெய்வம்) பேசிப் புலம்புகின்ற பூதலம்' என்று 8-ஆந் திருமுறையாய்த் திகழுந் திருவாசகம் - திருக்கோத்தும்பி பதிகத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய பண்புணர்ந்து மெய்த் தெய்வம் இதுவெனக் காட்டிச் சிவநெறி மாண்பு காட்டும் சித்தாந்தப் புலமை வித்தகர், பாம்பனடிகள் நூற்கட்கு மலைவறத் தெளிவுறப் பொழிப்புரை பேருரை வகுக்கும் இராணிப்பேட்டை

சைவசமயக்காவலர், சைவசமய சண்டமாருதம், சைவ சித்தாந்த செம்மல், நக்கீரன் வழியடிமை புலவர் பி.மா. சோமசுந்தரனார் அவர்கள் இந்நூலிற்கும் பொழிப்புரை வரைந்துதவி யுள்ளார்கள்.

ஸ்ரீமத் சுவாமிகள் அருளிய ஸ்ரீமத் குமார சுவாமியம், பரிபூரணானந்த போதம், கடவுளைக் குறித்த வியாசம், பரமசிவ மென்பதைக் குறித்த வியாசம், தேவர்களைக் குறித்த வியாசம், பத்துப் பிரபந்தம், திருவலங்கற்றிரட்டு (இரண்டாங் கண்டம்) முதலிய நூல்களை அச்சியற்றி சைவ உலகிற்கு வழங்கி உபகரித்த சைவத்திருவினர் **N.**ஜெயராமன் (மேற்கு மாம்பலம், சென்னை) அவர்கள் இந்நூலினையும் அச்சிட்டு வெளியிடுகிறார்கள்.

மேற்படியார் இம்மையில் எல்லாச் செல்வமும் அம்மையில் திருவடிப்பேரின்பச் செல்வமும் பெற்றுவாழக் கொடு நோய்க்கருமருந்தாய்க் கோளர்க்கிடியாய் வருநோய்க் குயர்மருந்தாய அனுகூலன், கொடியவர் பால் செல்லா திருத்தித் திருவருளைத் தான் செலுத்திச் செல்லாத செல்வம் அருள் செவ்வேலான், போரூர் கருவூர் புகுதாப் பழனிமலை உடையான் எனையாளுடையான் ஸ்ரீ ஞானதண்டாயுதபாணிப் பெருமான் திருவடிப் போதுகளை மனம், மொழி, மெய்களால் சிந்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

*4.8.1991* இங்ஙனம்
பாம்பன் சுவாமிகள் திருமடம், குகேசனடிமை,
தெய்வச்சிலை நல்லூர். **பழனி சாது தங்கவேலு சுவாமி.**

**உ**
**சிவமயம் :**
**திருச்சிற்றம்பலம்**
**ஓம் குமரகுருதாச குருப்யோ நம:**

# முகவுரை

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் சாத்திரமாகவும் தோத்திரமாகவும் பல நூல்களை அருளிச் செய்து உள்ளார்கள். அவை செய்யுள் வடிவமாகவும் உரைநடை வடிவமாகவும் உள. அவற்றுள் செக்கர்வேள் செம்மாப்பு, செக்கர்வேளிறுமாப்பு என்னும் இரண்டும் செய்யுள் வடிவில் அமைந்துள்ளன.*

*தமிழில் சாத்திர நூல் அருளிய ஏனைய சான்றோர்களுக்கு இல்லாத பெருமை ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளுக்கு உண்டு. அச்சான்றோர்கள் மக்களில் ஒருவரையே குருவாகக் கொண்டவராவர். நம் சுவாமிகள் முழுமுதல்வன் ஆகிய ஸ்ரீகுமார பரமேசுவரனையே குருவாகக் கொண்டவர். எனவே தத்துவங்களை எடுத்தோதும் தலைமை அவர் பாற் சிறந்திருத்தல் காணப்படும்.*

*யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களது சீடர் ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் 1902-ஆம் ஆண்டு வெளியிட்ட சைவபூஷண சந்திரிகை என்னும் நூலின் பதிப்புரை பக்கம் 8-இல் நமது சுவாமிகளை "உபய அருணகிரிநாத சுவாமிகள் என்று அறிஞரால் கூறப்படும் மேன்மை தங்கிய அத்தியாச்சிரம சிவயோகானந்த குகதாச ஸ்ரீலஸ்ரீ பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்" என்று போற்றியிருப்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.*

*ஸ்ரீமத் சுவாமிகள் தம் எழுவாயுரையுள் இவ்விரு நூற்களே தமது முடிவான சித்தாந்தம் என்று கூறுதலை மனங் கொளல் வேண்டும். இவை அரும் பெரும் கருத்துக்கள் ஆகிய மணிகளைக் கொண்ட பேழைகளாம்.*

*செக்கர்வேள் செம்மாப்பு சொரூப சம்பந்தவாரம், தடத்த சம்பந்தவாரம் ஆகிய இரண்டினையும் உட்கொண்ட முழு முதலிலக்கண அதிகாரமாகும். செக்கர்வேளிறுமாப்பு வீடுபேற்றை உணர்த்தும் அதிகாரமாகும்.*

*சொரூப சம்பந்தவாரத்து முழுமுதல் இலக்கணத்தை,*

பெரிதிலுஞ் சிறிதி லுந்தான் பெரிதுமாய்ச் சிறிது மாகி
அரிதிலு மரிதா யூர்பே ரணைபிறப் பிறப்பு வேட்கை

**திரியுரு வருவாண் பெண்ணெென் றிறநிற மிலதாய்த் தூய்தாய்ப்**
**புரிவினர்க் கின்பாய் நிற்கும் பொருவற நிறையத் தெய்வம். (பாடல் 72)**

**அத்தெய்வந் தானே முன்ன ரறைந்தவா றனுபூ திக்கண்**
**எத்தெய்வ முந்தொ ழீஇ யேத்தமெய்ஞ் ஞான வின்ப**
**வத்துவென் றிலகு மோர்சுப் பிரமணி யங்காண் மாண்பார்**
**முத்திமெய்ம் மார்க்க மிம்மேன் முதலிழந் துழல்வார்க் கின்றே. (பாடல் 73)**

*என்று, ஸ்ரீமத் சுவாமிகள் அருளியுள்ளதை ஒவ்வொருவரும் மனதில் பதித்தல் வேண்டும். தடத்த சம்பந்தவாரத்து முருகப்பரமனின் திருவுருவம் ஆயுதங்கள் முதலியன விளக்கப்பட்டு உள்ளன. தேவயானையம்மையார் ஞானசத்தியெனவும் வள்ளிப் பிராட்டியார் கிரியா சத்தினெவும் உணராது வேறு கூறுவார் செய்கை ஏற்புடைத்தன்று என்று கூறுதல் அறிதற்பாற்று. வீடுபேற்றதிகாரத்தில் சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய கதிகளும் அக்கதிகளை அடைந்துளோர் நிலைகளும் அணிபெற விளக்கப் பட்டுள்ளன.*

*நமது சற்குரு நாதர் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள்பால் மாறாத அன்பு பூண்டொழுகுபவரும், அப்பெருமானார் வழிநின்று ஸ்ரீ குமாரபரமேஸ்வரன் புகழினையே பரப்பி வருபவருமான சைவ சமய சண்ட மாருதம் சைவ சமயக் காவலர் நக்கீரன் வழியடிமை புலவர் பி.மா. சோமசுந்தரனார் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ பழநி சாது தங்கவேலு சுவாமிகள் அருளாணைப்படி இவ்விரண்டு நூல்களுக்கும், அழகிய நடையில் உரை செய்துள்ளார்கள்.*

*இத்துடன் ஸ்ரீமத் சுவாமிகள் 17.02.1919 அன்று சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பால சுப்பிரமணிய பக்த ஜன சபையில்* ***‘சைவமகிமை’*** *என்னும் தலைப்பில் ஆற்றிய விரிவுரையும், அதே சபையில் சுவாமிகள் 24.6.1918-ல் ஸ்ரீமத் - அருணகிரிநாத சுவாமிகள் குருபூசை தினத்தில் ஆற்றிய* ***“அருணகிரிநாதர் வரலாற்றுச் சுருக்கமும்”*** *அவற்றின் பெருமை கருதி சேர்க்கப்பட்டுள்ளன.*

*இந்நூலை யாவரும், ஓதி யுண்மை யுணர்ந்து இறைவனருள் நெறியில் படர்ந்து உய்தி பெறுவார்களாக. அங்ஙனம் கூட்டுமாறு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் திருவடி மலர்களையும் ஸ்ரீ குமாரபரமேசுவரனின் இணையடித் தாமரைகளையும் இறைஞ்சுகின்றேன்.*

*மேலை மாம்பலம்* **ந. செயராமன்**
*சென்னை - 33.*

ஓம்
குமாரகுருப்யோநம:

# எழுவாயுரை

*செக்கர்வேள் செம்மாப்பென்னும் பெயரிய இந்நூல், வைதிக சைவசமயநிலையை ஐயந் திரிபற இனி தெடுத்துக் கூறி உண்மையை நிறுவுமாறு செவ்வேட் பரமன் றிருவரு ளொன்றனையே முன்னிட்டு எம்மாற் பாடப்பட்டது. இதனுள், முழுமுதலிலக்கணவதிகாரமும், செக்கர் வேளிறுமாப்பினுள் வீடுபேற்றதிகாரமும் எமது முடிவான சித்தாந்த மாகும். (1101) ஆயிரத்து நூற்றொரு திருப்பாட்டுக்களா னிரம்பியுள்ள திருப்பா வென்னும் எமது நூலினுள் 43-திருப்பாட்டுக்கட்கு மேற்கோள்களோடு வேதத்தமிழா லுரையாக வரையப் பட்ட* **திட்பத்திலே** *(3-ஆம் பத்தின் 8-ன் உரையிலே) "இத்தீர்வையே எமது முடிவான சித்தாந்தம்" எனவுந் தீட்டப்பட்டமையின் அந்நூலுட் பரந்து கிடக்கும் பொருளும், சுருங்கிநிற்கும் பொருளும் இச்சித்தாந்த மேயாம். இன்னும் எம்முடைய பத்திய கத்திய ரூபமாயுள்ள பன்னூல்களின் முடிபும் இதன்கண் ணேயே அடங்கும். எமக்கு வயது 70-க்கு அதிகமே யென்னலாம். துறவு நிலையினை யடைந்து 29-வருடங்கட்கு அதிகமாம். இளம்பிராயமுத லின்றுகாறும் (தென் மொழி வடமொழி) நூலாய்வி னேற்பட்ட நூலளவை, காட்சியளவை, கருதலளவை யென்னு மூன்றானும் இச்சித்தாந்தத்தினு மேலதாகவொன் றறிந்தே மல்லேம்.*

*திருப்பா வென்னும் பெயரிய நூல், கலியுகம் 4998-ஆம் ஆண்டென்பதற்கு நேராய சாலிவாகன சகாத்தம் 1819-லே துர்முகி வருடத்து மாசிமாதத்தின் (கி.பி. 1897) எய்திய பன்னிரு மகாமக வெல்லையிற் போந்த புண்ணிய காலத்தை வெளியிட்டுக் கொண்டு பிறங்குகின்றதாகலின் அஃதாக்கப்பட்ட பின்றை இந்நூல் தொடங்கப்பட்ட தென்பது 60-ஆந் திருவிருத்தத்தின்கண்-*

"மேலும், ஓவிலா நியாய மெல்லா முரைக்குமே திருப்பா வென்னூல்" எனவரு தொடரா னினிதறியக் கிடக்கின்றது. மேல், 61-முதன் முடிவிறுவாய்க்கிடந்த மற்றைய திருவிருத்தங்களுள் இரண்டாங் காண்டத்துக் **கனவதிகாரம்,** கி.பி. 1913-லே ஆக்கப்பட்டதாகும். ஏனைய வெல்லாம், நிகழுஞ் சாலிவாகன சகாத்தம் 1846-ல் (கி.பி. 1923) ருதிரோற்காரி வருடத்துச் சித்திரைத் திங்களுக்குப் பின் பாடப்பட்டனவாம்.

ஸுப்ரஹ்மண்யோம்.

புதுப்பாக்கமென்னுங்
குமாரபுரம், சென்னை.
23-6-1923.

இங்ஙனம் :
குமரகுருதாசசுவாமிகள்
பாம்பன்.

உ
சிவமயம்
குஹப்ரஹ்மணேநம :
திருச்சிற்றம்பலம்

# செக்கர்வேள் செம்மாப்பு

## முதலாங்காண்டம்
## முழுமுதலிலக்கணவதிகாரம்
## பாயிரம்

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்*

1. பொன்னுய ருலகு மற்றைப் புவனமும் போற்றி சைப்பத்
தன்னுயர் வாய தூய தனிப்பெருங் கருணை வானாய்க்
கொன்னுய ரறிவா யுள்ள குருபரன் றனைப்ப ழிச்சி
மன்னுயர் செக்கர் வேள்செம் மாப்பையும் வழுத்து வேனே.

*உயர்ந்த விண்ணுலகத்தில் வாழும் தேவரும் ஏனைய உலகங்களில் வாழும் உயர்ந்தோரும் தனது திருவடிமலரைப் போற்றிப் புகழ்ந்திட எப்பொருளும் நிகராகாமல் தனக்குத் தானே ஒப்பாகி உயர்ந்த தூயதாய ஒப்பற்ற பேரருளைப் பொழியும் வானமாய்ப் பெருமை மிக்க வாலறிவனாய் விளங்கும் குமரகுருபரனை வாழ்த்தி நிலைபெற்ற மேம்பாடு கொண்ட செக்கர்வேள் செம்மாப்பையும் சொல்லத் தொடங்குவேன்.*

*(முருகன் பொன்னார் திருமேனியுடையவன். “பொன்மூர்த்தி” (ஸ்ரீமத் குமாரசுவாமியம் தேவலோகத் திருவிளையாடல்) என்று ஸ்ரீமத் சுவாமிகள் கூறுதல் காண்க. பொன் மூர்த்தியின் இலக்கணங்கூறும் இந்நூல் பொன் என்று தொடங்கும் பொற்புடைய தாயிற்று.*

*செம்மாப்பு : செம்மையாகிய வீறு. செம்மை என்பது சிவம், சிவகதி, சிவநெறி எனப் பொருள்படும். பெருங்கருணைவான் = பேரருள் வெளி எனலும் ஒவ்வும். குருபரன் = ஞானம் உணர்த்தும் குருமார்களின் தலைவன். எனவே சிவகுரு ஆகிய முருகனை உணர்த்திற்று. செம்மாப்பையும் என்ற உம்மை எதிரது போற்றலாகச் செக்கர்வேள் இறுமாப்பையும் இறந்தது தழுவலாகப் பரிபூரணானந்த போதம், தகராலய ரகசியம், திருப்பா முதலிய நூல்களையும் உட்கொண்டது என்க.)*

2. **கற்றவர் கல்லார் யாருங் கருத்திடை யெளிதோர்ந் துண்மை**
**உற்றிடக் கடிய சொற்க ளோங்குறா வண்ண முற்றே**
**பெற்றிடு காறு மிந்த விருத்தமே பிடித்தம் மாப்பைச்**
**சொற்றிடு வேனே நீதித் துணிபின ருவக்கு மாறே.**

*சமய நூல்கள் கற்றவரும் அவை கல்லாதவரும் ஆகிய யாவரும் சமய உண்மைகளைத் தங்கள் உள்ளத்தில் எளிதாக உணர்ந்து மெய்ப்பொருளைக் கூடுமாறு இந்த நூல் முற்றுப் பெறுமளவும் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமே கொண்டு பொருள் எளிதில் விளங்காத அரிய சொற்கள் அவ்விருத்தத்தில் பெரிதும் பயிலாத வண்ணம் அறநூல் துணிபு உணர்ந்த நல்லோர் உள்ளம் மகிழும்படி அழகிய செக்கர்வேள் செம்மாப்பு என்ற நூலைக் கூறுவேன் ஆயினேன்.*

*(உண்மை = மெய்ப்பொருள் ஆகிய இறைவன் - சத்து என வடமொழிகூறும். உய்தி விரும்பிச் சமயவுண்மைகளை அறிய விரும்புவாருக்கும் சமய வளர்ச்சிக்கும் பெரிதும் இடையூறாகக் கடினமாய விதிகளை வகுத்துள்ளனர் சிலர். சமய நூல்களைத் தொடுவதற்கே அஞ்சும்படி அவ்விதிகளை வகுத்த நல்வினையாளர் யாவரோ? நால்வர் அருளிய தமிழ் மறைகளிலும் திருத்தொண்டர் புராணத்திலும் இவ்விதிகளைக் காணக் கூடவில்லை. நம் ஆசிரியர் பெருமான் அவ்விதிகளை விலக்கி இறைவன் திருவருளை நாடும் யாவரும் உய்தி பெறுமாறு இந்நூலை அருளிச் செய்துள்ளார்.* ***இஃது அவர்தம் பேரருளைக் காட்டுவதாகும்.***

*நடுநிலை நின்றாரே உண்மை காணும் திறலினர். ஏனையர் நல்லனவற்றை அல்லன என்றும் அல்லனவற்றை நல்லன என்றும் பிறழ்ந்துணர்ந்து வீண்படுவர். திருப்புகழைக் கீழ்படுத்துரைத்துக் கருப்புகு நடையினராய்ச் சிலர் நடைதரலையும் நினைக. எனவே அடிகளார் "நீதித் துணிபினர் உவக்குமாறே" என்றருளிச் செய்தார்.)*

## நூல்
## சொரூப சம்பந்த வாரம்

*(இறைவன், சுவானுபூதியில் காணப்படும் ஏகபூரணமாயில்லாமல், பலவாய்ப்பிறிது பொருளின் சார்பாய் இருக்கும் திறமே தடத்தலக்கணம் எனப்படும். தடத்தம் = அயலிடத்துளது. தமிழில் பொது இயல்பு எனப்படும். 'நிலவுலாவிய நீர்மலி வேணியன்' பொது இயல்பாம். பொது இயல்பல்லாத ஏகபூரண இயற்கையாய் இருக்கும் திறமே சொரூபலக்கணம் எனப்படும். 'அலகில் சோதியன்' என்பது*

*சொரூபத்திறம். சொரூபலக்கணம் தமிழில் சிறப்பு இயல்பு எனப்படும். சொரூப இலக்கணத்தை விளக்குதலின் சொரூப சம்பந்த வாரம் எனப்பட்டது. வாரம் என்பது பக்கம் என்னும் பொருளைத் தரும்).*

3. **செக்கரென் பதுசி வப்பாஞ் சிவணிய வேள்வி ருப்பாந்**
**தக்கவிப் பெயரோன் றக்கார் விரும்புசெஞ் சோதி யாவன்**
**மக்கினக் கருவேள் பீட்டை மாய்த்தருள் வல்லா னாவன்**
**பொக்கமி லிறைவ னாவ னெனநனி புகல்வார் கற்றோர்.**

*செக்கர்வேள் என்னும் பெயரில் உள்ள செக்கர் என்பது சிவப்பு என்னும் பொருளைத் தருவது ஆகும். அதனோடு பொருந்திய வேள் என்பது விருப்பம் என்னும் பொருளைத்தருவது ஆகும். தனக்கே உரிமையாக இப்பெயரையுடைய முதல்வன் மெய்யுணர்வு தலைப்பட்ட மேலோர் விரும்பும் சிவந்த ஒளிவடிவினன் ஆவான் என்றும் உயிர்களைத் துன்பத்தில் ஆழ்த்தும் காமனின் வன்மையை அழித்தருளும் வன்மையுடையவன் என்றும் அழிவற்ற இறைவன் ஆவான் என்றும் மெய்யறிவுடையோர் விளக்கமாக விரும்பிக் கூறுவர்.*

*(சோதி = யாண்டும் ஒளிவண்ணமாய் அறிவுப் பொருளாயிருக்கின்ற சொரூப நிலை. செந்நிறம் செஞ்ஞாயிற்றைப் போன்ற பரஞ்சோதி சொரூபத்தைக் குறிப்பதாகலின் 'செஞ்சோதி' என்றார். முருகன் காலத்தைத் தொழிற்படுத்தும் தலைவன் ஆதலின் 'பொக்கமில் இறைவன்' என்றார். குகன் என்னும் வடமொழிக்கு இறைவன் என்பது நேரிய தமிழ்ச்சொல்லாகும். இத்திருப்பாட்டால் மெய்யுணர்வு பெற்றோர் வழிபடும் தெய்வம் என்பதும் காமத்தைக் கடிபவன் என்பதும் காலத்தை நடத்துபவன் என்பதும் செவ்வேட் பரமனின் இலக்கணங்கள் என்று உணர்த்தப்பட்ட தறிக.)*

4. **பூதிசே ருயிர்க ளுள்ளக் குகைதொறும் பொருந்து மாற்றாற்**
**சோதியாஞ் செக்கர் வேட்குத் துகளறு குகனென் றோர்பேர்**
**ஆதிநூ லறையு மஃதே யந்தரி யாமி யென்னா**
**ஓதியேய் வாய்மை யைத்தா னுணர்த்துமென் றறிவார் நல்லோர்.**

*உடம்பைச் சேர்ந்துள்ள உயிர்களின் உள்ளக் குகைகள் தோறும் பொருந்தியுள்ளபடியால் ஒளிவடிவினன் ஆகிய செவ்வேட் பரமனுக்குக் குகன் என்னும் குற்றமற்ற ஒப்பிலாத பெயரை முதல்நூல் ஆகிய வேதங்கள் முழங்கும். அத்திருப்பெயர் எல்லாப்*

3. பொக்கம் = பொய்மை; **பிங்கலநிகண்டு.**

*பொருள்களுக்குள்ளும் நிறைந்திருப்பவன் என்று பொருள் தரும் அந்தரியாமி என்று ஓதியமைகின்ற உண்மையை உணர்த்துவதாகும் என்று நல்லோர் உணர்வர்.*

*(இருக்கு வேத அட்சமாலிகை உபநிடதம் "பகவாந்குஹ :" எனல் காண்க. குகன் என்னும் திருப்பெயர் சிவபிரானுக்கும் முருகனுக்குமே உரியது. குகன் என்னும் பெயர் சிவபிரானுக்கு உரித்தாதலை*

> *"ஸர்வாநந சிரோக்ரீவஸ் ஸர்வபூத குஹாசய:|*
> *ஸர்வவ்யாபீஸபகவாந் தஸ்மாத் ஸர்வகதச்சிவ:||*

*எனவரும் சுவேதாசுவதர உபநிடதத்தால் அறிக. பொருள் : எங்கும் முகமும் தலையும் கழுத்தும் உடையவனும் எல்லா உயிர்களின் உள்ளக் குகைகளில் வாழ்பவனும் எங்கும் நிறைந்திருப்பவனுமாயுள்ளான் அந்தப் பகவான். அதனால் சிவனே யாண்டும் நிறைந்திருப்பவன் ஆவன்" எனவாம். முருகனுக்கு உரித்தாதலைக் குகன் என அவனுக்கு வழங்கும் திருப்பெயரே உணர்த்தும். இதனை*

> *"குஹேதி தஹராகாசோ வேதாந்தேஷுஹிபட்யதே |*
> *தந்நிஷ்டோயம் குஹ: ப்ரோக்தஸ் ஸர்வஹ்ருத் கமலாசந: ||*

*எனவரும் மஹாஸ்காந்த புராண சம்பவகாண்டத்து 35-ஆம் அத்தியாயத்தால் அறிக. பொருள் : வேதவேதாந்தங்களிலே தகராகாசமானது குகை என்று கூறப்படுமன்றோ! எல்லாவுயிர்களின் உள்ளத் தாமரைகள் ஆகிய அக்குகைகளில் உறைபவன் நின்மகனாகலின் அவன் குகன் எனப்படுகின்றனன்" எனவாம். இஃது சிவபிரான் தேவிக்குக் கூறியதாக உள்ளது.*

*தமிழ்மறை "உடையாளுன்றன் நடுவிருக்கும், உடையாள் நடுவுள் நீயிருத்தி, அடியேன் நடுவு ளிருவீரு மிருப்பதானால்" என்பதனால் சிவபிரானும் "கொந்துவார் குரவடியினும் அடியவர் சிந்தை வாரிச நடுவினும்" என்பதால் முருகனும் குகன் எனும் பெயருக்குரிய ராதலைக் காட்டும். 'மலர்மிசை யேகினான்' என்றார் தேவரும்)*

5. **செலுத்துத லென்னுஞ் சொல்லே கடவுத லெனச்செந் நூல்கள்**
**பலத்துட னுரைக்கு மாற்றாற் பசுக்களி னுளத்தே நின்று**
**செலுத்துள மாங்கு கற்குக் கடவுளென் றிருப்பே ரொன்றெத்**
**தலத்தரு மிறும்பூ தெய்தத் தமிழினி லேய்ந்த தாமே.**

*கடவுதல் என்னும் சொல்லுக்குச் செலுத்துதல் என்பது பொருள் என்று தமிழ் நூல்கள் கூறும் உறுதியால் பசுக்கள் ஆகிய எல்லாவுயிர்களின் உள்ளத்தே தங்கி அவற்றை இயக்கும் உள்ளம் ஆகிய குகப்பரமனுக்குக் கடவுள் என்னும் ஒரு திருப்பெயர் எல்லா வுலகத்தவரும் இறும்பூது அடையும்படி தமிழில் அமைந்தது ஆகும்.*

*(செந்நூல் = தமிழ்நூல், 'செஞ்சொல் மாதிசை' என்றார் அருணகிரியாரும். உயிர்களின் உள்ளக் குகைகளில் தங்கி அறிவு, விழைவு, செயல் என்பவற்றை இயக்கிச் செலுத்துவதால் இறைவன் கடவுள் எனப்படுகின்றனன். கடவு+உள்=கடவுள். கடவு வினைத் தொகை. திருவுளமே 'உள்' எனப்பட்டது).*

6. **இந்தநற் கடவுட் பேர்மற் றெவருளும் பொருந்தா தந்தச்**
**செந்திருக் குகனைத் தானே சேருமென் றோர்வார் யாரும்**
**பந்தமொய் கடந்த வாற்றாற் பரமற்குக் கடவுட் பேர்தான்**
**வந்ததென் றெழுதி னார்தம் வரைதலை வழுவென் னாரோ.**

*நலம் நிரம்பிய கடவுள் என்னும் இப்பெயர் வேறு எத்தேவருக்கும் பொருந்தாது அழகிய செவ்விய திருவுடைய குகனையே சேரும் என்னும் உண்மையை உணர்ந்த யாவரும் பாசவலிமையைக் கடந்தமையால் இறைவனுக்குக் கடவுள் என்று பெயர் வந்தது என்று எழுதினவரின் உரையைப் பிழை என்று கூறாரா? கூறுவர் என்க.*

7. **இழிவறு பரங்குன் றோடே யியைதல்போல் வடசொல் லோடு**
**கொழிதமிழ் மொழியு நேரே கூடிய தெனக்கொள் ளாற்றால்**
**எழிலுறு கடத்தி னுள்ளே யிருக்குமோ ருளத்தி னுக்கே**
**அழிவறு கடவுட் பேர்தா னாகுமென் பதுவு மொவ்வும்.**

*உயர்வுடைய பரம் என்ற வட சொல்லோடு குன்று என்ற தமிழ்ச்சொல் கூடிப் பரங்குன்று என்று முடிந்ததுபோல அழகிய கடம் என்ற வடசொல்லோடு உள் என்னும் தமிழ்ச்சொல் கூடி உடம்பின் உள்ளிருக்கும் இறைவன் எனப் பொருள்படும் அழிவற்ற கடவுள் என்ற சொல் தோன்றியது என்று கூறுவார் மொழியும் சிறப்பில்லாததாய் முடிதலின் இவ்வாறு கூறுதலும் மேற்பாடலில் கூறிய பிழை என்ற முடிவையே பொருந்தும் என்க.*

*(இவையன்றி வேறு விளக்கங்கள் கூறினும் பொருந்தா. என்னை? குகப்பிரமம், அந்தரியாமி, கருமசுதந்திர கருத்தா என்னும் வடமொழிகளுக்கு நேராயும் அரு, உரு என்பவைகளுக்குப் பொதுமையாயும் கடவுள் என்னும் சொல் தமிழில் இருத்தலான் என்க).*

8. **கடவெனும் வினைத்தொ கைச்சொற் கடையுறு முள்ளென் போர்தான்**
**சுடரொளிச் செக்கர் வேளாய்த் துலங்கலி னவற்கே யென்றுங்**
**கெடலறு கரும சொந்தங் கிளர்தலிற் கருத்த னென்போர்**
**இடரறச் சேரு மேனோர்க் கியம்புதல் சிறவா தன்றே.**

*வினைத்தொகையாகிய கடவு என்பதோடு உள் என்பது கூடிய கடவுள் என்னும் பெயர்க்கு உரியன் ஒளி வீசும் செவ்வேட் பரமன் என விளங்குதலாலும் அவனுக்கே என்றும் அழிவற்ற தொழில் நடத்தும் உரிமையாகிய முதன்மை விளங்குதலாலும் கருத்தன் என்னும் பெயர் தடையின்றி அவனையே சேரும். அப்பெயரை ஏனைய தேவர்களுக்கு ஏற்றிக் கூறுதல் சிறப்பு ஆகாது. வெறும் புகழ் மொழியேயாம்.*

*(குமாரனது கட்டளையினாலேயே நமன் பாவிகளை வாணாள்களில் நோய்களாலும் இறந்த பிறகு நரகத் துன்பத்தாலும் ஒறுக்கின்றனன். நவப்பிரசாபதிகளோடுள்ள நான்முகன் படைக்கின்றனன். நாராயணன் அளிக்கின்றனன். காலாக்கினிருத்திரன் பிரளய காலத்தில் யாவற்றையும் ஒடுக்குகின்றனன். உயிர்களைப் படைப்பதும் ஒடுக்குவதும் காலம் தான். அக்காலமோ இச்சுப்பிரமணியன் வசத்தில் உளதே என்று சிவபிரான் தேவிக்குரைத்ததாக* ***மகாஸ்காந்தபுராணம் சம்பவகாண்டத்து*** *35-ஆம் அத்தியாயச் சுலோகங்களால் பெறப்படுவதால் சேய்ப்பரமன் கரும சுதந்திர கருத்தா என்பது உணரலாம்.)*

9. **அனைத்துமுள் ளடக்கும் வத்து வாகலிற் பரனென் றாவன்**
**நினைத்தது முடிக்கு மாற்றா னிறைசத்தி மானென் றாவன்**
**இனைத்தெனற் கமையாச் சோதி யாகலிற் பரதே வாவன்**
**வினைத்தளை யில்லாச் செக்கர் வேளெனு மொருவன் றானே.**

*இயல்பாகவே பாசங்களின் நீங்கியவனாகிய செவ்வேட்பரமன் என்னும் ஒப்பற்ற முழுமுதல்வன் யாவற்றையும் தன் பாரமேசுவரத் திருமேனியில் அடக்கிக் கொண்டிருக்கும் பொருளாதலால் அவன் பரன் எனப்படுகின்றனன். எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கும் திறத்தால் நிறை சத்திமான் (வரம்பில் ஆற்றலுடையவன்) எனப்படுகின்றனன். இன்ன தன்மையன் என்று கூறுதற்கு அடங்காத ஒளிப்பிழம்பினன் ஆதல் பற்றி பரதே (முழுமுதற்கடவுள்) எனப்படுகின்றனன்.*

10. **நன்மையாய் நலஞ்செய் வோனாய் நவைதப வசீக ரிக்குந்**
**தன்மையாற் சிவனென் பேருந் தளைமல மில்லா னாமோர்**
**தொன்மையா லமலப் பேருந் தொடருயிர்த் தலைவ னாய**
**வன்மையாற் பசுப திப்பே ருங்குகன் மருவு மாதோ.**

*இயற்கையாகவே நன்மைப் பொருளாகி உயிர்களுக்குப் பேரின்பமாகிய நலத்தை ஊட்டுவோனாகி அவ்வுயிர்கள் பால் உள்ள மலக்குற்றம் நீங்கும்படி தன்பால் ஈர்க்கும் தன்மை யானாகியிருத்தலால் சிவன் என்னும் திருப்பெயரும் அனாதியாகவே பிணிக்கின்ற மலம் சாராத பண்பால் அமலன் என்னும் பெயரும் எண்ணற்ற உயிர்களுக்குத் தலைவனாய் விளங்கும் ஆற்றலினால் பசுபதி (பசு = உயிர்கள்; பதி = தலைவன்) என்னும் பெயரும் குகப்பரமனைத் தழுவி நிற்கும்.*

11. **தகுசுகந் தனையுண் டாக்கிச் சம்புவென் பெயரைக் கொள்வன்**
**மிகுமயிச் சுரிய கோவாய் மிளிர்ந்தரு ளீச னாவன்**
**தொகலறு தவத்தா லீச ராயினா ரெல்லாஞ் சூழத்**
**திகழ்தலின் மகேச னாவன் செக்கர்வே ளொருவன் றானே.**

*செக்கர்வேள் என்னும் ஒப்பற்ற பரமனே உயிர்கட்கு ஏற்புடை இன்பத்தை வழங்குதலால் சம்பு என்னும் பெயரைக் கொள்ளுவான். அளவற்ற செல்வத்துக்குத் தலைவனாய் விளங்குவதால் ஈசன் ஆவான். குறைவற்ற தவத்தால் ஈசனின் சாரூபம் பெற்றவர்கள் தன்னைச் சூழ்ந்து வழிபட விளங்குதலால் மகேசன் ஆவான்.*

*(தேவர் நுகரும் வாழ்வும் செல்வமும் இறைவனால் அருளப்பட்டனவே. இதை*

*நம்பி நான்முகன் சத்திய வுலகநண் ணியதும்*
*வெம்பு நேமியான் வைகுந்த நகரமே வியதும்*
*உம்பர் மற்றையோர் தத்தம துறையுள்வாழ் வதுவும்*
*தம்பி ரான்பிர சாதமென் றேமறை சாற்றும்*

*எனவரு* ***சூதசங்கிதையால்*** *அறிக. எனவே இறைவனே செல்வத்துக்குத்தலைவன் ஆதலின் ஈசன் எனப்படுகின்றான். “ஈசனை யளப்பில் காலம் இதயமேல் உன்னி நோற்றே, ஆசகல் உருவம் பெற்ற அன்பினர்” எனவரும் கந்தபுராண மொழிகள் தவத்தால் ஈசன் வடிவம் பெற்றாரை விளக்குதல் காண்க.)*

12. மூதுயிர் தனக்கு டம்பே மூர்த்தம தான வாறேய்
ஆதர வுயிர்நா தற்கு மவ்வுயிர் மூர்த்த மாகுந்
தீதிலந் நாத னாய செக்கர்வேள் சுகமே நல்கு
நீதியா னிரந்த ரஞ்சால் சங்கர னெனவு நிற்பன்.

*அனாதியான உயிருக்கு உடம்பு உருவமாகியிருப்பது போல் அன்புருவாய உயிர்களின் தலைவனாய செவ்வேட் பரமனுக்கு அவ்வுயிர்களே உருவமாகி நிலவும். அழிவற்ற தலைவனாய அச் செவ்வேட் பரமன் உயிர்கட்கு நலத்தையே வழங்கும் முறைமையால் சால்புடைய சங்கரனாய் என்றும் விளங்குவான்.*

13. பிரமமென் வடசொல் லீண்டுப் பெரிதென வாகு மந்தப்
பிரமம தாய்நி லாந்தே பிரமணி யப்பேர்க் கென்றும்
உரியவ னாவ னப்பே ருடைச்சுரர் களுக்குந் தானே
பெரியவ னென்ன வேசுப் பிரமணி யப்பேர் சார்வன்.

*பிரமம் என்னும் வடசொல் இங்குப் பெரியது என்று பொருள்படும். அந்தப் பிரமமாய் விளங்கும் இறைவன் பிரமணியம் என்னும் பெயருக்கு எஞ்ஞான்றும் உரிமையுடையவன் ஆவன். அப்பெயரைத் தமக்குக் கொண்ட ஏனைய தேவர்களுக்கும் தானே முதல்வன் ஆதலின் சுப்பிரமணியம் என்னும் பெயரை ஏற்று நிற்பான்.*

*(ப்ரஹ்ம என்னும் வடசொல் ப்ருஹ்ம என்னும் தாதுவினின்று தோன்றலால் அது ப்ருஹத்வம் என்னும் மேன்மையையும் ப்ருஹ்மணத்வம் என்னும் பெருத்திருக்கும் தன்மையையும் உணர்த்தும். ஸுப்ரஹ்மண்யம் என்னும் வடசொல்லில் ஸு = இன்பம் எனவும் பிரஹ்ம = பெரிய பொருள் எனவும், ந்யம் = வேறு காணப்படும் ஒன்று, அஃதாவது பெரிய பொருளினின்று வெளிப்பட்டு விளங்குவது எனவும் பொருள்தரும். ஆதலினால் சுவானுபூதிச் செல்வர்க்கு அவ்வனுபூதிப் பொருளாய்ச் சுடர்வதே சுப்பிரமணியம் என்று உணர்க.* ***"துப்புரவு நாடுயிரே சுப்பிரமண் யத்தின்மேல், எப்பிரமம் உள்ள தியம்பு"*** *என்பர் நம் ஆசிரியர் பெருமான்).*

14. சீவனை மூர்த்த மாகக் கொண்டுள குகனென் றேவன்
பாவனைக் கெட்டா தெங்கு மறைபர மான்மா வாவன்
பூவினை தீர்சு வானு பூதியில் வரினன் னோனை
மாவினை காது சுப்பி ரமணிய மெனலு மாமே.

*உயிரைத் தனக்கு உடம்பாகக் கொண்டுள்ள குகப்பரமன் இப்படியன் இவ்வுருவன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் எனச் சுட்ட ஒண்ணாது எங்கும் மறைந்து நிறைந்துள்ள பரமான்மா ஆவான்.*

*உலகத் தொடர்பு நீங்கிய சுவானுபூதியில் வெளிப்படும் அவனை இருளாகிய மூலமலத் தொழிலைக் கடியும் சுப்பிரமணியம் என்று கூறுதலும் ஒவ்வும்.*

**15. இப்படிச் சுவானு பூதி யின்வெளிப் படுத லானே**
**ஒப்பறு பிரமப் பிள்ளை யாவனவ் வொருவ னந்த**
**மெய்ப்பொரு ளினைக்கா ணாது மேன்கதி யடையு மார்க்கம்**
**எப்படி யினுமின் றென்ற லேணதாந் தெரியு மோர்க்கே.**

*இவ்வாறு சுவானுபூதியில் வெளிப்படுதலால் அவன் ஒப்பற்ற பிரமக்குழவி ஆவான். அந்த மெய்ப்பொருளின் காட்சிபெறாது வீடுபேறு கூடும் நெறி எவ்விதத்தானும் இல்லை என்பது ஆராய்ச்சியுணர்வுடையார் உறுதியாய் அறிவர்.*

*("சருவ பூரண சிதம்ப ரத்திலருள் சால்குகேசனெனு முருகனைக் கருதி யேதரி சியாத மெய்யறிவர் கால மூன்று முளரோவிலர், அருவ முஞ்சொலவொணாவதீத பரமாய சங்கவிரிவாயவிர், முருகனோடணவி யுய்வதே பரம முத்தி என்றவொரு சித்தியே" என வருந் தகராலய ரகசியப் பாடற் கண்ணும் ஸ்ரீமத் சுவாமிகள் இவ்வுண்மையை அறிவுறுத்தல் காண்க.)*

**16. சத்தெனு முண்மை யாலே சத்துமா யறிவே யென்னுஞ்**
**சித்தினை யுடைமை யாலே சித்துமா யின்பி னுக்கோர்**
**வித்தென விருத்த லாலா னந்தமு மாய்வி ளங்கும்**
**வத்துவொர் செக்கர் வேட்பேர் மரீஇய குகதே வாகும்.**

*போக்கும் வரவும் இல்லாத புண்ணியன் ஆதலால் சத்து ஆகவும் முற்றுணர்வுடைய வாலறிவன் ஆதலால் சித்து ஆகவும் வரம்பில் இன்பத்துக்கு ஒப்பற்ற வித்து ஆதலால் ஆனந்தம் ஆகவும் (எனவே சச்சிதானந்தப் பொருளாய்) விளங்கும் பொருளே ஒப்பற்ற செக்கர்வேள் என்னும் பெயர் தழுவிய குகப்பரமன் ஆவான்.*

**17. பரிதிவாய்க் கிரணம் போலப் பரசத்தை நீங்கா துள்ள**
**உரிமையே சித்தா மிந்த வுண்மையிற் குணிசத் தாகும்**
**விரியுநீர் சித்தா மென்றே விளக்குமிந் நியாயத் தேசொல்**
**லரியவா னந்த வின்பு மவற்றினொ டனாதி யாமே.**

*பகலவனுக்கு வேறு ஆகாத ஒளிபோலப் பரன் ஆகிய சத்துப் பொருளை நீங்காது உள்ள கிழமைப் பண்பே சித்து ஆகும். இவ்வுண்மையில் சத்து பண்பியாம். அதில் தங்கியுள்ள பண்பே சித்து*

17. நீர் = குணம்.

*ஆகும். இங்ஙனம் விளக்கும் நேர்மையில் சொல்லுக்கு அடங்காத ஆனந்தம் என்னும் இன்பு, சத்து சித்துக்களை விட்டு நீங்காத அனாதிப் பொருளேயாகும்.*

18. **குணகுணி சுபாவஞ் சொல்லிக் கொண்டபி னானந் தந்தான்**
**அணவுறக் கூற லெங்ங னமையுமென் றாலம் மாக**
**மணியினி லொளியே யன்றிச் சூடொன்று மல்கு மாபோல்**
**இணையறு மின்பு நீங்கா திருக்குமென் றறிய லாமால்.**

*சத்து, சித்து ஆகிய இரண்டுக்கும் பண்பி, பண்புத் தன்மைகளைக் கூறிக் கொண்ட பிறகு அவற்றோடு ஆனந்தமும் பொருந்துமாறு கூறல் எவ்வாறு அமைவுடையதாகும் என்று வினவினால் பகலவனில் ஒளியே யல்லாமல் சூடு என்னும் ஒரு பொருளும் நிறைந்திருத்தல் போல இணையில்லாத இன்பமும் சத்து, சித்துக்களை விட்டு நீங்காது நிலவும் என்று அறிந்து கொள்ளலாம் என்க.*

19. **இல்லது வாரா தென்று முள்ளது போகா தென்றுஞ்**
**சொல்லுரை யினிது புல்லச் சுவானுபூ தியிலேய் நல்லார்க்**
**கல்லலி லானந் தந்தா னனுபவ மாத லானும்**
**வல்லிறைக் காக மந்தான் வரம்பிலின் பியம்ப லானும்.**

20. **ஆனந்தஞ் சத்தாஞ் சித்தா மனாதியை நீங்கி டாமே**
**வானந்த மண்ணந் தந்தான் மருவுயி ரனைத்து மூடும்**
**மானந்த விரும்பு சச்சி தானந்த மகத்தே யாமென்**
**றூனந்த விருந்தி யோக முஞற்றினோர் தீர்ப்பர் மாதோ.**

*இல்லது வாராது உள்ளது என்றும் போகாது என்னும் மொழி நன்கு பொருந்தச் சுவானுபூதியில் திளைக்கும் நல்லோர்க்குத் துன்பு கலவா இன்பமே நுகர்ச்சியாதலாலும் வரம்பிலாற்றலுடைய இறைவனுக்கு வரம்பிலின்பமுடைமையை எண்குணங்களுள் ஒன்றாகச் சிவாகமங்கள் ஓதலாலும் அனாதியாகிய சத்து, சித்து என்னும் இரண்டையும் நீங்காமே ஆனந்தமானது விண்ணிலும் மண்ணிலும் வாழும் உயிர்களை மூடியுள்ள அறியாமையாகிய மலம் கெடுமாறு உயிர்கள் விரும்பும் சச்சிதானந்தமாய் உள்ளத்தில் விளங்கும் என்று உடம்பு வற்றும் படியிருந்து சிவயோகம் புரிகின்றோர் முடிபு கூறுவர் என்க.*

18. மாகமணி = விண்மணி = சூரியன்.

21. நிர்க்குணப் பிரம மென்று நிகமநன் கோத விங்கே
சிற்குணங் கடவுட் கோத லென்னெனிற் செகமா மாயை
முக்குண மின்மை யேயந் நிர்க்குண முடிபா மீதே
சிற்குண மதுதா னெட்டாய்த் திகழுமென் றோது மெய்ந்நூல்.

*குணமற்ற பெரிய பொருள் என்று வேதங்கள் விளக்கமாக ஓதவும், இங்குச் சித்து என்ற குணத்தைக் கடவுட்குக் கூறுதல் என்னையோவெனில் உலகத் தோற்றத்துக்குக் காரணமாகிய மாயையின் குணங்களாகிய சத்துவம், இராசதம், தாமதம் என்னும் மூன்றும் இறைவனுக்கு இல்லை என்பதே நிர்க்குணம் என்ற சொல்லின் முடிவு ஆகும். இங்குச் சொல்லப்பட்ட சிற்குணம் என்பது எட்டு வகையாய் விளங்கும் என்று உண்மை நூல்கள் உரைக்கும்.*

22. பேரரு ளனந்த சத்தி பேரறி வளவி லின்பஞ்
சூரறு விசுத்த தேகஞ் சுதந்திரம் பாச நீக்க
தாரக மனாதி முத்தத் தன்மையே யவ்வோ ரெட்டுஞ்
சீரணை யிவையில் வத்துத் தெய்வமா யிலகா தென்றும்.

*பேரருளுடைமை, வரம்பில் ஆற்றலுடைமை, முற்றுமுணர்தல், வரம்பில் இன்பமுடைமை, துன்பமற்ற தூயவுடம்பினனாதல், தன்வயத்தனாதல், இயல்பாகவே பாசங்களிலனாகுதல், இயற்கை யுணர்வினனாதல் ஆகியவையே அவ்வெட்டுக் குணங்களாம். சீர்மை பொருந்த இக்குணங்கள் இல்லாத பொருள் எஞ்ஞான்றும் இறைவனாய் இருத்தல் இயலாது.*

23. யாதொரு குணமில் லாமே யாதொரு பொருளி ராதால்
யாதொரு பொருளில் லாமே யாதொரு குணமி ராதால்
ஆதலிற் கிளந்த வெட்டு மப்பரம் பொருட்குண் டென்னா
ஓதுரை யுறுதி யாமே யுண்மைதான் றெரியு மோர்க்கே.

*எந்தக் குணமும் இல்லாமல் எந்தப் பொருளும் இராது. எந்தப் பொருளுமில்லாமல் எந்தக் குணமும் இராது. ஆகையால் முற்கூறிய எட்டுக் குணங்களும் அந்த முழுமுதல்வனுக்கு உண்டு என்று கூறும் மொழி உறுதிமொழி யாதல் உண்மையுணர்ந்தவர்களுக்குப் புலனாகும்.*

*(பேசரிய நிர்க்குணப் பிரமமென் றோதிடிற்*
*பெரிதான அண்டநிரையைப்*
*பிறப்பித்திரட்சித் தழிக்கின்ற பெற்றிகள்*
*பேசச் சரிப்படாவொண்*
*தேசுடைய சகுணமென்றோதிடின் விகாரங்கள்*
*சேருமதனான் மயங்காச்*
*செல்வமெனு மத்துவித முத்தியொன் றுண்டெனச்*
*செப்ப சரிப்படாதோ*
*ரேசிறவுரைக் குமிவ் விருதிறத்துட்பகுதி*
*யின் குணம தேசகுணமஃ*
*திந்நிலையை நிகம நிர்க்குணமென்ற தாகுமிதை*
*யே யீசனெண்குணமெனாச்*
*சூசனை சொல் சைவ நூலும் பகர்ந்திடு மெனத்*
*துணியு மெற்கிருதெய்வமோ*
*தோகைமயிலேறி நடமாடுவள நீடு நற்*
*சோலை மலை மேவு குகனே".*

*என்று இந்நூலாசிரியர் பெருமான் குமரகுருதாச சுவாமிகள் பாடல் என்னும் நூலில் உரைத்தருளியதும் ஈண்டு மனங்கொளற்பாலது.)*

24. **ஏருற மேலே சொற்ற வெண்குணங் களிலே யீறில்**
**பேரரு டனில்வி சுத்தப் பேருடம் பினையு மாதிக்**
**கீரணை யாவ னாதி முத்தமுட் பாசக் கேடாம்**
**நீரையு மடக்கிக் கூறி னிகழ்குண மாறு மாமே.**

*மேலே அழகுறக் கூறப்பட்ட எண்குணங்களில் முடிவில்லாத பேரருளுடைமையில் தூயவுடம்பின னாதலையும் வேத மொழிகட்கு எட்டாத இயற்கையுணர்வின னாதலில் இயல்பாகவே பாசங்களில னாகுதலையும் அடக்கிக் கூறினால் இறைவனின் குணங்கள் ஆறு என முடியும்.*

*(தன்வயத்தனாதலைச் சத்து எனவும், முற்றுமுணர்தல், பேரருளுடைமை, வரம்பில் ஆற்றலுடைமை என்பவற்றைச் சித்து எனவும், வரம்பிலின்பமுடைமை, இயல்பாகவே பாசங்களிலனாகுதல் என்பவற்றை ஆனந்தம் எனவும் கூறும்வழிக் குணங்கள் மூன்றாதலும் அறிக. இங்ஙனம் இயல்பாகவே பாசங்களில னாதலைச் சத்துக்குக் கூட்டி யுரைப்பினும் அமையும்.)*

25. வெயிலவன் விடய மெல்லாம் விளக்குழிக் கதிராய்த் தன்னைக்
கயவுற விளக்கு ஞான்று கதிரவ னாய்நின் றாற்போற்
செயிரறு பரனும் வேறு நோக்குழிச் சித்தாஞ் சத்திப்
பெயர்கொள்வ னோக்கா ஞான்றப் பெருஞ்சத்தி மானாய் நிற்பன்.

*கதிரவன் பொருள்களை மாந்தர் விழிக்கு விளங்கச் செய்யும் காலைக் கதிராகவும், பெருமை தோன்றத் தன்னை விளக்குங் காலைக் கதிரவனாகவும் விளங்குமாறு குற்றமற்ற முதல்வனும் வேறு பிரித்து எண்ணுங்காலைச் சித்து எனப்படும் சத்தியின் பெயரை ஏற்பான். அவ்வாறு பிரித்து எண்ணாக் காலைப் பெருஞ்சத்திமானாக விளங்குவான்.*

26. உலகுசெய் பிரம னைத்தா னுண்டுசெய் வோனாய்க் காக்குந்
தலைவனைக் காப்போ னாகிச் சகமெலா மழிப்போ னுக்குந்
தலைமையி னிற்பா னானந் தம்பிர மங்கா ணென்றே
அலறரு மறைக்கே யத்த மாமொரு திருச்செவ் வேளே.

*இன்பமே பெரிய பொருள் என்று முழங்கும் வேதத்தின் பொருளாகிய ஒப்பற்ற மேம்பாடுடைய செவ்வேட்பரமன் உலகங்களைப் படைக்கும் பிரமனைப் படைப் போனாயும் அவற்றைக் காக்கும் திருமாலைக் காப்போனாயும் எல்லாவுலகங்களையும் அழிக்கின்ற காலாக்கினிருத்திரனுக்குத் தலைவனாயும் விளங்குவான்.*

*(யசுர்வேத தைத்திரீய உபநிடதம் 'ஆநந்தம் ப்ரஹ்ம' எனல் காண்க. திருவாசகத் தமிழ்மறை "படைப்போற் படைக்கும் பழையோன் படைத்தவை, காப்போன் காக்குங் கடவுள் காப்பவை, கரப்போர் கரப்பவை கருதாக் கருத்துடைக் கடவுள்" என்று இச்செய்யுட் கருத்தைக் கூறுதல் காண்க.)*

27. யாவையு மழிப்போன் றானே யாவையுந் தருவோ னென்னும்
வீவறு தீர்வை யாலே விரிஞ்சன்மா லிருவர் மேலோன்
ஆவனை யுருத்தி ரப்பே ரார்ந்தவ னவனுங் கூம்புந்
தேவவி சாலத் துள்ளோன் செக்கர்வே ளொருவ னேயால்.

*எல்லாவற்றையும் அழிப்பவனே மீட்டும் அவற்றைப் படைப்போன் என்னும் நிலைபெற்ற முடிபாலே பிரமன் விட்டுணு ஆகிய இருவருக்கும் மேலான தலைவன் ஆகிய உருத்திரன் என்பவனும் தன்னுள் ஒடுங்கும் தெய்வம் என்னும் பெருமையுடையவன் செக்கர்வேட் பரமன் ஒருவனேயாவன்.*

*(ஒடுங்கின சங்காரத்தி னல்லது உற்பத்தி யில்லை என்றார் மெய்கண்டதேவரும்).*

28. உலகட லழிக்கு மேலோ னுண்டுசெய் பிரமன் மாலென்
றிலகிரு வருளே யாரு மிருக்கொணா தோவென் றாலப்
பலவழி வினுக்கா நெற்றிக் கண்கனற் படிவ மாதி
நிலவிட வேண்டு மேயந் நெடியமால் பிரம னுக்கும்.

29. அன்னண மிலாமை யானு மனைத்தையுந் தகிக்குந் தானங்
கொன்னுடை மயான மென்றே குயிலிட நடமு நீப்பும்
அன்னவர்க் கிலாமை யானு மழிப்புருத் திரற்கென் றோத்துப்
பன்னுத லானும் பீதாம் பரனய னழிப்போ னாகார்.

*உலகத்தைப் படைத்தும் காத்தும் வரும் பிரமனும் திருமாலும் ஆகிய இருவருள் ஒருவர் உலகத்தை யழிக்கும் மேலோனாக இருத்தல் கூடாதோ என்றால் அந்த வலிமை மிக்க அழிப்புத் தொழிலுக்கு வேண்டும் நெற்றிக்கண், தீவண்ணத் திருமேனி முதலியன அந்த நெடுமால், பிரமன் ஆகியோருக்கு இருத்தல் வேண்டும்.*

*அவ்வாறு இல்லாமையாலும், எல்லாப் பொருள்களையும் நெற்றிக் கண்ணால் எரிக்கும் இடம் ஆகிய பெருமையுடைய நன்காடு என்று கூறப்படும் அவ்விடத்தில் நடனம் செய்தலும் அதனை நீத்து (உலகை மீட்டும் தோற்றுவிக்க) உள்ள நிலையும் அவர்கட்கு இல்லாமையாலும் அழித்தல் தொழில் உருத்திரற்கே உரியது என்று வேதம் கூறுதலாலும் பொன்னாடையை விருப்புடன் அணியும் திருமாலும் பிரமனும் அழிப்புத் தொழிலுக்கு உரியவர் ஆகார்.*

*(அயனுக்குப் படைப்பும் அரிக்குக் காப்பும் அரனுக்கு அழிப்பும் உளவாதலை "ப்ரஹ்மாதேவநாம் ப்ரதமஸ்ஸம்பபூவ। தாதச ஸ்ருஷ்டௌ। விஷ்ணுச்ச ஸ்திதௌ ருத்ரச்ச நாசே।" எனவரும் யோக சூடாமணியுப நிடதத்தாலும் "ரக்ஷாகோவிஷ்ணுரித்யாதி ப்ரஹ்மா ஸ்ருஷ்டேது காரணம்। ஸம்ஹாரே ருத்ர" எனவரும் தேசோபிந்து உபநிடதத்தாலும் அறிக.)*

30. தத்துவ நாசந் தானே சாயுச்ச மாத லானும்
எத்திற வுலகு நாச மியற்றுருத் திரனுங் கூம்பும்
வத்துவென் சிவமாய்ச் செக்கர் வேணனி வயங்க லானும்
முத்தியை விரும்பெல் லார்க்கு முதல்வனவ் வேளே மன்னோ.

*தத்துவங்களின் அழிவே சாயுச்சியப்பேறு ஆதலாலும் எல்லாவகை உலகையும் அழிக்கும் உருத்திரனும் இறுதியில் ஒடுங்கும் பொருளாகிய சிவபிரானாய்ச் செவ்வேட் பரமனே நன்கு விளங்குதலாலும் வீட்டுப்பேற்றை விரும்புகின்ற எல்லாரும் சென்று அடையத்தக்க முழுமுதல்வன் அச்செக்கர் வேட்பரமனே யாவன் என்று உணர்க.*

31. **இத்திற முடிவி லுள்ள விறைவனை யெண்ணார் யாருந்**
**தத்துவ நாச முத்தி தனையுறார் மூவ ரோடு**
**சித்திகொ ளமர ரெல்லாஞ் சீவரே யாவர் மேலே**
**கர்த்தனென் றவனைத் தானே கடவுளென் றறிவார் கற்றோர்.**

*இவ்வகை முடிவில் விளங்கும் இறைவனைப் பற்றாத எவரும் தத்துவ அழிவாகிய சாயுச்சிய முத்தியைக் கூடார். உருத்திரன், திருமால், பிரமன் மற்றும் சித்திகள் கைவரப் பெற்ற தேவரெல்லாம் உயிர்களே ஆவர். இவர்கட்கு மேம்பட்ட முதல்வன் ஆகிய செவ்வேளையே கற்றறிந்த பெரியோர் கடவுள் என்று அறிந்தொழுகுவர்.*

32. **உடலிடை யுயிரைப் போல வுலகெனும் விசுவந் தன்னில்**
**இடரற நிறைந்த நீரான் விச்சுவ னாவ னெங்கும்**
**படர்வெளி போலாம் பண்பின் விச்சுவா தீத னாவன்**
**தொடருமுக் காலந் தோற்றுந் தொடக்குமி லாவவ் வேளே.**

*உயிர்களைப் பற்றித் தொடரும் இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனும் முக்காலங்களால் தோன்றும் தோற்றம், வளர்ச்சி, மறைவு ஆகிய செய்திகளால் தொடக்குறாத செவ்வேட்பரமன் உடம்பில் வாழும் உயிர்போல உலகம் என்னும் விசுவத்தில் தடைபடாது நிறைந்திருக்கும் தன்மையால் விச்சுவன் எனப்படுவான்; எங்கும் படர்ந்துள்ள வெளிபோல் இருக்கும் தன்மையால் விச்சுவாதீதன் எனப்படுவான்.*

33. **அணவுட லிருக்கு மாவி யவ்வுட லாவ தின்றவ்**
**வணவுட லதுவு மாவி யாவதின் றிவ்வா றற்ப**
**உணர்வுடை யுயிரி லென்று முடங்கியைந் திருக்குந் தேவவ்**
**வுணர்வுடை யுயிரு மாகா துயிருமத் தேவா காதே.**

*உடம்பில் பொருந்தியிருக்கும் உயிர் அவ்வுடம்பு அன்று. அவ்வுடம்பும் உயிர் ஆவதன்று. அங்ஙனமே சிற்றறிவுடைய உயிர்களில்*

*எஞ்ஞான்றும் உடங்கியைந்திருக்கும் இறைவன் சிற்றறிவுடைய உயிர்கள் ஆகான். அவ்வுயிர்களும் இறைவன் ஆகா.*

34. பரிவுயிர் மோக்கத் தேனும் பராபர மாகா தோவென்
றுரியவர் வினவி னந்த வுயிரவா முடம்பு கொண்டு
புரிவினை மனமி றந்த பூரண நிலையி லின்பே
தெரியனு பவத்தே யந்தத் தேவச மான மாமால்.

*இறையன்புடைய உயிர் முத்தியிலேனும் பரம்பொருள் ஆகாதோ என்று தக்கோர் வினவினால் உயிர் அவாவினால் கூடிய உடம்பு பெற்றுச் செய்யும் இருவினைகளுக்கு மூலமான மனமானது இறந்த பெருநிலையில் இன்பமே தெரிந்து நுகரும் நுகர்ச்சிக்கண் சிவசமமாகும் அன்றி அச்சிவனே யாதல் கூடாது என்க. ("மனத்தினுடைய எல்லா முடிச்சுக்களும் இங்கே எஞ்ஞான்று அவிழ்க்கப்படுகின்றனவோ அஞ்ஞான்றிற்குப் பின்றை மனிதன் அமிருதம் ஆகின்றனன். அனுசாசனம் என்னும் உபதேசமும் இத்துணையே" என்று கடோபநிடதம் ஆறாம் வல்லியும் "அவனை அறிந்த பின்னைத் தேவர்களும் இருடிகளும் அவன் மயமாய் விளங்கினர்; அமிருதராயினர்" என்று சுவேதாசுவதர உபநிடதமும் கூறுதல் அறிக.)*

35. ஆகலி னுலகுண் டாக்கு மாதிவல் லவனா யஃதூஉம்
ஆகவங் கிடனின் றொரெட் டற்புத சித்தி யோரும்
மாககம் மாளன் போல வற்பமே வனைவ ரெண்ணில்
பாகவண் டஞ்செய் யாரப் பதவியுங் கீழ்மைத் தாமால்.

*அதனால் உலகத்தைத் தோற்றுவிக்கும் வன்மைசான்ற முதல்வனாக உயிர் ஆதற்கு இடமில்லை. வியப்புத்தரும் ஒப்பற்ற எட்டுச் சித்திகளும் கைவந்த பேரும் தேவதச்சன் போலச் சிறிது படைத்தல் கூடலாம். எண்ணற்ற பகுதிகள் கொண்ட அண்டங்களைப் படையார். அவ்வாறு படைக்கும் நிலையும் தாழ்வுடைய தேயாம்.*

36. அப்படிச் செய்யுஞ் சித்தி யடைந்தவர் பிரமாண் டத்தை
இப்படிச் செய்வா ரென்று காட்டவோ ரண்ட மின்றால்
துப்படிச் செல்வ ராகத் துலங்கிமெய் யறிவு கூறும்
எப்படிப் புளருஞ் செய்த விலிகிதமொன் றேனு மின்றால்.

*அப்படிப் படைக்கும் சித்தி பெற்றோரும் பிரமாண்டத்தை இப்படிப் படைப்பர் என்று காட்டவும் ஓர் அண்டமும் இல்லை. உறுநர்த் தாங்கும் மதனுடை நோன்றாள் சேர்ந்த செல்வராய் விளங்கி*

*மெய்ஞ்ஞானங்கூறும் எக்கல்வியுடையாரும் அது குறித்துச் செய்த சுவடியும் இல்லை.*

37. **எண்ணறு மண்ட கோடி யினைச்செய்தே வொன்றெ னாமே**
**மண்ணிலும் விண்ணி லுந்தான் வனைபவர் பலரென் றக்கால்**
**தண்ணிய வனேக தேவ வாதமாய்த் தழைக்கும் பல்கோள்**
**நண்ணிடு மென்ப யாண்டு நடுநிலை யுணர்ந்த நல்லார்.**

*அளவில்லாத அண்டகோடிகளைப் படைக்கும் கடவுள் ஒருவனே என்னாது மண்ணுலகத்தும் விண்ணுலகத்தும் படைப்பவர் பலர் உளர் என்று கூறிடின் அது கீழ்ப்பட்ட அனேகேசுரவாதமாய் (பல கடவுட்கொள்கையாய்) விளங்கும். அதனால் பல குற்றங்கள் நிகழும் என்று எவ்விடத்தும் நடுநிலை ஓம்புதலைக் கடைப்பிடியாகக் கொண்ட நல்லோர் நவிலுவர்.*

38. **வெறியிலொன் றான தெய்வம் வியாபகப் பொருளாங் காட்ட**
**அறியுயிர் வியாத்தி யாகு மதன்மலம் வியாப்பி யப்போ**
**உறுமுயர் தெய்வந் தான்பே ருணர்வுள துயிர்தா னற்ப**
**அறிவுள ததன்ம லந்தா னறிவிலாப் பொருள தாமால்.**

*கலங்குதல் அற்ற ஒரே பொருளான கடவுள் யாண்டும் நிறைவுற்ற (வியாபகப்) பொருள் ஆகும். அறிவித்தால் அறியும் தன்மை கொண்ட உயிர் வியாபக ஒப்புமை (வியாத்தி)ப் பொருள் ஆகும். உயிரைப் பிணித்துள்ள ஆணவலமம் எங்கும் இருத்தலினுள் ஒடுக்க (வியாப்பிய)ப் பொருள் ஆகும். மேம்பாடுடைய கடவுள் முற்றுணர்வு உடையது. உயிர் சிற்றறிவுடையது. அதைப் பிணித்துள்ள மலம் அறிவிலாப் பொருள் ஆகும்.*

39. **உப்பறல் வதிவ தற்கா வுறுவெளி யிடமே யொக்கும்**
**ஒப்புறு வியாப கந்தா னுறையுமந் நீரே யொக்குஞ்**
**செப்பிய வியாத்தி யந்நீர் சேருமுப் பதனை யொக்குந்**
**துப்பறு வியாப்பி யந்தான் றொல்கட னியாய மூன்றும்.**

*பழமையான கடலைக் காட்டாகக் கொண்டு வியாபகம், வியாத்தி, வியாப்பியம் ஆகிய மூன்றையும் விளக்குங்காலை உப்பு நீர் தங்கவுள்ள பரந்த வெளியே வியாபகமும் அதில் தங்கியுள்ள நீரே வியாத்தியும் அந்நீரில் கலந்துள்ள உப்பே வியாப்பியமும் ஆகும் என்று உணர்க.*

40. நீருவ ரிருப்பிம் மூன்றுங் கடலென நின்றாங் கோது
பேருணர் வாதி மூன்றும் பிரமமென் றிடவே நிற்குஞ்
சீருள வெனினுந் தன்மைத் திறத்தவை வேறு வேறாங்
காருறு தளையும் வீடு முயிர்க்கலாற் கடவுட் கில்லை.

*நீர், உப்பு, வெளி ஆகிய மூன்றும் கடல் என்று விளங்குமாறு முற்கூறிய கடவுள், உயிர், மலம் ஆகிய மூன்றும் பிரமம் என்று விளங்கும் சிறப்புடையன ஆயினும் பண்பு வகையால் அவை வெவ்வேறான மூன்று பொருள்களே. இருளாகிய மலக்கட்டும் வீடுபேறும் உயிருக்கேயாம். கடவுளுக்கு அவை இல்லை.*

41. அல்லுவ ரதுவு நீரு மணையுமா றாண வப்பேர்
புல்லிரு ளதுவுஞ் சீவ போதமுங் கூடி நிற்றல்
வெல்லதி விருத்தி நூன விருத்தியெ னிரண்டு மில்லாத்
துல்லிய வியாத்தி யென்று சொல்லுவர் கலைதேர் வல்லார்.

*நீருக்கு இயற்கையாகாத உப்பும் நீரும் கூடியாங்கு ஆணவப்பெயருடைய இருளும் சீவபோதமும் கூடி நிற்றல் வெற்றி கூடிய அதிவிருத்தியுமாகாது நூனவிருத்தியு மாகாத துல்லிய வியாத்தியாகும் என்று மெய்ந்நூல் வல்லார் கூறுவர்.*

42. அதிகமென் விருத்தி தான்வி யாபக மாகு நூனம்
பதியொரு விருத்தி தான்வி யாப்பியப் பனுவல் சாரும்
அதிகமு நூன முந்தா னில்சமந் துல்லி யப்பேர்
பதியொரு வியாத்தி யாநூ னங்குறை பாடா மன்றே.

*அதிவிருத்தி என்பது வியாபகம் ஆகும். நூனவிருத்தி என்பது வியாப்பியம் ஆகும். அதிகமும் நூனமும் இல்லாத ஒத்த வியாபகமே துல்லிய வியாத்தி எனப்படும். நூனம் என்பது குறைபாடு என்னும் பொருளதாகும்.*

43. கிளந்ததுல் லியவி யாத்தி கேவல நிலையா மான்ம
உளந்தனை விழுங்கு மாண வங்குறைந் துணர்வு சற்றே
விளங்குதல் சகல மென்னும் விழிப்புறு நிலையா மீது
வளர்ந்தவிர் மதியின் றேசு மலர்விழி நோக்கு மொக்கும்.

---

41. அல்லுவர் = நீரிற்குக் குணமல்லாத உவர்.

42. சமம் = ஒத்தவியாபகம்; ஒப்புப் பொருளில் வருவது.

*மேற்கூறிய துல்லிய வியாத்தியே கேவலாவத்தையாகும். உயிரின் அறிவை மறைக்கும் ஆணவமலம் தனது காரணம் கெடாமே காரியத்தில் (நனவிலும் கனவிலும்) சிறிது நீங்கி நிற்கும் நிலையே சகலாவத்தை என்னும் விழிப்பு நிலையாகும். இது குறை மதி வளர்ந்து ஒளிரும் நிலையும் மலர்ந்த கண்களின் பார்வையும் ஒக்கும்.*

*(ஆணவ மலம் உயிரிடத்து உள்ளது என்பதற்கு அறிவுகெட்ட மயக்கஞ் சேர்ந்த மூலத்தூக்கமும் மூர்ச்சையுமே சான்றாம்).*

44. **சோதியாஞ் செக்கர் வேடா னெங்கணுஞ் சுடரு மாயிற்**
**சாதியா ருயிர்க்கஞ் ஞானஞ் சாருமா றெவன்கொ லென்னிற்**
**கோதிலாப் பரிதி யங்கேழ் குருடனுக் கிலாமை போலென்**
**றோதிசால் விழிதா னுள்ளா ருரைத்திடு வார்கண் மன்னோ.**

*ஒளிவண்ணன் ஆகிய செவ்வேட் பரமன் எங்கணும் விளங்குவானாயின் உயிர்கட்கு அஞ்ஞானம் கூறார். எனவே அஃது உயிர்களைப் பற்றுமாறு எங்ஙனெனில் குற்றமற்ற பகலவனின் ஒளி குருடனுக்குக் காட்சியாகாமை போல மலத்தால் மூடப்பட்ட உயிருக்கு அவ்விளக்கம் காட்சியாகாது என்று ஞானக் கண் உடைய மெய்ந்நூல் கலைஞர் கூறுவர்.*

45. **அக்குரு டதுதான் வானத் தாதவ னொளிமுன் னோக்கா**
**விக்கின முடைத்தா யல்லில் விழிப்புறு கூகைக் கண்ணை**
**ஒக்குமன் பதிமெய்ஞ் ஞான முறாதுசிற் றறிவாய் நிற்கும்**
**இக்குரு டொழிவே பாச மிலாவிடு தலைப்பே றாமால்.**

*அக்குருடானது வானத்தில் சூரியன் ஒளிமுன் பார்வை மழுங்கியும் இருளில் பார்வை பெற்றும் வாழும் கூகையின் கண்ணை ஒத்ததாகும். இறைவனின் மெய்ஞ்ஞானம் அடையாது சிற்றறிவாய் நிலவும் இக்குருடு நீங்குவதே பாசநீக்கத்தில் எய்தும் வீடுபேறு ஆகும்.*

*(கூகையின் கண்ணையும் இருட்டையும் பற்றிய விரிவான ஆராய்ச்சி ஸ்ரீமத் சுவாமிகள் அருளிய திருப்பாவில் கருணைக்குகப் பிரமம் எனும் பத்தின் 5-ஆம் செய்யுள் உரையில் காண்க.)*

46. **சகமிலாச் சிவானு பூதி சார்பர முத்தர் மாசாம்**
**அகமிலாச் சிவச கங்க ளறிதிறச் சீவன் முத்தர்**
**சுகமிலாச் சகங்காண் பெத்த ரெனச்சொலிம் மூவ ரல்லின்**
**முகநிலாப் புறவு பூனை முற்சொன கூகை யொப்பார்.**

46, புறவு = இரவிற் பிரவேசஞ் செய்யாப் புறா.

*பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் எனப்படும் சிவானுபூதி நிலையுற்ற பரமுத்தர் இரவில் பார்வை பெறாது பகலில் பார்வைபெறும் புறாவையும் குற்றக் கொள்கலனாகிய மனமிறந்தவராய்ச் சிவத்தையும் உலகையும் காணும் சீவன் முத்தர் பகலிலும் இரவிலும் பார்வையுடைய பூனையையும் துன்பத்துக்கு உறையுளான உலகம் ஒன்றையே நோக்கும் பெத்தர் பகலில் பார்வை பெறாது இரவில் பார்வை பெறும் கூகையையும் ஒத்தவரென்று தெளிக.*

47. **சுடுதலை யாண வத்திற் றுணியறி விழந்து கட்டுப்**
**படுதலை யுடைய வான்மாப் பசுவணு வாமிப் பாசந்**
**தொடுதலை மேய மாந்தர் சுரர்பிற வுயிர்க ளெல்லாம்**
**விடுதலை செய்தாள் செக்கர் வேளினுக் கடிமை யாமால்.**

*உயிர்களை வருத்துவதில் தலைமை பெற்ற ஆணவ மலத்தால் உணரும் அறிவை இழந்து மலத்தால் கட்டப்பெற்ற உயிர் பசு எனவும் அணு எனவும்படும். ஆணவமலத்தால் தீண்டப்பட்ட மக்கள், தேவர், பிற உயிர்கள் யாவும் அவைகளை அப்பாசத்தினின்று விடுதலை செய்து ஆட்கொள்ளும் செவ்வேட் பரமனின் அடிமைகள் ஆகும்.*

*("புல்லைப் புசிப்பனவும், அறிவுக்குறை வுடையனவும், உழவு முதலிய தொழில்களில் ஏவப்படுவனவும், துன்புறுவனவும் தலைவனால் கட்டப்படுவனவாயு முள்ளன பசுக்கள். அவ்வாறே பாசவாய்ப்பட்ட உயிர்களாகிய பசுக்களும், முற்றுணர்வுக்கும் ஈசன் என்னும் சொல்லுக்கும் உரிய பசுபதியும்" எனச் சாபால்யுபநிடதவுரைகளான் உயிர்கள் பசுக்கள் எனப்படலை அறிக. "ஆணவப் பெயருக்கேற்ப அணுக்களை அணுவாயாக்கும்" என்று ஸ்ரீமத் சுவாமிகள் பரிபூரணானந்த போதத்தே பகர்ந்தருளியதுவும் காண்க. "விஷ்ணுவாதிகாந் ஸுராந்" என்று சரபோபநிடதம் கூறலால் இச்செய்யுளிற் கூறப்பட்டோர் விட்டுணு முதலிய தேவர்களை என்று அறிக. "என்று நீ அன்று நான் உன்னடிமை யல்லவோ" எனும் தாயுமானவ சுவாமிகள் திருமொழியால் உயிர்கள் இறைவனின் அடிமைகள் என்பது தேர்க.)*

48. **பொலிகட னீரிற் றட்பம் போலுயிர் தன்னின் ஞானம்**
**மலிசம வாய மல்லான் வந்துறு சையோ கந்தான்**
**இலைகட னீரி னுக்குப் பியல்பலாக் குற்ற மாமா**
**றலையுயிர்க் கழுக்குங் குற்ற மாகுமே யனாதி யென்ன.**

47. துணி = ஒளி; **பிங்கலநிகண்டு.**

*விளங்குகின்ற கடல்நீரில் தண்மைபோல உயிரில் அறிவு எஞ்ஞான்றும் ஒன்றியபண்பே அல்லாமல் இடையில் வந்து புணர்ந்த ஒன்றன்று. கடல் நீருக்கு உப்பு அதன் இயற்கையாகாத குற்றமாகும். அதுபோலப் பிறந்திறந்துழலும் உயிர்களுக்கும் மலமானது அனாதியே பற்றிய குற்றமாகும் என்க.*

*(மலம் அனாதி என்பது "அநாத் யவித்யா வாஸநயா" எனும் யசுர்வேத நிராலம்போபநிடதத்தால் அறிக. "பதியினைப் போல் பசு பாச மனாதி" என்றார் திருமந்திர முனிவரும்).*

49. **அச்சம வாயந் தாதான் மியமென வாகு மத்தை**
**உச்சித சதத சம்பந் தமெனவு முரைத்தல் சாலும்**
**மிச்சையில் சையோ கந்தா னொன்றுமற் றொன்றின் மேவு**
**நிச்சய மாமி தற்கோர் நித்தமில் கால முண்டே.**

*அந்த சமவாயம் தாதான்மியம் எனவும்படும். அதனை நலமான நித்திய சம்பந்தம் என்று கூறலும் ஒவ்வும். மெய்யான சையோகம் என்பது ஒன்றனோடு மற்றொன்று கூடும் கூட்டம் என்பதே உண்மை. இக்கூட்டம் நிலைபேறுடையது அன்று. உரிய காலத்தில் நீங்கும் தன்மையது.*

50. **பகலவ னொளியா னோக்கும் பண்புடை விழியைப் போலச்**
**சுகசிவன் ஞானத் தானே துலங்கறி வுயிர்க்கெஞ் ஞான்றுஞ்**
**சகவிழி போலப் போத சுதந்திரஞ் சாரு மாற்றால்**
**அகமன விருத்திக் கெல்லா மதனையுட் படுத்துந் தெய்வம்.**

*கதிரவன் ஒளியால் பொருள்களைக் காணும் தன்மைகொண்ட கண்களைப் போல இன்ப வடிவினனாகிய சிவனது ஞானத்தால் அறிவு விளக்கம் பெறும் உயிர்களுக்கு எப்போதும் உடம்பிலுள்ள கண்ணைப்போல (கண் அவர்தம் விழைவாலே எதனையும் நோக்கும் அதுபோல)ச் சீவசுதந்திரம் கூடுதலால் மக்களின் அகமனவிருத்தியால் செய்யப்படும் எல்லா வினைகளுக்கும் இறைவன் அவர்களையே பொறுப்பாக்குவான். ஆதலின் அவ்வினைகளின் பயனை நுகருமாறு அவர்களை உட்படுத்துவான் என்க.*

*(உயிர்மலத்தால் மூடுண்டிருந்தாலும் உயிரல் பொருளாகாது. கேவலாவத்தையில் மறைந்து கிடக்கும் உயிரறிவு சகலாவத்தையில் சிற்றறிவாய் நிகழும். அதன் காரணமே சீவசுதந்திர போதம். அதன்*

49. சததம் = நித்தியம். இது, வடசொல்.

*பயனால் விளையும் வினைகட்கு உரிய பயனை முறைசெய்யும் அரசனைப் போல் சிவபிரானே உயிர்களுக்கு ஊட்டுவான்)*

51. அம்மன விருத்தி நன்றுந் தீதுமா மழகார் சொர்க்கம்
வெம்மைசெய் நரக மீயும் விமலனாண் டவனி யாளுஞ்
செம்மலை மான நீதி செலுத்துவோ னாகி நிற்பன்
தம்மன விருத்தி நீத்தோர் சரதமா வீடு சார்வார்.

*அந்த மனவிருத்தியே நல்வினையும் தீவினையுமாகி அழகு நிரம்பிய தேவர் உலகத்தையும் துன்பம் செய்யும் நரகத்தையும் கூட்டும். விமலனாகிய சிவபிரான் அவ்விடத்து உலகாளும் வேந்தரை ஒத்துமுறை செய்வோனாகி விளங்குவான். தமது மனவிருத்தியை மாளச்செய்தோர் உறுதியாக வீடுபேறு அடைவர்.*

52. செஞ்சுட ரொளியைப் போலாஞ் சிவச்செய லொளியா னோக்கம்
விஞ்சுகண் போலாஞ் சீவச் செயலிதே மனவி ருத்தி
சஞ்சித பிராரத் தங்க ளாதலு மிதுவே சார்பில்
அஞ்சிவச் செயறான் சொற்ற வடைவினோ் நிறைவே யாகும்.

*பகலவன் ஒளியைச் சிவத்தின் செயல் ஒக்கும். அவ்வொளியால் பார்வை மிக்க கண்ணைச் சீவரின் செயல் ஒக்கும். இதுவே மனவிருத்தி என்பது. வைப்பு வினை (சஞ்சிதம்), நுகர்வினை (பிராரத்தம்) ஆவதும் இதுவே. எச்சார்பும் இல்லாத அழகிய சிவச்செயல் என்பது இங்குக் கூறிய அளவில் நிகழும் நிறைவேயாகும்.*

53. ஆதவ னால்வி ழிப்புண் டாகிய விருவர் தாமோர்
பாதையிற் போங்கா லாடை பக்கலிற் களையோர் பெண்ணை
மாதரி னொருவ னோக்க மற்றவ னோக்கா னாக
ஆதவன் செய்யான் செய்வ தவர்மன விருத்தி யேயாம்.

*சூரியனின் ஒளியால் காணும் திறம்பெற்ற இருவர் ஒருசாலையில் சென்று கொண்டிருக்குங்காலை ஆங்கொரு பக்கலில் திருந்த வுடுக்கக் கருதி ஆடையைக் களைந்து கொண்டிருந்த ஒரு பெண்ணின் உறுப்புக்களை ஒருவன் வேட்கையோடு பார்க்கவும் மற்றவன் தன் கண்களை மூடிக் கொள்ளவும் சூரியன் செய்ய மாட்டான். அவ்வாறு செய்யவைப்பது அவரவர் மனவிருத்தியே ஆகும்.*

54. இன்னணஞ் செயலி ரண்டு மிகலறத் தேர வல்லார்
அன்னவ னாட்ட வாடு மசேதன மாஞ்ச டத்திற்
குன்னிடு மனவி ருத்தி யின்மையா லுபய கன்மம்
என்னசை யிலையாள் வோற்கு மிலைநசை யுயிர்க்கா மென்பார்.

*இவ்வாறு சிவச்செயல் சீவச்செயல் ஆகிய இரண்டின் தன்மைகளையும் மாறுபாடின்றி உணரவல்ல அறிஞர் இறைவன் ஆட்ட ஆடுகின்ற அறிவற்ற உயிரல் பொருளுக்கு நினைப்புக்கு இடமாகிய மனவிருத்தி இல்லாமையால் நல்வினை தீவினையாகிய குற்றம் கிடையாது. ஆண்டவனாகிய குகப்பரமனுக்கும் இல்லை. அக்குற்றம் உயிருக்கே உள்ளது என்று கூறுவர்.*

55. **உயிர்ச்செய லடங்கி நெஞ்ச முண்மையி னிற்பான் யாவும்**
**உயிர்க்குயி ரான தெய்வச் செயலென வுளஞ்செய் கென்றே**
**அயிர்ப்பற வோது நூல்க ளவ்வுரை யாக்கை மேய**
**செயிர்ப்பசுச் செயலின் றென்னுந் திறப்பொரு டாரா தென்றும்.**

*உயிர்ச்செயல் அடங்கி உள்ளம் மெய்ப்பொருள்பால் நிற்க வேண்டி யாவும் உயிர்க்குயிராகிய சிவச்செயலே எனக்கோர் சுதந்திரமும் இன்று என்று கருதுக என்று மெய்ந்நூல்கள் ஐயமறக்கூறும். அக்கூற்று உடலில் தங்கிய குற்றமுடைய பசுவாகிய உயிரின் செயல் ஏதும் இல்லை என்னும் வகையில் எக்காலும் பொருள் தராது.*

*(தன்செயல் ஆகிய சீவபோதம் எத்துணைச் சிற்றளவில் இருப்பினும் உயிர் சிவத்தன்மை எய்தாததே ஆகும். மெய்ப்பொருள் நூலின் நுட்பம் அறியாராய் வீட்டுப்பேற்றையும் அவாவுவோராய் உலகநடையில் உழலும் சிலர் அப்போதந்தான் அடங்கச் செய்யும் வழியாது என்று வினாதலும் உளதன்றோ! எல்லாம் சிவன் செயலே எனக்கோர் சுதந்திரமும் இன்று என்னும் உறுதி பிறந்தவழிச் சும்மா இருக்குங்காறும் அது இயல்பாய் நிலைக்குங்காறும் திருவருள் வெளிப்பட்டுத் தன்னைத் தீண்டுங்காறும் விருப்புவெறுப்புக் களால் அலையும் மனம் அடங்காது. அடக்க முயறலும் மனத்தின் செயலாகவே முடியும் என்றலே அவ்வினாவுக்கு விடையாம் என்க.)*

56. **உயிர்க்குயி ரென்னுந் தேவு முயிருமே யேய்ந்து நிற்றல்**
**வயச்சம வாய மன்று மற்றது தூல சூக்கப்**
**பெயர்த்தனு வலாத மூலத் தனுவுமான் மாவும் பின்னும்**
**வியப்பினி லறையோர் சையோ கச்சொலை மேவு மாலோ.**

*உயிருக்கு உயிராகிய இறைவனும் உயிரும் கலந்து நிற்றல் வன்மையுடைய சமவாயம் ஆகாது. அது பருவுடம்பும் நுண்ணுடம்பும் அல்லாத மூல (காரண) உடம்பும் உயிரும் கலந்து நிற்கும் விந்தையான சையோகம் என்பதையே பொருந்தும்.*

---

56. பின்னும் வியப்பு = கலந்துநிற்குமோரதிசயம்.

**57. இன்னுமச் சையோ கந்தா னேரராக் கண்ணிற் காதும்
பொன்னுறு விழியும் யானைப் புழைக்கையின் மூக்குங் கையும்
பன்னிகழ் வாவன் மெய்யிற் பறவையும் விலங்கு மாக
மன்னிரு வடிவை யொக்கு முயிருமம் மலமு மொக்கும்.**

*அச் சையோகம் என்பது அழகிய பாம்பின் கண்ணில் காதும் ஒளியுடைய விழியும், யானையின் தும்பிக்கையில் மூக்கும் கையும், தின்னும் பற்களுடைய வௌவால் உடம்பில் பறவையும் விலங்குமாக விளங்கும் இரண்டு வடிவங்களை ஒக்கும். அன்றியும் உயிரும் மலமும் கலந்திருப்பதையும் நிகர்க்கும்.*

**58. பேய்பிடித் தான்கட் பேயும் பிடிபட்ட வுயிரு மொக்குஞ்
சேய்பிடித் துளவோர் வேலாற் செய்தவத் திறலி ழந்தே
வேய்பிளப் புண்டா லென்னப் பிளப்புணு மேனி யான்கண்
ஏய்பிணை யற்றோட் சூரன் பதுமனென் னிருவ ரொக்கும்.**

*அச்சையோகம் பேய் பிடித்தவன்பால் பேயும் பிடிபட்ட வுயிரும் கலந்துள்ளதை ஒக்கும். சேய்ப்பரமன் ஏந்தியுள்ள ஒப்பற்ற வேலின் எதிரே தான் செய்த தவத்தின் ஆற்றல் முழுவதையும் இழந்து பிளக்கப்பட்ட மூங்கிலைப் போல் பிளப்புண்ட சூரபதுமன் உடம்பில் சூரன் பதுமன் என்ற இருவரும் கலந்திருந்ததையும் ஒக்கும்.*

**59. இம்முடி பலாது தர்க்க மியம்பிடிற் சீவான் மாவின்
செம்மல ரிதயந் தன்னிற் சிவபர மான்மா வுண்டென்
றம்மறை யறைசொற் கெல்லாம் விரோதமா மகண்ட தேவாம்
அம்முத லுயிர்க்க ணில்லா தன்னியப் பொருளு மாமோ.**

*இம்முடிபை யல்லாது வேறு கூறப் புகுந்தால் உயிர்களின் சிவந்த உள்ளத் தாமரையில் சிவபரமான்மா உள்ளது என்று அழகிய மறைகள் கூறுவதை முழுவதும் முரணி நிற்கும். யாண்டும் நிறைந்த தெய்வமாகிய அம்முதல்வன் உயிர்களில் கலவாது வேறுபட நிற்கும் பொருளும் ஆவனோ? ஆகான் என்க. ("பிரமபுரம் என்னும் இதிலே தகரபுண்டரீக வீடு உள்ளது. இதிலே தகராகாசமுள்ளது. இந்த ஆகாசத்திற்குள்ளே யுள்ளது நாடற்பாற்று; அறியற்பாற்று" எனச் சாமவேத சாந்தோக்யோபநிடதமும், "இவனே இருதயத்திருக்கின்ற பரமஆன்மா. சூக்குமன். நெருப்பைப் போல ஒளி செய்து கொண்டிருப்பவன்" என்று மைத்ராயண் உபநிடதமும் மிழற்றுதல் காண்க).*

60. ஆவதே லொன்றி லேயொன் றின்மையா மன்னி யோன்யா
பாவநே ரென்னே யென்னிற் பரனிற்றீ வினையு மந்தத்
தூவிலா வினையிற் றேவு மிராவெனச் சொற்று மேலும்
ஓவிலா நியாய மெல்லா முரைக்குமே திருப்பா வென்னூல்.

*இவ்வாறாயின் ஒன்றிலொன்று இன்மையாகிய அன்னி யோந்யா பாவத்தை ஒக்கும் என்றல் என்னையெனில் இறைவனில் தீவினையும் அந்த தூய்மையற்ற வினையில் இறைவனு மிரார் எனக்கூறி மேலும் அழிவற்ற உண்மைகளை எல்லாம் திருப்பா என்னும் நூல் (ஆனந்த பூர்த்தியுரம் நான்காம் பாடல்) தன்னில் ஸ்ரீமத் சுவாமிகள் விளக்கியுள்ளதையும் அறிக.*

61. பெத்தகே வலத்தே நெஞ்சு மிருளுமே பிணைவுற் றாற்போல்
முத்திகே வலத்தே யின்ப மூடுயி ரறிவு மல்கிச்
சுத்தநீ ளறிவிற் கூட றுல்லிய வியாத்தி யீது
நித்தமாய் விரவ லின்மே னிகழுமென் பாரு ணர்ந்தோர்.

*பெத்தகேவல தசையில் உள்ளமும் இருளும் கூடியிருத்தல் போல முத்தி கேவல தசையில் இன்பத்தால் நிறைக்கப்பட்ட உயிர் அறிவு நிறைந்து தூய பேரறிவில் கூடுதல் துல்லிய வியாத்தியாகும். இஃது எஞ்ஞான்றும் இடையீடின்றிக் கலத்தல் உண்டாயவழி நிகழும் என்று அறிஞர் கூறுவர்.*

*[பெத்த தசையில் கேவலசகலங்கள் உயிரைநெருங்கியிருத்தல் போலவே முத்தி தசையிலும் கேவலசகலங்க ளுண்டு. தன்னைத் தான் அருள் துணைக்கொண்டு அறிந்த பின்னர்த் தனது ஞானக்கண்ணுக்குப் புலப்பட்டு நிற்கும் திருவருட் காட்சியே முத்திச்சகலம். இச்சகலம் நீங்கிய நிலைக்களத்தே தோன்றும் பரையோகமே முத்திக் கேவலநிலை. இவ்விரண்டும் நீங்கிய முடிவாகிய சுகாதீத பரிசுத்தமடைதலே சுத்தாத்துவித சிவானுபவ நிலையாகும். வியாத்தி என்பது வியாபகப் பொருளின் வியாபித்து அப்பொருளே எனப்படாமல் அதனை ஒத்த போலியாய் நிற்கும் ஓர் இயல்பு.]*

62. இப்படி யுயிர்தன் கண்டிப் பிகந்துய ரறிவிற் கூடல்
முப்புடி யிலாத வைக்க மலாலிரு முதலு நீர்நீர்
ஒப்பவொன் றாகு மென்போ ருரைபொருந் தாது தெய்வம்
எப்பொழு துந்தா னான்மா வினைவிடா நிறைவிற் றன்றோ.

61. "வியாத்தி" என்னும் இது, வியாபகப் பொருளின் வியாபித்து அப்பொருளே யெனப்படாமல் அதனையொத்த போலியாய் நிற்குமோரியல்பு.

*இவ்வுலகத்து வாழும் உயிர் மலப்பிணி நீங்கி வாலறிவனோடு கூடுதல் காண்பான், காட்சி, காட்சிப் பொருள் என்னும் திரிபுடி இல்லாத கூட்டமே (ஐக்கியம்) ஆகும். இஃதன்றி நீரோடு நீர் கலந்தாற் போல ஒன்றாகிவிடும் என்பார் உரை பொருந்தாது. என்னை? இறைவன் எக்காலத்தும் (பெத்ததசையிலும்) உயிரைப் பிரியாது நிறைந்திருப்போனாகலின். எனவே புதியதாகக் கலத்தலைப் போன்று நீரோடு நீர் கலந்தாற்போல என்னும் உரை யிழுக்குப்படல் உணர்க.*

63. **சொல்லிய சையோ கஞ்சை யோகமல் லாத தொன்மை**
**புல்லுத லால்வி யப்பாய்ப் புகலுமத் துவித மாமச்**
**சொல்லுரை பேசி னேகந் துவிதமன் றெனவா மஃதுஞ்**
**செல்லதா் மூன்று கூறாய்த் தெரித்திடற் கயிர்ப்பின் றன்றே.**

*இங்குச் சொல்லிய சையோகம் என்பது சையோகம் இல்லாத முன்நிலையினையும் தழுவுதலால் மறைகள் வியந்து கூறும் அத்துவிதம் ஆகும். அத்துவிதத்தின் பொருள் ஒன்று மன்று இரண்டு மன்று எனவாம். அவ்வத்துவிதம் பயிலும் வழியும் மூன்று வகையாம் எனலிலும் ஓர் ஐயமின்று என்க.*

64. **ஆதியி லனாதி யாம்பெத் தாத்துவி தஞ்சே வண்ணல்**
**பாதம துபாசிப் பான்கொள் பாவனாத் துவிதந் தேவைக்**
**காதலிற் காண்டற் கேய்சுத் தாத்துவி தங்கா ணென்றே**
**ஓதலிம் மூன்று மேமே லுரைத்தமுக் கூறா மன்றே.**

*முதற்கண் உயிர்கள் அனாதியே பெத்த தசையிலிருக்கும் பொழுது இறைவன் அவ்வுயிரோடு கலந்து விளங்கும் பெத்தாத்து விதம், விடையேறும் அவ்விமலனை வழிபடுவான் கொள்ளும் பாவனாத்துவிதம், காதலால் அவனைக் காணப்பொருந்தும் சுத்தாத்துவிதம் ஆக வுரைக்கும் இம்மூன்றுமே முற்கூறிய மூன்று வகைகளாம்.*

65. **இருந்ததி யாண்டுப் போயிற் றிருக்குமே யதனா லான்மா**
**அருந்தளை நீப்பி னுந்தா னுளதென லெழுமாற் றானும்**
**வருந்தன தனுபூ திக்க ணொருமையே வயங்க லானும்**
**பொருந்துத லிரண்டோ வொன்றோ புல்கிய நிலையோ வன்றே.**

*உள்ளது போகாது என்பது உண்மை. எனவே பாசம் அழியாது இருக்கும். அதனால் உயிர் நீங்குதற்கரிய பாசத்தை நீக்கிடினும் அப்பாசம் அழிவுறாது உள்ளதே என்னும் முடிபு எழுவதாலும், உயிர்க்குறும் சுவானுபூதியில் யாண்டும் ஒன்றாகவே*

*காணப்படுதலாலும் அத்துவிதம் என்ற சொல்லுக்கு ஒன்று என்பதோ இரண்டு என்பதோ ஒன்றிலொன்று கலந்த நிலையோ ஆகாது என்க.*

*(கதிரவன் முன் இருளானது எப்படி இருந்தும் இல்லாதது போல் இருக்குமோ அப்படியே அருளொளியின் முன் பாசம் கெடாமல் கெட்டு இறைவன் அளித்தருள் இன்பமென நிற்கும். சத்தாகிய சிவம் சித்தோடு உயிரையும், ஆனந்தம் என்னும் மதர்ப்போடு பாசத்தையும் கூட்டிச் சச்சிதானந்தமாக நிறுவுதல் முத்தி. "இனமும் பகிர்முகம்" எனும் தகராலய ரகசியப் பாடற்கண் ஸ்ரீமத் சுவாமிகள் விளக்கி யிருத்தலைக் காண்க).*

66. **அரனுயர் கல்லாற் கீழத் துவிதமென் றறைந்தா னல்லன்**
**உரனுறு துவித மேக முரைத்தில னுரைக்க டங்காத்**
**திரனுறு மோன மாமுத் திரையிது காண்டி ரென்ற**
**நிரனனி தேர்வார் மோன நிலையிலே முடிபென் னாரோ.**

*சிவபிரான் உயர்ந்த கல்லாலின் கீழிருந்து சனகாதியர்க்கு உண்மை யுணர்த்தியகாலை அத்துவிதம் என்றோ வன்மை வாய்ந்த துவிதம் என்றோ ஏகம் என்றோ கூறினானல்லன். சொல்லில டங்காப் பெருமை கொண்ட மோனமுத்திரையைக் காட்டி இது காண்மின் என்று அருளிய ஒழுங்கை நன்கு உணர்ந்தோர் அந்த மோன நிலையே முடிபு என்று கூறாரோ? கூறுவர் என்க.*

*("சுவானுபூதி நீத்துத் தன்னையே பெரிய தெய்வமாகக் கூறிக்கொள்ளும் ஏகவாதம் இழிந்ததாம். உருவங் கருதுபு ஆண்டான் அடிமையாகக் கூறிக்கொள்ளும் துவைதம் சிறந்ததாம். இதனினும் சிறந்தது ஏகானந்த மேயுங்காறும் வியாபகவி யாப்பியங்களாக விரவியுள என்னும் பொருளில் வைத்து ஓதப்படும் அத்துவிதமாம். இந்த அத்துவிதத்தினும் சிறந்தது விசாரணை எந்த முடிபுக்கும் இயைபுற வந்துவிடாதென மோனத்தின் நிறுத்து முடிவாம். இத்தீர்வையே எமது முடிவான சித்தாந்தம்" என்று ஸ்ரீமத் சுவாமிகள் திருப்பாவில் அருளியது ஈண்டுக் கருதத்தக்கது. மோன முத்திரையைச் சின்முத்திரை எனவும் மொழிப. சுவாமிகள் "ஒன்றெனற்குச் சுட்டு விரலினையும் ஓரிரண், டென்றிடற் கஃதோ டொன்றி னையுமிரண், டொன்று மென, ஆட்டியொன் றாக்குதலுங் காட்டாம லத்துவிதம், காட்டியதே கல்லாலிற் கை" என்று அருளியதும் காண்க. இதனால் ஒன்று எனும் வழக்கும் இரண்டு எனும் வழக்கும், ஒன்றில் ஒன்று ஐக்கியமாம் எனும் வழக்கும் மறுக்கப்படல் உணர்க. இங்ஙனம் பல்வகை வழக்குகளும் தோன்றிய தென்னையோ எனில்*

பலவகையானும் உயிர்த்திரளை மயக்கி நிற்கும் மாயை நூல்வழக்கிலும் நின்று மயக்கல் கூடுமாறே என்க. ஆலமர் செல்வனது மோனமுத்திரையை மதியாது இனப்பற்றால் ஒரு மனிதனின் உரையை மதித்துப் புகழ்வதும் உய்நெறி ஆகாது என்க. யுத்திவாதங்களும் மதபேதங்களும் செல்லா நிலைக்களத்தே மனோலய இன்ப சாகரம் என்பது "வாதமும் சமய பேதமுங் கடந்த மனோலய இன்பசாகரமே" என்று பட்டினத்தடிகளும் "சும்மா விருசொல்லற" பேசா அனுபூதி, "அவ்வா றறிவார் அறிகின் றதலா, லெவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே" என்று திருப்புகழ் முனிவரும் கூறுதலால் உணர்க).

67. **மோனத்தை நீத்தால் வாத முளைத்திடு முளையா வண்ணம்**
**ஞானத்தைத் தியான யோகா லடைதிரென் றிறுவாய் ஞானி**
**மானத்தொ டுணர்த்தி னான்கொள் ளார்தெருண் மௌன மோரார்**
**வானத்த னெழுவாய் நீரும் வகுக்கொணா மௌனத் தேயும்.**

மோனம் நீங்கினால் வாதங்கள் உள்ளத்தில் எழும். அவை எழாவண்ணம் தியானயோகம் பயின்று ஞானத்தை அடைவீராக என்று இறுதியாக வாலறிவனான இறைவன் அவர்களுக்கு பெருமையோடு கூறினான். அதனைக் கொள்ளாதார் ஞானந் தரும் மோனச் சிறப்பை அறியார். சிற்றம்பலப் பரமன் காட்சியும் பிரிக்க ஒண்ணாத மோன நிலைக்கண் பொருந்துவதே.

(இந்தத் தியான யோகினை ஓரிடத்திருந்து கொண்டே பயில நினைவார் செய்யும் முறைமை எவ்வாறெனில் நுவறும். சீதோஷ்ணசமநய ஏகாந்தத்தானத் தெய்தி இசைவும், எழிலும் உடைய ஓர் ஆதனத்து இனி தமர்ந்து, குகப்பிரானாகவே மதிக்கத்தக்க தம் குருவின் திருவடி மலர் சிந்தித்த பின்றை, மனத்தினை ஐம்புலநுகர்ச்சியாம் பொருள்களில் செல்லாது தடுத்தல் வேண்டும். அச்செவ்வி, பிராணவாயுவும் அம்மன அளவாயடங்கும். அந்நிலை கூடலும் இதயதாமரை நடுவணே இறை திருமேனியைச் செவ்வே தியானித்தல் வேண்டும். அசையாது நிமிர்ந்திருந்து இரண்டரை கடிகைக்குக் குறையாமே நாடோறும் இது பயிலத்தக்கது. இரவுபகல் சேர்ந்த ஆறுநாள் இடையறாது நிற்குநிலை எய்தில் காரியம் சித்தியாகும். பாவங்களும் பாறும். இறைவன் ஞானாசாரியனாக வெளிப்பட்டு அருள் செய்வதும் அங்ஙனமேயாம். மேல் அவனது கட்டளையின் படி நடப்பதும் கடப்பாடாம். வீடுபேறல்லாத வேறு வரங்களை நல்கியருளுமாறு வெளிப்படுமவன் இக்குருமூர்த்திக்கு

*வேறாம் ஒரு மூர்த்தியாய் நிற்பன். இவ்வாசாரிய பரமனது திருவாய் மலரினின்று யாம் உன்னை ஏன்று கொண்டாம் என்னும் ஒரு திருமொழி தோன்றினும் வழிபடுவானது பிறப்பு இறப்பு ஆகிய அச்சம் நீங்கிவிட்ட தென்பது திண்ணமே. இங்ஙனம் ஸ்ரீமத் சுவாமிகள் திருப்பாவில் அருளியுள்ளார்கள்.)*

68. **தாவிலாச் சிவமே காண்போன் றனக்குமுற் போந்தார்க் காணான்**
**ஆவிதா னுடம்பி லாம லிருத்தலின் றதுபோ னாளும்**
**நோவிலாச் சிவம்வே றாக நுவலவே தனித்து நில்லா**
**தோவிலா திவையோர் வாரு முரைப்படுத் துரைப்பார் கொல்லோ.**

*அழிவற்ற சிவபரம்பொருள் ஒன்றையே காணும் திருவினர் தன் முன்பு நடமாடும் உயிர்களைக் காணார். உடம்பினைப் பெறாது உயிரானது தனித்து இருத்தல் இல்லை. அது போல எதனாலும் தாக்குறாத சிவபரம் பொருள் தன்னை வேறுபடுத்திக் கூறுமாறு என்றும் உயிர் உலகங்களினின்றும் பிரிந்து நில்லாது. இவ்வுண்மையை நன்கு உணர்ந்த அறிஞன்மார் உயிர் சிவனைச் சாரும் முறை இஃதே என்று அளவையுள் படுத்து உரைப்பரோ? உரையார் என்க.*

69. **ஒன்றென லிரண்டே யென்ற லுபயமும் விராய தாகும்**
**என்றிடல் பிடித்தா ருள்ளே யெவர்தம ஞானத் தாலே**
**இன்றிவை நடக்கு நாளை யிவைநிகழ்ந் திடுமிப் பார்மேல்**
**என்றெழு தியநூ லொன்று மின்றவ ருரைசா லற்கும்.**

*முத்தி நிலையில் உள்ளது ஒரு பொருளே என்றிடல்; அற்றன்று உயிர் அழியின் அது நுகரும் பேரின்பம் என்பதொன்று இல்லையாகும். எனவே இறைவன், உயிர் ஆகிய இருபொருள்களும் முத்திநிலையில் உள்ளன என்றிடல், அது சால்பிற்றன்று. உயிர் இறைவனோடு நீரோடு நீர் கலந்தால் போன்று கலந்துவிடும் என்றிடல் முதலிய கோட்பாடுகளைக் கூறினவரில் எவரும் தமது அறிவின் மேம்பாட்டால் இவ்வுலகத்தில் இற்றைஞான்று இவையிவை நிகழும்; இனி வருங்காலத்தே இவையிவை நிகழும் என்று கணித்து எழுதிய நூல் ஒன்றேனும் இல்லை. இருப்பின் அவை அவர்தம் உரையின் பெருமையைக் காட்டி நிற்கும். எனவே இன்னோர் உண்மையுணர்ந்து கூறினார் எனற்கு யாதொரு சான்றும் இல்லையே.*

---

69. விராயது = கலந்தது.

70. இத்திற வெளிமை தன்னி னாம்பரப் பிரம மென்னும்
புத்திகள் பெரிது நாண வேண்டுமே பொருவில் லாத
வத்துவைத் தரிசித் தார்க்கும் வையநீ ணிகழ்ச்சி கூறுஞ்
சித்தியின் றுரைத்தல் காணிற் சிலசிறு பலற்குள் ளாமால்.

*நாம் பிரமம் என்று கூறிக்கொள்ளும் அறிவாளிகள் நமக்கு உள்ளது இத்துணைச் சிற்றறிவே என்று உணர்ந்து அவ்வாறு கூறிக்கொள்ளப் பெரிதும், நாணவேண்டுமல்லவா! ஒப்பற்ற சிவத்தின் காட்சியைப் பெற்றவர்களுக்கும் உலகமுழுவதிலும் உலக முடிவுகாறும் நடக்கத்தக்க அரசாட்சி முதலிய வருங்கால பலாபலன்களை கூறும் வலிமை இல்லை. (அவ்வலிமையிருந்ததும் இல்லை). ஒரு சிலர் கூறுதல் காணப்படின் அது சிறுவரையே கூறும் ஆற்றலதே யாகும்.*

71. மலர்புவிக் கிதமாம் யுத்தி வாதமாய்ச் சூத்தி ரார்த்தம்
பலமறைக் கருத்தம் வேறும் பயந்தவ ரவற்றை யாயுங்
கலைஞருக் கயிர்ப்பா ராது காலஞா னங்க டேங்கச்
சொலுநிவப் பிலரா னாரென் சொன்னிலை பேறா தற்கே.

*உலகத்தவர்க்கு நன்மையாகும் என்று அளவை நூல் துணைபற்றிப் பிரமசூத்திரம், பல உபநிடதங்கள் ஆகியவற்றிற்கு ஒருவரை ஒருவர் முரணிப்பொருள் கூறினாரும் உளர். அவர்தம் உரைகளை ஆராயும் அறிஞர்களுக்கு ஐயம் நீங்குவதின்று எனவும் அன்னோர் காலமும் அறிவும் பொருந்த உரை எழுதும் மதுகையற்றவரே எனவும் எழும் சொல்லானது நிலைபெறுமாறு அங்ஙனம் வரைந்து வைத்தனர்போலும்.*

72. பெரிதிலுஞ் சிறிதி லுந்தான் பெரிதுமாய்ச் சிறிது மாகி
அரிதிலு மரிதா யூர்பே ரணைபிறப் பிறப்பு வேட்கை
திரியுரு வருவாண் பெண்ணென் றிறநிற மிலதாய்த் தூய்தாய்ப்
புரிவினர்க் கின்பாய் நிற்கும் பொருவற நிறையத் தெய்வம்.

*“ஓதியாரும் அறிவாரிலை” என்றபடி ஒப்பிலாதவனாய், “எல்லாஞ் சிவனென நின்றாய் போற்றி” என்றபடி யாண்டும்*

71. நிவப்பு = உயர்ச்சி; ஈண்டுச் சிறப்பெனும் பொருட்டு.

*நிறைந்துள்ள அக் கடவுள் "ஐயாய் பெரியாய் சிறியாய் போற்றி" என்றபடி பெரிய பொருள்கள் யாவற்றிலும் பெரிய பொருளாய்ச் சிறிய பொருள்கள் யாவற்றிலும் சிறிய பொருளாய் "அரிதி லரிய அரியோன் காண்க" என்றபடி அரியவற்றுக்கெல்லாம் அரிய பொருளாய் "ஊரிலான் பேரிலான்" என்றபடியும் பிறவாதும், இறவாதும் பெருகினான் என்றபடியும் விளங்கி "வேண்டுதல் வேண்டாமை யிலான்" என்றபடி வேட்கையற்றவனாய் "மூவாய் பிறவாய்" என்றபடி நரை, திரை, மூப்பு முதலிய மாறுபாடுகள் கொண்ட உருவம் இல்லாதவனாய் அருவம் எனற்கும் அமையாதவனாய் 'பெண்ணல்லை ஆணல்லை பேடுமல்லை' என்றபடியும் 'தூநெறிக்கும் தூநெறியாய் நின்றான்' என்றபடியும் விளங்கிப் "புகழும் அன்பர்க் கின்பமரும் அமுதைத் தேனை" என்றபடி நிலவுவன் என்று அறிக.*

73. **அத்தெய்வந் தானே முன்ன ரறைந்தவா றனுபூ திக்கண்**
**எத்தெய்வ முந்தொ ழீஇ யேத்தமெய்ஞ் ஞான வின்ப**
**வத்துவென் றிலகு மோர்சுப் பிரமணி யங்காண் மாண்பார்**
**முத்திமெய்ம் மார்க்க மிம்மேன் முதலிழந் துழல்வார்க் கின்றே.**

*அவ்விறைவனே முன்பு கூறியவாறு அனுபூதி நிலையில் எல்லாத் தேவரும் பணிந்து போற்ற உண்மை, அறிவு, இன்பம் (சச்சிதானந்தம்) என்னும் பொருளாகி விளங்கும் ஒப்பற்ற சுப்பிரமணியம் ஆகும். மேம்பட்ட இம்முதல்வனை நீத்து உழல்பவர்களுக்கு மாட்சிமை நிறைந்த வீடுபேற்றின் மெய்ந்நெறி கூடுவதில்லை என்க.*

74. **விளம்பிது காறுஞ் செக்கர் வேளின ததீத வுண்மை**
**வளம்பட ரருளி னேன்ற மட்டுமே யுரைத்தேன் யாரும்**
**அளந்தறி வரிய வவ்வே ளுருநிலை யதையு மென்றன்**
**உளம்பட ரருளின் மக்க ளுணருமா றினிச்சொல் வேனே.**

*செவ்வேட் பரமனின் வளமார்ந்த அருளைத் துணைக்கொண்டு எல்லாம் கடந்து நிற்கும் அவனது நிலையை இயன்றமட்டும் கூறினேன். எவராலும் இப்படியன் என்று அளந்து அறிவதற்கு அரியவனான அப்பரமனின் உருவநிலையுண்மை யையும் என் உள்ளத்தில் படரும் அவனது திருவருளே கண்ணாகக் கொண்டு கண்டு மக்கள் உணரும் வகையில் இனிச் சொல்பவனாயினேன்.*

## தடத்தசம்பந்தவாரம்

**75. சொற்றவுண் மையினை யேக சொரூபமென் றுரைப்பார் மேனி**
**பெற்றது பிறிது சார்ந்து பிறங்கலிற் றடத்த மென்பார்**
**குற்றமில் கலைஞர் வேறாய்க் குயிலிடத் ததுவெ னாத்தம்**
**பற்றிடுந் தடத்த மிஃதே பலவுருப் பொதுவா மென்பார்.**

*குற்றமற்ற அறிஞன்மார் யாம் இதுகாறும் கூறிய உண்மைநிலையை ஏகபூரணமாகிய சொரூபம் என்று கூறுவர். அப்பொருளே ஓங்காரத் திருமேனியைச் சார்ந்து விளங்கும் நிலையைத் தடத்தம் என்று கூறுவர். வேறு வகையில் கூறுமிடத்திலிருப்பது ஏகபூரண சொரூபமாய் நிற்கும் அம்மெய்ப் பொருளே இஃது என்னும் பொருளைத் தடத்தம் என்னும் சொல் விளக்கும். பல வடிவங்கட்கும் உரிய இதுவே பொது இயல்பு என்று தமிழில் கூறப்படும் என்று சொல்லுவர்.*

**76. சித்தறை வேதஞ் சாயுச் சியத்தொடு சாலோ காதி**
**முத்திற மெடுத்துக் கூறு முறைமையு ளுருவு மொன்றே**
**இத்திற மறுத்தல் பொய்யா யிழியுமிஃ தெதற்கோ வெந்தத்**
**தத்துவ மதமு மாசான் றன்னுரு நீத்த தின்றே.**

*ஞானத்தை விளக்கும் வேதம் சாயுச்சியம் என்பதோடு சாலோகம், சாமீபம், சாரூபம் ஆகிய மூன்று கதிகளையும் கூறிநிற்கும். இம்முறையில் (சாரூபமாகிய) உருவமும் ஒன்றாகுமே. இதனை மறுத்தல் பொய்யாகி இழிவுறும். எனவே மறுப்பது எப்பயன் நோக்கியோ அறிகிலம். தத்துவங்களை எடுத்து விளக்கும் எந்த மதமும் அம் மதத்தை நிறுவிய குரவரை வழிபடுதலை மேற்கொண் டுள்ளதே யன்றி ஒழித்து நீக்கிய தில்லையே.*

*(உலகு அல்லாத ஆன்ம சொரூபத்தைச் சுவானுபூதி வாயிலாக அடைய இயலாத மாந்தர் அனைவரும் தடத்த மூர்த்தியினுடைய சாலோக, சாமீப, சாரூப கதிகளுள் ஒன்றனை அவாஞ்சித்தம் உடையராகவே நிற்பர். அன்னோர் தவமிருந்தவாறு அவ்வக் கதியில் சேர்த்தருள் ஆற்றலும், சிவனைச் சிந்தித்து அகம், புறம் என்னும் இருவகைப் பற்றும் அற நிற்பார்க்குச் சுவானுபவ வாயிலாகச் சொரூப சாயுச்சியத்தைஅடைவிக்கும் அருளும் கதிநாயகனாகிய அச்சிவனுக்கே உள்ளன. எனவே இச்சிவமூர்த்தியைப் புகலடையாதார்*

75. இடத்தது = இடத்திலிருப்பது.

*இக்கதிகளையும் அடைய மாட்டாரே. ஆயின் கடவுட்கு உருவம் இன்று என்னும் அன்னோர்தம் மதத்தருள் சிலர் பெரியராகவும் காணப்படல் யாங்ஙனம் எனில் அன்னோர்தம் மதக்குரு வழிபாட்டில் அக்குருவையே அம்மத மூர்த்திகளாகவும் எண்ணும் வழி, அக்குருமார டைந்த கதிகளை அன்னோரும் அடைவ ராகலின் அத்தகு வழிபாடுகள் பயன் விளைப்பனவேயாம் என்று உணர்க).*

77. **முதுமறை புகழு மாறு முகவொளி மண்ட லங்கள்**
**பதுமநன் மலரி ரண்டு பாதநீ டோள்க ளீரா**
**றிதரமி னுதற்கண் ணோடே யெழில்விழி பதினெட் டாக**
**மதனுறு செக்கர் வேளின் வடிவம தியங்கு மன்னோ.**

*பழமையான வேதங்கள் புகழ்கின்ற அருளொளி திகழும் ஆறு திருமுக மண்டலங்களும் நலம்சேர்ந்த தாமரை மலர் போன்ற இரண்டு திருவடிகளும் நெடிய பன்னிரண்டு தோள்களும் மேம்பாடுடைய நெற்றிக் கண்ணையும் சேர்க்க அழகிய பதினெட்டாகிய திருக்கண்களும் பொருந்திய திருமேனி கொண்டு முடிவிலாற்றலுடைய செவ்வேட்பரமன் விளங்குவான்.*

*(ஓங்காரத்தின் பொருள் சதாசிவன் என்பது விளங்கச் சாமவேதம் "ஸதாசிவோம்" என்று கூறிக்கொண்டு ஓங்காரத்தின் பொருள் சுப்பிரமணியம் என்னும் பொருளில் "ஸுப்ரஹ்மண்யோம், ஸுப்ரஹ்மண்யோம், ஸுப்ரஹ்மண்யோம்" என்று மும்முறை மொழிந்து செல்லலின் 'முதுமறை புகழும்' என்றார். 'ஷட்வக்த்ரம் த்வாதசபுஜ மஷ்டாதச விலோசநம் I அநுக்ரகாய லோகாநாம் ரூபமங்கீக்ருதம் சுபம்' என ஸ்காந்தபுராணம், சம்பவ காண்டம், 35-ஆம் அத்தியாயம் கூறலான். பதினெட்டு விழிகள் முருகப் பரமனுக்கு உளவாதலை உணர்க. பன்னிருவிழி என்பது முகிழ்க்காது இருக்கும் நுதற்கண்ணைச் சேர்க்காது கூறுதலாகும் என்க.)*

78. **இவ்வுரு வதனி லண்டம் யாவுமே யிருக்கு மாற்றைச்**
**செவ்விதி னறிந்தான் சூர பதுமனொண் டேவ ரெல்லாம்**
**அவ்வுரு முழங்கால் காறு மறிந்தன ரருளா லென்னின்**
**எவ்விதம் விளக்கிக் கூற வியலுமஃ தென்போல் வார்க்கே.**

*இத்திருமேனியில் எல்லா அண்டங்களும் தங்கியிருப்பதைச் சூரபதுமன் செவ்வையாகக் கண்டான். மேம்பட்ட தேவர்களும் அத்திருமேனியின் முழங்கால் வரையிலுமே அவனருளால் கண்டனர் ஆயினர். ஆயின் என்போல்வார் அத்திருமேனியின் மாட்சியை விளக்கிக் கூறுதற்கு யாங்ஙனம் இயலும்?*

*[ஏழு பாதாளலோகங்கள் திருவடியிலும் ஏழுதீவுகளின் புடவி கணைக்காலிலும் ஏழுகடல்கள் உடுத்தவுடையிலும், திசைகள் தோள்களிலும், வானம் கொப்பூழிலும், தியு என்னும் விண்ணுலகு சென்னியிலும், ஞாயிறு, திங்கள், தீ என்பன அழகிய மூன்று விழிகளிலும், மேகங்கள் குடுமியிலும், விண்மீன்கள் அக்குடுமியை அழகு செய்யும் மலர்களிலும், சிவபரம்பொருள் ஆன்மாவிலும், சிவ சத்தியாகிய தேவி அறிவிலும், திருமால் இடத்திலும், பிரமன் வலத்திலும், நாமகள் மறைமொழியிலும், திருமகள் திருநிலையிலும், வாயுக்கள் பத்தும் வாயுநிலையிலும், காலாக்கினிருத்திரன் சீற்ற நிலையிலும், தீக்கடவுள் உணவைச் செரிக்கச் செய்யும் தீ நிலையிலும், அனந்தன் முதலிய பாம்புகள் நூபுர முதலிய காலணிகளிலும், ஓடதி யனைத்தும் மேனிமயிர்களிலும், அண்டகோடிகள் யாவும் அம்மயிர்களின் மேய பேன்முட்டை நிலையிலுமாகச் சுடர்கோடி பகற்கதிர் என்னக் குளிர்கோடி இராக்கதிர் என்ன மிளிர்கோடி ஊழித்தீ என்னத் திகழும் தனது பாரமேசுவர வடிவை முருகன் தேவர் காணக் காட்டியருளினன் என்று சம்பவ காண்டம் (வடமொழிக் காந்தம்) கூறுதலும் நினைக.]*

**79. தூலசூக் குமங்க ளாகச் சொல்லுரு வனைத்தி னுக்கும்**
**மூலமாய்ப் பெரிதாய்த் தாங்கு முதன்மையாய் முருக னென்னுங்**
**கோலமாய்த் தியானிப் பார்க்குக் குழகுடைக் குழவி யாய்க்கை**
**வேலனாய்த் திகழு மாற்றான் மேனியோ மாமே மன்னோ.**

*பருமை, நுண்மை எனப்படும் எல்லா வுருவங்களுக்கும் மூலமாய் யாவற்றினும் பெரிய பொருளாய் எல்லாவற்றையும் காக்கும் முதற்பொருளாய் முருகன் என்னும் திருவடிவமாய்ச் சிந்திப்பாருக்கு அழகு நிரம்பிய குழந்தைத் தெய்வமாய்க் கையில் வேலைக்கொண்ட பரமனாய் விளங்கும் நிரலால் அவனது திருமேனி ஓங்காரமே ஆகும்.*

**80. மல்குபே ருருவே பார மேச்சுர வடிவு மாற்றார்க்**
**கொல்குரோ தந்த யாளங் கோடல்சீ றுருவி ரண்டும்**
**பல்குபே ரழகார் நாக படம்விரி தலையு மஃதே**
**அல்குநே ரினையு மொக்கு மாதலி னுரிமை யாமே.**

*எல்லாப் பொருளையும் தன்கண் அடக்கிக்காட்டும் திருமேனி பாரமேச்சுரவடிவம் ஆகும். பகைவரைக் கொல்லும் சீற்றம்,*

---

80. அல்கல் = சுருங்கல்.

*அடியவர்க்கு அருளும் அருள் ஆகியவற்றுக்குக் கொள்ளும் திருமேனி சிறியவடிவமாகும். இவ்விருவகை வடிவமும் பெரிதும் அழகு நிரம்பியுள்ள நல்ல பாம்பு தனது படத்தை விரித்துக் கோடலையும் அப்படத்தைச் சுருக்கிக் கோடலையும் நிகர்ப்பனவாகும். எனவே இவ்விரு திருமேனிகளும் செவ்வேட் பரமனுக்கு உரியனவே என்பது உணர்க.*

81. **வித்திடை விருக்கம் போன்று விளங்குசீ றுருவி லெல்லா**
**வத்துவு மிருத்த லாலே யிதைவணங் கிடல்பே ரண்டம்**
**எத்தனை யுளகொ லெல்லா மிறைஞ்சுமா பூசை யாமிச்**
**சித்துரு வனந்த ரூபந் திகழ்தர வைப்பாய் நிற்கும்.**

*வித்தினுள் பெரிய ஆலமரமே அடங்கியிருத்தல் போன்று இறைவன் விளங்கும் சிறிய திருமேனியின்கண் எல்லாப் பொருள்களும் அடங்கி யிருப்பதனால் இத்திருமேனியை வணங்குதல் பேரண்டங்கள் எத்தனையோ அவற்றில் வாழும் மேம்பட்ட மூர்த்திகள் எத்தனையோ அத்தனை அத்தனையையும் வணங்கும் பெருமைமிக்க வழிபாடு ஆகும். இறைவனின் ஞானமே வடிவான இத்திருமேனி எண்ணற்ற வடிவங்களும் விளங்க நிலவும் மூலமாய் நிற்கும்.*

*(முதல்வன் சுத்தமாயை வாயிலாகப் பல வடிவங்கள் கொண்டனன் என்று பிருகதாரணியக உபநிடதம் பேசுமாறு செவ்வேட்பரமன் கொண்ட வடிவங்கள் பல என்றும் அப்பலவும் பெருமை கொண்ட ஒவ்வொரு மூர்த்தியாக எண்ணப்படுமே அன்றி ஒன்றின் திரிபுகளாக எண்ணப்படா என்றுமுணர்க).*

82. **ஓரறி வில்லா விண்ணை யொளிதரு விளக்கை யல்லோன்**
**பேரறி வின்ஞா யிற்றைப் பிறபொருள் களைக்கை கூப்பல்**
**ஆரறி வுடைச்சேய் பூசை யாமுழுப் பூசை யாகா**
**தேரறி வுடைச்செம் மாப்பு மேய்வதின் றேய்வ தின்றால்.**

*ஐம்பூதங்களில் ஒன்றாய் எவ்வகை அறிவும் இல்லாத வானத்தையும், ஒளி தருகின்ற விளக்கையும் நிலவையும் பேரறிவு வாயாத பகலவனையும் மற்றும் பிற பொருள்களையும் தெய்வமாக எண்ணிக் கை கூப்பி வழிபடுவது ஞானமே திருமேனியாக வுடைய சேய்ப்பரமனை வழிபடுவது போன்ற முழுப்பூசை ஆகாது. அப்பூசைகளால் அழகிய ஞானம் நிரம்பிய செம்மாப்புப் பொருந்துவதும் இல்லை.*

82. அல்லோன் = சந்திரன்.

*(இறைவனுக்கு உருவம் இன்று என்பார் அவனைத் தொழ முற்பட்டு வானை நோக்கிச் செய்யும் தொழுகையும் திருவிளக்குப் பூசை என ஒன்று கற்பித்து ஒழுகுவார் செயலும் சூரிய வழிபாடும் நிலா வழிபாடும் பயன் நில்லா வழிபாடே என்பது உணர்த்தப்பட்டது).*

83. **செங்கைவே லிறையெண் ணாது செய்பிற தேவர் பூசை**
**அங்கையார் தேன்க விழ்த்துப் புறங்கைநக் குதல்போ லாமத்**
**திங்கள்வா னாதி மாட்டுஞ் செக்கர்வே ளுருப்பா வித்தல்**
**மங்கள மெனினு நேரே வணங்கலிப் பிறப்பின் முற்றும்.**

*அடியவர் வேண்டுவன வழங்குதலால் சிவந்தது என்னும்படி சிவந்த நிறமுள்ள கையில் வேல்கொண்ட பரமனை எண்ணாது செய்கின்ற பிற தெய்வ வழிபாட்டின் பயன் எத்தகைத்தோ என்னின் உள்ளங்கையில் நிரம்பியுள்ள தேனைக் கவிழ்த்துவிட்டுப் புறங்கையில் சிறிதே ஒழுகிய தேனை நக்கும் செய்கையை ஒத்ததாகும். அற்றன்று, அந்த நிலவு, வானம் முதலியவற்றின்கண் செவ்வேட்பரமன் திருவுருவைப் பாவித்துத் தொழுதால் என்னையெனில் அஃது மங்கலமே என்றாலும் அவன் திருவுருவை நேரே கண்டு வணங்கல் இப்பிறவியில் கூடுவதாயிருக்கவும் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுதல் போன்ற இச்செயல் எற்றுக்கோ என்க.*

*(இப்பிறப்பில் முற்றும் என்பதை இரட்டுறமொழிதலாகக் கொண்டு அவனை நேரே வணங்கின் வீடுபேறு இப்பிறப்பிலேயே கூடும் என்னலும் கூடும்).*

84. **வேண்டொரு பிறப்பிற் றானே விடுதலை செய்தா ளற்கவ்**
**வாண்டவன் கொண்ட மூர்த்த மருண்முரு கோனே யன்னோன்**
**தீண்டலி னோக்கி னாலுந் திருமொழி நடிப்பி னாலும்**
**வேண்டுநர் விழைத லீவான் வேண்டலர் வெள்கு மாறே.**

*அவனைத் தொழும் பேறுபெற்ற இந்த ஒரு பிறப்பிலேயே பாசவிடுதலை பண்ணி ஆட்கொள்ளுமாறு அவ்விறைவன் கொண்ட திருமேனி அருள் நிரம்பிய முருகன் வடிவமாம். அவன் தீண்டல், நோக்கல், திருமொழியருளல், உளக்குகைக்கண் நடித்தல் முதலிய வைகளால் தன்னைவந்தடைந்தவர்கள் விரும்புவனவற்றை எல்லாம் தன்னை யடையாதார் நாணும் வண்ணம் வழங்கியருள் புரிவான்.*

*('வேண்டுமடியர் புலவர் வேண்ட வரிய பொருளை வேண்டுமளவி லுதவும் பெருமாளே' என்றார் அருணகிரி நாதரும்).*

85. **செயிரினுக் குகப்பார் சிந்தை செழுநலம் புரியா தவ்வா**
**றுயிரினுக் குறுதி பேணா வுளங்குக தேவைத் தேடா**
**துயரினைக் கடக்குங் கற்புத் தோகைபோற் செவ்வேட் போற்றும்**
**அயிரினுக் குள்ளா வாரே யவ்விடு தலையை யார்வோர்.**

*பிறர்க்குத் தீங்குபுரிந்து மகிழ்பவர் உள்ளம் வளமார்ந்த நலத்தை விரும்பாது. அதுபோல உயிருக்கு உறுதியைக் கருதாத உள்ளமும் குகப்பரமனை நாடாது. துன்பத்தைக் கடக்கும் கற்புத் திண்மையுடைய மயில் போன்ற சாயலுடைய மாதரைப் போலச் செவ்வேட்பரமன் ஒருவனையே தொழும் இன்பத்துள் ஆழ்பவரே உயிரின் விடுதலையைப் பெறுபவராவர் என்க.*

86. **முன்னெடுத் துரைத்த வாறு முகங்களு ளொன்றீ சானம்**
**மன்னுதற் புருட மொன்று மல்கவோ ரந்தா னொன்று**
**தென்னுறுத் தொன்று வாம தேவமே சத்யோ சாதம்**
**என்னுமற் றொன்று வேறொன் றேணுறு குடிலை யாமே.**

*முன் முருகனுக்கு உரியதென்று கூறப்பட்ட ஆறுதிரு முகங்களுள் ஒன்று ஈசானம் ஆகும். மற்றொன்று பெருமையுடைய தற்புருடம் ஆகும். இன்னொன்று அருள் நிரம்பிய அகோரம் ஆகும். வேறொன்று இனிமை கூடிய வாமதேவம் ஆகும். பிறிதொன்று சத்தியோசாதம் ஆகும். ஆறாவது திருமுகம் பெருமை நிறைந்த குடிலை ஆகும் என்று அறிக.*

87. **அடலவிர் சத்தி யோசா தாதியோ ரைந்துங் கொன்றைப்**
**படலைகொள் சிவன்மு கங்கேழ் பராவுசிற் பரையொன் றென்றே**
**செடலறு முதல்வ னூல்கள் கிளத்தொரு திறத்தி னாலே**
**குடிலையை ஞான மாகச் சத்தியாய்க் கூறல் சாலும்.**

*வலிமை விளங்கும் சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசானம் ஆகிய ஐந்து முகங்களும் கொன்றைமாலை யணிந்த சிவபிரானது திருமுகங்கள் என்றும் குடிலையானது ஒளி நிரம்பிய தேவியின் திருமுகம் என்றும் அழிவில்லாத முதல்வன் நூல்கள் கூறும் முறைமையால் குடிலை என்னும் திருமுகத்தை ஞானமென்றும் சத்தி என்றும் கூறுதல் ஏற்புடையது ஆகும்.*

*(முதல்வன் புராணமாகிய வடமொழிக் கந்தபுராணம் சம்பவ காண்டம் 35-ஆம் அத்தியாயம் "யான் நிட்கள பூரண சிவன். நீ அழிவிலாச் சத்தி. நாம் இருவரும் பகுதியும் விகுதியும் போலவும்*

85. அயிர் = கரும்பின் தீங்கட்டி; இன்பத்தின் பாற்று.

*சொல்லும் பொருளும் போலவும் பிரிப்பில் பொருளாய் மதிக்கவுள்ளோம். அங்ஙனம் நீ சொல்லும் யான் பொருளும் நீ உலகும் யான் தலைவனும் ஆவோம். யான் ஐந்தொழிற்கும் தலைவனும் ஐம்முகமுடையவனுமாய சதாசிவன். நீ பலவாறாக இருப்பினும் ஒரு முகமுடைய பரமேசுவரி. குமரன் உனது திருவுருவத்தையும் எனது திருவுருவத்தையும் கொண்டுள்ளானாகலின் அவன் ஆறுமுகன் எனப்படுகின்றனன். இவன் உலகம் தொழிற்படுமாறு ஐந்தொழில்களையும் விளையாட்டாகவே புரியும் தலைவனாவான்" என்று தேவி முன்னிலைக்கண் தேவதேவன் அருளியதாக வழுத்தல் காண்க. பிரணவத்துக்கும் சத்திக்கும் உள்ள தொடர்பால் அவ்விரண்டும் ஒரு பெயரால் வழங்கப்படும் பிரணவம் சத்தியின் பெயர் கொண்டு விளங்குதல் "பரை, வாகீசுவரி, வித்தை, மாயை, பராவித்தை, பரவிந்து, பராசத்தி, மாமாயை, குண்டலி" என்பவை பிரணவ மாயையின் பெயர்கள் என்று சிந்திய விசுவசாதாக்கியம் கூறலால் அறிக).*

88. சத்தியோ சாத மெல்லாச் சகத்தையும் படைக்கும் வாமம்
அத்தரா தலங்கள் காக்கு மகோரமே யழிக்கு மென்க
சித்தியார் புருடந் திரோதஞ் செய்யுமீ சான மன்பால்
முத்திவீ டருளு மைந்தின் மூலமாய்க் குடிலை நிற்கும்.

*கறையற்ற முழுமதியை ஒத்திருக்கும் நிறமும் மேற்கு நோக்கும் கொண்ட சத்தியோசாதத் திருமுகம் எல்லா உலகையும் படைத்தலைச் செய்யும். குங்குமப் பூ நிறமும் வடக்கு நோக்கும் கொண்ட வாமதேவம் அவ்வுலகங்களைக் காத்தல் புரியும். கருநிறமும் தெற்கு நோக்கும் கொண்ட அகோரம் அவற்றை அழித்தல் செய்யும். குங்கும நிறமும் கிழக்கு நோக்கும் கொண்டு சித்திகள் நிரம்பிய தற்புருடம் மறைத்தலைச் செய்யும். படிக நிறமும் மேல்நோக்கும் கொண்ட ஈசானம் அன்போடு வீடுபேற்றை அருளும். குடிலை என்னும் திருமுகம் இந்த ஐந்து முகங்களுக்கும் மூலமாய் விளங்கும்.*

89. பரமெனுஞ் சத்தி யைத்தான் படைக்கலத் தரசா யேந்துங்
கரவறு முகவே ளேனைக் கரங்களிற் றோம ரங்கோல்
பரசுபி ராசங் கண்டை பதுமம்வில் கூர்வா டோட்டி
உரனுறு குலிசந் தோகை யெனப்பதி னொருவ ருற்றார்.

*பராசக்தியையே படைக்கலங்களின் அரசு எனப்படும் வேற்படையாகத் தன் கரத்தில் ஏந்தும் அறுமுகப் பரமனின் ஏனைய பதினொரு கைகளிலும் எறியீட்டி, அம்பு, மழு, ஈட்டி, மணி, தாமரை,*

*வில், கூரியவாள், தோட்டி, வலிமை மிக்குள்ள வச்சிரப்படை, கொடி என்னும் பதினொரு படைக்கலங்களாக உருத்திரர் பதினொருவரும் தங்கியுள்ளனர்.*

*(தோமரம் = எறியீட்டி; வடசொல். வல்லையம் என்பது மிதுவே. கோல் =அம்பு. பரசு என்பதை மழுவாக வேனும் கோடரியாக வேனும் கொள்ளலாம். பிராசம் = ஈட்டி; தோமரத்திற்கு வேறாகவுள்ளது. குலிசம் = வச்சிராயுதம். தோகை = கொடி. பதினொருவர் = ஏகாதசருத்திரர். பதுமம் = தாமரை வடிவில் உள்ள ஒரு படைக்கலம். வேல் படைக்கலங்களின் அரசு என்பதை "ஆட்டரன்பால் படையரசை வாங்கினான்" என முதல்வன் புராண முடிப்பிலும் ஸ்ரீமத் சுவாமிகள் அருளியுள்ளார். "இச்சா ஜ்ஞாநக்ரியாசக்திரூப சத்திதரம் பஜே" எனவரும் குமாரதந்திரம் என்னும் ஆகமவுரையால் இச்சா ஞானக் கிரியா சத்தி என்னும் வேலைத் தரித்துளன் சத்திதர சுவாமி எனும் முருகன் எனல் வெளிப்படலால் வேற்படை சத்தி எனப்பட்டது. ஏனைய படைக்கலங்கள் இப்பெயர்க்கு உரியவாகா.)*

*(பரமெனும் சத்தி : எல்லாப் படைகளிலும் தலைமை வாய்ந்த வேற்படை எனினும் பெரிய பொருளாகிய சத்தி எனினும் ஒவ்வும்.)*

90. **சத்திவாள் பகழி மொய்ம்புச் சதமுனை பரசு தோகை**
**அத்தனீள் வலத்தோ டாங்க வங்குசம் பதுமங் கண்டை**
**சுத்தநீ ளிகல்வில் வன்மைத் தோமரம் பெரும்பி ராசம்**
**அத்தனீ ளிடத்தோ டாங்க வமருமென் றறைய லாமால்.**

*அப்படைகளில் வேற்படை, வாள், அம்பு, வன்மை கொண்ட நூறுதலையுடைய வச்சிரம், மழு, கொடி ஆகியவை எம்பிரானின் நீண்ட வலக்கைகளிலும் அங்குசம், தாமரை, மணி, தூய்மையும் நீட்சியும் உடைய வலிய வில், வலிய எறியீட்டி, பெரிய ஈட்டி ஆகியவை எம்பிரானின் இடக்கைகளிலும் அமர்ந்து விளங்கும் என்று கூறலாகும்.*

91. **படைக்கலம் பலவா றாகப் பணிப்பரே சிலரிங் கோதும்**
**படைக்கல விவரங் காந்தம் பகர்ந்தவா றுரைத்தே னானென்**
**உடைக்கல கங்க டீர்த்தா ளொருவனுக் கிகல்வெல் லாற்றல்**
**உடைக்கல மெல்லாஞ் சொந்த மாகுமே யுய்த்து நோக்கின்.**

*எம்பிரானுக்குரிய படைக்கலங்களைப் பல வேறுபாடுகளோடு சிலர் கூறுவர். யாம் ஈண்டுக் கூறிய படைக்கல விவரம்* **வடமொழிக்**

**கந்தபுராணத்தில்** *கூறப்பட்டதே. என்னோடு போர்புரியும் ஐம்புலன்களின் குறும்பை நீக்கி யாட்கொண்டருளும் ஒப்பற்ற முதல்வனுக்குப் போரில் வெற்றி கொள்ளும் ஆற்றல் கொண்ட எல்லாப் படைக்கலங்களும் உரியவாம் என்று உய்த்துணர்க.*

*(ஸ்வதந்த்ரம் என்னும் வடசொல்லின் விகாரமே சொந்தம். இது சுதந்திரம் எனவும் வரையப்படும். சுதந்தரமென வரைதல் கூடாது. என்னை? மந்த்ரம், தந்த்ரம், இந்த்ரன் என்பன முறையே மந்திரம், தந்திரம், இந்திரன் என்றே வரையப்படுகின்றனவாகலின். தமிழ்க் கந்தபுராணம் ஈட்டியை விடுத்துத் தண்டத்தைக் கூறும். ஆசிரியர் நக்கீரனார் இறைவன் கைகளில் தங்கும் பதினொரு படைக் கலங்களையும் கூறப்புகுந்தாரல்லராகலின் திருமுருகாற்றுப்படை முரணுவதன்று என்க. குமரகுருபர சுவாமிகள் நக்கீரரைப் பெரிதும் பின்பற்றியே உரைத்தார். அடைக்கலம், கொடை என்னும் குறிகாட்டுவ இருகைகள் எனக் கொண்டாராகலின் பதினொரு படையும் கூறா ராயினர். கச்சியப்ப சிவாசாரியரும் இம்முறையைப் பின்பற்றியதை "வீறு கேதனம் வச்சிரம்" என்னும் பாடலில் காண்க. இப்பாடல் சயந்தன் கண்ட காட்சியை விளம்புவதாகும்).*

92. **இச்சைசெல் கிரியை ஞான மென்னுமூ வகையாஞ் சத்தி**
**நச்சர வணிந்தோன் கையி னறியமூ விலையாய் நிற்கும்**
**அச்சமி லவைகண் முக்கூ றாய்ப்பிளப் புண்ணா தேக**
**நிச்சய சத்தி யேயாய் நிகழ்தலின் வலிது வேலே.**

*மக்கள் உள்ளத்தில் எழும் விழைவு, அவ்விழைவால் நிகழும் செயல், அச்செயலுக்கு வேண்டும் அறிவு எனப்படும் மூன்று சத்திகளும் நஞ்சையுடைய பாம்பை அணிந்த சிவபிரான் திருக்கையில் மூன்று இலைகளைக்கொண்ட வேல் (சூலம்) ஆக விளங்கும். யாதோர் அச்சமும் அற்ற அம்மூன்று சத்திகளும் தனித்தனியே பிரிந்திராது ஒருங்கிணைந்து ஒரே சத்தியாக விளங்குவதால் வேற்படையே பெருமையுடையதாகும். (வன்மையுடையதாகும்).*

93. **வகைப்படா திருக்கும் வைவேல் வலியதா யிலங்கு மாறு**
**பகைப்படா வைந்து மொன்றும் பகுபடா தொருங்கு கூடித்**
**தகைச்சடா னனனாய் நிற்றல் சரதபூ ரணனென் றோர்வார்**
**தொகைப்படா மாதே சோமண் டலத்தராய்ச் சுடரு நீரார்.**

---

92. மூவிலை = மூவிலைச்சூலம்.

*இச்சை, கிரியை, ஞானம் ஆகிய மூன்று சத்திகளும் பிரிவுபடாது ஒருங்கு கூடியிருக்கும் கூரிய வேற்படையானது வலியது ஆக விளங்குமாறு சிவமே சத்தியாயும் சத்தியே சிவமாயும் விளங்கும் திறத்தால் முரண்படாத சிவபிரானின் ஐந்து திருமுகங்களும் தேவியின் ஒரு திருமுகமும் தனித்தனி நில்லாது ஒருங்கு கூடிய தன்மையால் ஆறு திருமுகங்க ளுடையவனாய் முருகன் விளங்குதல் என்றும் யாண்டும் நிறைவுற்ற பரம்பொருள் இவனே என்று உணர்வார் எண்ணற்ற* ***மகாதேசோ மண்டலத்து*** *அடியவராய் விளங்கும் தன்மையர் ஆவார்.*

94. **கேழுறு குடிலை யீசஞ் சத்தியோ சாதங் கேடில்**
**மாழைகொள் வாம தேவம் வளரகோ ரந்தி ரோதங்**
**கீழெனு மதமேன் மேற்குக் கெழுவடக் கவாசி பூர்வத்**
**தூழுறு முகநோக் காமிவ் வுண்மையும் பூர்த்தி காட்டும்.**

*ஒளி பொருந்திய குடிலை, ஈசானம், சத்தியோசாதம், அழிவற்ற அழகுடைய வாமதேவம், புகழ்வளரும் அகோரம், மறைத்தலைச் செய்யும் தற்புருடம் ஆகிய ஆறுதிருமுகங்களும் முறையே கீழ் (அதம்), மேல், மேற்கு, வடக்கு, தெற்கு, கிழக்கு ஆகிய திசை நோக்கம் உடையன என்பதும் அவனது யாண்டும் நிறைந்துள்ள முழுமையைக் காட்டும்.*

*(குடிலை முகமே கீழ் என்னும் அதநோக்குடையது எனப்பட்டது. இது சிவபிரானிடத்து மறைந்து விளங்குவது. இது முருகனிடத்து வெளிப்பட்டு விளங்குகிறது. "நன்முக மிருமூன் றுண்டால் நமக்கவை தாமே கந்தன் தன்முகமாக" என்னும் கந்தபுராண வுரையும் காண்க. மகாசாதாக்கியம், சாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம், கன்ம சாதாக்கியம் என்னும் ஆறு தத்துவங்களையும், இச் செய்யுளில் கூறப்பட்ட ஆறு திசைநோக்கை யும் கொண்டவை முருகன் திருமுகங்களாகும். எனவே திக்குகளாய எவ்விடத்தும் இருப்பவன் முருகனே என்பதும் அவனே எம் முகத்தும் தொழப் படுவோன் என்பதும் அறிக. யசுர்வேத முக்திகோபநிடதம் "மேலுங் கீழும் நிறைந்து நடுவும் நிறைந்துள்ளது சிவசொரூபம்" என்று கூறும். நடு என்பது ஈண்டு நான்கு திக்குகளையும் அடக்கியது என்று அறிக.)*

94. திரோதம் = திரோதத்தொழிலையுடைய தற்புருடம்; திரோதம் = மறைவு.

95. தாவுறாச் சீவன் முத்தி தசையினி லறிஞர்ப் போற்றி
நோவுறாத் தழுவல் செய்து நூனமி லறிவாய் நிற்கும்
வீவுறாக் கிரியை யிச்சை விவேகமென் பவற்றிற் கீசன்
ஓவுறாக் கிரியை யிச்சை யுணர்ச்சியா தார மாமே.

*துன்பம் சேராத சீவன் முத்தி தசையினில் உள்ள பெரியோரைப் போற்றி அவர் வருந்தாவகையில் அவர் கூட்டம் பெற்று உயர்ந்த அறிவாய் விளங்குவன ஒய்வில்லாத இச்சை, கிரியை, ஞானம், என்பன. இவற்றிற்கு இறைவன்பாலுள்ள இச்சை, கிரியை, ஞானம் என்னும் மூன்று சத்திகளும் பற்றுக் கோடாய் விளங்கும்.*

96. இந்தவா தார சத்தி யிறைகர மேறிற் றென்றால்
அந்தவேல் வலிமை யாரே யளப்பரவ் வாற்றா னன்றோ
எந்தையே வுதலை யோர வேவிய வாறே செய்ய
வந்தசூர் படைவி ழுங்க மாய்க்கவன் றிலகிற் றாலோ.

*இங்ஙனம் ஆதாரமாயிருக்கும் முச்சத்திகளும் ஒன்று கூடிய வேற்படையானது இறைவன் திருக்கையில் வீற்றிருக்குமெனில் அதன் வலிமையை யாவர்தாம் அளந்துரைக்க வல்லவராவர்? அதனாலன்றோ எந்தையாகிய கந்தவேள் ஆணையை உணரவும் கட்டளைப்படியே செய்யவும் எதிர்த்து வந்த சூரபதுமன் ஏவிய படைகளை விழுங்கவும் அழிக்கவும் திறல் பெற்று விளங்கியது.*

97. இலகெழில் விமலன் வேல்க ளேனைய தேவர் கையில்
இலகுபல் படைகட் கெல்லா மெறுழவா மவற்றுண் மேலாய்
இலகுதல் வேலே யாமிஃ தோடுவே றியல்பு மெண்ணின்
இலகயில் வேலோ டுள்ள வெழிலுருத் தொழலே மேலாம்.

*அழகு விளங்கும் விமலன் ஆகிய முருகப்பரமனின் படைக்கலங்கள் யாவும் ஏனைய தேவர்களின் கைகளில் விளங்கும் பல படைக்கலங்களினும் வீறு பெற்றவையாகும். முருகன் படைக்கலங்களில் மேன்மைகொண்டு விளங்குவது வேலே ஆகும். இதன் ஏனைய சிறப்புக்களையும் நோக்கினால் வேற்படையோடு கூடிய முருகப் பரமனின் அழகிய திருவுருவத்தைத் தொழுதலே மேம்பாடுடையது என்று உணரலாகும்.*

---

97. வேல்கள் = ஆயுதங்கள்.

98\. ஆயுத மெல்லாம் பொல்லா வசுரரை யழிக்க வாய
சேயமெய் யினனான் மற்றைச் சீவர்கட் கவைகாட் டாற்றை
ஏயநன் கியம்பல் சூக்கு மார்த்தமா மவற்றை யீங்கு
நேயமொ டுரைப்பல் வேறான் நீளிரு ளழிவு ணர்த்தும்.

*முருகன்பால் உள்ள படைக்கலங்கள் யாவும் கொடிய அசுரரை யழிக்கப் பயன்பட்டன. ஏனைய எல்லா வுயிர்களும் காணும்படி அப்படைக்கலங்களோடு சிவந்த திருமேனியுடைய அப்பரமன் விளங்கும் உண்மையைப் பொருந்துமாறு நன்கு கூறலே நுண்பொருள் எனப்படும். அந்நுண்பொருளை அன்போடு இங்ஙன் கூறுவல். வேற்படை என்பது நீண்ட இருள் எனப்படும் ஆணவ மல அழிவைச் செய்வது இப்படை என்பதை உணர்த்தி நிற்கும்.*

99\. தோமரந் தூய மாயைத் தோற்றமுண் டாமா றாண்டு
மாமுரண் டிளைக்கச் செல்லோர் வண்மையை யுணர்த்தும் வால்வாள்
நோமர ணஞ்சார் தோற்றக் கொடியின்வேர் நொடித்தல் காட்டுந்
தாமரை விரிந்தோ வெல்லாந் தலைவன வெனலு ணர்த்தும்.

*தோமரம் தூயமாயையில் சுத்த தத்துவங்கள் தோன்றுமாறு அங்கு தனது பெருவலிமை விளங்கச் செல்லும் ஒப்பற்ற வளப்பத்தை உணர்த்தும். தூய வாட்படை பிணிக்கும் சாவுக்கும் உறைவிடமான பிறவிக்கொடியின் வேரை அறுத்தலை உணர்த்தும். தாமரை விரிந்து கூம்பும் எல்லா உலகங்களும் இப்பெருமானது உடைமைகளே என்பதை உணர்த்தும்.*

100\. ஈட்டியுங் குலிச முந்தா னிவர்பவ நாச வெற்றி
காட்டுவர் பிறராற் கேடு காண்கில ரெனலு ணர்த்துங்
கோட்டுவில் கணையாங் காரக் கொடுமல விருத்தி நாச
தாட்டிக முணர்த்துந் தோட்டி தான்குணஞ் செலுத்தல் காட்டும்.

*ஈட்டியும் வச்சிரப்படையும் இப்பெருமான் பிறவிப் பிணியை யழிக்கும் வெற்றியைத் தருவர் என்பதும் இவர் பிறரால் அழிக்கப்படாதவர் என்பதும் உணர்த்தும். வளைந்த வில்லும் அம்பும் ஆங்காரமாகிய கொடிய மல வளர்ச்சியை அழிக்கும் வலிமையை உணர்த்தும். தோட்டியானது சத்துவம், இராசதம், தாமதம் ஆகிய முக்குணங்களையும் செலுத்துவதைக் காட்டும்.*

**101.** **பரசுதத் துவத்தின் சாம்பல் பண்ணொளிப் பரையிவ் வீசர்**
**உரனினிற் பவளே யாவ ளென்பதை யுணர்த்துந் தோகை**
**பிரணவத் தூர்த்த மாயைப் பிரானிவர் மாட்டே வென்றி**
**மரபனைத் துங்காண் கென்னும் வண்மையை யுணர்த்து மாலோ.**

*எல்லாத் தத்துவங்களையும் அழிக்கும் ஞானவொளியாகிய பராசத்தி இவ்விறைவனின் உள்ளக் கிளர்ச்சியில் நிற்பவள் என்பதைப் பரசுகாட்டும். பிரணவத்தின் ஊர்த்துவமாயைக்குத் தலைவராகிய இப்பெருமானிடத்தேயே எல்லா உலக வெற்றிப்பாடும் உளதாகும் எனும் வளப்பத்தைக் கொடி உணர்த்தும்.*

**102.** **இன்னுமத் தோகை ஞால வின்பினை விழைநெஞ் சுள்ளீர்**
**மன்னுசித் தினிமை வேட்கு மதியுளீ ரவைகோ டற்கிவ்**
**வின்னலி லான்பால் வம்மி னெனவழைப் பவர்போற் கூவி**
**என்னினும் வேறா மூர்தி யெவர்க்குமின் றெனவே ணாட்டும்.**

*அன்றியும் அக்கொடி "இவ்வுலக இன்பத்தை விரும்பும் மனமுடையோரே! நிலை பெற்ற ஞானானந்தப் பேற்றை விரும்பும் அறிஞரே! நீவிர் விரும்புவனவற்றைப் பெறுவதற்குத் துன்பமில்லா இன்ப வுருவினனான இம்முருகப் பரமன்பால் வருவீராக என்றழைப்பது போலக் கூவியும் எம்பிரானுக்குக் கொடியாக யானும் ஊர்தியாக மயிலும் என இருப்பது போல் வேறு எத்தெய்வத்துக்கும் கொடி வேறு ஊர்தி வேறாக இருத்தலில்லை என்னும் பெருமை நாட்டியும் விளக்கும்.*

*(இறைவன் எஞ்ஞான்றும் மயிலேறும் பெருமான் என்பதும் அஃது பஃறிற விசித்திரதர அலங்கார முக்குணப் பிரபஞ்ச நாமரூப விலாச கலாபத்தை விரித்தாடா நின்ற மாமாயையே என்பதும் அறிக. இங்ஙனம் அந்த மாமாயையை அதோ மாயை ஊர்த்துவமாயை எனப் பிரித்துக்கொண்டு அதோ மாயையை மயில் என்னும் ஊர்தியாகவும் ஊர்த்துவமாயையைக் கோழி என்னும் கொடியாகவும் கொள்ளல்வேண்டும். எனவே எம் இறைவனால் இவ்வுலகம் ஆளப்படுகின்றது. 'வேண்டுவார் வேண்டுவதே ஈவான்' என்றபடி இந்த வுலக இன்பத்தையேனும் அதை கடந்து நின்றடையும் ஞானானந்தத்தையேனும் ஈந்தருள்பவன் இப்பெருமானே. இவன்பால் வம்மின் என உயிர்த்தொகுதியை அழைக்கும் குறிப்பில் அக்கோழி ஒரு கொடியாக உளது. (வடமொழியாகிய குக்குடம்*

101. உரன் = உள்ளக்கிளர்ச்சி.

*என்பதில்) கு = பூமி, குடம் = வக்கிரமாகக் கிண்டல் எனப் பொருள் படுமாற்றானே மண்ணை வக்கிரமாகக் கிண்டி உண்பன கண்டு உண்பது கோழி எனவாகும். அக்கிண்டல் பிரபஞ்ச விகாரத்தைச் சேதித்தல் என்னும் பொருளைத் தரும். அயனுக்கும் அரிக்கும் அரனுக்கும் ஊர்திகளே கொடிகளாகவும் இருப்ப, முருகனுக்கு ஊர்தியும் கொடியும் வேறுபட்டிருத்தலும் அவன் தலைமையின் நிறைவை உணர்த்தும் எனல் கணித்து ஸ்ரீமத் சுவாமிகள் "வேதற்கு மேலா விளம்புமரிக் கும்மரற்கும், கோதற்ற வாகனமும் கொள்கொடியும் ஒருருவே, பேதற்ற ஞானப் பெருக்கிலமிழ் வாரினிய, காதற்குளமா கருணையிறை யாம்வள்ளி, நாதற்கு வாகனமும் நன்கொடியு மீருருவே," எனத் திருவலங்கற்றிரட்டு இரண்டாம் கண்டத்தில் அருளிச் செய்திருத்தலை நினைவு கூர்க. கலியியல் - பாடல் 21.)*

103. **கண்டையொ டுடுக்கை கையிற் கணிக்கினி ரண்டுங் காலின்**
**மண்டிய சிலம்புந் தூய மந்திர மெழுத்தி வற்றை**
**உண்டுசெய் பரநா தத்தி னொழுங்கிலே படைப்பு மந்தங்**
**கொண்டவந் நாதந் தாளைக் கோடலு முணர்த்து மாலோ.**

*பரமன் திருக்கையில் உள்ள மணி, உடுக்கை என்பவையும் அவனிரண்டு திருவடியில் நிறைந்துள்ள சிலம்பும் தூய மந்திரம், எழுத்து என்பவற்றைப் படைக்கும் பரநாதத்தின் ஒழுங்கிலே படைப்பையும் அழகிய அந்த நாதம் அவன் திருவடிகளைத் தாங்கி நிற்றலையும் உணர்த்துவனவாம்.*

104. **அணிமுடி மதாணி யாதி யணியுடை யாக்கஞ் சேயைப்**
**பணிதலி னுண்டா மென்ற லுணர்த்துநீ பத்தார் வேறுங்**
**கணிதமி லாத தூய்மை காட்டும்வா கனமோங் காரத்**
**திணிபகு தியில தோபா கமெனுமோர் திறனு ணர்த்தும்.**

*அழகிய திருமுடி, மதாணி முதலிய அணிகளும் உடையும் சேய்ப்பரமனைப் பணிதலால் உண்டாகும் செல்வத்தை உணர்த்துவ. கடப்பமாலை, வெண்காந்தள் மாலை, வெட்சி மாலை முதலியன இத்துணைத்து என்று கணிக்கமுடியாத தூய்மையைக் காட்டும். மயிலாகிய ஊர்தி பிரணவத்தின் செறிந்த பிரகிருதியின் அதோமாயை என்பதனை உணர்த்தும்.*

---

103. தாளைக்கோடல் = திருவடியைத் தாங்கி (அலங்கரித்து) நிற்றல்.
104. வேறும் = கடம்புக்கு வேறாயுள்ள வெண்காந்தள், வெட்சி முதலியனவும். பகுதி - (ப்ரக்ருதி) பிரகிருதி என்பதன் விகாரம்.

105. மலத்தடன் மாய்க்கும் வேலன் வன்படை யேந்தா துள்ள
வலத்தப யத்தோ ளஞ்சேல் வணங்குவோ யெனலு ணர்த்தும்
நலத்தவி டத்தோ ளாகும் வரதநிற் கெனது நற்றாள்
பலத்தவொர் தஞ்ச மென்றே பணித்தலை யுணர்த்து மாலோ.

*மலத்தின் வலிமையை அழிக்கும் வேற்படை கொண்ட பரமன் வலிய படைக்கலங்கள் தாங்காது வலப்பக்கம் விளங்கும் திருக்கை என்னைத் தொழுபவனே! அஞ்சேல்! என்னும் அபயக்குறி காட்டும்; நலமார்ந்த இடக்கை எனது நல்ல திருவடியே உனக்கு வலிமை மிக்க புகலிடம் என்னும் வரதக்குறி காட்டும்.*

*(பிறவிப் பிணிக்கு மருந்து ஆகலின் 'நற்றாள்' என்றார்.)*

106. பிரான்றிரு மேனி தூய பிரணவ மாத லானே
பிரான்பரை சத்தி யாதி பேதமெவ் வளவவ் வெல்லாம்
பிரான்றிரு மேனி யின்கட் பிறங்குமம் மேனி யான்மா
பிரான்சொரு பந்தான் வேறு பேசுதல் பிழையின் மூக்கும்.

*எம்பிரான் திருமேனி தூயதாகிய ஓங்காரம் ஆகையால் பரன்பரை முதலிய வேறுபாடுகள் எத்துணை உளவோ அத்துணையும் அவனது திருமேனியின்கண் விளங்கும். எம்பிரானின் சொரூபமே அத்திருமேனியின்கண் விளங்கும் ஆன்மா ஆகும். இதை விடுத்து வேறு கூறுதல் பிழையின் மூத்து நிற்கும்.*

*(அதர்வண வேத பஸ்மசாபாலோபநிடதம் 'கைலாஸ சிகராவாஸ மோங்கார ஸ்வரூபிணம் மஹாதேவ முமார்த்தக்ருத சேகரம்" என்றும், மாண்டூக்யோபநிடதம் "சிவோத்வைத ஏவமோங்காரம்" என்றும், சண்முகசகத்திரநாமம் அங்கநியாஸங் கூறுமிடத்து "சம் ஓங்கார ஸ்வரூபாய ஓஜோதராய ஓஜஸ்விநே நம:" என்றும் கூறலால் அம்மேனி ஓங்காரமாதல் பெறுதும், ஓங்காரம் "குண்டலி, பிரமம், பரம், சிவம், மாமாயை, மாயை, மாயேயம், நாதம், விந்து, வைந்தவம் எனவும் படும். இது கொண்டே "குணங்களைக் கடந்தோ யெனினுமா யையினைத் தோய்தலாற் குணமுடை யவன்போல், அணங்கொரு பாலுங் கறைமிடற் றழகு மம்பக மூன்றுமா முருக்கொண் டிணங்குறு நாமம் சிவன் பவன்" என்று அப்பைய தீக்கிதர் பெருமான் அருளிய சிவதத்துவ விவேகமும் (ஈண்டுக் காட்டப்பட்டது மொழி பெயர்ப்பு) கூறிற்று, இவ்வாறு உரைக்கப்படினும் அது சுத்த மாயை, பிரணவ மாயை எனக் கோடலே சால்பிற்று, நீலகண்ட சிவாச்சாரியார் தம் பாடியத்தில்*

பிரமசூத்திரத்தின் இறுதிச் சூத்திரத்தில் "இந்த்ரோ மாயாபி : புருரூப ஈயதே" என்ற யசுர் வேத பிருகதாரணியக உபநிடதத் தொடருக்கு "முதல்வன் மாயை வாயிலாக பல வடிவங்கள் கொண்டனன் எனல் காணப்படுகின்றது" எனவும் "ஸ்திரேபிரங்கை: புருரூபஉக்ர:|" எனவரும் ருக்வேத மந்திரத்திற்கு "உக்கிரன் உறுதியாய அங்கங்களோடு பல வுருவமுடையவன்" எனவும் பொருளுரைத்து மாயையினை மாமாயசத்தி எனக்குறிப்பிட்டுச் "சிவன் யாங்ஙன் விசுத்தமாகிய அனேக மேனிகளைக் கொள்கின்றன னோ அங்ஙனமே முத்தர்களுமாவர்" என்றொரு முடிபும் உரைத்தார். இனித் திருவிளையாடற் புராணத்தில் "மறையே நமது வடிவாகும்" எனச் சிவனாரே கூறியதாக வருவதால் மறைகள் திருமேனி எனப்படும். அவ்வாறே ஆகமங்களும் திருமேனியாதல் காமிகாகமத்தால் பெறுதும். இறைவன் மாயை வாயிலாகத் திருமேனி கொள்வன் என்னில் "காயமோ மாயை யன்று காண்பது சத்தி தன்னால்" எனும் சிவஞானசித்தியார் உரை முரணுமே எனில் முரணாது. "வித்தை யுயர்கலை யதனில் தோன்றி யறிவினை யுதிக்கப் பண்ணும்" என்று அச்சித்தியார் கூறுமாறு அசுத்தமாயா தத்துவங்களுள் ஒன்றாய வித்தை ஆன்ம அறிவை ஒருசார் விளக்கி நிற்குமாதலால் சடமான அம்மாயையே இறைவனது திருமேனி யன்று எனக் கூறப்பட்டது. சுத்தமாயை அன்று என்று உணர்க. இவ்வாறன்றிச் சித்தியார் சுத்த மாயையே அவ்வாறு கூறிற்று என்று கொண்டால் அத்துவா மூர்த்தி மந்திரங்கள் வடிவு என்று அச்சித்தியார் கூறலை மாறுகொள்ளும். சுத்தமாயையும் அறிவில் பொருளாம் சடமன்றோ எனில், சடமாயினும், சிற்சத்திக்குச் சுதந்திர வடிவாயிருத்தலின் அது சைதன்னியமே என்க.

"தத்துவ முப்பத் தாறாஞ் சைதன்னி யங்க ளைந்து சித்தசித் தான்மா வொன்று முப்பது மசித்தே செப்பில்" எனும் சித்தியார் செய்யுள் சுத்தவித்தை, ஈசம், சாதாக்கியம், சத்தி (விந்து) சிவம் (நாதம்) எனும் சுத்தமாயா தத்துவங்கள் ஐந்தையும் சைதன்னியம் எனல்காண்க. அறிவில் பொருளாய கண்கள் அறிவின் புணர்ப்பால் அறி பொருளாய்த் திகழ்ந்தாங்கு, இரும்பு நெருப்பின் கூட்டுறவால் நெருப்பாகவே மிளிர்ந்தாங்கு, சுத்தமாயையும் சிற்சத்திக்கு உடம்பாய் இருக்கும் புணர்ப்பால் அச்சத்தியாகவே விளங்கு மாதலால் அதைச் சைதன்னியம் எனல் ஏற்புடைத்தே. இவ்வாறன்றி இறைவனுடைய வடிவெல்லாம் உபசாரத் திருமேனி என்று கொள்ளின் அவன் ஆற்றலும் ஐந்தொழிலும் உபசார மாயே முடிந்தொழியும். ஐந்தொழிலுள் அருளல் உபசாரமாய் முடிதல் நறிதாங்கொல்?

*பிரணவம் தாரகம் என்னும் பெயருடையது. உயிர்களை மலப்பிணிப்பினின்று கடக்கச் செய்வது என்பது அதன் பொருள்.*

*இவ்வுண்மைப்பாடுகளை உணரமாட்டாமையாலோ, சிவன் அழிப்புக் கடவுள் எனல் செவிக்கு இனிமை பயவாச் சொல்லாயுளதே என்று பின்னிடுவாரை ஒத்து இறைவன் திருமேனி சுத்தமாயை எனக்கேட்டல் மாத்திரையே அது மாயையா என்று அருவருப்புறும் அறியாமையாலோ சிலர் கொள்கை மாறுபாடுறுவ தாயிற்று. இம்மாறுபாடு ஆடு கரும்பு விடுத்து அதன் தழை தின்னலை ஒக்கும். ஓங்கார நிந்தை இருமைக்கும் கேடு பயக்கும்)*

**107. உயிர்ச்சம வாய ஞான முடம்பென வாகா மேவே
றுயிர்ச்சடக் கருவின் மேனி யுறுதலை யுணர்வி வேகர்
உயிர்க்குயி ராந்தே ஞான மொருசம வாய நூறி
உயிர்ச்சட பரிணா மச்சால் புறவுரை யாரெஞ் ஞான்றும்.**

*உயிரோடு பிரிப்பில் நிலையுடைய அறிவே அவ்வுயிர்க்கு உடம்பு ஆகாமல் வேறோர் உயிரின் உடம்பில் கருவாகி உடம்பு பெறுதலை உணரும் அறிஞர் உயிருக்கு உயிராகிய இறைவனுடைய அறிவு (சித்து ஆகியதேவி)க்கு உள்ள ஒப்பற்ற பிரிப்பில் நிலை அழியும்படி உயிரின் உடம்புக்கு உரிய வளர்தல், மூத்தல், அழிதல் என்னும் விகாரத் தன்மை பொருந்த எக்காலும் கூறுவாரல்லர்.*

*(பிரிப்பில் சத்திபால் பரம்பொருள் தோன்றும். அங்ஙனம் திருமேனியும் சொல்லப்படும் என்பது "முன்னருட் சத்தி தன்பால் முகிழ்க்கும் தான் முளையான் என்னும் சிவஞான சித்தியாரால் பெறலாமன்றோ எனின் அஃது யாங்ஙனம் பொருந்தும் என்று கடாவி ஒழிக்கப்படும். என்னை? பிரிப்பில் சத்தியைப் பிரித்து அதனை ஓரிடமாக்கிக் கூறலின். சத்தியை நீங்காது சத்தி சம்பந்தத்தால் சைதன்னியமா யிராநின்ற பிரணவத்தினிடம் தோன்றுவானன்றி, வேறு தோன்றான் என்று அதற்கு உரை கொள்ளலே பொருந்தும் என்க. இங்ஙனம் கொள்ளாது தீயும் சூடும் போன்ற தாதான்மிய சத்தியைப் பல பேதப்படுத்துரைத்தல் சிவத்திற்கே பேதவிகாரம் கூறலாய் முடியும். இத்திருப்பாடலால் திருவிளையாடற்புராணம் கூறும் தடாதகைப் பிராட்டியார் வரலாறும் சிவனார் சாபத்தால் அம்மை வலைச்சியாய்ப் பிறந்த வரலாறும் இவை போன்ற பிறவும் இறைவன் மாட்சிமையைக் கெடுக்க எழுந்த கற்பனைக் கதைகளே என்னும் உண்மை பெறப்படலை உய்த்துணர்க).*

108. குணியினை நீங்கு றாத குணமெனு ஞான சத்தி
மணியொளி போற்சி வத்தில் வயங்கலி னதற்குப் பல்கூ
றணிமுறை கூறா கூறி னக்குணி கேடா மான்றோர்
கணிதபன் மணியி லோர்நூ லெனக்கலை நிலவு மென்பார்.

*பண்பியாகிய சிவத்தை விட்டு நீங்காத பண்பு ஆகிய ஞானசத்தி மணியில் ஒளியைப்போலச் சிவத்தின்மாட்டு விளங்குதலால் அச்சத்திக்குப் பல வேறுபாடுகளை அழகிய நூல்கள் உரையா. உரைப்பின் பண்பியாகிய சிவம் கேடுறும். அன்றியும் சொரூபசிவம் பல நிற மணிகளுள் தங்கும் ஒரு நூலையொத்துத் திரிபின்றி கலைகளில் விளங்கும் என்று பெரியோர் கூறுவதும் கருதுக. (கலை என்பது தத்துவம் என்றறிக).*

109. கனவொளிப் பிரண வத்தின் கலைகளி னுருவங் கொள்ளும்
அனகசிற் சத்தி யாத லானதன் றடத்த மேனி
மனவுரைக் கடங்கா வாத லாற்குகன் வடிவிற் கேண்சேண்
பனவிசைப் பின்றென் னாரோ பராபர வுண்மை யோர்ந்தார்.

*பெருமைமிக்க ஒளி திகழும் பிரணவத்தின் கலைகளில் மாசற்ற சிற்சத்தி திருமேனி கொள்ளுதலால் அதன் தடத்தலக்கணந் திருமேனியின் மாட்சி மனமொழிகட்கு அடங்காது. ஆகையால் குகப்பரமனின் திருமேனிக்கு ஒப்புடையதும் உயர்வுடையதும் ஆன வேறு ஒன்றைக் கூறுதற்கு இயலாது என்று அப்பராபரனின் மெய்ந்நிலையை யுணர்ந்தோர் கூறாரோ? கூறுவர் என்க.*

110. நண்ணிடு நிவிர்த்தி யாதி நாற்கலை யுருவ தீதம்
விண்ணரு வுருவாம் வீறார் குடிலைதா னருவா மிஃதே
ஒண்ணுத லுமைகேள் வன்பா லுறன்மறை வாமே யாறும்
அண்ணிய விளக்க மேனி யரனறு முகனே யானான்.

*நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி எனப் பொருந்திய நான்கு கலைகளும் உருவமாகும். சாந்தியதீதம், விண் என்பன அருவுருவமாகும். பெருமைமிக்க குடிலை அருவமாகும். ஒளிபொருந்திய நெற்றியுடைய உமாதேவியின் மணாளனிடத்து மறைந்து நின்று விளங்குவதும் இதுவே. குடிலையோடு கூடிய ஆறுதிருமுகங்களும் வெளிப்பட விளங்கும் திருமேனி யுடையவன் முருகனே ஆவன்.*

110. நிவிர்த்தியாதி நாற்கலை = நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி. அதீதம் = சாந்தியதீதகலை. இவைகளே படைப்பு முதலிய ஐம்பெருந்தொழில்களிலு நிற்பன.

*(ஸ்ரீமத் சுவாமிகள் "தேவனுந் தேவியுந் திருவுரு வருவம், மேவி யனாதியாய் மிளிர்தல் சண்முகமென், றாவலுற் றுணர்பவ ரழிவுறா வண்ணம், சாவினைத் தடுப்பது சரவண பவவே" என்று திருவலங்கற்றிரட்டில் உரைத்தலும் ஓர்க).*

111. **முன்னரிவ் வாறில் லாது பின்னுறன் முகிழ்த்த மோனம்**
**மன்னிலை மேலின் பார்சு வானுபூ திமுறை யாகும்**
**என்னுமெய் யறியார் செம்மாப் பேய்வரோ வேயா மூடர்**
**பன்னிழி விழிவாங் கொல்லோ பசுபதிக் குமரன் மாட்டே.**

*முதற்கண் ஐம்முகனாய் விளங்கிப் பின்னர் ஆறுமுகனாய்ப் பரமன் விளங்குதல் உயிர்கள்பால் விளையும் மோனம் நிலைபேறுற்ற காலை இன்பமே வயங்கும் சுவானுபூதியின் முறைமை யாகும் என்னும் உண்மை உணராதவரும் செம்மாப்பு எய்துவரோ? எய்தாத அம்மூடர் பசுபதியாகிய குமரப்பிரபுவுக்கு ஏற்றிக் கூறும் இழிவுரைகள்தான் இழிவாய் நின்றிடுமோ? நில்லா. சூரியனைப் பார்த்து நாய் குரைக்கும் செய்கையையே இவர் செய்கையும் பொருவும் என்க.*

*(சுவானுபூதி முறையாதல் "அஞ்சுமுகங் காட்டாம லாறுமுகங் காட்ட வந்த, செஞ்சரணச் சேவடியைச் சிந்தைவைப்ப தெந்நாளோ" எனவரும் தாயுமான சுவாமிகள் திருமொழியால் அறிக. குருசீட மூர்த்தத்தின் உண்மை அறியாச் சிலர் குருவாவான் முருகனும் சீடனாவான் சிவனுமாதலின், சிவன் முருகனுக்குச் சீடனாதல் கூடாது என்னும் கருத்தால் சீடனானான் பிரளயா கலருள் ஒருவனான சீகண்ட ருத்திரனே எனவும் அவன் தேவியே உமை எனவும் அவர் மகனே முருகன் எனவும் கற்பனை செய்து மகிழ்வாராயினர். இன்னோர்தம் கூற்று அச்சீகண்ட ருத்திரனே இம்மண்ணுலகத் துள்ள கோயில்களில் விளங்குபவன் எனலையும் சமய குரவன்மார்க்கு அருளியவனும் அவனே எனலையும் திருத்தொண்டர் புராணம் பேசுவதும் அவனடியவரையே எனலையும் காட்டி இன்னோர் கொள்ளும் சிவனைக் கண்டவருமிலர்; வழிபட்டு முத்தியடைந்தவருமிலர்; அவன் வரலாற்றை விளக்கும் ஒரு நூலோ அல்லது அவனடியவராயிருந்தவரோ இல்லை எனலையுமே காட்டும். "திருவார் முருகன் குருவாய் வருநிலை தேர்ந்துணரார், இருளார் மதியால் எழில்விடை யோனை யிழிந்தவனாய்ப் பொருடீர் மொழியிற் புலம்புவர் நட்புப் புணரினகம், மருளேய்ந் திடுமெனச் சேர்கிலன் பாம்பன் மறையவனே" எனவரும் பாடலையும் உணர்க.)*

112. ஈண்டறை சுவானு பூதி யிருதிற மவற்றுட் டேவர்
காண்டகை யுளது ரூப மாமது காணு முன்சூர்க்
கீண்டிடல் பிறக்க வில்லை கேடில்வே றொன்றே னோர்சூர்
மாண்டறச் செய்சொ ரூப மாமென வழங்க லாமே.

இங்குக் கூறப்பட்ட சுவானுபூதி இருவகைப்படும். தேவர்கள் காணும்படி காட்டிய பாரமேசுவரத் திருமேனி அவற்றுள் ஒருவகையாகும். அதனைக் காணுமுன் சூரபதுமனை வேலால் பிளத்தல் நிகழவில்லை. அழிவற்ற மற்றொன்று ஏனைய மாந்தரை பிணித்து வருத்தும் ஆணவமலத்தை அறவே ஒழியும்படி செய்யும் சொரூபநிலை என்று கூறுதல் பொருந்தும்.

(விடயப்பற்றோடு கூடிய மலினமனம் என்பது உருவப் பொருள்களைக் காணும் கண்ணைக் கொண்டு உருவங்களை அறியும் உருவமனம் ஆகும். அஃது உள்ள துணையும் உருவ மூர்த்தியை உண்முகத்தே வழிபடலே கடமையாகும். வழிபாட்டின் பயனாய் அது பரமனம் ஆகும். அது தனது ஆன்ம சொரூபத்தை இத்தன்மையுடையதென அருள் துணைவலி கொண்டு நன்கு கண்டு கொள்ளும். பின்னர் ஞானமயமான அது நின்மலமா யுள்ள அவ்வருளையும் இத்தன்மை யுடையதென அறிந்து அணைந்து அவ்வருளினது நாயக மாகிய சிதாகாசப் பெருவெளியையடையும்.

113. அமிசமோ முதலோ வென்னு மையமு மிஙன மோயும்
அமிசமா காதே சீவான் மாவுமஃ துடலிற் காஞ்சேய்க்
கமிசமே னவின்ற வாற்றா னறையொணா தறைந்தா லுந்தான்
அமிசமே லாமே தீபம் பகல்விளக் கருத்தத் தானும்.

முருகன் சிவபிரானது ஒரு கூறோ அல்லது அப்பரமனே தானோ என்று தோன்றும் ஐயமும் இங்ஙனம் ஒழிந்துவிடும். இங்ஙனம் உயிர்களும் இறைவனின் அமிசம் ஆகா. அவைகளை உடம்பாகக் கொண்டுள்ள சேய்ப்பரமனும் இதுகாறும் கூறி வந்தவாற்றால் சிவனே ஆவனன்றிச் சிவனின் கூறு ஆகான். அன்றியும் முருகனைச் சிவனாரின் கூறு என்று கூறிக் கொளினும் ஒளிதரும் விளக்கினும் அதில் கொளுத்தப்பட்ட மத்தாப்பு சிறந்து விளங்குவது போலச் சிவனாராகிய முதலைவிட அவரின் அமிசமாகிய முருகன் மேம்பட்டு விளங்குதலை இதுகாறும் கூறியவற்றால் உணரலாமே.

113. “பகல் விளக்கு” - பகல்வத்தியெனப்படுவது (= தீவர்த்தி)

*("அமிசமாகாதே சீவான்மாவுமஃதுட லிற்கு" என்னும் தொடருக்கு வேறு பொருள் கூறலாமேனும் அதன் சிறப்பின்மை நோக்கி யிங்ஙனம் உரைத்தாம். உயிர்களை இறைவனின் அமிசமாகத் தைத்திரீயாருண சாகை நாராயணமும் பிறசுருதிகளும் கூறுமே எனின் உயிர்கள் அறிவற்ற பாசம் போலாது சித்துப் பொருளாயிருத்தலி னாலும் இறைவனுக்கு உடம்பா யுள்ள அவ்வான்மப் பிரகாசம் அப்பரமான்மப் பிரகாசத் தால் விளக்கமுறு வதொன் றாகலினாலும், பிரமத்தின் உடம்பாகிய மாயைவயின் அடங்கிக் கிடக்கும் உயிர்கள் படைப்புக்காலத்து வெளிப்படலாலும் பிரமதேசசு, பிரமபாதம் (=அமிசம்) என்றன என்பது உணர்க. கடவுள் பகாப் பொருளாகலின் "யாமே அவன், அவனேயாம்" என்ற சிவபரஞ்சுடர் மொழியை முருகனுக்கு அமிசம் கூறப்புகுவார் கோட்பாடு முரணுவதேயாம் என்பதும் தெளிக.)*

114. **ஐம்முகச் சிவன்மா சால்பு மறுமுகச் சிவன்மா சால்பும்**
**மெய்ம்மைநின் றுணரு நீரார் மேன்றொழி லைந்து ணாசம்**
**மைம்மனக் கரும பாவ மடித்தலே யாங்கோ ரத்தால்**
**ஐம்மிகுத் துளவம் மூர்த்தி யருண்மறத் தொழிலஃ தென்பார்.**

*ஐம்முகச் சிவபிரானின் மாண்பும் ஆறுமுகச் சிவபிரானின் மாண்பும் உண்மை வழிநின்று உணர்ந்த சான்றோர் ஐந்தொழிலில் மேம்பட்ட அழித்தல் என்பது இருள் நிரம்பிய மனத்தின் செயல் திறனை அகோரத் திருமுகத்தால் அழித்தலாகும். அழகு மிகுந்துள்ள அப்பெருமான் உயிர்கள் பால் கொண்ட அருளால் நிகழும் மறத்தொழில் அஃது என்பர். (அழித்தல் என்ற சொல்லைக் கேட்ட அளவிலேயே அருவருக்கும் பேதையர் பலர். ஒருவன் தலையில் வினைக்கட் டாகிய விறகுச் சுமையை ஏற்றி வைத்தலே படைப்புத் தொழிலாகும். அச்சுமை நழுவி விழுந்து விடாமல் இறுக்கிக் கட்டலே காத்தல் தொழிலாகும். அச்சுமை அவன் தலையினின்று இறங்கச் செய்தலே அழித்தல் தொழிலாகும். எனவே அழிப்புத் தொழில் உயிர்களின் வருத்தத்தைப் போக்குவதென்று உணர்க. தலைச்சுமை இறங்கிய போதே கூலி கிடைப்பது போல வினைச்சுமை நீங்கின் இன்பம் எய்தும் என்க)*

115. **இம்மறத் தருளைப் புத்த ரிகழ்வரே லவரை நோக்கி**
**நும்மர சினிற்கொல் வோரை நுமைக்கொலும் புலியைப் பைங்கூழ்**
**சும்மைக ளரிக்கும் பூச்சித் தொகைகளைப் பரிபா லித்தே**
**எம்மினம் வருத்து வீரோ வெனக்கடாம் வழியாம் நீதி.**

*அழித்தலாகிய மறஅருளைப் புத்தர்கள் இகழ்ந்து உரைப்பார்களாயின் அவர்களை நோக்கி "நும்மதச் சார்புடைய ஆட்சியில் கொலை புரிவோரையும், நும்மைக் கொல்ல வரும் புலியையும், பயிரினத்தை அழிக்கும் பூச்சிக் கூட்டங்களையும் காத்தல் செய்து மக்களினத்தைத் துன்புறுத்துவீர் போலும் என்று வினவும் வழி நீதி பிறக்கும்.*

116. துட்டர்தந் தொழிலுக் கேற்ற தண்டனை துயர மாகச்
சிட்டர்தந் தொழிலுக் கேற்ற திதியுய ரினிமை யாக
இட்டர சியற்ற னீதி யென்பதை யுணரா ரெல்லாம்
மட்டறு தேவ நீதி மருமமுந் தெரிவார் கொல்லோ.

*கொடியோர் செயலுக் கேற்ப ஒறுத்துத் துன்பந் தருதலையும் நல்லோர் செயலுக் கேற்ப மகிழ்ச்சி தரும் காத்தலையும் செய்து ஆட்சி செய்வதே அறநெறி என்பதை உணராதவர் எவரும் எல்லை யில்லாத தேவநீதியில் உள்ள நுட்பத்தை அறிய வல்லுநர் ஆவரோ? ஆகாரே.*

117. தேவநீ தியிலே சொர்க்க நரகுக டிளைக்கு மென்றுந்
தேவரா காத மாந்தர் சேரும்வாய் நரகே யென்றுந்
தேவரூ ழிழிபி ராணி சேர்தலின் றவ்வா யென்றுந்
தேவரோர் வாரே புத்தர் தெரித்தலிங் கென்னா மன்னோ.

*உயிர்களின் செய்வினைப் பயனை ஊட்டும் தேவநீதியின்படி பொன்னுலகும் நரகவுலகும் விளங்கும் என்றும், தேவராகும் பேறு பெறாத மக்கள் அடைவது நரகவுலகமே என்றும், இழிந்த உயிர்கள் தேவராகும் பேறு பெற்றுப் பொன்னுல கடையா என்றும் தேவர்கள் அறிவார்கள். இதை முரணிக் கூறும் புத்தர் கூற்று எப்பயனும் உடையதன்றே.*

*(புத்தர்கள் தங்கள் குருவாகிய கோதமபுத்தர் இழிந்த பல பிராணிகளாகப் பிறந்தும் இறந்தும் உயிர்களின் துன்பங்களை உணர்ந்தான் என்று கூறுவதை இங்ஙன் எண்ணுக.)*

118. இப்புட வியிலே நாங்கா ணின்பதுன் பங்க டாமே
செப்பிடு நரகு சொர்க்கம் வேறிலை யென்பார் கூற்றை
அப்பெனு நீர்நம் வாயை யன்றிவே றின்றென் பான்சொற்
கொப்பிடு வாரே யண்ட வொழுங்கினை யுணர்ந்த நீரார்.

*இவ்வுலகில் நாம் நுகரும் இன்பமே சொர்க்கமாகும்; துன்பமே நரகம் ஆகும். இங்ஙன் அன்றிச் சொர்க்கம் நரகம் என்று தனியாக இல்லையென்பர் சிலர். இவர் தம் கூற்றை அண்டங்கள் அமைந்திருக்கும் ஒழுங்கை நன்கு அறிந்த பெரியோர் நம் வாயில் ஊறும் உமிழ்நீரே நீர் எனப்படுவது. அஃதன்றி நீர் என்ற தனித்த பொருள் கிடையாது என்பார் சொல்லுக்கே ஒப்பாகும் என்று கூறுவர்.*

119. **பிரணவ மேனிச் செவ்வேட் பிரானொரு பெரிய சொர்க்கம்**
**பிரணவ தூய மாயை பிறங்குமுன் மனையு லோகத்**
**தரணப மேலாஞ் சோம லோகமே யாம தைத்தான்**
**மரணசன் மங்க ளில்லார் வதிசிவ லோக மென்பார்.**

*பிரணவ தூய மாயையில் விளங்கும் உன்மனா லோகத்து அரணாகிய விண்ணின் மேம்பட்டு உள்ள சோமலோகமே ஓங்காரத் திருமேனி கொண்ட செவ்வேட் பரமனுடைய ஒப்பற்ற சொர்க்கமாகும். அதையே பிறப்பும் இறப்பும் கடந்தவர்கள் வாழும் சிவலோகம் என்று அறிஞன்மார் கூறுவர்.*

120. **கயிலைமா கயிலை மந்த ராசலங் கனக மேரு**
**வெயிலைவீ சடலுஞ் சேடு மேவுசக் கரவா ளப்பேர்ச்**
**சயிலமேற் சொனவு லோகஞ் சார்ந்தர சாட்சி செய்யும்**
**அயிலிறை கயிலை சார்கந் தாசல மதிலும் வைகும்.**

*இமயமலைக்கும் ஏமகூட மலைக்கும் நடுவில் உள்ள வெள்ளி மலையாகிய தெய்வீக மணங்கமழும் பூலோக கயிலாயத்தும், மகா கயிலாயத்தும், மந்தரமலையினும் பொன்மலையாகிய மேருவினும், ஒளிவீசும் வலிமையும் பெருமையும் கொண்ட சக்கரவாள மலையினும் முன்சொன்ன சோமலோகமாகிய சிவலோகத்தும் வேற்படை விமலன் எழுந்தருளியிருந்து அருளாணை நடாத்துவான். கயிலையைச் சார்ந்துள்ள கந்தமாதனத்தும் அப்பெருமான் எழுந்தருளி யிருப்பான்.*

121. **சொற்றவொர் சிவலோ கந்தான் றூலசூக் குமமென் பேர்கள்**
**பெற்றுள பகுதி கட்கும் பெரிதெனப் பரமெ னும்பேர்**
**உற்றவிர் பகுதி யுச்சி யுளதெனன் மேற்கோ ளோடு**
**சொற்றுள வெனது திட்பந் துலக்கலான் மதுகைத் தாமே.**

119. அரணபம் - அரண்+நபம் எனப் பிரிக்க; நபம் = ஆகாயம்.
121. திட்பம் = திருப்பா வென்னுநூலுள், 43-திருப்பாட்டுகட்கேற்பட்ட பேருரையின் பெயர்.

மேற்கூறிய ஒப்பற்ற சிவலோம் என்பது தூலப்பிரகிருதி சூக்குமப் பிரகிருதி ஆகியவற்றுக்கு மேல்நிலையினது எனப்படும் பரப்பிரகிருதியின் உச்சியில் உள்ளதெனலை எமது திருப்பா என்னும் நூலின் உரையாகிய திட்டம் பற்பல மேற்கோள்களோடு விளக்கிச் சொல்லலால் மதுகையுறுவதேயாகும்.

*(ஈண்டு உரைக்கப்பட்ட திட்பம் என்னும் உரையாமாறு. “அந்தச் சிறந்த சிவலோகம். பிரகிருதி மாயையாகிய தூலப்பிரகிருதியையும் அசுத்தமாயை யாகிய சூக்குமப் பிரகிருதியையும் கடந்த உம்பரிலே உள்ள ஒல்கா ஒளிமய ஓங்கார சுத்தமாயையாய பரப்பிரகிருதியின் உச்சியில் விளங்கியிருப்பதாம். ஆதலின் இஃது அப்பிராகிருத கைலாயம் எனவும்படும். இதன் மேற்றாக எவ்வுலகுமின்று. இதன் கணிருப்பன எல்லாம் தெய்வத் தன்மையவே. இவற்றை “ததூர்த்தவமுந்மநா லோகாத் ஸோமலோக மலௌகிகம்| ஸோமஸ்ஸஹோ மயாயத்ர நித்யம் நிவஸ்தீச்வர :| ததூர்த்த்வமுந்மநாலோகாத்யம் ப்ராப்தோ நநிவர்த்ததே” “உன்மனா லோகத்திற்கும் மேலாகவுள்ளது அந்த அலௌகிக சோமலோகம். உமையோடேய்ந்து சோமன் என இருக்கும் ஈச்வரன் எச்சோமலோகத்தில் வசிக்கின்றனனோ அது நித்தியம். உன்மனா லோகத்திற்கும் மேலாயுள்ள அவ்வுலகத்தினை யடைந்துளோன் பிறவியினின்று நீங்கினவனாவன்” எனச் சைவமஹாபுராணவாயு சங்கிதையின் உத்தரபாகம் ஓதுதலிற் பெறுக. உன்மனா என்னும் கலை - பிரமரந்திரத்திற்கு மேலே கூறப்படு துவாதசாந்த அளவையினுள் எட்டு அங்குலத்தின்மீது நான்கு அங்குலங்காறும் சொல்லப்படுவதா மென்னும் விவரம் பரிபூரணானந்த போதத்துத் துறவறவிளக்கப்படல அகலவுரை ஒன்றின்கண் கண்டு கொளலாம். இது முத்தித்தானமே “ஸகல்வே ஸம்வர்த்தயந்யாவதாயுஷம் பிரஹ்மலோக மபிஸம்பத்யதே, நசபுநராவர்த்ததே நசபுநராவர்த்ததே” அவன் இவ்விதமாக ஆயுள்காறுமிருந்து பிரமலோகத்தை யடைகின்றனன். மீளத் திரும்புவானல்லன், மீளத்திரும்புவானல்லன்” எனச் சாந்தோக்யோபநிடதத்தின் இறுதிக்கண் படிக்கப்படு பிரமலோகமும் முடிவான பொருளில் சிவலோகமே ஆம். இவ்வுலகம் நம்பியாரூரராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் சென்றவாறு அர்ச்சிராதி நெறி வழிப்போந்து அடையப்படுவதாம்.”)*

**122. அப்பரப் பகுதி தன்னி லவிருமுன் மனைக்கு மேலே
செப்பிடக் கலையொன் றில்லை யாகலிற் சிவலோ கத்திற்
கொப்புமின் றுயர்வு மின்றென் றுணர்பவ ரோமு டம்பற்
கிப்பெரு நிலைநீத் தேகீ ழிசைப்பது சழக்கென் னாரோ.**

*அந்தப் பரப்பிருகிருதியில் விளங்கும் உன்மனா கலைக்கு மேற் கூறப்படும் கலை ஏதும் இல்லை. ஆகவே சிவலோகத்துக்கு ஒப்போ உயர்வோ கொண்ட வுலகமும் கிடையாது என்று உணர்பவர் பிரணவத் திருமேனிகொண்ட முருகனுக்கு இந்தப் பெருநிலையை விடுத்துக் கீழ்ப்படுத்துரைப்பது குற்றமாகும் என்று கூறாரா? கூறுவரே.*

*("கருதார் குகனைக் கருதா மலரயன் கண்ணுதலின், இருதாள் பணிந்து மிருஞ்சிறைப் பட்டனனென்னுமுண்மை, தெருளா மதியான் முருகனைத் தாழ்நிலைத் தேவனென்பார்" எனுமாறு உழலுஞ்சிலர் சிவன்கண் தோன்றின மையின், வேற்படை பெற்றமையின் முருகன் சிவனை நிகர்ப்பானல்லன் என்பர். வேறு சிலர் கௌமாரம் என்னும் புவனம் கீழ்நிலைத் தாகலின் முருகன் தாழ்நிலைத் தேவனே என்பர். பிரதிட்டா கலையில் முருகனை வைத்து இவ்வாறு முழங்குவோர் ஒருபுறமாக, மிருகேந்திராகமத்துக்கு உரை எழுதிய பட்டநாராயண கண்டர் முருகனைச் சாந்தி கலையில் வைத்து முழங்கினார். இவ்விருவர் முழக்கத்துள் வாய்மைப் பாலது யாதுகொலோ? இன்னும் சிலர் முருகன் அரனுக்கு நிகராகலாம். அவ்வரன் மூவரில் ஒருவனாய சீகண்ட வுருத்திரனே யாவன். மகேசனுக்கும் சதாசிவனுக்கும் முருகன் ஒப்பாகான் என்பர். இன்னோர் மூலத்தானத்தே சதாசிவனையும் வலப்பால் ஐங்கரனையும் இடப்பால் முருகனையும் பூசித்த பின்றை மகேசனாய அனந்தனைப் பூசிக்க என்று சைவமகாபுராண வாயுசங்கிதை கழறலைக் காணாதவரே யாவர். திருமயிலையிலிருந்த ஒரு சைவரும் அவர் சார்பினரும் முருகன் பரிவார தேவதை என்றனர். இவருரையின் மீது முருகன் சீகண்ட உருத்திரரின் பரிவார தேவதையா? சிவனாரின் பரிவார தேவதையா? சோமாற்கந்த மூர்த்தியே தனக்கும் முருகனுக்கும் பேதமின் றென்று அருளியதை மறந்து பரிவார தேவதை யாயினனா? அவ்வாறு ஆனதும் பரிவார தேவதைகளோடு வைக்கப்பட்ட அம்பலவாணர் திருமேனி போன்றதா? முருகன் கோயிலில் வைக்கப்பட்ட சிவலிங்கம் போன்றதா? எனவும் கடாக்கள் எழுமன்றோ? மயிலையில் வாழ்ந்த ஒரு சைவர் அச்சிட்ட கம்பராமாயணத்தில் சிவனார் ஏற்றங்கூறும்*

122. கீழிசைப்பது = பிரதிட்டா கலையிலுள்ள அவ்வியத்த மூலப்பிரகிருதியாகிய தூலப்பிரகிருதியிலே "கௌமாரம்" என்றொரு புவன முரைப்பது : விவரம் - தகராலயரகசியத்து 2-ஆங் காண்டத்து 44-ன் உரையிலறிக.

*பாடல்கள் இல்லா தொழிந்தமையும் திருமாலின் ஏற்றங் கூறும் புன்கவிகள் பொலிவு பெற விளங்குவதும் அவர்தம் சிவபத்தியின் மாட்சியை விளக்குமன்றோ! இன்னோர் வைணவப் பெயர் பூண்டு வைணவர் பால் தமிழ் கற்கவும் நாணிலரே).*

123. வெஞ்சின வசுர வீரர் வெய்தெனப் பல்கால் வீச
விஞ்சிய மாயா பாசம் வீரபா காதி யோரை
மஞ்சொடு பல்கால் யாத்தோம் மழவனை விடுத்த தேயச்
செஞ்செய லானு மன்னோன் றிணைதலை யெனல்சால் பாமே.

*கொடிய சீற்றம் உடைய அசுரவீரர்கள் இது கொடிய படைக்கலம் என்று பலமுறையும் வீசவும் யாவற்றையும் தன்பால் அடக்கிக் கொள்ளும் வன்மை மிகுந்த மாயாபாசமானது வீரவாகு முதலியோரைப் பலமுறை தோள்களைப் பிணித்து மயலுறச் செய்தது. ஆயின் ஓங்கார வடிவின னாகிய முருகன்மாட்டு அதன் ஆற்றல் செல்லாமையால் அவனை நெருங்காது விடுத்த அந்தச் சிறந்த செயலே முருகனின் தகைமை எப்பொருட்கும் தலைமை கொண்டு விளங்குவது என்பதை நிலை பண்ணும் என்று உணர்ந்து அங்ஙனம் உரைத்தலே சால்புடையதாகும்.*

124. இத்திற மூர்த்தி தன்னை யென்னொரு தெய்வத் தேனை
எத்திற மறைக்கு மெட்டா விறைவனை யெனையா ளன்பைச்
செத்துற லொழிக்கு மின்பைத் தீஞ்சுவைக் கரும்பைக் கண்டைக்
குத்திர மொழிகள் கீழ்மை குயிறலிங் கென்னே யென்னே.

*இத்தகைய பெருமானைத் தேனாகத் தித்திக்கும் என் ஒப்பற்ற தெய்வத்தை, வேதங்கள் ஐயா என அலற அவைகட்கு எட்டாமல் ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனாகிய இறைவனை, என்னை யாண்டு கொள்ளும் அன்புப் பிழம்பைத் தன்னை அண்டியவரின் இறப்பையும் பிறப்பையும் ஒழிக்கும் இன்பப் பொருளை இனிய சுவை தங்கிய கரும்பென இருப்பவனைக் கற்கண்டாய்ச் சுவை தருவானை, வஞ்சக மொழியினர் கீழ்மைப் படுத் துரைப்பா ராயினரே! அவரறிவு இருந்தவாறு என்னே! என்னே!*

125. என்னுயிர் நாய கத்தை யெனைக்கொளின் னருட்கு ருந்தை
இன்னுயிர் வானோ ரேனோ ரிவறல்கூர் மதுர வட்டை
என்னுய ராசை தீர வினிதுதின் பேன்க டிப்பேன்
புன்னுதி படிப்பார் கீழ்மை புகறலிங் கென்னே யென்னே.

---

125. இவறல் = வேணவா, வேட்கைப் பெருக்கம்.

*என் உயிர்த்தலைவனை, என்னை ஆட்கொள்ளும் இனிய அருள் வடிவாய குழந்தைப் பரமனை, இன்பத்தை நாடும் உயிர்களும், தேவரும், மூவரும் வேணவாக்கொண்டு தொழும் இனிய வட்டை, ஓங்கி வளரும் என் ஆர்வம் தணியுமாறு இனிது தின்பேன், கடிப்பேன், நுனிப்புல் மேயும் கல்வியுடையார் இவனைக் கீழ்ப்படுத் துரைக்கின்றனரே. அவர் அறிவு இருந்தவாறு என்னே! என்னே! (தின்பேன், கடிப்பேன் - இவை காதலால் எழும் மொழிகள்).*

126. **இப்பெருந் தேவை யெய்த வெண்ணியா னிசைத்த வெல்லாஞ்**
**செப்பிடும் போதத் தேவன் றெரிந்துவந் தேகே னிற்குத்**
**துப்புய ரின்ப மீவே னெனச்சொல லளித்த வாற்றால்**
**அப்பர னறிவின் மாண்பு மாற்றலு மருளு மோர்ந்தேன்.**

*இம் முழு முதல்வன் திருவடி கூட எண்ணி யான் அவனைப் போற்றி அந்நாள்வரை பாடிய பாடல்களை எல்லாம் அவன் திருமுன்பு ஓதிய காலை, துறவை விழைந்த எனது உள்ளக் கருத்தை அறிந்து என்முன் தோன்றி "நீ (இப்போது பழநி) போதல் வேண்டாம். யாவற்றினும் மேம்பட்ட அழிவற்ற பேரின்பத்தை யான் உனக்கு அருள்வேன்" என்று திருவாய் மலர்ந்தருளியவழி அப்பரமனின் வாலறிவு மாட்சியும் ஆற்றலும் அருள்திறமும் யான் அறிந்து கொண்டவன் ஆயினேன்.*

*("என்னா லியலாதா வெண்ணுவது போற்செயவென், றந்நா ளுறுதி சொன்ன வள்ளிலைவேல் - மன்னார்வின், எந்நாள் வருமோ வினி" எனத் திருவலங்கற்றிரட்டு இரண்டாம் கண்டத்து வெள்ளியலும், "எளியேனவி றமிழ்மாலை யியம்போர் பொழுதென்முன், அளியாலது வென்னான்முடி யாதோவென வினவிக், களியோடுக ரந்தாயிது காறுங்கொள லறியேன், வளியூரொரு தேராவெனை மறவேலெனை மறவேல்" என்று ஸ்ரீமத் குமாரசுவாமியத்துப் பெருவேண்டுகோளும் இந்நிகழ்ச்சியை ஓதுவ.)*

127. **ஆகலா னவன்சீர் சொன்னூ லளவையொ டரிய காட்சி**
**ஆகுமோ ரளவை யுந்தா னார்ந்ததென் மார்க்க மாகும்**
**ஏகனா யுளவத் தேவை யேனுமென் னுரையை யேனும்**
**மோகமாய்ப் பிடிப்போ ருய்வார் மொழிந்தவிஃ துறுதி தானே.**

*இதுகாறும் கூறிவந்தவற்றால் முருகனின் சிறப்பை ஓதும் மறை, ஆகமம், வடமொழிக் கந்தபுராணம் என்னும் நூலளவையும் கிடைத்தற்கரிய ஒப்பற்ற காட்சியளவையும் கூடியதே எனது நெறியாகும். தனக்கு மேல் ஒருவரு மில்லாத தெய்வசிகாமணியாய்*

*விளங்கும் அவ்வொருவனையேனும் எனது மொழிகளையேனும் காதலோடு பற்றிக் கொள்ளுவோர் உய்திபெறுவர் என்று கூறும் இம்மொழி உறுதியுடையதேயாகும்.*

*(நூல் அளவை, காட்சியளவைகளின் முன் சிற்றறிவால் நிகழும் அளவைநூலறிவு என் செய வல்லது. இவற்றுள் காட்சியளவை அரியதொன் றெனலும் கணித்துணரற்பாற்றே யாம். உயிர்கட்கு முற்றுணர்வு வாயாமையானும் செம்பின் கண்ணே தேய்க்கத் தேய்க்க மினுக்கம் தோன்றியாங்கு, மனம் சிந்திக்கச் சிந்திக்க யுக்திவாதம் பிறக்கும் தன்மையதாய், ஒரு முடிபிலேயே நில்லாததாய், உண்மையைக் காணுங்காறும் பல்லோரகத்தும் வன்மையும் மென்மையுமாம் யுக்தி மாத்திரையாய் அது நிகழ்வதாய் உள்ள தாகலானும் அளவையறிவு பெரிதும் மயக்குறுப்பதாயும் முடியுமே என்க. இது கொண்டே "இப்பரமான்மா அளவையுட் படாதவன், பிறப்பிலி, தருக்கத்தினால் இந்நீர்மையன் என்று அறுதி செய்யப்படாதவன்" என்று மைத்ராயண் உபநிடதமும் "ஏதுக்களாலும் எடுத்த மொழி யாலுமிக்குச் சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி" என்று திருஞானசம்பந்தப் பெருமானின் தமிழ்மறையும் கூறின என்பது உணர்க.)*

128 **அவனரு ளொன்றே வேட்டெவ் வரந்தைவந் துறினு நிற்போர்**
**எவணுறு பதியிற் றோன்றி யெங்கிருந் திடினுஞ் சாதி**
**எவனென வினவு வார்முன் யாதுரைத் திடினு மன்னோர்**
**கவனமின் மாதே சோமண் டலத்தராய்க் களிப்பார் மன்னோ.**

*எத்ததகைய துன்பு நேர்ந்திடினும் தளராமல் அவனருள் ஒன்றையே விரும்பி ஒழுகுவோர் எங்கோ ஓர் ஊரில் பிறந்து எங்கோ ஓர் ஊரில் வாழ்ந்திடுபவ ராயினும், நும் சாதி யாது என்பார்க்கு எந்த விடை கூறுபவ ராயினும் அன்னோர் (தனக்குவமை யில்லாதான் தாள் சேர்தலின்) மனக்கவலை மாற்றிய* ***மகாதேசோ மண்டலத்தைச்*** *சேர்ந்தவராகி இன்புறுபவரே என்று தெளிக.*

129. **செக்கர்மெய் வேட்கி ரண்டு தேவிக ளுளரா லன்னோர்**
**எக்கலை களுக்குஞ் செல்வ மெதற்குமே தெய்வ மாவர்**
**அக்கரு ணாசொ ரூப வவரைவல் லியராய்க் கூறல்**
**தக்கவர் தொன்மை யுண்மை தகைமைகண் டுரைத்த தாகும்.**

*செம்மேனி கொண்ட முருகனுக்குத் தேவயானை, வள்ளி என்னும் தேவியர் இருவர் உள்ளனர். அவ்விருவரும் எல்லாக்*

*கலைகளுக்கும் எல்லாச் செல்வங்கட்கும் தலைவியர் ஆவர். அழகிய அருளுருவினராய அவரை மகளிராய்க் கூறுதல் அவர் தொன்மையில் திருமால் கண்களினின்றும் தோன்றி இறைவனை மணந்து கொள்ளச் செய்த தவத்தின் பயனை உணர்ந்து பெரியோர் கூறியதாகும்.*

130. **முன்னவட் கமுதப் பேர்தான் மொழியலா மவடே வானை**
**என்னுமொர் பெயருங் கொண்டா ளிளையள்சுந் தரப்பே ருள்ளாள்**
**அன்னவள் பெயர்தான் வள்ளி யாகுமா றிலங்கி னாணுல்**
**பன்னுல கெல்லா மீன்ற பராபரை யிவர்க ளானாள்.**

*இருவருள் மூத்தவளாகிய அமுதவல்லி பின்னர்த் தேவயானை என்னும் பெயரை ஏற்றாள். இளையவளாகிய சுந்தர வல்லி பின்னர் வள்ளி என வழங்கப்படுவாள் ஆயினள். நூல்கள் விரித்துரைக்கும் எல்லா வுலகையும் ஈன்ற கன்னி எனப்படும் உமாதேவியே இவ்விருவராகவும் வடிவங் கொண்டனள்.*

*(எனவே சிவனே முருகன் ஆயினன் என்பதும் போந்தது. "தூவி மாமயில் ஊர்பவன் சுடர்மதி யணிந்தோன், தேவ யானையே திருந்திழை யுமையவ ளாமால்" என இலிங்கபுராணம் கூறுதலும் காண்க. "சிவன் சத்தி தன்னை யீன்றும், சத்திதான் சிவத்தை யீன்றும், உவந்திரு வரும்பு ணர்ந்தாங் குலகுயி ரெல்லா மீன்றும், பவன்பிர மசாரி யாகும் பான்மொழி கன்னி யாகும், தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் தெரியு மன்றே" என்றுவரு சிவஞான சித்தியார்ச் செய்யுளும் "ஆரணி சடைக் கடவுள் ஆரணி எனப்புகழ அகிலாண்ட கோடியீன்ற, அன்னையே பின்னையும் கன்னி என மறைபேசு மானந்த ரூப மயிலே" எனவரு தாயுமான சுவாமிகள் அருளிச் செயலும் ஈண்டு நினைவுகூறற்பாலன).*

131. **நலந்திகழ் சரியை யாதி நாற்றிற மார்க்க மாட்சிப்**
**பலந்திகழ் மலர்க ணன்குற் பவிக்கும்வல் லிகளாய்ச் செவ்வேள்**
**வலந்திகழ் வுற்றாள் வள்ளி மற்றவ ளிடமே யுற்றாள்**
**சலந்தெறு சரியை யோகங் கிரியையை யறிவைச் சாரும்.**

*நலம் பொலியும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நெறிகளின் மாட்சியின் திட்பம் விளங்கும் பூக்கள் நன்கு பூக்கும் கொடிகளாய்ச் செவ்வேட் பரமனின் வலப்பக்கத்தில் வள்ளியும் இடப்பக்கத்தில் தேவயானையும் எழுந்தருளி யுள்ளனர்.*

---

131. சரியை கிரியை யையும், யோகம் அறிவாகிய ஞானத்தையுஞ் சார்ந்து நிற்குமென்க.

*பிறவியாகிய தீமையை அழிக்கும் சரியை என்பது கிரியையும் யோகம் என்பது ஞானத்தையும் சார்ந்து நிற்கும்.*

132. **ஆதலாற் றேவ யானை யமுதமாய் மேனி பொன்மை**
**ஈதலாற் றேவ லோகி லிருந்ததான் ஞான மாவள்**
**கோதிலாச் சுகுண வள்ளி குழகியாய் மேனி பைமை**
**ஈதலாற் பூலோ கத்தி லிருந்ததாற் கிரியை யாவள்.**

*முற்கூறிய முறையை விளக்குமிடத்து தேவயானை உணர்வாய் பொன் நிறமேனியளாய்த் தேவலோகத்தில் இருந்தமையால் ஞானசக்தி ஆவாள் என்க. மாசில்லாத நல்ல குணத்தினளாய வள்ளிப் பிராட்டி இளமைச் செவ்வியளாய்ப் பசிய திருமேனியளாய் மண்ணுலகத்து இருந்தமையால் கிரியா சத்தி யாவாள் என்க.*

133. **அமுதவாக் கியந்தான் முத்தி யறிவுமுன் னவளிக் கூறுங்**
**குமுதவாய்த் தந்தி யாளை ஞானமென் பதிலே கூட்டுஞ்**
**சுமுகநாட் டழகெ னுங்கீர் தொழிலிளை யாளிக் கூறும்**
**அமுதவூற் றுரையி னாளைக் கிரியையி லமர்த்து மாலோ.**

*அமுதவல்லி என்னும் பெயரிலுள்ள அமுதம் என்பது முத்தியைக் கூட்டும் ஞானமாகும். எனவே குமுதமலர் போன்ற இதழ்களுடைய தெய்வயானையாகிய மூத்தவளின் இத்திறமும் அவளை ஞானசத்தி என்பது காட்டும். இனிய முகத்தில் பொலியும் அழகு (சுந்தரம்) என்னும் சொல் தொழில் ஆகும். அமுதூற்றை ஒத்த மொழியுடைய இளையவளாம் வள்ளிப்பிராட்டியின் இத்திறமும் அவளைக் கிரியாசத்தி என்பது காட்டும்.*

134. **இம்முறை  மாற்றி வேறா யிசைக்குநர் கூற்றொவ் வாதால்**
**அம்முறை யீசன் வாக்கென் றறையினு மஃதா காதால்**
**எம்முறை யினுநி யாய மிசைப்பதே கோடற் பாற்றாந்**
**தம்முறை யுயர்த்தும் வாதைத் தலையெது சொலினுஞ் சொல்க.**

*சீரியதான இந்த முறையை வேறுபடுத்தித் தேவயானையம் மையாரைக் கிரியா சத்தி எனவும் வள்ளிப்பிராட்டியாரை இச்சா சத்தி எனவும் பேசுவார் மொழிகள் ஏற்புடையன ஆகா. இன்னோர் தாம் கூறுவது இறைவன் திருவாய் மலர்ந்தருளிய வண்ணமே என்று கூறினும் அஃது சால்பிற் றாகாது  என விடுக்க. எவர் இயற்றிய நூலா யிருப்பினும் அந்நூற்கண் வரும் சால்புடையவற்றையே கொள்ளல் வேண்டும். இதை விடுத்துத் தம் நூலை உயர்த்திக் கொள்ளும்*

வழக்கிலே எவரெவர் எஃது எஃது கூறிக் கொள்ளினும் கொள்ளட்டும். அவை கோடற்பால அல்ல.

(இங்ஙனம் வேலை ஞானசத்தி எனவும் தேவயானையைக் கிரியாசத்தி எனவும் வள்ளியை இச்சா சத்தி எனவும் முழங்குவோர் தமிழ்க் கந்தபுராணத்தையேனும் நன்கு தெளிந்தார் என்று புலப்படவில்லை. என்னை? கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப் படலம் 258-ஆம் திருச்செய்யுள்

"கல்லகங் குடைந்த செவ்வேற் கந்தனோர் தருவ தாகி
வல்லியர் கிரியை ஞான வல்லியின் கிளையாய்ச் சூழப்
பல்லுயிர்க் கருளைப் பூத்துப் பவநெறி காய்த்திட் டன்பர்
எல்லவர் தமக்கு முத்தி யிருங்கனி யுதவு மென்றும்".

என்று கூறுதலின். இஃதொப்பவே கந்தபுராணத் தோத்திரப் பாமாலை என்பதும் கூறலாயது. அதனைக் கீழே காண்க:

1.பொய்வருஞ் சமயர்க் கெட்டாப் புண்ணிய முதல்வன் மேனாள்
மெய்வருஞ் சமயம் யாண்டும் மிளிர்வுற விழியாற் பூத்த
சைவகுஞ் சரத்தின் ஞான சத்தியாய்த் திகழு மெங்கள்
தெய்வகுஞ் சரியார் செம்பொற் சிலம்படி சிரமேற் கொள்வாம்.

2. துள்ளிநாத் துளும்பிக் கண்ணீர் தொழுமவர்க் கல்லான் மற்றோர்க்
கெள்ளினாத் துணையு மெட்டா விறைவியெவ் வுலகுங் காப்பான்
உள்ளிநா டுறுசேய்க் கின்ப முறுதொழிற் றலைவி யாமெம்
வள்ளிநா யகியார் பைம்பொன் மலரடி சென்னி சேர்ப்பாம்.

இவையெல்லாம் புறம்போக்கி யாரோ ஒரு புலவர் கூற்றை மேற்கொண்டுரைப்பது பேதைமைத்தே. வேற்படை ஞான சத்தியாய் விளங்கும் ஒழுங்கை ஸ்ரீமத் சுவாமிகள் இந்நூலின் 92-ஆம் பாடற்கண் விளக்கியுள்ளார். நூல் உரைகளில் மயக்க முறா திருக்குமாறு ஸ்ரீமத் சுவாமிகள் திருவுள்ளம் பின்வருமாறு:

"யாதானுமொரு புத்தகம் எவரால் செய்யப்பட்டிருப்பினும் அதன்கண் நல்லன காணப்படின் அவையற்றைக் கோடலும் அல்லன காணப்படின் அவையற்றை நீக்கலும் இந்நூலாசிரியர் கொள்கையில் உள்ளன. இவர் அருளாளர். இவர் மாற்றம் மேற்கோள் இவ்வழியும் உறுதித்தாகலாமென." அஃதொன்றனையே நிறுவத்துணிதலும் இவருக்கு ஏற்புடையதாகாது".

*இஃது லீடாலீட நியாயமாகும். ஓர் ஆடு சென்ற வழியே ஏனைய ஆடுகள் செல்வதொப்ப, யாதும் விசாரியாமே ஒருவர் போனவழியே ஏனையரும் செல்வது கதானுகத நியாயமாகும். "வழுவுறு மாற்றம் சிவன்மொழி யென்று வழங்கிடுநூல், வழுவென் றமைக வழுவிலா மாந்தர் வரைதருநூல், தழுவுக வாய்மையைச் சாற்றுமே லென்ற தவமுனியே" எனவருதலும் நோக்கற்பாலது.)*

135. வானமே ஞான மென்றும் வையமே கிரியை யென்றும்
ஆனவா றறிவோர் செவ்வே ளகிலவின் பிளையல் பானின்
றீனமே வாம லீவ னிவளரு ணிமித்த மாக
ஞானதே வியின்பா னின்றே ஞானவீ டளிப்பா னென்ப.

*வானமே ஞானம் என்றும், மண்ணுலகமே கிரியையென்றும் ஆன தன்மையை அறிந்த சான்றோர் இவ்வுலக இன்பத்தை இளையாளாகிய வள்ளிபால் நின்று யாதோ ரிழிவும் கூடாமல் வழங்குவான் எனவும், அருளுங் காரணத்தால் ஞானசத்தி யாகிய தேவயானையின்பால் நின்று ஞானத்தின் பயனாகிய வீடுபேறு அருள்வான் எனவும் கூறுவர்.*

136. எவ்வுல கினுநீ டுய்வா னெண்ணுநர் கொடியி ரண்டுஞ்
செவ்விதின் மலிந்து பூத்தல் செய்திட நாணா ளுந்தான்
திவ்விய மாக வீறித் திளைத்தெழு பரம பத்திப்
பவ்வவின் புனலை வார்த்து வைரபா லனமுஞ் செய்க.

*இந்த உலகத்தினும் மேம்பட்டு நின்று, வேறு உலகத்தினும் மேம்பட்டு உய்திபெற வேண்டும் என்று கருதுபவர் யாவரும் வள்ளிப்பிராட்டியார் தெய்வயானை அம்மையார் என்னும் இரண்டு கொடிகளிடத்தும் கிரியை ஞானம் என்னும் இருதிற மலர்களும் நன்கு நிரம்பிப் பூத்தலைச் செய்யுமாறு நாள்தோறும் "அவனருளாலே அவன் தாள் வணங்கு" என்னுமாறு திருவருள் துணையால் வீறித்திளைத்து, எழுகின்ற ஈசுவரபத்தி எனப்படும் கடலில் நிறைந்துள்ள இனியநீரை வார்த்து காவலாகிய மனத்திட்பம் என்பதையும் போற்றிவருவாராக.*

137. அலகினல் வனப்புக் கெல்லா மதிதெய்வ மாகி மேல்கீழ்
உலகுகள் போற்ற வோங்கவ் வுபயசத் திகண்மா பொற்போர்
சலநிதி நிகர்க்கு மற்றைத் தையலார் வனப்பெ லாமச்
சலநிதி யினதோர் தூவ லளவையுஞ் சாரா வன்றே.

*அளவற்ற நலம் திகழும் அழகுக்கெல்லாம் தலைமைத் தெய்வமாகி மேலுலகமும் கீழுலகமும் மண்ணுலகமும் போற்ற மேம்பட்டு விளங்கும் அந்த இரு தேவிமாரின் அழகு ஒரு கடலை*

*ஒக்கும். ஏனைய தேவமாதரின் வனப்பெல்லாம் கூடினாலும் அக்கடலின் ஒரு துளிக்கும் ஈடாகாதே.*

*(முருகனைச் சூரபதுமன் "ஆயிரங் கோடி காமரழகெலாந் திரண்டொன் றாகி, மேயின எனினும் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னின் ஏயநல் லெழிலுக் காற்றாது" என்று போற்றினமை ஈண்டு நினைவுகூரற்பாலது).*

**138. திருவுக்குந் திருவாய்க் கற்பின் றெய்வமு மாய்மல் கன்னோர்**
**உருவுக்குத் தொழும்பு செய்யு முழுவனா ரியர்கற் போதுங்**
**குருவுக்குங் குருவாய்ச் செல்வர் குலந்தொழு தெய்வ மாயோர்**
**கருவுக்குட் புகுமோர் பான்மை காணினுஞ் சிறந்துய் வாரே.**

*திருமகளுக்கும் திருவை நல்கும் திருமகளிராய்ச் சான்றோரால் தொழக் கற்பிக்கப்படும் தெய்வமுமாய், நிரம்பிய வள்ளி, தேவ யானை ஆகிய இவ்விரு தேவிமாரின் திருவுருவங்களுக்குத் தொண்டு செய்யும் உழுவலன்புடைய மகளிர் கற்புக்கு இலக்கியமாக ஓதப்படும் அருந்ததி என்பவளுக்கும் குருமாராகி, பொருட் செல்வரும், ஞானச்செல்வரும் போற்றுகின்ற தெய்வங்களாகிப் பேரின்பத் தடைவர். அங்ஙனன்றி ஒரு வேளை பிறவி எடுக்க நேரிடினும் அப்பிறப்பில் பெருஞ் சிறப்புற்றுப் பின் வீடுபுகுவர்.*

**139. சாற்றரு மருளா மிந்தச் சத்திகண் மாண்பு மின்னோர்**
**ஏற்றுள தலைவ னாகி யிலங்குமள் ளிலைவேற் செவ்வேட்**
**போற்றுதல் செம்மாப் பென்னும் பொருவில்பே ரின்பப் பீடும்**
**மாற்றமின் றுணர்ந்தே சந்தன் வழுத்தினன் றமிழான் முன்னே.**

*சொல்லுவதற்கு அரிய திருவருள் ஆகிய ஞானசத்தி கிரியா சத்தி எனப்படும் தேவயானை யம்மையார் வள்ளிப் பெருமாட்டியார் ஆகிய இவர்களின் மாட்சிமையும் இவ்விருவரையும் தன்சத்திகளாக ஏற்றுக் கொண்டுள்ள தலைவனாகி கூரிய இலை வடிவமுடைய வேற்படையை ஏந்தியுள்ள செவ்வேட் பரமனைப் போற்றுத லாகிய செம்மாப்பு எனப்படும் ஒப்பற்ற பேரின்பமாகிய வீடுபேறு என்னும் பெருமையும் எக்காலத்தும் அழிவு படுவதல்ல என்னும் உண்மையை நன்கு உணர்ந்தே வண்ணப்பாக்களை அருளிய அருணகிரிநாத முனிவர் முன்பு தமிழால் வழுத்தியருளினார்.*

140. தமிழ்வட மொழியின் ஞான சாகரம் பிறந்தென் காட்சி
இமிழ்திற னிருந்து வைராக் கியத்திடை வளர்ந்து பேரின்
புமிழொரு செக்கர் வேள்செம் மாப்பென வுலாமிஃ தோதும்
அமிழ்தர்க ளுலகின் போடா ரருணிலை யணைந்தும் வாழ்வார்.

*தமிழ், வடமொழி என்பவற்றின் அறிவுக்கடல் தோன்றியது என்னும் காட்சி விளங்கும்படி யிருந்து மனத்திட்பத்தால் வளர்ந்து பேரின்பை வாரி வழங்கும் செக்கர்வேள் செம்மாப்பு என்று நிலவுகின்ற இந்த நூலை ஓதுகின்ற அறிஞர்கள் இந்த உலக இன்பமும் பெற்று நிரம்பிய திருவருட் பெருஞ் செல்வத்தையும் அடைந்து நெடிது வாழ்வார்கள்.*

*(நூலின் முதல், இடை, கடை என்னும் மூவிடத்தும் மங்கலம் கூறுதல் மரபு. எனவே வாழ்த்து, வணக்கம், உண்மைப் பொருள் உரைத்தல் என்னும் மூவகை மங்கலங்களுள் முதற்கண் கடவுள் வணக்கம் கூறி ஈங்கு இறுதியாக வாழ்த்து இசைத்தனர். இவற்றின் உட்பட்ட நூல் முழுவதும் உண்மைப் பொருள் உரைத்தல் என்னும் மங்கலம் ஆகும். இங்ஙனம் மூவகை மங்கலமும் இந்நூற்கண் விளங்கியிருக்குமாறு காண்க).*

**முழுமுதலிலக்கண வதிகார முடிந்தது.**

**முதலாங்காண்ட முற்றிற்று.**

**ஓம் குமரகுருதாச குருப்யோ நம:**

**குமரகுருபரன் திருவடி வாழ்க.**

**திருச்சிற்றம்பலம்.**

உ

*சிவமயம்.*

*திருச்சிற்றம்பலம்.*

# செக்கர்வேளிறுமாப்பு

## வீடுபேற்றதிகாரம்

### *கடவுள் வணக்கம்*

***அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்***

1 **கங்கையென் சுதனே யென்னக் கார்த்திகை மதலா யென்னச்**
**சங்கரி மகனே யென்னச் சங்கரன் குருவே யென்ன**
**மங்கைய ரிருவோ ருந்தூ மணத்திருத் தலைவா வென்னப்**
**புங்கவர் பரமா வென்னப் பொலிசிவ னடிபோற் றுவலே.**

*சிவபிரானது ஆறுநெற்றிக் கண்களினின்றும் பலகோடி ஞாயிறென வெளிப்பட்ட ஆறு தீப்பொறிகளைக் காற்றுக் கடவுளும் தீக்கடவுளும் கொணர்ந்து தன்பால் விடுத்தலும் பிரமமாய் நின்ற சோதிப்பிழம் பொரு மேனி கொண்டு கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு தோன்றிய முறைமை பற்றிக் கங்கையானவள் "என் சுதனே" என்று பரவவும், மழலைகள் விளம்பி மொய்த்த அறுவர் முலையுண்டு நித்தம் வடிவுடன் திகழ்ந்த முறை பற்றிக் கார்த்திகைப் பெண்கள் அறுவரும், "மதலாய்" என்று போற்றவும், குடிலையாகிய தன் முகத்தையும் புலப்படக்காட்டி நிற்கும் பெற்றியால் உமாதேவி "மகனே" என்று அழைக்கவும், நாதா! குமரா! நம என்று அரனார் "ஓதாய்" என்று இறைஞ்சிய காலையில், மெய்ப்பொருள் உணர்த்திய மேம்பாடு கருதிச் சங்கரனார், "குருவே!" என்று வழிபடவும், தேவயானை வள்ளி ஆகிய இருவரும் தூய திருமண வாயிலால் தங்களை ஆட்கொண் டருளிய அருமை பற்றித் "தலைவா!" என்று வழுத்தவும், தூய அடியார்கள் தங்கட்கு இறைவனாம் பெருமை கருதிப் "பரமா!" என்று புகழவும், அவ்வவர்க்கு உரிய திருமேனி கொண்டு ஆண்டாண்டு விளங்கி நிற்கும் இளைய பரமசிவனாரின் இணையடி மலர்களை வாழ்த்தி வணங்குவோமாக.*

*(ஓங்கார திருமேனியனான இறைவன் ஒரே காலத்தில் பல இடங்களில் பல வகைத் திருமேனி கொண்டு அருளும் திறம் இதனால் உணர்த்தப்பட்டது.)*

## நூல்

2 **உடலிடை யுயிரைப் போல வொருசிவ சொரூப மெல்லா**
**உடலுயிர் பிறவற் றுள்ளு முடங்கியைந் தார்ந்து நின்றும்**
**உடலுயிர் மாசு போயிற் றிலையதை யொழிப்போன் றூய**
**உடலினன் மருத்து வன்போ லுயருப காரி யாயே.**

*உடலின்கண் தங்கியுள்ள உயிரைப் போல ஒப்பற்ற சிவ சொரூபமானது எல்லா உடம்புகளின் உயிர்களுள்ளும் ஏனைய பொருள்களுள்ளும் உடங்கியைந்து நிறைந்து நின்றும் உடம்பு பெற்ற உயிர்க்கு உளதாகிய இருள்மலக் குற்றம் நீங்கியதில்லை. நோயை நீக்கும் மருத்துவனைப்போல ஓங்கரத் திருமேனியாகிய தூயவுடம்பு கொண்ட சிவனே யாதொரு கைம்மாறும் வேண்டாது அந்த ஆணவமல நோயை நீக்குபவன் ஆவன்.*

*(உயிர் இலதாயின் உடம்பு அழிதல் போல உடங்கியைந்து நிற்கும் ஆதாரப்பிரமம் இலதாயின் யாதுமின்று. இறைவன் எல்லாப் பொருள்களிலும் தங்கியுள்ளான் என்பதை "ஊனாயுயி ரானாயுட லானாயுல கானாய், வானாய்நில னானாய்கட லானாய் மலையானாய்" எனவரும்* ***சுந்தரர்பெருமான்*** *தமிழ்மறையும் கூறும். "ஒன்று நீயல்லை யன்றி யொன்றில்லை" எனும் திருவாசகத் தொடருக்கு ஸ்ரீமத் சுவாமிகள் - "சதசற்பிரபஞ்ச வத்துக்களில் எதுவும் நீயில்லை. நின்னை நீங்கித் தனியிருக்கும் தன்மையும் அவையற்றில் எதற்கும் இல்லை" என்று அருளிய பரிபூரணானந்த போதம் முதற்கண்டத்து 23-ம் செய்யுள் உரையும் கருதுக.)*

3 **மனிதரைப் பிடித்த பேயை வருத்துபல் வகுப்பு நோயைத்**
**துனிதரு விடத்தை யந்தச் சொரூபம தோட்ட வில்லை**
**பனிதரு கிருபை யாளர் பரிந்தினி தோட்டு வாரத்**
**தனியருட் செயலு மின்னே தழைத்திட விருக்கு மத்தே.**

*மாந்தரைப் பீடிக்கும் பேயையும் அவர்களை வருத்தும் பலவகை நோய்களையும் துன்பம் தரும் நஞ்சையும் (யாண்டும் நிறைந்துள்ள) சிவசொரூபம் நீக்குவதில்லை. தண்ணளியுடையோர் பரிவுடன் அவற்றை இல்லையாம்படி போக்குவார்கள். தூய திருமேனி கொண்ட*

*இறைவனது ஒப்பற்ற திருவருட் செயலும் இவ்விதமே உயிர்கள் உய்திபெறும் வாயிலாய்த் தழைத்திட இறைவன் விளங்குவான்.*

4 **இக்கிர மத்தே செய்யுந் தொழிலனுக் கிரக மித்தை**
**அக்கிர மிருக்கு மீச னைம்பெருந் தொழிலு ளொன்றாய்ச்**
**செக்கரம் மேனி யானூ றெரிக்குமிஃ தொழித்தார் மாற்றம்**
**எக்கிர மமுமே யாத வக்கிர மந்தா னேயும்.**

*இம்முறையில் இறைவன் செய்யுந் தொழிலே அருள் என்பது. இதனைச் செம்மேனி கொண்ட அழகனின் நூலாகிய கந்த புராணம் முழுமுதல்வனாய பரமனின் பெருமையுடைய ஐந்தொழில்களில் ஒன்று எனக்கூறும். இம்முறையைப் புறம்போக்கு வார் சொற்கள் எவ்வொழுங்கிலும் சேராத ஒழுங்கின்மையையே (அக்கிரமத்தையே) பொருந்தும்.*

5 **அருளனுக் கிரக வாட்டை யறுமுக னீசா னப்போர்**
**மருவொரு முகத்தாற் செய்வன் மற்றொரு வடிவு கொண்டு**
**குருவென வாகு ஞான்றுங் குலவலம் முகமே யாமக்**
**குருமுத றனையே நாடுங் குசலர்பா லிருந்துஞ் செய்வன்.**

*உயிர்களுக்கு அருள்வதாகிய இச்செயலை அறுமுகப் பரமன் ஒப்பற்ற ஈசானம் எனப்படும் முகத்தால் செய்வன். குரு என்று வேறொரு திருமேனிகொள்ளும் காலத்தும் ஈசான முகமே விளங்குவதாகும். அன்றியும் குருபரன் ஆகிய தன்னையே நாடும் அறிஞர் தம்முள் நின்றும் அருளைச் செய்வான்.*

*(உயிரின் வன்மை தன்னளவில் உள்ள மாயை கன்மங்களை வென்றாலும் ஆணவமலத்தை இறைவன் அருளின்றி வெல்லாது என்பதும் அப்படி வெல்லும் ஒரு தொழிலே அருள் எனப்படும் என்பதும் அஃது ஈசனின் மாபெரும் ஐந்தொழில்களில் ஒன்று என்பதும் முதல் நூல்களால் பெறப்படும். இந்த அருள் ஆகிய தொழில் மறைப்பின் பின்னர்க் கூறப்படுவதாயினும் மறைப்பின் ஒழிவே அருளாயும் அருளே மறைப்பின் ஒழிவாயும் இருத்தலின் இருளாகவும் ஒளியாகவும் நிலவும் திரோதை என்னும் அருட்சத்தி ஒரு காலத்தேயே அவ்விரு தொழிலும் இழைக்க வல்லதாயும் எண்ணப்படுகின்றது.)*

6 **சனகனே முதலா நால்வர் தட்சிணா மூர்த்தி காட்டக்**
**கனகமா வொளியைக் கண்டார் கலக்கமுந் தீர்ந்தார் வீட்டை**
**அனகவா றறவர் செவ்வே ளனுக்கிர கத்தாற் கண்டார்**
**இனையவா றணையார் கூற லெந்நலம் பயக்க வல்லும்.**

*சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் ஆகிய நால்வரும் கல்லாலின் அடியிலிருந்து தென்முக பரமாசாரியன் வாக்கிறந்த பூரணமாய், மறைக்கு அப்பாலாய், எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்துகாட்டிச் சொல்லாமற் சொல்ல மின்னொளி கொண்ட பொன்னொளி திகழும் சோதி சொரூபத்தைக் கண்டனர். அதனால் அவர் மனத்திருந்த ஐயமாகிய கலக்கமும் நீங்கினர். குற்றமற்ற பராசரமுனிவர் மக்களான தப்தர், அனந்தர், நந்தி, சதுர்முகர், சக்கரபாணி, மாலி என்னும் ஆறு முனிவரும் செவ்வேட்பரமன் அருளால் பேரின்பத்தை அடைந்தனர். இத்தகு நெறியில் நில்லாதார் சொற்கள் எந்நலத்தைத்தரவல்லது? ஒரு நலமும் தராதே.*

7 **அச்சன காதி யர்க்கன் றருள்சுரந் தருள்பா லித்த**
**உச்சித சிவனே வேத மோமெனத் துதிக்குஞ் சேய்முன்**
**துச்சமில் சீட னாகிச் சுரர்க்கறி வுறுத்த மாண்பின்**
**நிச்சயந் தேர்ந்தார் செவ்வேள் குருத்துவ நிறைவென் னாரோ.**

*அந்தச் சனகர் முதலிய நால்வருக்கும் அருள்சுரந்து மெய்ப்பொருளை அறிவுறுத்தருளிய பரமனாகிய சிவபிரானே, சாமவேதம் "சுப்ரஹ்மண்யோம்" என்று போற்றுகிற சேய்ப்பரமன் திருமுன் தாழ்வில்லாத மாணாக்கராகி "இவனே யாவர்க்கும் குருவாவன்" என்று தேவர்கட்கு உணர்த்தியருளிய மாட்சிமையின் உண்மையைத் தெளிந்தவர் செவ்வேட்பரமனின் ஆசிரியத் தன்மையே நிறைவுடையது என்று கூறாரா? கூறுவர் என்க.*

8 **மாந்தரைக் குருவாய்க் கொண்டு மருளிரித் துய்வ துண்டேல்**
**ஓந்தனை யுருவாய்க் கொண்டே யுயிர்மர ணங்கே டில்லாச்**
**சேந்தனைக் குருவாய்க் கோடல் சிறந்திடா தோவு மோவவ்**
**வேந்தெனும் பதியீ பேறே மேன்பதி ஞான மாகும்.**

*கருக்குழி நாற்றம் கமழப் பிறந்து இறக்கும்) மாந்தரில் ஒருவரைக் குருவாய்க் கொண்டு, "அறியாமையாகிய மலத்தைப் போக்கி உய்திபெறல் உண்டு" என்று கூறினால் ஓங்காரத்திருமேனி கொண்டு பிறப்பு இறப்பு என்பவைகளாய கேடுகள் இல்லாத சேந்தனைக் குருவாய்க் கொள்ளல் சிறந்து நிற்பதல்லாது பயனின்றி ஒழிவதும் உண்டு கொல்லோ? அந்த அரசனாகிய பதி வழங்கும் பேறே மேம்பட்ட பதிஞானம் ஆகும் என்று அறிக.*

*("ஸ்ரீமத் சுவாமிகள்" "அளியான் மனுடர்சே யாமொருவ னம்பி, விளியா வியன்பெற லிங்குண்டேல் களிகழியா, வோர்கடவுட்*

*சேய்நம்பி யார்கெடுவார் ஓய்விலருள், கூர்கந்த கோட்டக் குகா" எனக் கந்தகோட்ட மும்மணிக் கோவையி லருளலும் நினைக. இதனால் மக்கள்பால் பெறும் ஞானம் பசுஞான மன்றிப் பதிஞான மாகாததை அறிக)*

9 **பதியருண் ஞான நம்பாப் பழம்பசு வெங்கே போயிற்**
**றெதையடைந் துளதென் றோரா விழிமதி யுஞ்சா வேயின்**
**வதியிடம் யாண்டோ வெம்மான் மருமலர்க் கழலை நாடும்**
**அதரடைந் திருப்பார்க் கிந்த வையமெட் டுணையு மின்றே.**

*இறைவன் அருளும் ஞானத்தை நம்பா நாத்திக நெறியுழன்ற பழம்பசு ஆகிய உயிர் "தேகம் நீங்கியபின் எங்குப் போயிற்று" எதனை அடைந்துள்ளது என்பது அறியாத இழிமதியினரும் இறந்தபிறகு எங்குச் சென்று வாழ்வரோ? எம்பெருமானின் மணம் நிரம்பிய மலர் போன்ற திருவடியை நாடும் நெறியில் ஒழுகுவார்க்கு இத்தகைய ஐயம் எள்ளளவும் இல்லை என்க. என்னை? இவர் கூடுவது பெருமான் திருவடியில் என்று நன்கு அறிந்துள்ளா ராகலின்.*

10 **என்செய்கே னெதுசொல் வேனென் றிரங்கென துரைவி ழைந்தே**
**கொன்செய்சே யடிய லாது கோடலெற் கிலையென் னோர்ப்பு**
**முன்செய்தா லதுவே சீவன் முத்தியா முருத்தி யானம்**
**பின்செய்தாற் பரம முத்திப்பேறுமெய் தியதா மாலோ.**

*"யான் உய்நெறி கண்டிலனே! அந்தோ! என் செய்வேன்!! எதைச் சொல்லுவேன்!!!" என்று இரங்கும் என் பாடலை விரும்பி ஏற்றுக் கொண்டு எளியனைப் பெருமைப்படுத்திய சேய்ப்பரமனது திருவடி யன்றிப் பற்றும் பற்று எனக்கு இல்லை என்னும் துணிவை முதற்கண் கொண்டால் அதுவே சீவன் முத்தி தசையை அடைந்ததாகும். அதனோடு அவனது திருமேனியை உள்ளத்து இடையறாது எண்ணி வருதல் யாவற்றினும் மேலாய வீட்டுப்பேற்றைக் கூடியதாகும்.*

11 **பலபரம் பயின்று நிற்பார் யார்க்கரோ பத்த ராவர்**
**பலபர வுருக்காண் போதும் பரனெனுஞ் செவ்வேட் பாவித்**
**தலமர லொழிக்க லாமுள் ளகத்தவை கூடா வென்னும்**
**வலனுடை யெனைப்பின் பற்றல் வறிதுறா தேயெஞ் ஞான்றும்.**

*பல தெய்வ வழிபாடு புரிவோர் நீர் யாருடைய பத்தர் என்றால் என் சொல்ல வல்லரோ? இன்னோர் விடுதலை நெறியின்*

9. அதர் = வழி.

*முதற்படியிலும் கால் வையாதவரே யாவர். தன் வழிபடு தெய்வமின்றி வேறு பல தெய்வத் திருவுருவங்கள் கட்புலனாகும் போது அவற்றை முழுமுதல்வனான செவ்வேட் பரமன் எனவே பாவித்து வணங்கி உள்ளக் கலக்கத்தை ஒழிக்கலாகும். ஆயினும் உள்ளத் தாமரைக்கண் (ஒரு தெய்வ வழிபாடே கூடுவதாகலின்) வேறு தெய்வங்களைச் சிந்தித்தல் கூடாது என்னும் உறுதிப்பாடு கொண்ட எம்மைப் பின்பற்றி ஒழுகினால் அஃது எக்காலும் வீண்படாது.*

*("ஸ்ரீமத் சுவாமிகள்* ***திருப்பாவில்,"*** *"ஒரு தெய்வ வழிபாடுடையோன் பிறதெய்வம் தொழலாகாது என்பது இங்ஙன் முடிபன்று. கட்புலனாகும்போது தொழலாம். என்னை? மனுடரை வணங்கும் மனுடன் தன்னினும் மேம்பட்ட யாதொரு தெய்வங் கண்டு தொழாமை அகந்தையின்பாற் படுமாகலின். மனுடர் வணக்கம் யாது கருதி நிகழ்கின்றதோ அந் நிகழ்ச்சியினை ஒட்டியே பிற தெய்வ வணக்கமும் எண்ணப்படுவ தன்றி ஆன்மார்த்தப் பரம்பொருள் வணக்கமாய் எண்ணப்படா தென்க" எனவும் "இதயாம்பரத்தில் தியானம் ஒரு மூர்த்தி பாவனையிலேயே கூடுமதனால் பல மூர்த்தி வழிபாடு பந்தமாம் என்றாம். அம்மூர்த்தியினுடைய பல மூர்த்தங்களையும் அங்ஙனம் வைத்துத் தியானித்தலும் சாரூப கதியைத் தடுக்கு மொரு பந்தமாம்" எனவும் அருளிச் செய்திருத்தலையும் உணர்க - திருப்பா : கடவுள் வணக்கம் 3-வது திருச்செய்யுள் உரை.)*

12 **காயமா வுரத்து மாயங் கதித்ததா னவர்கள் வீசும்**
**மாயமா பாச மெல்லாம் வலியவே லாற்று ணித்த**
**சேயமே னியனே மாயைத் திறலறுத் தருடே வென்று**
**நேயமோ டுரைக்கு மென்சொன் னிறைவினர்க் கமுதா காதோ.**

*பேராற்றல் தங்கிய உடம்பும் மாயமும் மிகுந்த அசுரர்கள் வீசிய பெரு மாயம் வல்ல பாசங்களை எல்லாம் தன் கையில் தங்கிய வன்மை மிக்குள்ள வேற்படையால் அழித்த செவ்வேட் பரமனாகிய குழகனே மாயையின் ஆற்றலைக் கெடுத்து உயிர்கட்கு அருள்செய்யும் முதல்வன் என்று அன்போடு கூறும் என் சொற்கள் அறிவு சான்ற நல்லோருக்கு அமிழ்தம் ஆகாதோ? ஆகும் என்க.*

13 **முழுமுதற் குருவா யுள்ளோன் முருகனென் பதனை யோர்ந்தே**
**உழுவலற் பாலே கும்ப வுறுவனுஞ் சீட னானான்**
**முழுவிடு தலையை நாடு முனிகண மெல்லாஞ் சேந்தன்**
**செழுமலர்க் கழலெண் ணாது செய்வது பிறிதென் னேயோ.**

*முழுமுதற் கடவுளுக்கும் அருளியமையால் முழுமுதற்குருவாக உள்ளவன் முருகனே என்பதை உணர்ந்து அகத்திய முனிவர் முருகன்பால் உழுவலன்பு கொண்டு மாணாக்க ராயினார். மீண்டும் பிறத்தல், இல்லாத நிறைந்த வீடுபேற்றை விரும்பும் முனிவர் கூட்டம் எல்லாம் சேந்தனின் செழுமை வாய்ந்த மலர்போன்ற திருவடியினைச் சிந்தியாது செய்வது வேறு ஒன்று உண்டோ? இல்லையே.*

**14 எம்பெரு மாற்கன் பில்லா விழிமதி யாலே யன்னோன்**
**செம்பொரு ளாகா னென்று சிவத்துரோ கக்கீர் காட்டி**
**வெம்பிடு வோர்க்காம் வாய்ப்பெவ் விதத்ததோ வயனாஞ் சைவன்**
**கும்பிட லொழிந்து மாற்றங் குயின்றுதுன் படைந்தா னன்றே.**

*எம்பெருமான் திருவடிகளில் அன்பு வாயாதோர் ஆகிய இழிந்த மதியினர் அப்பரமன் முழுமுதற்கடவுள் ஆகான் என்று “ஆதலால் நமது சத்தி யறுமுகன் அவனும் யாமும் பேதகம் அன்றால்” என வரு சிவனாரின் மொழிகளையே பழிக்கும் உரைகளைக் காட்டி மனம் புழுங்குவோர் அடையும் கதிதான் யாதோ? சிவநெறி பற்றிய பிரமன் முருகனைத் தொழாது ஓங்காரத்தின் பொருள் நானே என்று ஆணவமொழி பகர்ந்து வலிய நிகளத்தினோடு மறுகு சிறைபட்டு வருந்தினா னல்லவா?*

*(“கருதார் குகனைக் கருதா மலரயன் கண்ணுதலின், இருதாள் பணிந்து மிருஞ்சிறைப் பட்டன னென்னுமுண்மை, தெருளா மதியான் முருகனைத் தாழ்நிலைத் தேவனென்பா, ரிருளார் நரகே யிருப்பா ரிவரென் றியம்பரசே” என வருதல் காண்க)*

**15 ஒருகுரு வாஞ்செவ் வேளுக் குடலுயிர் பொருளிம் மூன்றுந்**
**தெருளொடு கொடுத்தவ் வேளைத் திறம்பிடா மனத்திற் சேர்த்து**
**மருளற நிலைத்து நிற்றன் மாண்டுற வவனை யுந்தான்**
**ஒருவுத றுறவென் றோது முரைபெரும் பழுதே யந்தோ.**

*ஒப்பற்ற குருபரன் ஆகிய செவ்வேட்பரமனுக்கு உடல், உயிர், பொருள் ஆகிய மூன்றையும் மெய்யுணர்வோடு ஒப்படைத்து அவனை நிலையான உள்ளத்தில் சேர்த்து ஆணவ விருள் அறும்படி நிலைத்து நிற்றலே மாட்சிமைப்பட்ட துறவு என்க. அவனையும் துறப்பதே துறவு என்பார் மொழிகள் பழுதாகும்! அந்தோ! அவ்வாறு கூறுவார் அறிவும் இருந்தவாறு என்னே!*

14. கீர் = சொல்.

*(நிலைத்து நிற்றலைத் திருவாசகத் தமிழ்மறை "அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும், குன்றே யனையா யென்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ, இன்றோ ரிடையூறெ னக்குண்டோ வெண்டோள் முக்கண் எம்மானே, நன்றே செய்வாய் பிழைசெய்வாய், நானோ விதற்கு நாயகமே" என்று உணர்த்துதல் ஓர்க)*

16 பரனனுக் கிரக மிற்றென் றறிகிலாப் பாவ லோர்தாஞ்
சுரர்களுக் கரச னான சுவாமியைத் தவத்தால் வேட்போர்
வரர்பகை யசுர ரென்று வடசொலில் வரைந்த கூற்றைப்
பிரணவ னருளை வேண்டும் பெரியவ ரேன்று கொள்ளார்.

*இறைவனின் அருள் இத்தன்மைத்து என்றும், அவன் வேண்டுதல் வேண்டாமையிலான் என்றும் அறியாத வடமொழி வாணர், தேவதேவனான முருகப் பரமனை தவம் செய்து வேண்டுவார்க்கு வரம் தரும் கடவுள் எனவும், அசுரர்களின் பகைவன் என்றும் வரைந்தவற்றை ஓங்காரப் பொருளாகிய அவனது அருளை விழையும் பெரியோர் ஏன்று கொள்ளார்.*

17 பாலையும் வறையுஞ் சிற்றூண் பழுத்தபல் பழமுங் கூழுங்
காலையு நடுவு மாலைக் காலையு மிடையி டைச்சார்
வேலையு மினிதுண் ணாசை விம்மிநின் றோரே யச்சொன்
மாலையும் வரைந்தா ரென்றே வழங்கவு முளதஃ தேயால்.

*பால், வறையலென்னும் துவட்டற்கறி, சிற்றுண்டி, பலவகைப் பழங்கள், உண்டி முதலியவற்றைக் காலை, நடுப்பகல், இரவு இவைகளின் இடைவேளைகளிலும் நன்கு உண்ணும் ஆசை மிக்கவரே முற்கூறியவாறு வரைந்தார் என்று கூறவே அஃது காட்டுகிறது.*

18 பேமுகங் காட்டி நேர்வார் பொருள்பிடுங் குநரு மேற்பிற்
சாமுகங் காட்டு பாயத் தலைவருங் கொலைஞ ருங்கோட்
காமுகன் றொடர்பி னாருங் கழறுத றந்தம் போக்காம்
ஓமுகன் றிருவ ருட்பே றுரைத்திட லுறுவர் போக்காம்.

*அச்சம் விளைக்கும் கொடூர முகத்தைக் காட்டி எதிர்ப்படுவார் பொருளை வழிப்பறி செய்வோரும், இப்போதே இன்னும் சற்று நேரத்திலே சாவுபவரைப் போன்ற முகத்தைக் காட்டிப் பிச்சை*

---

17. வறை = வறையலென்னுங்கறி.

18. பேமுகம் = அச்சத்தை யுண்டுபண்ணு முகம்; பேம் = அச்சம். உறுவர் = முனிவர்.

*யெடுக்கும் கலை வல்லவரும், கொலை செய்வோரும், கோள் கூறுவாரும், காமுகரின் தொடர்பு உடையோரும் கூறுவன அவரவர் நடைக்கு ஒத்தனவா யிருக்கும். அது போன்றதே முற்கூறியவாறு முருகனை இழித்து எழுதினார் செய்கையுமாம். குடிலைத் திருமுகம் உடைய முருகனின் திருவருட் பேற்றை உரைத்தல் தவச் செல்வராகிய முனிவரின் நடையாகும் என்க.*

19 **தவத்தினு முயர்ந்த செல்வந் தரைவிசும் பினுமின் றென்றே**
**தவத்தினைத் தனமாக் கொண்ட தாபதர் வேத நூலுந்**
**தவத்தினிற் பகைமை வென்ற தலைவர்க ளுரைத்த நூலுந்**
**தவத்தலை வனையுள் காத சகத்தினர்க் கிழைநூ லாமே.**

*தவத்தைவிடப் பெரிய செல்வம் மண்ணுலகத்திலும் இல்லை. விண்ணுலகத்திலும் இல்லை, என்று அறிந்து தவமே "பொருள்" எனக் கொண்ட முனிவர் அருளிய வேதமாகிய நூலும், தவவலிமையால் இருட் பகையை வென்ற தலைவர்கள் அருளிய நூல்களும் தவத்துக்குத் தலைவனாகிய முருகனை உள்ளம் கொள்ளாத உலகினருக்கு "பருத்தியால் இழைக்கப்பட்ட நூல்களாய்" விடும். வேறு பயனுடையன ஆகா.*

20 **ஐவகைப் பூதங் கட்கு மதிதெய்வ மாய வேதன்**
**ஐவகைப் பாணன் றாதை யடலுருத் திரன்ம கேசன்**
**மெய்வகைச் சிறப்பின் மேலாய் விளங்குவோ னுளுமி ருந்தே**
**உய்வகை யருள்கு கேச னுலகமே மோக்கத் தானம்.**

*நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐந்து பூதங்கட்கும் அதி தேவதையாகிய பிரமன், (தாமரை, மா, அசோகு, முல்லை, குவளை என்னும்) ஐந்து மலர்க் கணைகளை யுடைய மன்மதன் தந்தையாகிய விட்டுணு, (இவ்விருவரையும், இவரின் கீழ்ப்பட்ட) யாவற்றையும் அழிக்கும் ஆற்றலுடைய உருத்திரன், மகேசுரன் (இந்நால்வரின் மேலாய) உண்மைச் சிறப்புடைய சதாசிவன் ஆகிய ஐவருள்ளும் இருந்து ஐந்தொழில் புரிந்து உயிர்களுக்கு உய்தியருளும்* ***குகனாகிய ஈசனின் உலகமே வீட்டு உலகம்*** *ஆகும்.*

21 **மறையவ னாதி யைந்து பெயருமே மாய்வா ரென்று**
**பறைதலின் வாயு நூலப் பரிசினர் தொழிலோ ரைந்தும்**
**நிறைவுற விழைப்போன் வேற்கை நிமலனே யெனமா காந்தம்**
**அறைதலின் மேலே சொற்ற தறாவுறு தித்தே யாமால்.**

*பிரமன், விட்டுணு, உருத்திரன், மகேசன், சதாசிவன் ஆகிய ஐவரும் ஒரு கால முடிவு உடையவரே என்று* ***வாயு சங்கிதை*** *கூறுதலான் அத்தகையவர்க் குரிய ஒப்பற்ற ஐந்தொழிலும் முற்றுப் பெற அவருள் நின்று நடத்துபவன் வேற்கை நிமலனே என்று* ***வடமொழிக் கந்தபுராணம்*** *கூறுதலினால் மேலே கூறப்பட்ட முடிவு அசைக்க முடியாத திட்பம் உடையது ஆகும்.*

22 முதற்பொரு ளுலக மாய்மேன் மொழிந்துள மோக்கத் தானம்
மதர்ப்பறை செக்கர் வேள்செம் மாப்பினிற் சோம லோகென்
றதிர்த்தவொர் சிவலோ கந்தா னதுவள னளவை காட்டற்
குதித்ததன் றளப்பில் சீரோ டுளதென வுரைக்க லாமே.

*முதல்வன் உலகு என்று மேலே கூறிய* ***வீட்டுலகம்*** *என்பது* ***அப்பெருமானின் எழிலை விளக்கும் செக்கர்வேள் செம்மாப்பில் சோமலோகம் எனப்பட்ட ஒப்பற்ற சிவலோகமே*** *யாகும். அதன் வளப்பம் அளவிட்டுரைக்குமாறு தோன்றுவ தன்று. எனவே அழிவும் அளவும் இல்லாச் சிறப்புடையது என்று கூறுதல் தகும்.*

23 சொல்லருஞ் சிறப்பு வாய்ந்து சுடர்ந்துள கயிலா யங்கள்
வல்லிருஞ் சிகர வீட்டம் வளங்கிளர் கந்த வேள்போர்
புல்லருங் கிரிக ளாகப் புகல்வன வூழி ஞான்றும்
இல்லையென் னாமன் மீப்போ யிருக்குமென் றோது மேனூல்.

*சொல்லுதற்கு அரிய சிறப்பைப் பெற்று விளங்கும் கயிலாயங்களும், வலிய பெரிய உச்சிகள் பல கூடிய வளம் பொலியும் கந்தமாதனம் என்னும் மலையும் ஊழிக் காலத்தும் அழிவில்லாமல் எல்லாவற்றிற்கும் மேலே சென்று விளங்குவன என்று மேம்பட்ட நூல்கள் கூறும்.*

*(உலக நிரலைக் கூறுமிடத்து* ***நாத பிந்தோபநிடதம்*** *ஏழாவதாக வைகுண்டம் என்னும் திருமால் உலகு என்றது. இதனுள் பிரமனுலகம் அடங்கியுள்ளது. எட்டாவதாக உருத்திரன் வாழும் கயிலாயத்தை உரைத்தது. இவ்வைகுண்ட கயிலாயங்கள் நாவலந்தீவின் நாப்பண் நிலைபெற்றதாய் எண்டிசைக் காவல ரிருக்கும் எட்டுச் சிகரங்களையு முடைத்தாய் விளங்கும் மேருவில் உள்ளனவாம். வைகுண்டத்துக்கு மேலுள்ள உருத்திர னிருக்கும் கயிலாயத்துக்கு வேறாய் இமய மலைக்கும் ஏம கூட மலைக்கும் இடையில் விளங்குவது வெள்ளிமலை எனப்படும் பூலோக கைலாயமாகும். இது திருமால் முதலிய யாவரும் ஒடுங்கும் ஊழிக் காலத்தில் சிவனார் திருவாணையால் விரைவில் வளர்ந்து பிரமாண்டத்தைப் பிளந்து*

*மீச்சென்றிருக்கும். இக்கயிலாயங் கட்கு வேறாக மேருவுக்கு வடபாலாய் அண்டச்சுவருக்கு அணித்தாய் மாகயிலாயம் என்ப தொன்றுளது. இக்கயிலாயங்கட்கு வேறானது பரமாகாச சிவலோகம் என்க)*

24 **இப்பெருஞ் சொர்க்கஞ் சேர்ந்தங் கிருத்தலே சாலோ கஞ்சேய்**
**செப்பருந் திருமுன் வைகல் சிறந்தசா மீபஞ் செவ்வேள்**
**ஒப்புருக் கோடல் சாரூப் பியமென வுரைக்க லாமா**
**துப்புறுஞ் சொரூபா னந்தந் துய்த்தல்சா யுச்ய மாமே.**

*பெருமையுடைய இந்தச் சோமலோகத்தை யடைந்து வாழ்தல் சாலோக மாகும். சேய்ப்பரமனின் ஒப்பற்ற திருமுன் வைகுதல் சாமீப மாகும். செவ்வேட் பரமனை ஒத்த திருமேனி பெறுதல் சாரூபமாகும். பெருமைமிக்க அகண்ட ஞான சொரூபத்தில் அணைந்து பேரின்பம் நுகர்தல் சாயுச்சியம் ஆகும்.*

25 **இந்தநாற் கதியை யெய்தி யிருக்குநால் வருஞ்செவ் வேளுக்**
**கெந்தநா ளுந்தா னீங்கா வடிமையே யருளல் லாது**
**சொந்தமா யுயர்ந்தா ரல்ல ராதலிற் சொலிய நேரால்**
**அந்தநால் வருந்தம் முட்டா மதிகராய் விளங்கு வாரே.**

*மேற்கூறிய நான்கு கதிகளை யடைந்துள்ள நால்வகை யுயிர்களும் எஞ்ஞான்றும் செவ்வேட் பரமனின் நீங்கா அடிமையரே யாவர். (அனுக்கிரக சத்தியாகிய அருள் அவனுக்கு அடிமைப் பட்டாருள் பதியும் அளவை வழியே இந்த நாற்றிறக் கதிகளும் கூடும். அடிமைப்படார்மாட்டு 'நான்' 'எனது' என்னும் செருக்கு தடித்திருத்தலின், அவர் இக்கதிகளை அடையார் என்க) எனவே திருவருள் துணையின்றித் தங்கள் முயற்சியால் அக்கதிகளுக்கு உரியராயினா ரல்லர். எனவே சாலோகத்தினரினும் சாமீபத்தினரும், சாமீபத்தினரினும் சாரூபத்தினரும், சாரூபத்தினரினும் சாயுச்சியம் பெற்றாரும் உயர்ந்தோர் ஆவர்.*

*(பவுட்கராகம பசுபடலம் "அந்தப் பரமேசுவரன் மலபரிபாகம் வேண்டித் தனது இச்சையால் தானே முத்திவியத்தியின் பொருட்டாயுள்ள கண்ணினால் அருள் செய்வன்" என்பதால் இன்னோர் பெற்ற கதிகள் இறைவனருளால் வாய்த்தவை என்பது உணரப்படும். அருட்சத்தி இவருள் பதியும் அளவை வழியே நால்வகை கதிகள் கூடல் உளவாம் என்பதும் அறிக).*

24. "சாயுச்யம்" - ஸாயுஜ்யம் என்னும் வடசொல்லின் விகாரம்.

26 உறுகதி நான்கு மந்த வுலகணைந் தியங்க லானே
இறுதிகொள் பிறவி யேயா வெனறிட மிரும்புண் ணீர்போல்
அறிவுயி ரழியு மென்ற லாவிநித் தியமென் றோது
மறைமொழி பகைக்கு மேக வாதமாய்க் கதியுங் காதும்.

*இவ்வண்ணம் கூடும் நான்கு கதிகளும் அச்சிவலோகத்தின் கண்ணேயே நிகழ்தலால் இறப்புக்குக் காரணமாகிய பிறவி இவரை அடையாது எனல் உறுதியே யாகும். காய்ச்சிய இரும்பு உண்ட நீர்போல (பேரின்பம் நுகரவுள்ள) அறியுந் திறமுடைய உயிர்கள் பிரமத்தில் கலந்து இல்லையாய் விடும் என்னும் கூற்று "உயிர்கள் அழியாதவை" என்னும் வேதமொழிகளை முரணி நிற்பதன்றி ஏகான்மவாதமாயும் முடியும். முடிதலானே இந்நாற்கதிகளும் இல்லையாய் விடும்.*

*(சுவேதாச்வதரோபநிடதம் "அறிவுளான் எனும் ஞன்னும் அறிவிலான் எனும் அஞனுமாம் இருவரும் உற்பத்தியில்லாதவர்களாகிய ஈசனும் அநீசனும் ஆவர்" எனலும் திருமந்திரம் "பதியினைப் போல் பசு பாசம் அனாதி, எனலும் காண்க.)*

27 அழிவுறு முயிர்க்கு மோக்க மறைதலு மழிவுக் கோர்சீர்
மொழிவது போற்க திப்பேர் மொழிதலு மதிவி யாத்தி
இழிவுறுங் கலப்புக் கண்டா ரிலரது சொலலு மொவ்வா
தொழிதலைச் செம்மாப் பின்க ணுரைத்துநாட் டினனே மோனம்.

*உயிரானது பிரமத்தில் கலந்து இல்லையாய் விடுமாயின் உயிருக்கு வீடுபேறு கூறுதலும் அங்ஙனம் உயிர் இல்லையாய்ப் போதற்கு ஒரு சிறப்புக் கற்பிப்பது போல நான்கு கதிகளைக் கூறுதலும் பொய்யின் மூத்த புன்மையாகும். இழிவுறும் நிலையாகிய சீவப்பிரம ஐக்கியம் கண்டாரும் இலர். இலராய இவர் மொழியும் பொருந்தாது என்னும் முடிபைச் செக்கர்வேள் செம்மாப்பில் விளக்கி மோன நிலையே எமது சித்தாந்தம் என்பதும் நிறுவினாம். கடைப்பிடிக்க.*

28 முமலமா ருறுப்பு மாறி முடிவிலோம் பிறங்கு காந்தி
அமலமா யவிரு மாந்த ரறியொணா வணமிவ் வாற்றான்
நிமலசா யுச்யப் பேறு நிலவினோர்க் குஞ்ச ரீரம்
விமலமா யுளதா மித்தை விதேகவீ டெனுலு மாமே.

27. செம்மாப்பு = செக்கர்வேள் செம்மாப்பு. அதன்கண் இங்கு கூறுமுடிவு, முழுமுதலிலக்கணவதிகாரத் துளது.
28. ஓம் = பிரணவம்.

*மும்மலங்கள் நிரம்பிய மக்கள் யாக்கை நீங்கிப் பிரணவத்தில் விளங்கும் மலக்குற்றம் அற்ற ஒளியாய் விளங்கும் யாக்கை மக்கள் கண்கட்குப் புலனாகாத வண்ணம் நிலவும். இதனால் மலப்பிணி கழன்ற சாயுச்சியப் பேறு எய்தினவர்க்கும் மலமற்ற உடம்பு உள்ளதென்று அறிக. இதனை விதேக முத்தி என்று கூறுதலும் ஒவ்வும்.*

*(சிதாகாசமே திவ்விய தெய்வமாய் இருத்தலின் அதனை நீங்காது நிற்கும் உயிர் பிராணவாயுவே எனும்படி நிகழ்ச்சியுற்று நிற்கும் நீர்மையை நீங்கினால் அசைவற்ற அவ்வாகாயமே என அறிவரும் பொருளாய் இருக்கும். பைங்கலோபநிடதமும் முக்திகோப நிடதமும் "காற்று அசைவற்ற தன்மையை அடைதல் போலத் தன்னுடம்பு கால வயப்பட்டவுடன் சீவன் முத்திதசையின் நீங்கி விதேக முக்தித்துவத்தை எய்துகின்றனன்" எனல் காண்க.*

*அசைவற்ற காற்று ஆகாயமயமாய் நிற்கும் செவ்வி ஆகாயம் ஒன்றுமே உளது என்றேனும், ஆகாயமும் காற்றும் வேறு வேறென இரண்டாய் உள என்றேனும், அவ்வாகாயம், காற்று என்பவற்றுள் எதுவும் விழிப்புலம் ஆகாமையின் அவை இல்லை என்றேனும் கூறுதல் கூடாதவா றாகவே ஆன்ம சம்பந்தமும் வீட்டு நிலையுமாம் என்பது கருதியே "மாந்த ரறியொணா வணம்" என்றார்).*

29 **மாறிவே றுறாது தூல மண்மிசை விழலு மவ்வோம்**
**ஈறிலா துறலு முண்டென் றியம்பிட லால்வி தேகப்**
**பேறிதா மெனலுங் கூடும் பேசிவை யெல்லா மந்த**
**ஊறிலா வொருசெவ் வேளி னுளத்தரு ளிருந்த வாறாம்.**

*முற்கூறியபடி மக்கள் யாக்கை மாறி மலம் நீங்கிய உடம்பு பெறாது மக்கள் யாக்கை மண்ணில் நீங்கியதும் அவ்வோங்காரத்தில் விளங்கும் அழிவற்ற உடம்பு கூடுதலும் உண்டென்று கூறப்படலால் இஃதும் விதேகமுத்தி எனற்குச் சால்பாம். இத்திறப் பேறுகள் யாவும் கேடணுகா ஒப்பற்ற செவ்வேட் பரமனின் திருவுள்ளத்தின் அருள் நீர்மையின் வண்ணம் கூடுவனவாம்.*

30 **இத்திற வமுத வீட்டை யெய்தினோ ரிறைவ னீயும்**
**எத்திணை தனிலு நிற்பா ரிவருள மிருந்த வாறே**
**அத்திரு வருளு நிற்கு மகத்தியன் வசிட்ட னாதி**
**சத்தவி ருடிக ளேனைச் சரதவின் பினருஞ் சான்றே.**

*இத்தகைய பேரின்ப வீட்டை அடைந்தோர் இறைவனால் கொடுக்கப்படும் எந்தவுலகிலும் இருப்பர். இவர்தம் உள்ளப் பக்குவத்தின்வழி அத்திருவருளும் நிலவும். அகத்தியர், வசிட்டர்*

*முதலிய சப்த இருடிகளும் இறைவனின் பேரின்பத்தில் திளைக்கும் மற்ற பெரியோர்களும் இங்ஙனம் சான்றாவர் என்க.*

*(சப்த இருடிகளாவர் : அகத்தியன், புலத்தியன், அங்கிரா, கௌதமன், வசிட்டன், காசிபன், மார்க்கண்டேயன் என்பார். வேறு கூறுவாரும் உளர். எத்திணை தனிலு நிற்பர் என்பதற்கு நாற்கதிகளுள் எக்கதியிலும் இருப்பர் எனலும் கூடும்)*

31 **சாத்துவி கமுமோய் போது தலைவனின் குணமஃ தாதல்**
**ஏத்தொரு சிவலிங் கத்தே யைக்கிய மாமா றீசன்**
**சீர்த்தநன் மேனி புக்கே திளைத்தலென் பனவு நல்ல**
**ஆத்தர்கண் மிழற்ற லால்வீட் டடைவுபல் வகையு மாமே.**

*வீடுபேற்றின் திறத்தை முக்குணங்களில் இராசதம், தாமதம் என்பவை ஒழிவுறுமாறே சாத்துவிகமும் ஒழிவையுற்ற காலை இறைவனின் (தன் வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், பேரருளுடைமை, இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், வரம்பிலாற்றலுடைமை, வரம்பிலின்ப முடைமை என்னும்) எண்குணங்களும் கூடப் பெறுதல், திருமாலும், பிரமனும் போற்றி செய்யும் ஒப்பற்ற சிவலிங்கத்தில் ஒன்றாய்க் கலத்தல், இறைவனது சிறப்புமிக்க நலம்பெருகும் திருமேனியில் கலந்து பேரின்பம் நுகர்தல் என்று நல்ல சான்றோர் கூறுதலாலே வீடுபேறு பலவகைப்படும் என்றறிக. (சிவலிங்கத்துக் கூடியோர் அப்பர் பெருமானும் பட்டினத் தடிகளும், திருமேனியில் கலந்தோர் மணிவாசகப் பெருமான்.)*

32 **மோக்கத்தி லுடம்பின் றென்போர் மூர்த்தியை யிழித்துக் கூறு**
**நோக்கத்த ராத லாலே நொசிவறுத் தருளா சானைத்**
**தூக்கத்துங் காணாக் கேடு தொடர்ந்தொழி பவராய் மாந்தர்**
**சாக்கத்து றாத மெய்யர் தமையிக ழகரு மாவர்.**

*வீட்டு நிலையில் உடம்பு இராது என்போர் இறைவன் திருமேனி நிலையை இழிவாகக் கூறும் கருத்துடையோர். எனவே பிறவிப் பிணியை அறுத்து ஆட்கொள்ளும் குரவனைக் கனவிலும் காண முடியாத பாவம் தொடர்ந்திட அழிந்தொழிபவராயும் மக்கள் விழிப்புலனுக்கு எட்டாத உடம்புடைய முத்தரை இகழும் பாவிகளும் ஆவர்.*

*(இதுகாறும் சைவருள் ஒரு சாரார் கொள்கையை மறுத்தருளினார்)*

32. அகர் = பாவிகள்; வடசொல்.

33 நித்திய வுயிரை நூற நினைத்தெது செயினு மேலா
துத்தம முருக நாத னுயிர்த்துணைக் கடவு ளன்னோன்
பத்திமை யொழித லாலப் பசுக்குழு விழிவிற் சேருந்
தத்துவ சொரூபத் திற்கோர் சன்னிதி யிலையஃ தாரா.

*நிலைபேறுடைய உயிருக்கு அழிவு கூடுமாறு எவர் எது சொல்லினும் எது செய்யினும் உயிரை அழிக்க இயலாது. நல்லோன் ஆன முருகநாதனே உயிர்க்குத் துணையாய் நிலவும் கடவுள் ஆவன். அவன் திருவடியில் பத்தி வையாமையால் அப்பசு (உயிர்)க் கூட்டம் இழிந்த கதியையே சேரும். தத்துவ சொரூபத்திற்கு ஒப்பற்ற சன்னிதி (முன்னிலை) இல்லை. எனவே அப்பசுக்கூட்டமும் அதனையடைந்து பேரின்ப நுகர்ச்சி பெறா.*

34 ஊனுட லிருக்கு மாவி யுடங்கியைந் துளசொ ரூப
ஞானமென் பதனாற் பெற்ற ஞானமுற் றறிவோ செத்துப்
போனபி னதுவா மென்று புகலுத லிலவு காத்து
வானகஞ் செல்வீ யாற்றன் மானுமோர் நிலையு மின்றே.

*ஊனுடம்பில் தங்கும் உயிர் தன்னுள் ஒன்றி இயைந்துள்ள சொரூப ஞானம் என்தபன்கண் பெற்றது முற்றறிவோ சிற்றறிவோ? (அச்சொரூபத்தை நிகர்த்த ஞானம் வாய்தலும் இன்றே). எனவே செத்த பிறகு உயிர் அச்சொரூப மாகும் என்று கூறுதல் இலவு (கனியாம் அதை உண்ணலாம் என்று) காத்து, அது கனியாகாது, பஞ்சானதைக் கண்டு ஏமாந்து, வேறு உணவு தேடி வானத்தில் பறந்து செல்லும் கிளியின் செயலுக்கு நிகராவதோர் நிலையும் இவர்தம் கற்பனைக்கு இல்லையே. (மறுப்பு விளக்கப்பட்டது இச்செய்யுள்காறும் என்றறிக.)*

35 ஆள்குக னதிகா ரத்தொன் றடைந்திருப் பவர்சா ரூப
நீள்கதி யினர்சா யுச்ய நிகழ்கதி யினரா காரால்
மாள்கதி தபுவே னீல மயிலெனு மூர்தி சேய
வேள்வள ருருவ மேற்ற வீரரு மெண்ணில் பேரே.

*உயிர்களை ஆட்கொள்ளும் குகப்பரமனின் அதிகாரத்தில் ஒன்றைப் பெற்றிருப்பவர் உயர்ந்த சாரூப கதி பெற்றோராவர். இன்னோர் சாயுச்சியப் பேற்றை யடைந்தவர் ஆகார். காலன் செயலைக் கெடுக்கும் வேற்படையும் நீல மயிலாகிய ஊர்தியும் செவ்வேட் பரமனின் பெருமை வளரும் திருவுருவமும் கொண்ட இன்னோர் எண்ணற்றவராய் அபரசுப்பிரமணியர் என்னும் வீரராய் உள்ளனர்.*

34. வீயாற்றல் = பறவையின் செய்கை.

*(அபரசுப்பிரமணியர் அணுசுப் பிரமணியர் எனவும்படுவர். காசி கண்டத்து 62-ஆம் அத்தியாயம் "ஒரெழு கோடி யைங்கரர் கோடி வயிரவ ரொன்பது கோடி, சீர்கெழு மெண்டோ ணீலிகள் மயின்மேற் செல்லும்வே லுழவரெண் கோடி கார்பெறு மியக்க ரொன்றரைக்கோடி யிசைநவில் கின்னரர் கோடி, கூர்நுதிப் பிறைபற் புயங்கமோர் கோடி மூன்றுகோடிதானவரிருகோடி" என்பது காண்க)*

36 **அப்பெரு வீரர் கட்கே யணுகுமா ரேச ரென்பேர்**
**ஒப்புறு மபர சுப்பி ரமணிய ரெனுமொண் ணாமஞ்**
**செப்பிடு வாரே மேலோர் சேயவ னருளின் வாழுந்**
**துப்பரு ளனேகர் மேனி சோடச வயதாய் மின்னும்.**

*அப்பெரிய வீரரை "அணு குமாரேசர்" எனவும், ஒத்த வடிவத்தால் "அபசுப்பிரமணியர்" எனவும் சிறந்த பெயர்கள் கொண்டு பெரியோர் கூறுவர். சேய்ப்பரமன் அருட்கடலில் திளைக்கும் பேறுடையாரில் பெரும்பான்மையர் பதினாறு ஆண்டுடைய மேனியோடு விளங்குவர்.*

37 **மெய்யரென் றுரைத்தே னன்னோர் மேன்கும ரேச னீந்த**
**மெய்யுருச் சடைமு டிச்சீர் விளங்குமா முனிவ ரன்னோர்**
**செய்யநல் வேடத் தாற்சா ரூபமுந் திகழ்ஞா னத்தாற்**
**பொய்யறு சிவசா யுச்சி யமுநனி பொருந்தி யுள்ளார்.**

*32-ஆம் செய்யுளில் கூறப்பட்ட மெய்யர் எனப்படுவோர் மேம்பட்ட குமரேசன் வழங்கியருளிய அழிவற்ற திருமேனியும் சடைமுடிச் சிறப்பும் விளங்குகின்ற மாமுனிவ ராவர். அவர்தம் செவ்விய நல்ல வடிவால் சாரூபமும் ஞான விளக்கத்தால் அழிவற்ற சிவசாயுச்சியமும் பொருந்தியுள்ளோ ராவர்.*

38 **இந்தமா விருடி சாரூப் பியத்துமார் வயதீ ரெட்டே**
**சொந்தமாய் நிலவும் வேறுஞ் சொல்லலா மவர வர்க்கே**
**வந்தவா றழகார் செவ்வேண் மணத்திருத் தேவி கண்முன்**
**சந்தமார் குழவி மேனி சார்ந்துநிற் பவரு முண்டே.**

*முன்கூறிய மாமுனிவர் சாரூபத்துக்கும் நிறைந்த ஆண்டு பதினாறே உரியதாய் விளங்கும். இறைவன் திருவுள்ளமிருந்தவாறு அவர்க்கு வெவ்வேறு அகவைகளும் கூடும். எழில் நிரம்பிய செவ்வேட்பரமன் மனங்கொண்ட திருத்தேவிமா ராகிய தேவ யானை, வள்ளி ஆகியோர் திருமுன்னிலையில் அழகு நிரம்பிய குழந்தைகளின் உடம்பைப் பெற்று விளங்குபவரும் உள்ளனர்.*

---

37. மெய்யரென்றுரைத்தது, 32-ஆஞ் செய்யுட்கண் "மெய்யர்" என வருவதே.

39 **அத்திருக் குழவிக் கெல்லா மருட்டிருத் தாயா யெம்மாற்**
**கித்திரு மகாரை நீங்கா வின்பில்வைத் தருள்க வென்று**
**புத்திர வாஞ்சை காட்டிப் புகல்களை கண்ணாய் மல்கச்**
**சத்திக டஞ்சீ ராலே சரதகன் னியரா னாரால்.**

*குழவிப்பேறு அடைந்தவர்க்கெல்லாம் அருள் நிரம்பிய திருத்தாய்மாராகி இம்மகவுகளை அழியாப் பேரின்பத்தில் வைத்தருள்க என்று மகவின்மேல் அன்பு காட்டி எம்பிரானுக்குக் கூறியருளும் களைகண்ணாய் (துணையாய்) நிலவுமாறு வள்ளி தேவயானை ஆகிய இரு சக்திகளும் என்றும் கன்னியராகவே திகழ்கின்றார்கள்.*

40 **அனுக்கிர கத்தான் முத்த ரனைவரு மடிமை நீரார்**
**எனப்படு வாரென் றாலு மிறைபெருஞ் செல்வ மெல்லாந்**
**தனித்தனி யனுப விக்குந் தன்மையின் மகாரு மாவர்**
**கனைத்திடு மணிகொ டண்டைக் கழலணைந் தார்க்கூ றென்னே.**

*அருளால் பேறடைந்த தன்மையால் எல்லா முத்தரும் இறைவனுக்கு அடிமைத் தன்மை பூண்டவரே என்றாலும் இறைவனின் வரம்பில்லாத பெருஞ் செல்வத்தை அன்னோரில் ஒவ்வொருவரும் தனித்தனியாக நுகர்தலின் அவனுடைய மக்களும் ஆவர் என்க. ஒலி செய்யும் மணிகளாகிய பரல் நிரம்பிய தண்டையணிந்த அப்பெருமானின் கழலணிந்த திருவடிகளை அணைந்தவர்க்கும் ஒரு தீங்கு உண்டோ? இல்லையே.*

41 **ஆவிக ளெல்லா மாணா யிராதுபெண் ணாக்கை தன்னை**
**மேவியு மிருத்த லாலம் மேனியர் தூல நீப்பில்**
**தாவறு மோக்க வாழ்வு தம்மர பதுவ ழாது**
**மேவுறு மாறே செவ்வே டேவிமே னிலையு முண்டே.**

*உயிர்கள் யாவும் ஆண்களாயே இராமல் பெண்ணுடம்பு கொண்டுமிருப்பதால் அப்பெண்ணடியவர்கள் பருவுடல் கழிந்த பின்பு இன்பமாகிய வீட்டுலக வாழ்வினைத் தம் பெண்ணியல்பு குன்றாமல் நுகருமாறு செவ்வேட் பரமனின் திருத்தேவிமார் எழுந்தருளும் வீட்டு நிலையும் (முத்திதானம்) உள்ளது.*

---

39. மல்கச்சத்திகள் = மல்கு + அச்சத்திகள் எனப்பிரிக்க.
41. மேனிலை = முத்தித்தானம்.

42 **அத்திருத் தேவி மார்க ளில்லையே லரிவை யார்பே**
**றெத்திறத் தானுங் கேடா மென்பதைத் தெரிவார் தெய்வச்**
**சித்தணங் கான துஞ்சால் பென்பரே தெரியார் புல்குஞ்**
**சத்திக ளெனினக் கூற்றைச் சவட்டுத றரும மாமே.**

*அந்தத் திருத்தேவிமார்கள் இல்லையென்றால் பெண்கள் வீடுபேறு எவ்வகையிலும் கேடாகும் என்பதை அறிவோர் இறைவனின் சித்து பெண் வடிவு கொண்டதும் தக்கதே என்பர். இஃது அறியாதார் இறைவன் காமத்தால் தழுவுதற்கு ஆகிய பெண்களே என்று உரைப்பின் அவர் உரையைத் துவைதுவை என்று துவைத்து உண்மையை நாட்டுதல் அறச் செயலாகும்.*

43 **உயிரெலாம் புணர்ச்சி செய்தின் புறுதலிற் பல்கு மாறு**
**செயிரிலா தவளைப் புல்கல் செய்குவ னீச னென்று**
**பயில்படாந் தனைப்பொய் சோரம் பலிக்குமா றவற்றை யாண்டுப்**
**பயில்கிறா னவனென் றேக டாம்வழிப் பாற்ற வேண்டும்.**

*இறைவன் குற்றமற்ற தேவியைப் புணர்தல் என்னை யெனின் எல்லா உயிர்களும் தம்துணையோடு புணர்ந்து இன்புறுதலால் அவ்வுயிரினங்கள் பெருகும். அது குறித்தே இறைவன் தேவியைப் புணர்ந்தா னாயினான் என்றொரு அமைதி காட்டித் தம்முள் கனன்றெழும் காமத் தீக்கு அமைதி காணும் பொய்யர்தம் முகமூடியை, அன்னாரை நோக்கி, உலகில் காமம் மட்டுமே பரவியதன்று. பொய்யும் திருடும் பெரிதும் பெருகியுள்ளன. இவ்வாறு பெருகுதற்கும் இறைவன் பொய், திருடு ஆகியவற்றை யாண்டிருந்து பயில்கின்றான் என்று கூறுமின்? என வினவும் வழிக் கிழித்தெறிய வேண்டும்.*

*("காரண முதல்வன் மோனக் காட்சியால் அமர ரெல்லாஞ், சூரர மகளிர் தங்க டுணைமுலைப் போக மின்றி, ஆரிடர் நிலைமை தன்னை யடைந்தன ரளக்கர் சூழ்ந்த, பாரிடை யுயிருங் காமப்பற்றுவிட் டிருந்த வன்றே" என்று இறைவன் மோன முத்திரை காட்டி யிருந்தகாலை நிகழ்ந்ததாகக் கந்தபுராணம் கூறும். இது குமரகோட்டத்துப் பெருமானால் அடியெடுத் தருளப்பெற்ற தென்றும் திருத்தப்பட்ட தென்றும் ஒரு கதையைக் கொண்டுளதே. இங்ஙனமே சிவஞான சித்தியாரும்.*

---

43. பயில்படாம் என்றதில், பயில் = சொல்லுகின்ற எனும் பொருண்மைத்து; வினைத்தொகை. "இடையிடை பயிற்றிக்கிள்ளை யோப்பியும்" என்றார் **குறிஞ்சிப்பாட்டி னரும்.** பயிற்றியென்பது சொல்லி யெனும் பொருள் பயந்து நிற்றல்காண்க. யாண்டு = எவ்விடம்? என்னும் ஐயச்சொல்.

*"கண்ணுதல் யோகி ருப்பக் காமனின் றிடவேட்கைக்கு*
*விண்ணறு தேவராதி மெலிந்தமை யோரார் மாறான்*
*எண்ணிவேண் மதனையேவ வெரிவிழித் திமவான் பெற்ற*
*பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப் பேரின்ப மிசைத்த தேரார்"*

*என்று நிகழ்த்துவதாயிற்று)*

44 **அச்சிவ லோக வாழ்க்கை யடைந்தமா வமுத ருக்கே**
**இச்சகர் விகார போக மில்லையென் றறிவி வேகர்**
**மிச்சையில் பரற்கப் போக விகாரமெவ் வாற்றா னுஞ்சொல்**
**நிச்சய முளரா காரந் நிலைமதன் சிறிது சொல்வேன்.**

*அந்தச் சிவலோக வாழ்வுபெற்ற அறிஞர்மார்க்கு இந்த உலகத்தவரைப் போலக் காமவிகாரத்தால் நுகரும் சிற்றின்பம் இல்லை என்பதை உணரும் அறிவுடையோர் பொய்த்த லில்லாத பரம்பொருளுக்கு அக்காம விகாரத்தால் பெறும் இன்பத்தை எந்த விடத்தும் கூறும் துணிவுடையோ ராகமாட்டார். அச்சிவலோகத்தின் மாண்பையும் சிறிது கூறுவேன்.*

45 **பிருதிவி யாதி யைந்து பெரும்பொருட் சார்பங் கில்லை**
**பரிதியின் பகலு மெல்லிப் படர்ச்சியு மில்லை நாளும்**
**விரிபர வொளியுண் டாங்கு மிளிருமெப் பொருளுங் கூறற்**
**கரியவின் னமுத ரூப வதிசய வியல்பி னோங்கும்.**

*நிலம், நீர், தீ, காற்று, வானம் எனப்படும் ஐம்பெரும் பூதச்சார்பு அங்கு இல்லை. பகலவனால் விளங்கும் பகற்காலமும் அவன் மறைவால் தோன்றும் இரவும் கிடையா. எஞ்ஞான்றும் பரந்து விளங்கும் பரவொளியே அங்குளது. அங்கு இருக்கும் எப்பொருளும் சொல்லுக் கடங்காத இனிய அமுத வடிவம் கொண்டு விம்மிதத் தன்மையால் உயர்ந்து நிற்கும்.*

46 **ஆங்குள வமுத வாயு வவிருடற் படலு மின்பே**
**வீங்குறு திருத்தி யுண்டாம் வேட்டது முன்னே நிற்கும்**
**ஆங்கவிர் மகிமைப் பீட மனைத்துமாண் முதலாய்ச் சோதி**
**தாங்கிய வரிமாப் பீடஞ் சரவண சுவாமிக் குண்டால்.**

*அங்குள்ள அமுதத் தன்மையான காற்று ஒளிபொருந்திய உடம்பின் மீது படுங்காலை இன்பம் வீறி நிற்கும் நிறைவுண்டாகும். அங்குள்ளோர் விரும்பும் பொருள் யாதாயினும் அஃது அவர் முன்வந்து நிற்கும். அவ்விடத்தில் பெருமையோடு ஒளிசெய்யும் இருக்கைகள் பலவற்றினும் மாண்பில் முதன்மையுடையதாய் ஒளி*

*திகழும் அரிமான் ஏந்திய அமளி (சிம்மாசனம்) நம் சரவணபவனாகிய சாமிக்கு உள்ளது.*

47 பற்பல கோடி சாரூ பத்திருக் குமாரர்க் கெல்லாம்
அற்புத சனக னான வறுமுகன் மேனி மாயாப்
பொற்பின தாக லாலப் புண்ணிய குமார ரேற்ற
நற்படி வமுமா யாதெந் நாளுநின் றிலகு மாலோ.

*சாரூபம் பெற்ற பற்பலகோடி அபரசுப்பிரமணியர்களுக்கெல்லாம் ஞான மூலவனான அறுமுகச் சிவனின் திருமேனி மறைவுறாத அழகுடையதாம். எனவே அச்சாரூபம் பெற்ற புண்ணியராகிய அணுகுமரேசர்களின் திருமேனியும் எஞ்ஞான்றும் அழிவுறாது நிலைத்து நின்று விளங்குவனவாம்.*

48 காண்பவர்க் கழகி னாசை கதுவுமா றுருவ மேற்றார்
மாண்பிங னிருத்த லுள்கி மாமுரு கேயெற் கேறும்
ஆண்பிணி முகமீ வேலீ யணிமுடி யீயென் றோதின்
ஏண்புகு மடிமை மங்கு மிறைதரிற் பெறலே பாங்காம்.

*காண்பவர் தங்களழகில் ஆசை கொண்டு மயங்குமாறு சாரூபம் பெற்றார் மாட்சி யிஃதாம். இஃதாதலை எண்ணி, "பெருமையுடைய முருகா! எனக்கு ஓர் ஆண்மயிலை ஊர்தியாகத்தா, வேற்படையைத்தா, மணி யிழைத்த திருமுடி தா" என்று வேண்ட முற்படின், பெருமை பொருந்திய அடிமைத்திறம் கேடுறும். இறைவனே ஈதலைப் பெறுதலே முறையாகும்.*

49 எண்ணறு மண்ட கோடி யாவையுந் தனது மேனிக்
கண்ணுற வயங்கு மேக கருத்தனா மிளங்கோ யாது
பண்ணினு மெதையீந் தாலும் பரிவொடு பெறலே யின்பம்
நண்ணுநர் கடப்பா டாமந் நாதனீ திவழா தாலோ.

*எண்ணில்லாத அண்டகோடிகள் யாவும் தனது திருமேனியிலுள்ள மயிர்க்கால் தோறும் பேன்முட்டைகள் போல விளங்கும்படி வைத்துள்ள முழுமுதல்வனாகிய இளைய பரமசிவனார் தனக்கு யாது பண்ணினாலும் எதை வழங்கினாலும் அன்போடு பெற்றுக்கோடலே பேரின்பம் பொருந்த வுள்ளார் கடப்பாடாகும். அத்தலைவன் நீதி வழுவாதே யாவும் செய்வான் என்றுணர்க.*

---

48. பிணிமுகம் = மயில்.

50 **போனக மாதி நல்கு புண்ணியர் மனித யாக்கை**
**மேனசை வெறுப்பின் வானோர் மேனிகொள் வாரே யம்மேன்**
**மேனியும் வெறுத்துண் ணாடு தியானயோ கிகளே வேலன்**
**வானிறை யொளிகான் மேனி மருவயோக் கியரா வாரால்.**

*இரப்போர்க்கு உண்டி முதலியன வழங்கும் புண்ணிய மாந்தர், மக்கள் உடம்பின் மீதுள்ள ஆசையை வெறுத்தால் தேவர் உடம்பு பெறுவர். அந்தத் தேவருடம்பையும் வெறுத்து குகப்பரமனை உள்ளத்தே எண்ணும் தியான யோகிகளே வேலேந்திய விமலனின் தூய்மை நிறைந்து ஒளிசுடரும் சாரூபத் திருமேனியைப் பெறுதற்குத் தக்கவர்கள் ஆவார்கள்.*

51 **அரியசெம் மணிமெய் யீச னாறெழுத் தோதிச் சென்றாற்**
**சரியையின் பயனாஞ் சாலோ கத்தினை யடைய லாமேன்**
**கிரியையின் பயனாஞ் சாமீ பத்தினைக் கிளரம் மேனி**
**பரிவொடு தனக்கு முன்பாவித்தலா லடைய லாமால்.**

*அழகிய செம்மையான அரிய திருமேனியுடைய குகேசனின் திருவாறெழுத்தாகிய* ***"சரவண பவ"*** *என்னும் திருமந்திரத்தை ஓதிவரின் சரியையின் பயனாகிய சாலோகப் பேறு பெறலாம். இதின் மேம்பட்ட கிரியையின் பயனாகிய சாமீபப் பேறு ஒளிமிக்க அவன் திருவுருவத்தை அன்போடு தன்முன் பாவித்து வழிபடலால் பெறலாகும்.*

52 **அறைந்தவிந் நிலைக ளிற்றே வனுக்கிர கத்தால் யாண்டுஞ்**
**சிறந்தவிக் கதிக ளேய்த றெரிந்துதான் மேனா ளான்றோர்**
**நிறைந்தபத் தியினால் வீடு நேருமென் றுரைத்தா ரத்தை**
**மறந்துயிர்ச் செயல்கள் காட்டி வரையுரை நெறியாங் கொல்லோ.**

*மேல்கூறிய நிலைகளில் நின்று இறைவன் அருளால் எவ்விடத்தினும் சிறந்த இந்தக் கதிகள் கூடுதலை அறிந்தே முன்னாளில் பெரியோர் நிரம்பிய பத்தியால் வீடு கூடும் என்று கூறினர். அதனை மறந்து தன்னை மூடிய மலத்தால் நிகழும் உயிர்ச் செயல்களைக் காட்டிப், "பத்திகாண்டி" என இகழ்ந்து ஒருவர் எழுதிய மொழிகள் நறிதாமோ? ஆகா.*

*(சூதசங்கிதையைப் பதினெட்டு முறை படித்தும், உண்மை யுணர்த்தும் குரவன் வாயாக் குறையால் ஒருவர் நூல்களில் உள்ள சொற்களைப் பலவாறு அலைத்துப் பொருள் உரைத்தும் அவ்வுரையைப் பரப்பியும் வந்தார். ஸ்ரீமத் சுவாமிகள்*

*தாம்புரண மாமுனே நாம்பிரம மெனுமுரண்*
*சாற்று வெற்று ரையருன்னைத்*
*தாழ்ந்தறி நரைப்பத்தி காண்டியென் றுந்தமைத்*
*தடஞான காண்டியென்று*
*மேம்பட மிழற்றுவா ரங்ஙனே யென்போல்வார்*
*மெய்யடிய ராய வப்பர்*
*மேதகச் சீகாழி வள்ளன் முதலாயினோர்*
*மெய்யறிஞ ரலரோவெனின்*
*நாம்பகரு மாறாவர்க ளும்பத்தி காண்டியென*
*நவிலுவா ரிந்தஞாயம்*
*நந்தும்விப சாரிபதி விரதையை விபசார*
*நாரியென்றெள்க லொக்கும்*
*தேம்பெருகு மின்னமுத வனுபவத் தடியவர்க*
*டேர்பரம நிட்டைமுதலே*
*சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு*
*திவ்வியசுப் பிரமணியமே.*

*பொருள் : மதுரச்சுவை பெருகும் ஆனந்தமுத்தியனுபவமுடைய அருளாளர்களறிந்து கொண்ட பரமநிட்டைக்குத் தலைமைப் பொருளே! தாங்கள் பூரணத் தன்மையை யடையு முன்னரே யாங்கள் பிரமமென்னும் மாறுபாட்டினை வழங்கும் வெற்றுரையர், உன்னை வணங்கி (உனதருளால்) உன்னையறிபவரைப் பத்திகாண்டிக ளென்றும், தங்களைப் பெரிய ஞானகாண்டிகளென்றும் (தங்களுக்கே) உயர்வுறச் சொல்லிக் கொள்வார்கள். அங்ஙனமே என்னைப்போன்றார் (அவரை நோக்கிச் சிவஞானப் பேற்றினின்று சிவனைப் பெரிதுந் துதித்துநின்ற) உண்மையடியவராகிய திருநாவுக்கரசுகளும், மிக்க பேரறிவோடுங்கூடிய உளத்தினையுடைய திருஞான சம்பந்தப் பிள்ளையார் முதலினோரும் மெய்ஞானிக ளல்லரோ? என்று வினவி னால், யாங்கணவில்கிறபடி அவர்களும் பத்திகாண்டிகளே யென்று பகர்வார்கள். இந்நியாயமானது, கேடுடைய வியபிசாரியா வாள், பதிவிரதையை வியபிசாரத் தையலென்று நிந்திப்பதைப் பொருந்தும் எனத் திருப்பா -* **திவ்விய சுப்பிரமணியத்தில்** *அருளிச் செய்துள்ளமை தேர்க.*

53 **இன்பமுண் மனவ டக்க மென்பதன் றோசெவ் வேளின்**
**அன்பனுக் கிரகத் தாலஃ தாமென லெவன்கொ லென்னின்**
**துன்புழன் மனநி றீஇச் சுவாமியை நினைத்தன் மேய**
**பின்பனுக் கிரக மாம்வே றிலையிது சுருதிப் பேச்சே.**

*உள்மனம் அடங்கப் பெறுதல் அன்றோ இன்பம் எனப்படுவது. அஃது செவ்வேட்பரமனின் திருவடியில் நிகழும் பத்தியால் கூடும், அப்பரமனின் திருவருளால் எய்தும் எனல் என்கொல் எனின்*

*உலகத்தின் இன்பதுன்பங்களால் ஈர்க்கப்பட்டு உழலுகின்ற மனத்தை ஒரு நிலையுறச் செய்து எம்பெருமானைச் சிந்திக்கும் திறன் கூடியபின்பே அருள் கூடுவ தாகும். அவ்வருளால் உள்மனமடக்கமுற இன்பம் தோன்றும். இவ்வா றன்றி வேறுவகையின்று. யாம் கூறுவது வேதத்தில் கூறப்பட்டதேயாகும்.*

54 **அவ்வனுக் கிரக மார்ந்தா லன்றியீ சன்றி ரோதம்**
**எவ்வகைத் தானு நீங்கா தின்பமு மாரா தெம்மான்**
**செவ்வருட் டிருமு னன்றோ திருப்புகழ்ச் செல்வன் கண்டான்**
**இவ்வழிச் செல்வ ரேசம் பந்தரா தியரென் போரும்.**

*முதல்வனின் அருள் பொருந்தினா லன்றி இறைவனின் ஐந்தொழிலுள் ஒன்றாகிய திரோதம் எவ்வகையாலும் நீங்காது. எனவே இன்பமும் கூடுவதன்று. எம்பிரானின் செவ்விய அருளின் திருமுன்னிலையிலேயே திருப்புகழ்ச் செல்வர் ஆகிய **அருணகிரிநாதரும்** அவ்வின்பத்தைக் கூடினார். **சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர்** முதலியோரும் இந்நெறி நின்றே அனுபூதிச் செல்வராயினர்.*

55 **ஆண்டவ னருண்மெய்ஞ் ஞான மனுபவ ஞான மாமிஃ**
**தேண்டரு பரமோக் கப்பே ரேய்பொழு தேனை மூன்றும்**
**மாண்டரு பதமோக் கப்பேர் மருவுமா யினுமெவ் வாயுந்**
**தாண்டிய தகைமை தன்னா லலௌகிக மெனநூல் சாற்றும்.**

*இறைவன் அருளும் மெய்ஞ் ஞானமே அனுபவ ஞானமாகும். (குருவருள் வன்மை பெறாது கல்வி வன்மையே துணைக் கொண்டு வரைந்த உபநிடத பாடியத்தை மெய்ப்பொருள் நுவற்சியாகக் கொண்டு யாம் பிரமம் எனக் கூறித் திரிதல் அனுபவ ஞானமாகாது.) இஞ்ஞானமே பெருமைதரும் பரமுத்தி என்று கூறப்படுங்கால் சாலோகம். சாமீபம், சாரூபம் ஆகிய மூன்று கதிகளும் மாட்சிமை தரும் பதமுத்தி எனப்படும். ஆயினும் எல்லாத் தத்துவங்களையும் கடந்துள்ள தன்மையால் அவை உலகு கடந்தவை (அலௌகிகம்) என்று நூல்கள் கூறும்.*

56 **அனல்விடஞ் சீதங் காற்றே யாயுதம் பசியே தாகம்**
**புனல்பிணி முனிவ றாமை புனிற்றுர மருந்தே வானில்**
**நனியெழு மிடியே றென்று நவிலும்வே தனையீ ராறும்**
**இனியில வெனவு லாச்செய் யேமமிக் கவராங் குள்ளார்.**

---

55. அலௌகிகம் = உலகம் அல்லாதது.

56. இடியேறு = ஆகாயத்தினின்று வீழும் அசனி. வேதனை = உயிர்வேதனை.

*நல்லயோகானுபவ பலனாக அடையத்தக்க ஈசுரவுடம்புடையார் (=பதமுத்திபெற்றோர்) நெருப்பு, நஞ்சு, குளிர், காற்று, படைக்கலம், பசி, நீர்வேட்கை, நீர், பிணி, முனிவறாமை, புதிய வன்மை கொண்ட மருந்து, வானில் நன்கு தோன்றும் இடியேறு ஆகிய பன்னிரு பொருள்களால் அடையும் உயிர்த் துன்பங்கள் இனிக் கிடையா எனும்படி பேற்றில் திளைக்கும் பெரியோராய் அங்கு விளங்கியிருப்பர்.*

**57 நீண்டவிப் பேறி யாண்டு நிகரறு மின்பே யாகக்
காண்டலி னிறுமாப் பென்று கழறலா மிதனை யேற்பார்
யாண்டுநின் றிடினு மெம்மான் யாணரே பராய்நின் றேதந்
தாண்டிடு மாதே சோமண் டலத்தராந் தகைமை யோரே.**

*முடிவில்லாத இவ்வுலகப் பேறு யாண்டும் ஒப்பில்லாத இன்பமே கொண்டு விளங்கலின் இதனை இறுமாப்பு என்றும் கூறலாகும். இதனை அடைந்தோர் எங்கு இருப்பினும் எம்பெருமானின் அருளையே புகழ்ந்திருந்து எவ்வகைத் துன்புகளையும் கடந்திடும்* ***மகாதேசோ மண்டலத்தவராக*** *விளங்கும் தகைமையினர் ஆவர்.*

**58 வேலுலா மலர்க்கை யீசன் மிளிரொளி மூர்த்தத் திற்கு
மேலுலா மூர்த்த மில்லை விளங்கழ கினுமேற் றில்லை
வாலுலாந் தூய்தின் மேலே வழங்கவோர் தூய்தின் றென்னா
நூலுலா மிறுமாப் போர்ந்தார் நுணங்கியோர் மகிழச் சொல்வார்.**

*வேற்படை தங்கும் மலர்போன்ற கையையுடைய குகேசனின் ஒளிவிளங்கும் திருவடிவினும் மேம்பட்டுநிற்கும் திருவடிவம் ஏதும் இல்லை. அவனது வடிவத்து விளங்கும் அழகினும் உயர்ந்த அழகு இல்லை. அவனுடைய தூய்மையினும் மேம்பட்டதெனக் கூற வுள்ள ஒரு தூய்மை யில்லை. இவ்வாறு நூல்களில் நிரம்பிய நிமிர்ச்சியை உணர்ந்த அறிஞன்மார் நுண்ணறிவுடைய சான்றோர்க்கு இன்பம் பெருகக்கூறுவர்.*

**59 செக்கர்வேண் மொய்ம்பு போலச் சிறக்குமொய்ம் பியாண்டு மில்லை
கொக்கையீர் படைக்கு மேலே குயிலவோர் படையு மில்லை
சொக்கறா வூர்தி போன்று சுடரவோ ரூர்தி யின்றென்
றிக்கறா விறுமாப் பார்ந்தா ரிழைப்பரே யின்பக் கூத்தும்.**

*செக்கர்வேள் பரமனின் முடிவிலாற்றலை ஒத்த சிறப்புடைய ஆற்றல் வேறெவரிடத்தும் இல்லை. சூரபதுமன் ஆகிய மாமரத்தைப் பிளந்த வேற்படையின் மேம்பட்டதொரு படைக்கலம் இல்லை. திகட்டாத அழகுடைய மயிலாகிய அவன் ஊர்தியை ஒத்து விளங்கும் ஒரு ஊர்தியும் இல்லை என்று இன்பம் வற்றாத இறுமாப்பில் திளைப்பவர்கள் ஆனந்தக் கூத்தாடுவார்கள்.*

60 பொலமிளி ரொலியங் கோழி போன்றவோர் துவச மில்லை
மலராறு முகவி லாச வரன்குருத் துவத்தின் மேலாய்
நிலவொரு குருத்து வந்தா னில்லையே யெனுநே ரானும்
நலனெனு மிறுமாப் போர்ந்தார் நகைமுக மலர லாமே.

*மேம்பாடுடைய கூவுதல் தொழில் கொண்ட அழகிய சேவலை ஒத்ததோர் கொடி பிறர் எவர்க்குமில்லை. மலர்ச்சி யுடைய அறுமுகச் சிவனின் உயர்ந்த ஆசிரியத் தன்மைக்கு மேம்பட்ட ஆசிரியத் தன்மை கொண்டாரும் இல்லை என்னும் வாய்மையாலும் நலம் ஆகிய இறுமாப்பை அறிந்தாரின் திருமுகங்கள் இன்ப முறுவல் கொண்டு மலரும் என்க.*

61 இளம்பரி பூர ணத்தா னீபதி யறிவின் மேலே
விளம்பவொர் ஞான மில்லை மிகுமவன் பெயரா மாறு
தளம்பதி யெழுத்தின் மிக்க தனிமனு வெதுவு மின்றென்
றுளஞ்செயு மிறுமாப் புற்றா ரோதுநூ லவனூ லன்றோ.

*இளம்பரிபூரண னாகிய முருகன் வழங்கும் பதிஞானத்தின் மேம்பட்டதெனக் கூறலாகும் ஞானம் ஏதும் இல்லை. உயர்ந்த அவன் பெயராகிய ஆறு என்னும் எண் கொண்ட சரவணபவ என்னும் சடக்கரத்தினும் மேம்பட்ட மந்திரம் எதுவும் இல்லை என்னும் உண்மையை உளங்கொண்ட இறுமாப்பை உடையவர்கள் ஓதும் நூல்கள் அவனது பெருமையை விளக்கும் நூல்களேயாம் (பிற நூல்களைப் பாராட்டி ஓதார். )*

62 வேலிறை யுலகின் மேற்றாய் விளம்பவோ ருலகு மில்லை
வேலிறை யடியார் மாண்பை விஞ்சடி யாரு மில்லை
வேலிறை யடிசார் சந்தன் விளம்பரு ளினுமேற் றின்றவ்
வேலிறை தொழுவோ மென்னும் விவேகமு மிறுமாப் பாமே.

*வேற்பரமனின் சோமலோக (சிவலோக)த்தினும் உயர்ந்ததாக உரைக்க எவ்வுலகமும் இல்லை. அவன் அடியாரின் மாட்சிமையினும் மிக்கவராய்ப் பிறதேவரின் அடியார் எவரும் இல்லை. அவன் திருவடி சார்ந்த சந்தமுனிவ ராகிய அருணகிரிநாதப் பெருமான் கூறும் அருளினும் மேம்பட்ட அருளில்லை. அப்பெருமானைத் தொழுவோம் என்று அறுதியிடும் அறிவும் இறுமாப்பாயே நிலவும்.*

63 வெய்யசூ ரிரித்தோன் பத்தி யென்னும்விட் டரத்தில் வைகிப்
பொய்யிலா வாழ்த்தா மீட்டம் புடையுறச் செபிக்கு நாமச்
செய்யகோ லேந்திப் பாத தியானநன் மோலி தாங்கி
உய்யுமே யிந்நூல் வைப்பா மோஞ்சைவ சமயா னந்தம்.

*கொடிய சூரபதுமனைப் பிளந்த முருகன் திருவடியில் விளையும் பத்தி என்னும் தவப்பீடத்தில் அமர்ந்து அழிவில்லாத அப்பெருமானின் புகழ்ச்சியாகிய கூட்டம் இருபக்கங்களிலும் விளங்கச் சடக்கர மந்திரமாகிய செங்கோலை உள்ளத்தில் ஏந்தி அவனது திருவடியைச் சிந்தித்தலாகிய நல்ல மணிமுடியணிந்து உய்வார் யாவரெனில் இந்நூலின் வைப்பாகவுள்ள ஓங்காரத்தை உரிமையாகக் கொண்ட சைவ சமய ஆனந்தத்தை நாடும் நல்லோர் என்க.*

64 **கடம்பணி தடந்தோள் வாழ்க கமலசண் முகங்கள் வாழ்க**
**தடங்கிரி போழ்வேல் வாழ்க தகர்மயில் சேவல் வாழ்க**
**வடந்திகழ் மேனி யானை மானியும் வாழ்க விந்நூல்**
**விடங்கமொ டோது வாரும் விரித்துரைப் போரும் வாழ்க.**

*முருகனின் கடம்பணிந்த விசாலமான பன்னிரு தோள்கள் வாழ்க. தாமரையொத்த ஆறு திருமுகங்கள் வாழ்க. பெரிய கிரவுஞ்ச மலையைப் பொடித்த வேற்படை வாழ்க. தகர் (ஆட்டுக்கிடாய்) மயில், சேவல் ஆகியவை வாழ்க. கச்சணிந்த முகையுடைய தெய்வ யானை யம்மையாரும் வள்ளிப் பிராட்டியாரும் வாழ்க. இந்நூலை ஒருமை மனத்தோடு ஓதுவாரும் விரித்து விளக்குவாரும் வாழ்க.*

*(வாழ்த்து, வணக்கம், மெய்ப்பொருள் உரைத்தல் என்னும் மூவகை மங்கலங்களுள் முதற்கண் வணக்கமும் இறுதிக்கண் வாழ்த்தும் கூறி நூல் முழுதும் மெய்ப்பொருள் உரைத்தலால் முதல் இடைகடை ஆகிய மூவிடத்தும் மங்கலம் வந்தவாறறிக.)*

**வீடுபேற்றதிகாரம் முடிந்தது.**

## செக்கர்வேளிறுமாப்பு முற்றிற்று.

*1) சாலிவாகன சகாத்தம் 1846-ல் ருதிரோற்காரி வருடத்து வைகாசித் திங்கள் 32-ல் (14.6.1923) ஏய்ந்த குருவாரத்தில் சென்னைப் புதுப்பாக்கத்திற் பாடி முடிந்தது.*
*- ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்*

*2) 6.1.1969 திங்களன்று உரை எழுதி முடிந்தது. உரையாசிரியர் இராணிப்பேட்டை நக்கீரன் வழியடிமை புலவர்* ***பி.மா. சோமசுந்தரனார்.***

# கனவதிகாரம்

## மு ன் னு ரை

### (கனவு விவரம்)

1. நன்று தீதெனும் பலனுக்குரிய கனவுகள். “தேவதாவிம்பம்” என்றற் றொடக்கத்தது முதல் “தன்மனைதனில்” என்றற் றொடக்கத்த தீறாகவுள்ள 35 செய்யுள்களும், 39-ம், 40-ம்.

2. சொப்பனத்திற் கண்டபடி சாக்கிரத்திற் பலிக்குங் கனவு. செய்யுள்-36, 37.

3. சாக்கிரச் செய்கையை யுறுதிப் படுத்துங் கனவு. செய்யுள் - 46.

4. **திருவருட்செயற்கனவு.** செய்யுள் - 36.
   பெரியோர் காண்பன. செய்யுள் - 41.

5. **வினைப்பேற்றுக்கனவு.** செய்யுள் - 36.
   பகற்கனவு. செய்யுள் - 42.

   உட்டிணத்தா லுறுங்கனவு. செய்யுள்-43. இக்கனவிற்றான் மரணகாலத்தி லறிவு மயங்குதல்போல வுணர்வு மயங்கும்.

6. பழைய வாசனைக் கனவு. செய்யுள்-49.

7. சூக்குமதேகம் ஆகாயத்திற் பறந்துசெல்லுந் தன்மைத் தென்பதைக் கனவிலறிதல். செய்யுள் - 50

8. விந்து வெளிப்படும் அனுபவம் சூக்குமதேகத்துக்குந் தூலதேகத்துக்குங் கனவின் வழியாக வொன்றாயிருத்தல். செய்யுள் - 58.

9. பொய்ப்படு கனவு. செய்யுள் - 37.

10. உருவெளித்தோற்றம். செய்யுள் - 49, 51.

இவ்விவர மறியாமே கனவெல்லாம் பொய்யென்பார் கோட்பாடு, - 57-ஆஞ் செய்யு ளுரைக்குமாறு சொப்பனத்திற் சாக்கிர வுலகும், சாக்கிரத்திற் சொப்பன வுலகும் மறையும். அவை பொய்யாதல் யாங்ஙனமென்பதையும்; 56-ஆஞ் செய்யுளுரைக்குமாறு சாக்கிரப் பிரபஞ்சந் தூலதேகப் புசிப்பாகவும், சொப்பனப்பிரபஞ்சஞ் சூக்குமதேகப் புசிப்பாகவு நிற்கு மென்பதையும்; சொப்பனத்தும், சாக்கிரத்தும், உரைவழியிலு மறிந்தபடி யாதொன்றை அச் சொப்பன சாக்கிரங்களில் மனமே செய்து கொள்ளு மென்று 49-ஆஞ் செய்யுள் கூறுமது கொண்டே ஆகாயத்திற் பறந்துசேறலு மாமெனல் கூடாது: அது **சூக்குமதேகத்திற்குள்ள செயலா** மென்பது - செக்கர்வேளுக்கு ஆறுமுகங்க ளுளவென்று நூலுரைவழி யறிந்தபடி கனவு காண்போற்கும் அத்திற முகங்க ளுண்டாமா றில்லையென 50-ஆஞ் செய்யுளுரைக்குமாற்றா னிலையுறுதலையும்; 38-ஆஞ் செய்யுளுரைக்குமாறு சீவனானவன், இவ்வுலகமும் பரலோகமுமாகிய இரண்டற்கு நடுவாய கனவுநிலையி லிருந்து அவ்விரண்டனையு மனுபவிக்கின்றன னென்று சுருதி சொல்லுதலையும்; 48-ஆஞ் செய்யுளுரைக்குமாறு எல்லாக் கனவையும் பொய்யென் போனுக்கு, இறைவனனுக்கிரக நிலைக்களங்களி லொன்றாயுள்ள கனவின்கண் அவனனுக்கிரகிப்பதூஉம் பொய்யாய்விடுமே யென்பதையும்; பிறவற்றையும் ஓராப் பெருங்கேட்டை விளைப்பதாகு மென்பதை யறிவுறுத்துதற்கே இக் கனவதிகார மெழுந்தது. அறிக.

உ
சிவமயம்.
குஹப்ரஹ்மணே நம :

# செக்கர்வேள் செம்மாப்பின் 2-ஆங் காண்டத்துக் கனவதிகாரம்

***அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.***

***(தெய்வ விக்கிரகமானது பேசுதல், கரமசைத்தல், சிரமசைத்தல், சிரித்தல்.)***

1 தேவதா விம்ப நன்கு தெரிசிக்கு ஞான்றவ் விம்பம்
நாவினாற் பேசல் கையு நவிரமு மசைத்தல் யாணர்
ஓவுறா முறுவல் காட்ட லுறுகன வினிலே காணின்
தாவிலா துறுசஞ் சார காலமென் றிறைநூல் சாற்றும்.

*ஒருவருக்கு நேரும் கனவில் தெய்வத் திருவுருவங்களை நன்கு தெரிசிக்கும் காலத்தே அத்திருமேனிகள் பேசுதல், கையசைத்தல், தலையசைத்தல், நீங்காத புன்முறுவல் செய்தல் என்பவை நிகழுமாயின் கனவுகாண்போர்க்கு குற்றமற்ற தலதரிசனம் செய்தற்குரிய பயணகாலம் நேருமென்று தலைவன் நூல் கூறும். (தாழ்வற்ற வாழ்வு கிட்டும் எனவும் கூறலாம்).*

***(தனது மனையிலே பெருந்தீப்பற்றி யெரிதல், அழகிய கன்னிப்பருவ முடையாள் சுமங்கலி யிவர்கள் வந்து நுழைதல், நல்லவர்கள் வந்து தீபம் நீர்நிறைகுடம் இவற்றைக் கொடுத்தல்.).***

2 வன்முளை கொளுவு தீப்போல் வாளன லெரிய மூர்த்தப்
புன்மையி லழகார் கன்னி சுமங்கலி புகுத வான்ற
நின்மலர் வந்து தீப நிறைகுட மளிக்க நீங்காத்
தன்மனை தனிற்கண் டக்காற் றாவறு செல்வ மாமே.

*தன்வீட்டில் வலிய மூங்கிலைக் கொளுத்தும் தீப்போல ஒளி செய்யும் தீயானது பற்றி எரிதல், உருவத்தில் குறைபாடில்லாத அழகு நிரம்பிய கன்னிப்பெண், சுமங்கலி என்போர் வந்து நுழைதல், மிக்க நல்லவர்கள் வந்து விளக்கு, நீர் நிரம்பிய குடம் என்பவற்றைத் தருதல்*

*ஆகியவை தன் கனவில் நிகழுமாயின் அழியாத குற்றமற்ற செல்வம் வந்து சேரும்.*

***(பால், மலம், சோறு, பழம், திருநீறு, மஞ்சள், வெண்ணிறப்பாம்பு, நாய், நரி.)***

3 **பான்மலஞ் சோறு நல்ல பழந்திரு நீறு காணின்**
**மேன்மைசொல் பொருளி லாபம் விளம்பிவை புசிக்கக் காணின்**
**மான்மனை யாக்க நாச மஞ்சளொண் பாம்பு காணின்**
**நான்மகி புகழ்சந் தானம் நாய்நரி காணி லச்சம்.**

*பால், மலம், சோறு, நல்லபழம், திருநீறு, கனவில் காணப்பெறில் மேன்மையாகப் பேசும் பொருள் இலாபம் உண்டாகும். கூறிய இவைகளை உண்பதாகக் கண்டால் திருமகள் பிரியப் பொருளழிவு உண்டாகும். மஞ்சளும், வெண்ணிறப் பாம்பும் கனவில் காணப்பெற்றால் நால்வகைப் பூமியும் புகழத்தக்க மகப்பேறு உண்டாகும். நாயையும் நரியையும் கண்டால் அச்சம் விளையும்.*

***(நாய் நரி கழுதையென்பன வீட்டினுழைதல், பலகார வர்க்கங்கள் வந்துசேரல், சிறு தானியங்கள் வந்து குவிதல், யாற்றிலே நீர் நிரம்பல், பயிர் தழைவுற்றிருத்தல்.)***

4 **நாய்நரி கழுதை வீட்டு ணுழைந்திட நறுஞ்சிற் றுண்டி**
**யாய்வரு வனவந் தெய்த வார்சிறு தானி யங்கள்**
**ஓய்வறக் குவியக் காணி னுறுகணீ நோயாம் யாற்றிற்**
**பாய்புன னிரம்பப் பைங்கூழ் தழைவுறப் பார்க்கி னன்காம்.**

*நாய், நரி, கழுதை ஆகியவை வீட்டினுள் நுழைதல், நறியசிற்றுண்டி வகைகள் வந்துசேரல், நீண்ட சிறுதானியங்கள் மேன்மேலும் குவிதல் ஆகியவற்றைக் கனவில் காணில் துன்புவிளைக்கும் நோய் சேரும். ஆற்றில் நீர் நிரம்பியிருத்தலையும் பயிர்கள் செழிப்புற்றிருத்தலையும் கனவில் கண்டால் நன்மை விளையும்.*

***(யாறு பெருகி யுடைத்திடல், விளைந்த கதிர் முதலியவற்றை யறுத்தல், உதிரமோடல்.)***

5 **கரைநதி பெருகி யாங்கே யுடைத்திடக் கனவு காணின்**
**விரைவினிற் படைவந் தெய்தும் விளைந்தவை யறுக்கக் காணிற்**
**புரையறு முறவுக் கெல்லாம் புந்தியிற் கலக்க மெய்துந்**
**தரையினிற் குருதி யோடத் தரிசிக்கின் மாரி பெய்யும்.**

*ஆறுபெருகிக் கரையுடைத்தலைக் கனவில் கண்டால் விரைவில் படைவந்து சேரும். முற்றிய கதிர்களை அறுத்தலைக் கண்டால் குற்றமற்ற உறவினர்களுக்கு மனக்குழப்பம் உண்டாகும். தரையில் குருதி ஓடுவதைக் கண்டால் நல்ல மழை பெய்யும்.*

***(குளம் கிணறு நதி இவைகள் வற்றுதல், மொட்டைத்தலை, விவாகாலங் காரங்கள், உடம்பெங்கும் பூசப்பட்ட எண்ணெய், தீண்டக்கூடாதார் தீண்டல்.)***

6 வாவிகூ வங்கள் யாறு வற்றிடக் கனவு காணின்
மேவுமே வறுமை மொட்டை விவாககோ லங்கள் யாக்கை
யாவுமே யெண்ணெய் தீண்டா தார்தொட லென்ப வற்றொன்
றோவுறா துறக்க னாவிற் காண்பனே லுளம்புண் ணாகும்.

*குளம், கிணறு, ஆறு என்பவை வற்றுதலைக் கனவில் கண்டால் வறுமை சேரும். மொட்டைத்தலை, உடம்பு முழுவதும் பூசப்பட்ட எண்ணெய், தீண்டாதவர் தொடுதல் ஆகியவற்றில் ஒன்று ஒழியாது கனவில் வந்தால் உள்ளம் புண்படு நிகழ்ச்சி ஏற்படும்.*

***(சைல சிகரம் உப்பரிக்கை கோபுரம் முதலிய உன்னதத் தானங்களி லெதனி லேனுந் தானிருக்குஞான்று தனதருகிலுள்ளார் தங்கரங்களைத் தலையிற் குவித்துக்கொண்டு நிற்றல், நல்ல குதிரை யானை சிவிகை யிவைகளி லெதிலேனுந் தான் ஏறிச் செல்லல்.)***

7 மலையின துச்சி யுப்ப ரிக்கைகோ புரமற் றோங்கு
நிலையினி லிருக்கத் தன்பா னெருங்கியுள் ளோர்கள் கையைத்
தலையினிற் கூப்பி நிற்கத் தானறுங் குதிரை யானை
விலையுயர் சிவிகை யூரக் கண்டிடின் வாழ்க்கை மேவும்.

*மலையுச்சி, உப்பரிகை, கோபுரம் என்பவற்றில் ஏதேனும் ஒன்றில்தான் உயர்ந்த நிலையில் இருக்கவும் தன் அருகிலுள்ளவர்கள் தலைமீது கைகூப்பி நிற்கவோ அல்லது நல்ல குதிரை, யானை, விலை மிக்க சிவிகை முதலியவற்றில் ஏதேனும் ஒன்றில் ஏறிச்செல்லவோ கனவு கண்டால் அதிகார போகமுள்ள வாழ்க்கை அமையும்.*

***(கையிற் றடிபிடித்த வொருவன் தெற்கே யிருந்துவந்து தன்னையழைத்தல், தன்னுடைய வுறுப்புகளிலொன்றனை அவன் ஈர்த்தெடுத்தேகல், அவனைக் கண்டவுடனே தான் அலறல், தன்னைக் குரங்கு தெற்குநோக்கிச் சுமந்துபோதல்.)***

8 தெற்கிருந் தொருவன் கையிற் றிணிதடி தாங்கி யேதன்
முற்குவந் தழைத்த லன்னோன் மொய்யுறுப் பினிலொன் றீர்த்தே
அற்பற வேக லெய்து மவனைக்கண் டலறன் மந்தி
தெற்கினிற் சுமந்து போதல் கனவுறிற் சாவு சேரும்.

*ஒருவன் கையில் வலியதடியோடு தெற்கிலிருந்து தன்முன்வந்து தன்னைக் கூப்பிடல், அவன் சினமோடு தன் உறுப்புக்களில் ஒன்றைப் பற்றி இழுத்துச் செல்லுதல், அவனைக் கண்டு தான் அலறல், குரங்கு தன்னைச் சுமந்துகொண்டு தெற்கு நோக்கிச் செல்லுதல் என்பவற்றில் ஏதேனும் ஒன்றைக் கனவில் கண்டால் தனக்குச் சாவு நேரும்.*

***(கரியநிறமுங் குறுகிய வுடம்புமுள்ள கணிகையினது கையைப் பிடித்துக்கொண்டு தெற்கே போதல், தன்னுடைய கைகால் உடம்பு நடுக்கமுறுதல், தன்னுடைய பிள்ளையை ஒருவன் இரண்டு கைகளாலும் எடுத்துக்கொண்டு தெற்கே யோடக்கண்டு தான் பின்றொடர்ந் தழுதல்.)***

9 **கருநிறக் குறிய மேனிக் கணிகைகை பிடித்துத் தென்பால்**
**விரைவுறப் போகக் காணின் மெய்கைகா னடுங்கக் காணின்**
**இருகரத் தொருவன் பிள்ளை யெடுத்துமே தென்பா லோடத்**
**தரிசித்துத் தொடர்ந்து விம்மக் கண்டிடிற் சாவு சாரும்.**

*கரியநிறமும் குள்ள வுடம்பும் உடைய விலைமாதின் கையைப் பிடித்துக் கொண்டு தெற்கே விரைந்து போகக் கனவு கண்டாலும் தனது உடம்பு, கை, கால் நடுங்கக் கனவு கண்டாலும் தன் பிள்ளையை ஒருவன் இரண்டு கைகளிலும் எடுத்துக் கொண்டு செல்லுதல் கண்டு அவனைப் பின்தொடர்ந்து தான் அழுவதாகக் கனவு கண்டாலும் தனக்குச் சாவு வரும்.*

***(உலர்ந்துபோன மொட்டைமரத்தில் எண்ணெயிட்ட வுடம்போடேறல், இரதம் விக்கிரக மென்பன தெற்கேபோதல், பகடு கழுதை நாய் என்பவற்றொன்று தன்னைச் சுமந்து கொண்டு தெற்குநோக்கி யேகல்.)***

10 **எண்ணெயிட் டுலர்ந்த மொட்டை மரத்தினி லேற வேரார்**
**திண்ணிய தேர்தே விம்பந் தென்றிசைக் கேக மைந்து**
**நண்ணிய பகடு கோகு நாயிவற் றொன்று தெற்கே**
**கண்ணுறு தனைக்கொண் டேகக்கண்டிடி லெய்துஞ் சாவே.**

*உலர்ந்துபோன மொட்டை மரத்தில் எண்ணெயிட்ட வுடம்போடு ஏறுதல், அழகு நிரம்பிய வலிய தேரும் தெய்வச் சிலைகளும் தெற்குநோக்கிப் போதல், வலிமையுடைய எருமைக்கடா, கழுதை, நாய் என்பவற்றில் ஒன்று தன்னைச் சுமந்து கொண்டு தெற்கு நோக்கிப் போதல் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைக் கனவில் கண்டால் தனக்குச் சாவு நேரும்.*

***(பிணத்தின்மீ தேறுதல்.)***

11 இயங்குயி ரில்லா யாக்கை யேறவே தனைக்காண் போனும்
இயங்கலின் றொல்லை சாவா னிறைவனூ லென்ற தாதி
இயம்பிய யாவு மன்ப ரிடுக்கண தொழித்து ஞானம்
இயம்பொரு செவ்வேள் கும்பற் கியம்பொரு தமிழ்நூல் கூறும்.

*உயிர்நீங்கிய பிணத்தின் மீது தான் ஏறுவதாகக் கனவிற் கண்டால் அவன் நடமாட்டம் குறைந்து விரைவில் இறப்பான். முதற் செய்யுள் இறைவன் நூல் கூறுகின்றது என்பது முதல் இதுவரை கூறிய எல்லாப் பயன்களும் அடியார் துன்பத்தைத் துடைத்து ஞானம் வழங்குகின்ற ஒப்பற்ற செவ்வேட்பரமன் அகத்தியருக்கு அருளிச் செய்த ஒரு தமிழ்நூல் கூறுவதேயாம்.*

***(கடலைத்தாண்டுதல், யாற்றைத்தாண்டுதல், ஆகாயத்தினடந்துபோதல், சூரியன், சந்திரன், செவ்வாய், எரிகின்ற நெருப்பு, நக்ஷத்திரங்கள், செவ்வேள்மூர்த்த மமைந்துள்ள கோவில்கள்.)***

12 சமுத்திர தரணந் தூய்மை சானதி தரணம் வானிற்
சுமக்கழ னடக்கச் சேறல் சூரியன் சோமன் செவ்வாய்
இமைத்தெரி நெருப்பு விண்மீ னெம்பிரான் செவ்வேண் மூர்த்தம்
அமைத்தநற் சினக ரங்கள் கனவுறி னினைத்த தாகும்.

*கடலைத் தாண்டுதல், தூய்மை நிரம்பிய ஆற்றைத்தாண்டுதல், வானத்தில் மலர் போன்ற கழலிணைகளால் நடந்து போதல், சூரியன், சந்திரன், செவ்வாய், ஒளிசெய்து எரியும் நெருப்பு, நட்சத்திரங்கள், எம்பெருமானாய முருகனின் திருவுருவமெழுந்தருளியுள்ள கோயில்கள் ஆகியவை கனவில் வருமேல் நினைத்த காரியம் கைகூடும்.*

***(மாமிசம், கள், வெண்ணிறத்தயிர் என்பவற் றெதனையேனு முண்ணல், வெண்ணிற வுடையுடுத்தல், ஆபரணம், இரத்தாபிடேகம்.)***

13 புலான்மது வருந்தல் வெண்மை பூக்குநற் றயிர்தா னுண்டல்
கலாமதி யனைய வாடை கட்டுதன் மணிப்பூண் செம்மை
உலாமிரத் தாபி டேக முறுகன வினிற்கண் டக்கால்
அலாபமில் கீர்த்தி யாமென் றறைகுவ ரறிவின் மிக்கார்.

*புலால் உண்ணல், கள் குடித்தல் வெண்ணிறமுள்ள நல்ல தயிரை உண்ணல், கலை நிரம்பிய சந்திரனை ஒத்த வெள்ளிய ஆடையணிதல்,*

*மணியிழைத்த நகையணிதல், சிவந்த இரத்த அபிடேகம் என்பவற்றில் ஒன்றேனும் கனவில் வரின் ஆதாயம் கூடிய புகழ்சேரும் என்று அறிவில் சிறந்தோர் கூறுவர்.*

***(செவ்வேள் முதலிய தெய்வங்கள், குடை, வேதியர், அரசன், பறவைகள், ஆபரணமணிந்த தேவதாசி, பெரியமலை, உமி, புட்பம், எருது, வெண்ணிறப் புட்பம், கண்ணாடி, பழுத்தபழங்களோடுள்ள தருவிலேறல், பூந்தரு, இறைச்சி, தடாகம்.)***

14 செக்கர்வே ளாதி தெய்வங் கவிகைவே தியரூ ராள்வோன்
பக்கிகள் பணிபூண் டாசி பருமலை யுமிபூ வேறு
மிக்கவெண் மலர்கண் ணாடி மென்கனி விருக்க மேறல்
தக்கபூந் தருவி றைச்சி தடாகங்கண் டிடினோய் தீரும்.

*செவ்வேட்பரமன் முதலிய தெய்வங்கள், குடை, வேதியர், அரசன், பறவைகள், நகையணிந்த தேவரடியாள், பெரியமலை, உமி, பூ, எருது, வெண்மை மிக்க பூக்கள், கண்ணாடி, மிருதுவான பழங்கள் நிரம்பிய மரத்தின் மீது தான் ஏறுதல், பூக்கள் நிறைந்த மரங்கள், இறைச்சி, குளம் என்பவற்றில் ஒன்று கனவில் வரின் நோய் தீரும்.*

***(மீன்களைப் பிடித்துக் கொள்ளல், மனிதன் குடலைக் கழுத்திலே மாலையாகச் சுற்றிக்கொண்டு ஒரு கிராமத்தின் மத்தியினிற்றல்.)***

15 மீனனி பிடிக்கக் காணின் வெள்ளிக்கா சுகளே யெய்தும்
மானுடன் குடரைக் கண்ட மாலையாய்ச் சுற்றிக் கொண்டு
கானமி லோர்கி ராம நடுநிற்கக் காணி னாற்ப
தானகி ராம மாள்வ னலதொரு நாட்டை யாள்வன்.

*மீன்களைத்தான் நன்கு பிடிப்பதாகக் கனவு வந்தால் அவனுக்கு வெள்ளிக்காசுகள் நிரம்பச்சேரும். ஒரு மனிதன் குடலைத் தன் கழுத்தில் மாலையாகப் போட்டுக் கொண்டு காடல்லாத ஓர் ஊரின் நடுவிலே தான் நிற்பதாகக் கனவு நேரின் அவன் நாற்பது ஊர்களை ஆட்சி செய்வான். அல்லது ஒரு நாட்டுக்கே ஆட்சியாளனாய் வருவான்.*

***(பிணம், இரத்தம், பொன், தகாத மாதின் புணர்க்கை, மற்ற மாதின் புணர்க்கை, தனதுடம்பில் எச்சில் முதலிய அசுத்தங்கள் படல்.)***

16 பிணமுதி ரம்பொன் காண்டல் பெண்களிற் றகாத மாதின்
புணர்விவட் கேவே றாவாள் புணர்விவை செயக்காண் டற்கும்
அணவுதன் னுடலி லெச்சி லசுத்தங்கள் படக்காண் டற்கும்
பிணியறு முயர்ந்த செல்வப் பேறுறும் புதுவ தெய்தும்.

பிணம், குருதி, பொன், தகாத ஒரு பெண்ணைக் கூடல் அல்லது மற்ற பெண்ணைக் கூடல் பொருந்திய தனது உடம்பில் எச்சில் முதலிய அசுத்தங்கள்படல் முதலியவற்றில் ஏதாவது ஒன்றைக் கனவில் கண்டால் நோய் தீரும், உயர்ந்த செல்வப்பேறு உண்டாகும். புதிய பொருள்கள் சேரும்.

***(சுவர்மீதிருந்து புசித்தல், தேள், தாமரையிலையிற் பாயசம்வார்த் துண்டல்.)***

17 சுவரிருந் துண்ணக் காணிற் சுயவுத்தி யோகத் தின்பாங்
கவருடைப் பதத்தேள் காணிற் கவலற வென்றி கூடும்
நவையறு பாய சந்தா னளினபத் திரம்வார்த் துண்ண
அவலமி லாது காணிற் பிரபுவு மாவ னென்பார்.

*சுவர்மீதிருந்து உண்ணக் கனவு காணின் தன்தொழிலில் இன்பம் கூடும். பிளப்புள்ள கால்களையுடைய தேளைக் கனவில் கண்டால் தன்காரியம் வெற்றி பெறும். தாமரையிலையில் குற்றமற்ற பாயசத்தை வார்த்து உண்பதாகக் கனவு வந்தால் அவன் பிரபு ஆவான் என்பர்.*

***(தேள் தனது விடத்தைப் பிரயோகித்தல், உதிரத்தைக் குடித்தல், வெண்ணிறப் பாம்பு கறித்தல், எரிகின்ற நெருப்பினகப்படல், நல்லபாம்பு வலப்புயத்தேறுதல், இவன் பொல்லாதவனெனப் பிறராற் கட்டப்பட்டபோது தா னழுதல்).***

18 தேளிகல் விடத்தை யேற்றச் செவ்விய விரத்த முண்ணக்
கோளில்வெள் ளரவு தீண்டக் கூர்ந்தெரி கனற்குள் ளாக
வாளெயிற் றினிய பாம்பு வலப்புயத் தேறப் பொல்லா
ஆளென யாக்க ப்பட்டே யழுதிடக் காணி னன்காம்.

*தேள்கொட்டி விடமேறுதல், சிவந்த இரத்தத்தைக் குடித்தல், நஞ்சு இல்லாத வெண்ணிறப்பாம்பு கடித்தல், கொழுந்துவிட்டெரியும் நெருப்பில் அகப்பட்டுக் கொள்ளுதல், கூரிய பற்களை யுடைய நல்லபாம்பு வலத்தோளில் ஏறுதல், இவன் பொல்லாதவன் என்று பிறர்தன்னைக் கட்டிவிடவும் தான் அழுதல் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்று கனவில் வந்தால் நன்மை விளையும்.*

***(விலங்குபூணல், தோணியிலேறிப்போகுதல், நெருப்பிற் றனுடம்பு வேதல், பறவைகளைப் பிடித்தல், தனதுடம்பி லெறும்புக்கூட்ட மூர்தல், சந்தனம் பூசுதல், தேவாலயத்திற் செய்யப்படும் பூசனை.)***

19 கனவடல் விலங்கு பூணல் கலமிசை யேறிப் போதல்
தனதுடம் பனற்கண் வேதல் சகுனங்கள் பிடித்தல் யாக்கை
தனிலெறும் பீட்ட மூர்தல் சந்தனம் பூசல் புத்தேள்
மனையிற்செய் பூசை யென்னும் வகையிலொன் றுறினு நன்றே.

*கனமும் வலிமையுமுள்ள விலங்கால் பூட்டப்படல், தோணியில் ஏறிப் போகுதல், தன் உடம்பு நெருப்பில் வேகுதல், பறவைகளைப் பிடித்தல், தன்னுடம்பில் எறும்புக்கூட்டம் ஊர்தல், சந்தனம் பூசுதல், கோயிலில் நிகழும் பூசை என்பவற்றைக் கனவில் காணினும் நலம் விளையும்.*

***(வெள்ளாடையுடுத்து வெண்மலரணிந்து சந்தனமுந் திமிர்ந்துளாளை யணைந்திடல், சூரியனைச் சந்திரனைப் பிடிப்பாரைப்போன்று விண்ணிலே தாவுதல்.)***

20 வெள்ளிய வாடை வெண்பூ வீக்கிநன் கணிந்து சந்தம்
அள்ளியே பூசி னாளை யணைந்திடல் செக்கர் வேடான்
உள்ளுற விளங்கா தித்த னொண்மதி பிடிப்பார் போல
ஒள்ளிய விசும்பிற் றாவ லுறுகன வுறினு நன்கே.

*வெண்ணிற ஆடை வெண்ணிற மலரணிந்து சந்தனம் பூசிய பெண்ணைக் கூடுதல் செவ்வேட்பரமனை நாப்பண் கொண்ட சூரியனையும் ஒளிபொருந்திய சந்திரனையும் பிடிப்பவரைப் போல ஒளி விளங்கும் வானத்தில் தாவுதல் ஆகியவற்றுள் ஒரு கனவு வரினும் நலமே விளையும்.*

***(தித்திப்பான பண்டம், தேங்காய், மாம்பழம், குடை, பாதரக்ஷை எலுமிச்சம்பழம், மஞ்சள், எழுத்தாணி யென்பனவற் றெதனையேனும் பெறுகை, நீர்நிறை குடம், பூமாலை, மயில், கருடன், அன்றிலென் பனவற் றெதனையேனுங் காண்கை.)***

21 மதுரப தார்த்தந் தேங்காய் மாங்கனி குடைகாற் காப்புக்
கதழ்வுடைச் சம்பீ ரத்தின் கனிமஞ்ச ளெழுது மாணி
இதமுடன் பெறக்கண் டாலு மெழினிறை குடம்பூ மாலை
மதர் மயில் கருட னன்றில் காணினு மருவு நன்கே.

*இனிப்புப் பொருள், தேங்காய், மாம்பழம், குடை, மிதியடி, பெருமை யுடைய எலுமிச்சம்பழம், மஞ்சள், எழுதுகோல் என்பவற்றைத் தான் பெற்றுக் கொள்வதாகக் கனவு வரினும் அழகிய நீர்நிறைந்தகுடம், பூமாலை, அழகிய மயில், கருடன், அன்றில் என்பவற்றில் ஒன்று கனவில் வரக் கண்டாலும் நன்மையாகும்.*

**[சுமங்கலி, புத்தகம், தயிர், எரிகின்ற தீபம், சாமரம், வேத பாராயணம், (கனவு காண்போன்) தன் தலையைத் தானே தின்றல்.]**

22 துயில்வரு கனவின் கண்ணே சுமங்கலி யெழுத்தார் கோசந்
தயிரெரி தீபம் யாணர்ச் சாமரம் வேத சாகை
பயிலல்கண் ணுறினுங் காண்டன் படிவவன் றலையைத் தானே
அயிலினு நலனே யென்னா வறைகுவ ரறிந்து ளாரே.

*உறக்கத்தில் வரும் கனவில் சுமங்கலி, எழுத்துக்கள் நிரம்பியநூல், தயிர், எரிகின்ற தீபம், அழகிய சாமரம், வேதசாகை ஓதல் என்பவற்றுள் ஒன்று காணினும் கனவு காண்பவன் தன் தலையைத்தானே தின்பதைக் கண்டாலும் நலமாகும் என்று அறிஞர் கூறுவர்.*

***(நீராடும்போது தலையிலுள்ள பேன்கள் யாவும் அந்நீரிலே போதல், தலைமயிர் சிக்குறல், தந்தம்வீழல், தாம்பூலம், முத்து, சந்தனம்.)***

23 தலைமயிர்ப் பேன்க ளெல்லாஞ் சலமுறக் காணிற் *சூர்போந்
தலைமயிர் சிக்க தாகத் தந்தமே வீழக் காணின்
தொலைவழி யேக வாக்கச் செலவது தொடரும் பாக்கும்
இலையுமொண் முத்தே சந்தே காணினூ தியமே யெய்தும்.

*நீராடுங்காலைத் தலையிலுள்ள பேன்கள் யாவும் அந்நீரிலே போதலைக் கனவிற் கண்டால் துன்பம் நீங்கும். தலை மயிர் சிக்குப்படுவதாகவோ பல்விழுவதாகவோ கனவுவரில் நீண்ட பயணத்தால் பொருட்செலவு உண்டாகும். தாம்பூலம், முத்து, சந்தனம் என்பவற்றில் ஒன்று கனவில் வந்தால் ஆதாயம் பெருகும்.*

***(செந்நிறவாடையுடுத்தல், மொட்டைமரத்தி லேறல், மண்டை, யூபத்தம்பம், பருத்தி, எட்டிமரம், எண்ணெய், விளையாட்டு, புத்து, குரங்கு, இரும்பு, கரும்பாம்பு, கழுதை, கழுகு.)***

24 இரத்தவத் திரந்த ரித்தன் மொட்டைவன் மரத்தி லேறல்
உரத்தனு விழந்த மண்டை யுயர்வுறு வேள்வித் தம்பம்
பருத்தியெட் டிமர மெண்ணெய் படர்விளை யாடல் புத்துக்
குரக்கிரும் பிருண்ட பாம்பு கோகுவெங் கழுகே னோயாம்.

*செந்நிற ஆடை அணிதல், வலியமொட்டை மரத்தில் ஏறுதல், வலிய உடம்பை நீங்கிய மண்டை, உயர்வுடைய வேள்வித்தம்பம், பருத்தி, எட்டிமரம், எண்ணெய், நிகழும் விளையாட்டு, புற்று, குரங்கு,*

23. *சூர் = துன்பம்.

*இரும்பு, கரும்பாம்பு, கழுதை, கொடிய கழுகு என்பவற்றில் ஏதேனும் ஒன்றைக் கனவில் கண்டால் நோய் வரும்.*

***(கழுதை ஒட்டகம் கடா என்பவற்றெதனையேனுங் கட்டியுள்ள சகடத்திலேறுதல், செவ்வேள் முதலிய தெய்வ விக்கிரகங்கள் கை, கால் முரிந்து கிடத்தல்.)***

25 வேசரி நெடுங்க ழுத்தல் வெங்கடா யாத்த பண்டி
ஆசையொ டேறக் காணி னடுக்குமே மரண காலம்
ஏசறு செக்கர் வேண்மற் றியவுள்விம் பங்கள் கைகால்
ஆசற முரிவு காணி னருமகன் முதலோர் சாவார்.

*கழுதை, ஒட்டகம், வலியகடா இவற்றில் எதனையேனும் கட்டியுள்ள வண்டியில் விருப்பத்தோடு ஏறுவதாகக் கனவுகண்டால் தனக்குச் சாவுநாள் நெருங்கிவரும். குற்றமற்ற செவ்வேள் முதலிய தெய்வங்களின் சிலைகளிலுள்ள குற்றமற்ற கைகால் முரிந்து கிடத்தலைக் கனவில் கண்டால் தன் அருமையான மகன் முதலியோர் சாவார்.*

***(முன்னே யிறந்துபோனவனான தன்னுடைய மகன் துன்பப்படுதல், அங்ஙனமே (இக்கனவுகாணுந் தந்தை) தனது சிந்தை திடுக்கிட வெடிக்கும் வெடி யொலி செவியிலேறுதல், தேவர்களழுதல்.)***

26 முந்திறந் திட்ட தன்கான் முளைதுன்பப் படக்க ணாக்காண்
தந்தையத் துன்ப மெய்தல் சரதமஞ் ஞான்று காண்போன்
சிந்தைநொந் திடமிக் கார்க்கும் வெடியொலி செவிசேர்ந் தக்கால்
வெந்துய ருண்டாந் தேவ ரழுதற்குந் துயர மேவும்.

*முன்பு செத்துப்போன தன்மகன் துன்பப்படலைக் கனவில் காணும் தந்தை அத்துன்பத்தை அடைவது உண்மை. அங்ஙனம் கனவு காண்போன் நெஞ்சு திடுக்கிடுமாறு பெரிய ஓசை கொண்ட வெடியின் சப்தத்தைக் கேட்பானாயின் கொடிய துன்பம் உண்டாகும். தேவர்கள் அழுவதைக் கனவில் கண்டாலும் துன்பமே விளையும்.*

***(செம்புக்காசு வெள்ளிக்காசுக ளுள்ள முடிப்பு, முடிப்புட்படாத அந்தப் பலதிறக் காசுகள்.)***

27 காசுறு முடிப்புக் காணிற் கட்டிதான் புடைக்கு மெய்யில்
காசுகள் பலவாய்க் காணிற் கவின்றெறு பலசி ரங்காங்
காசினைச் செம்பு வெள்ளி கணித்திடி னொன்றற் கொன்று
காசற வுயர்வவ் வாற்றாற் காணுமந் நோயு மென்பார்.

*செப்பு வெள்ளிக்காசுகள் கொண்ட முடிப்பைக் கனவில் கண்டால் உடம்பில் கட்டி தோன்றி வீங்கும். அக்காசுகள் முடிப்பிலில்லாமல் பலவாயிருக்கக் கண்டால் அழகையழிக்கும் பல சிரங்குகள் உண்டாகும். காசில் செம்பினும் வெள்ளி உயர்ந்த தாகையின் நோயும் அதற்கு ஒப்ப அதிகமாகவே காணும்.*

***(பஞ்சமர் மிலேச்ச ரெனப்படுவார் தங்கள் கைகளில் ஆயுதங்களைப் பிடித்துக்கொண்டு யுத்தத்திற்கு வருதல், சாணியினாலே வீட்டை நன்கு மெழுகி யழகிய கோலங்களை யிடுதல்.)***

28 பஞ்சமர் மிலேச்சர் கையிற் படைக்கல மேந்தி வெம்போர்
விஞ்சுமா வரப்பார்த் தக்கான் மெய்யுழை வருத்தந் தோன்றும்
அஞ்சுசிச் சாணி யாலே யகநனி மெழுகிக் கோலம்
மஞ்சுற விடப்பார்த் தக்கான் மறக்கள்வர் பயந்தா னெய்தும்.

*பஞ்சமரோ மிலேச்சரோ கையில் படைக்கலம் ஏந்திக் கொடியபோர் மிகுமாறு வருதலைக் கனவில் கண்டால் உடம்பில் பெரிதும் வருத்தம் தோன்றும். அழகிய தூய சாணியால் வீட்டை நன்குமெழுகி அழகுறக் கோலங்கள் இடுவதைப் பார்த்தால் மறக்கள்வரால் அச்சம் உண்டாகும்.*

***(தனது தேகம் புட்டித்தல், தூரதேசஞ் சென்றிருந்தவர் உடம்பு பூரித்துவருதல், கடலானது ஊரை வளைதல், தனதுடம்பி லணிந்துள்ள ஆடையாபரணங்களும் பிறவும் பிறரைச் சார்தல்.)***

29 தனதுடல் பெருத்த றூரஞ் சார்ந்தவ ருடல்பூ ரித்துத்
தனதிருக் கையினைச் சார்த றடங்கட லூரைச் சூழல்
தனதுடம் பினிற்பூண் டுள்ள தானைபூ டணமு மற்றுங்
கனவினிற் பிறரைச் சார்தல் கண்டிடிற் றீமை யாகும்.

*தனது உடம்பு பெருத்தல், தூரதேசம் சென்றவர் உடம்பு பூரித்துத் தன்னிடத்தை அடைதல், பெரிய கடல் ஊரை வளைத்துக் கொள்ளுதல், தான் அணிந்து இருக்கும் ஆடையாபரணங்களும் பிறபொருள்களும் பிறருக்கு உரிமையாதல் என்பவற்றில் எதனையேனும் கனவில் பார்த்தால் தீங்கு உண்டாகும்.*

***(சந்திரகிரகணம், சூரியகிரகணம், பசுவை வாளாற் கொல்லுதல், விவாகம் நடாத்துதல், காகம் பன்றி மந்தியென்பன வீட்டுள்ளே நுழைதல், விதவை நுழைதல், விதவையைக் கூடுதல், பாம்பு முதலிய விடவுயிர்கள் மிகுந்திருத்தல்.)***

30 மதியினைப் பகலோன் றன்னை வாளராத் தீண்ட வாவை
விதிர்கர வாளாற் கொல்ல விவாகமே நடத்தக் காகம்
விதவைவெம் பன்றி மந்தி யென்பன வீட்டுட் செல்ல
விதவைதோள் சேர நஞ்சா விகண்மிகக் காணிற் றீதாம்.

*சந்திரகிரகணம், சூரியகிரகணம், பசு நடுங்கும்படி அதை வாளால் கொல்லுதல், திருமணம் நடத்தல், காகம், விதவை, கொடிய பன்றி, குரங்கு இவற்றில் ஒன்று வீட்டுள்ளே நுழைதல், விதவையைப் புணர்தல், நஞ்சுடைய உயிர்கள் பெருகியிருத்தல் என்பவற்றில் ஏதேனும் கனவில் வருமாயின் தீங்கு விளையும்.*

***(கரியொத்த மேனியுள்ளோன் கரியவுடையுடுத்துக் கரிய பூமாலையோடு இரும்பாலாகிய ஆபரணமு மணிந்து கொண்டு வருதல், கரியமேனியான் கையாலே கல்லெறிதல், கரியவுடையுடுத்தாளைக் கலத்தல்.)***

31 கரிநிறத் தான்க றுப்புக் காழக முடுத்து மாலை
கரிதெனப் பூண்க ரும்பொன் னெனவணிந் தெய்தக் காணிற்
கரியவண் ணத்தான் கையாற் கல்லெறிந் திடுதல் காரிற்
கரிதெனப் படமு டுத்தாள் சேரவே காணிற் றீங்காம்.

*கரிய மேனியுடைய ஒருத்தன் கரிய ஆடையணிந்து கருநிற மாலையும் இரும்பாலாகிய நகையும் அணிந்து வருதலை கனவில் கண்டாலும், கரிய நிறமுடைய ஒருவன் கையால் கல்லெறிதலைக் கனவில் கண்டாலும், கறுப்புடையணிந்தவளைக் கூடுவதாகக் கண்டாலும் தீங்கு விளையும்.*

***(நிருவாணி யெதிரேவருதல், மலவாந்தி செய்தல், நாய் கரடி குரங்கு என்பன கறித்தல், ஒரு சீட்டினைப் பெறுதல், படுகுழிக்கண் வீழ்தல், சேற்றிலே தோய்தல்.)***

32 வத்திர முடுத்தா தார்முன் வரமல வாந்தி செய்யப்
பித்துநாய் கரடி பொல்லாப் பிலவங்கங் கறிக்க வேடொன்
றத்தம துறவே யேற்க வாழ்படு குழிக்கண் வீழச்
சுத்தமில் சேற்றிற் றோயச் சொப்பனங் காணிற் றீங்கே.

*கனவில் அம்மணமாய் ஒருவர் தன்முன் வருதல், மலத்தை வாந்தி யெடுத்தல், பைத்தியமான நாய், கரடி, பொல்லாத குரங்கு இவற்றில்*

*ஒன்று கடித்தல், ஒரு சீட்டைத் தன் கையால் பெற்றுக்கோடல், ஆழமான படுகுழியில் விழுதல், அழுக்கு நிறைந்த சேற்றில் தோய்தல் என்பவற்றில் ஒன்றைக் கண்டாலும் தீங்கையே தரும்.*

***(சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் விருதுக்கொடி விருக்கம் மலை கோபுரமென்பன வீழ்தல், சிரசு வீழ்ச்சி, கைகால்கள் வீணாக நெரிந்தறுதல், விழி குருடாதல்).***

33 சூரியன் மதிவிண் மீனே துவசமே தருவே வெற்பே
சீரிய சிகர மேவீழ் வுறலருஞ் சென்னி வீழ்ச்சி
நேரிய கரங்கால் வாளா நெரிந்தறல் விழிகே டாதல்
காரியல் கனவி லெய்திற் காண்பலன் றீமை யாமால்.

*சூரியன், சந்திரன், நட்சத்திரம், விருதுக்கொடி, மரம், மலை, சிறந்தகோபுரம் என்பவற்றில் ஒன்று விழுதல் அரிய தலை விழுதல், நேரியதான கைகால்கள் வீணாக நெரிந்து அறுதல், கண்குருடாதல் ஆகியவற்றில் ஒன்று கனவில் வரின் தீமையே பலனாய் நிற்கும்.*

***(கடுகு, கொள், விறகு, சாமை, கருவரகு, உள்ளி, சேறு, சுரைக்காய், பலாக்காய், பாகற்காய், பூச்சுணைக்காய், எலும்பு, ஆமணக்கினெய், தினை, மிளகு, ஆனெய், புல், காட்டுமுயல், முதலை, பன்றி.)***

34 கடுகுகொள் விறகு சாமை கருவர குள்ளி சேறு
படர்சுரைக் காய்ப லாக்காய் பாகற்காய் பூச்சு ணைக்காய்
மிடலெலும் பாம ணக்கி னெய்தினை மிளகா னெய்புல்
கடமுயன் முதலை பன்றி கனவுறி னுந்தீங் கென்பார்.

*கடுகு, கொள், விறகு, சாமை, கருவரகு, உள்ளி, சேறு, படரும் சுரைக்காய், பலாக்காய், பாகற்காய், பூச்சுணைக்காய், வலிமையுடைய எலும்பு, ஆமணக்கு நெய், தினை, மிளகு, பசுநெய், புல், காட்டுமுயல், முதலை, பன்றி என்பவற்றில் ஏதேனும் ஒன்று கனவில் வந்தாலும் தீமையே என்று அறிந்தோர் கூறுவர். (ஆமணக்கு நெய் - விளக்கெண்ணெய் என்று வழங்கப்படுவது.)*

***(தனது வீட்டகத்தே தான் நித்திரைபுரியுங்கால் அவ்வீடு சுழன்றுகொண்டே பூமியி லாழ்தல்.)***

35 தன்மனை தனிற்றூங் கேல்வை தரையுளம் மனைசு ழன்றே
வன்மையொ டமிழக் காணின் மனைதன்னை நீங்கு மல்லால்
நன்மைகள் குறையு மென்னா நவில்வர்சில் கனவு பார்த்த
தன்மைபோ னனவி லுந்தான் பலித்திடுந் தடையொன் றின்றி.

*தன் வீட்டில் தான் தூங்கும்போது அவ்வீடு சுழன்று கொண்டே தரையினுள் வன்மையோடு அமிழ்வதைக் கனவில் கண்டால் அவ்வீடு தன் கையை விட்டு நீங்கும் அல்லது தன்னுடைய நன்மைகள் குறையும் என்று பெரியோர் கூறுவர். சில கனவுகளின் நிகழ்ச்சி நனவிலும் யாதொரு தடையுமில்லாமல் அப்படியே நிகழ்வதும் உண்டு.*

***(கனவிற் கண்டவாறே நனவிற் பலிப்பனவுமுள; திருவருட் செயல்களுங் கனவின்கண்ணேயுள; சில கனவுகள் நல்வினை தீவினைப் பேறுமாமென்று நிச்சயித்தற்குரிய நியாயங்கள்.)***

36 அத்திறக் கனவி னுக்கே யருட்டமிழ்ப் *புகலி வேந்தர்
முத்துநற் குடைசின் னங்கண் முத்துறு சிவிகை கொண்ட
சத்தியக் கனவு போல்வ சான்றருட் செயலு மங்காம்
இத்திறத் தாற்க னாமெய் யிருவினைப் பேறு மாமே.

*கனவில் கண்டவாறே நனவில் நிகழும் நிகழ்ச்சிக்கு பேரருள் தகையாளரும் தமிழ்விரகருமாகிய சீர்காழி திருஞானசம்பந்தப் பெருமான் நல்ல முத்துக்குடை, ஊதும் காளங்கள், முத்துச்சிவிகை ஆகியவற்றைப் பெற்றுக் கொண்ட நிகழ்ச்சியே சான்றாகும். இறைவனின் திருவருட் செயல்களும் கனவின் கண் சில நிகழ்வனவாய் உள்ளன: இவற்றால் கனவு உண்மையாமே யன்றிப் பொய்ப்பதாகாது. நல்வினைப் பயனையும் தீவினைப் பயனையும் ஊட்டுதற்கும் சில கனவுகள் நிகழ்வனவாம்.*

*(வழிச் செலவினால் உண்டாய வருத்தத்தால் திருஞானசம்பந்தப் பெருந்தகையாரும் உடன் வந்தாரும் மாறன்பாடி என்னுமிடத்தில் தங்கினர். நெல்வாயிலரத்துறைக்குச் செல்லவுள்ள பிள்ளையாரின் வருத்தம் நீங்கும்படி இறைவனார் அங்குள்ள அந்தணர் கனவில் முத்துச்சிவிகை, முத்துக்குடை, சின்னம் ஆகியவற்றை அருளிப் பிள்ளையார்க்குத்தரும்படி பணித்தனன். அச்செய்தியை எம்பிரான் பிள்ளையார்க்கும் அறிவித்தனன். அங்ஙனமே திருக்கோவிலில் அவையிருக்கக் கண்ட அந்தணர் அவற்றைக் கொண்டு சென்று பிள்ளையாருக்கு அளித்தனர். இவ்வரலாற்றின் விரிவைப் பெரிய புராணத்திற் காண்க. திருவருட் செயல் நிகழும் கனவுகளாவன : அப்பர் பெருமானுக்குத் திருமறைக் காட்டில் கனவில் தோன்றி வாய்மூரில்*

36. * புகலிவேந்தர் = சீகாழித் திருஞான சம்பந்த சுவாமிகள்.

*இருப்போம் தொடர வா என்றதும், சுந்தரர் பெருமான் பரவை நாச்சியாரையும் சங்கிலி நாச்சியாரையும் மணங்கொள்ள ஏதுவாக நிகழ்ந்த கனவுகளும் கருதற்பாலன.)*

**37 மாலுறு மனையி லோர்நாள் வைகறைக் கனவி லன்னை**
**போலொரு மாது வந்துன் றூசையா கிழுத்துப் போந்திம்**
**மூலையிற் கறித்தல் காண்டி யெனுமொழி கேட்டெ ழீஇ**
**மூலையிற் கறித்த தூசு மூடிகச் செயலுங் கண்டேன்.**

*பெரிய எமது வீட்டில் ஒருநாள் யாம் தூங்குகையில் விடியற்காலத்தில் வந்த கனவில் எமது அன்னை போன்ற ஒருபெண்மணி வந்து உனது துணியை எலி இழுத்துக் கொண்டு இங்குள்ள மூலைக்குச் சென்று கடிப்பதைப் பார் என்று கூறினாள். அதுகேட்டு விழித்துக் கொண்டயாம் ஒரு மூலையில் கடிக்கப்பட்ட துணியையும் அதைக் கடிக்கும் எலியின் செயலையும் கண்டோம்.*

**38 நனவினிற் பொய்யன் செய்கை நவிற்சிபொய் யாதல் போலக்**
**கனவினு முளவி ரண்டாக் கழ*றிகம் பரமுஞ் $சந்தி**
**எனுங்கன விருந்துண் கின்றா னென்னுழீ ➤மா ரணிய மாறின்**
**இனிதுறு மூன்றி லாக லின்வினைப் பேறேற் பாமே.**

*நனவில் பொய்யன் ஒருவனின் செயலும் பேச்சும் பொய்யாமாறே கனவிலும் பலியாதவைகளும் உள. அவை வினைப்பயனை ஊட்ட நிகழ்வன. இவ்வுலகம், பரவுலகம் என்று சொல்லப்படும் இரண்டினுக்கும் நடுவில் உள்ள சந்தியம் என்னும் கனவுலகத்திலிருந்து நல்வினை தீவினை ஆகிய இரண்டின் பயனையும் நுகர்கின்றான் என்று யசுர்வேத காண்வசாகையின் பிருஹதாரண் யகோபநிடதத்தின் ஆறாம் அத்தியாயத்து இனிதமைந்த மூன்றாம் பிராஹ் மணம் கூறுதலின் இவ்வினைப் பயன் ஊட்டுதல் என்பது ஏற்புடைத்தாகும்.*

---

37-ஆஞ் செய்யுளிலுள்ள கனவு நூலாசிரியராற் கண்ணுறப்பட்டது.

38. * இகம்பரமும் = இவ்வுலகத்தையும், பரலோகத்தையும்.

$ சந்தி எனுங்கன விருந்துண்கின்றான் = இகம் பரமென்னு மிரண்டற்கும் மத்தியிலுள்ள சந்தியமெனுங் கனாத்தானத்திலிருந்து அவ்விரண்டனையு மனுபவிக்கின்றனன்.

➤ ஆரணியமாறினினிதுறு மூன்று = யஜுர்வேத காண்வ சாகையில் **பிருஹதாரண்யகோபநிஷத்தின்** 6ம் அத்தியாயத்து 3-ம் பிராஹ்மணம். அதனில் **“தஸ்யவா ஏதஸ்ய புருஷஸ்ய த்வேஏவஸ்தாநேபவத இதஞ்ச பரலோக ஸ்தாநஞ்ச ஸந்த்யம்”** என்று கூறிச்செல்லும் வசனம். இப்பிரமாணந்தானே “கனவின் பயனு நனவின் பயனும் - வினையின் பயனவை பொய்யென வேண்டா” எனச் **சங்கற்ப நிராகரணத்தும்** வருவதாயிற்று.

***(தந்தை, தாய், கோழி, கொக்கு, பெண்கள், மான், வெண்ணிறத்தனவுள் மோர் பருத்தி அன்னமெனப்படு மிம்மூன்றுமல்லாத மற்றைப் பண்டங்கள்.)***

39 தந்தைதாய் கோழி கொக்குத் தையலார் தழைதின் மான்றான்
நந்துநேர் வெண்பண் டத்து ணறியமோர் பருத்தி யன்னம்
இந்தமூன் றல்லான் மற்ற யாவையுங் கனவிற் காணின்
நிந்தைதா னில்லா நல்ல பலனென நிகழ்த்த லாமால்.

*தந்தை, தாய், கோழி, கொக்கு, பெண்கள், தழையைத் தின்னும் மான், சங்கையொத்த வெண்ணிறப் பொருள்களில் நறியமோர், பருத்தி, அன்னம் அல்லாத ஏனையவை ஆகிய இவற்றில் ஒன்று கனவில் வரின் பழிப்பு இல்லா நலம் தரும் என்று கூறலாம்.*

***(கருநிறத்தனவுள் யானை பசு பிராமணர் குதிரையல்லாத மற்றைப் பொருள்கள், கனாப்பலன்கள் பலிக்குங்கால வளவைகள், நல்லார்காண் கனவுகள்.)***

40 கருநிறத் தனவுள் யானை கவினுடைப் பசுபூ தேவர்
பெருவிறற் குதிரை யல்லாற் பிறபொருள் காணிற் றீதாந்
தெருளுற நால்யா மத்துஞ் சேர்கனாப் பலனே ராக
வருடமெண் டிங்கண் மூன்று மாதமோர் மாதத் தெய்தும்.

*கரியநிறமுடையவற்றுள் யானை, அழகிய பசு, பார்ப்பனர், பெருவலியுடைய குதிரையல்லா மற்றைப்பொருள்களைக் கனவில் கண்டால் தீங்கு நேரும். முதல் யாமத்துக் கனவு ஓராண்டிலும் இரண்டாம் யாமத்துக்கனவு எட்டுத் திங்களிலும் மூன்றாம் யாமத்துக் கனவு மூன்று திங்களிலும் நான்காம் யாமத்துக் கனவு ஒருதிங்களிலும் நன்கு பலன் தரும்.*

41 ஆரரு ணோத யத்தி லறைந்தவிக் கனவுக் காட்சி
சாருமேற் பத்து நாளிற் சாற்றிய பலனாம் பானுப்
பேருளோ னுதயத் தாயிற் பின்றலின் றுடன்ப லிக்குஞ்
சீருளோர் கனவெல் லாமச் செக்கர்வே ளாய்நி லாவும்.

*நிறைந்த அருண உதயத்துக்கனவாயின் பத்து நாளில் பலன் தரும். சூரிய உதயத்தில் கண்ட கனவாயின் காலம் தாழ்த்தாது உடனே பலன்தரும். சிறப்புடைய தூயவர் கனவுகள் எல்லாம் செவ்வேட் பரமனின் திருக்காட்சியாயே விளங்கும்.*

***(இங்கே சொல்லப்பட்ட சொப்பன பலனளவுகள் குறையினும் வேறுபடினும் அவை, நன்று தீதென்பவற்றடங்கும். பகலிற் காணப்படுங் கனாக்கட்குப் பலன்களில்லை. அவையெல்லாம் அனுபவிக்கவேண்டிய வினைப் பயன்களாகும்.)***

42 இங்குநா னுரைத்த வாற்றா னெய்துசொப் பனமா ணங்கள்
மங்கிமா றுறினு நன்று தீதென வகுக்கு மாற்றாற்
பங்கமின் றவைதா மவ்வி ரண்டுமாப் பலிக்கு மென்றூழ்
தங்குறு பகற்க னாக்கட் கவையிலை கருமச் சார்பாம்.

*இங்கு யாம் கூறிய கனவின் பலனளவைகள் குறையினும் வேறுபடினும் அவை நற்பலன் தீயபலன் என்று கொண்டு கண்டால் குற்றமில்லாத அவை அவ்விருவகைப் பலனையும் நல்கும். ஊழினால் அடையும் பகற்கனவுகளுக்குப் பலன்கள் இல்லை. அவை தாம் நுகர வேண்டிய நல்வினை தீவினைப் பயன்களாய் வருவதாம்.*

***(உட்டிணமானது சிரசி லேறுமாயின், பலதிறக்கனவுகள் பல்கும்; அவைகளும் பகற்கனாப்போலப் பலனற்றவைகளாய் அனுபவிக்க வேண்டிய வினைப் பயன்களேயாகும்; இக்கனவு நனவைப்போலத் தெளிவிலது; உயிரை மயக்கத்திற் பொருத்துவிக்கும்.)***

43 ஆவியிற் குரிய வோ*ரைந் தவத்தையிற் சேர்க னாத்தான்
தாவதி தாபஞ் சென்னி சார்ந்திடிற் பலவாய் மல்கும்
மேவவை பகற்க னாப்போல் வினைப்பய னளவா மிந்த
ஓவறு கனாந னாப்போற் றெளிவில துறுத்து மையல்.

*உயிருக்கு உரிய சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் ஐந்து அவத்தைகளில் ஒன்றாகிய கனவானது துன்பம் தரும் சூடுமிகுந்து தலையில் சேருமானால் பலப்பல வகைப்பட்ட கனவுகளாக வரும். அப்படி வரும் அவைகள் பகற்கனவைப் போலப் பயனில்லாதவைகளாய் வினைப்பயன் அளவாக நிகழும். இந்த ஓவுதல் இல்லாத கனவு நனவைப்போலத் தெளிவாக இராது. உயிரை மயக்கத்தில் பொருத்துவிக்கும்.*

43. * ஐந்தவத்தை = சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்.

***(தீயகனவின்பலன் ஓவுமாறுணர்த்தல்.)***

44 நன்றிலாக் கனவு காணி னனியதை மறந்து தூக்கங்
குன்றுறா வாறு தூங்கிக் குணக்**கினற் கண்டு மூழ்கி
வென்றிவே லேந்து செக்கர் வேளுரு வருச்சித் தன்னோன்
தன்றகை யடிய ராசாற் றரிசிக்கி னதன்கோ ளோவும்.

*தீய கனவு கண்டால் அதை நன்கு மறந்து தூக்கம் குறையாதவாறு உடனே தூங்கி எழுந்து கிழக்கில் சூரியனைத் தரிசித்து நீராடி வெற்றிவேல் ஏந்தும் செவ்வேட்பரமனை வழிபட்டு அவனது தகைமையுள்ள அடியவரையும் குருவையும் தரிசித்தால் தீய கனவின் பலன் ஒழியும்.*

***(நறிய கனவின்பலன் நன்கு பலிக்குமாறுணர்த்தல்.)***

45 நன்றுறு கனவு காணி னயனங்கண் மூடா தாதி
என்றவொர் திசையிற் செஞ்ஞா யிற்றொளி கண்டு செவ்வேண்
மன்றலம் பதங்க ளேத்தி மயறபு மடியர்ப் போற்றித்
தன்றகை யையற் காணச் சார்பல னினிது சாரும்.

*நறிய கனவு கண்டால் தூங்காதிருந்து கிழக்கில் சூரியன் உதயத்தைத் தரிசித்துச் செவ்வேட் பரமனின் மணம் நிரம்பிய திருவடிகளை வாழ்த்தி மயக்கமறுத்த அவனடியவர்களைப் போற்றி செய்து தனது தகவுடைய குருவையும் தெரிசித்தால் கூட வேண்டிய நல்ல பலன்கள் இனிதாகத் தன்னை வந்து கூடும்.*

***(துறவிதானேற்கும் பிக்ஷையைக் கனவினுமேற்கக் காணிற் றுறவு நிலைத்ததாகும். கனவிற் றோன்றியருளுந் தெய்வச்செயல்களை, கண்டோன் பிறர்க்குக் கூறின் அவனுக்குப் பெயர்த்தும் அத்திறத்தன காணக்கிடையா.)***

46 உயிர்க்குறு திப்பே றாமா றுயர்துற வுற்றோ னேற்கும்
பயிக்கமென் பதைக்க னாவி னுங்கொளப் பார்ப்ப னாயின்
அயிர்ப்பற நிலைத்த தாகு மத்துற வுறுங்க னாவிற்
செயிர்த்திற லொழிக்குந் தெய்வச் செயல்பிறர்க் கோதிற் குன்றும்.

*உயிருக்கு உறுதிபேணி உயர்ந்த துறவைப் பூண்டவன் தான் ஏற்கும் பிச்சையைக் கனவிலும் பிச்சையேற்பதாகக் காண்பானேல் அவனது துறவு ஐயமின்றி நிலைபெற்றதாகும். கனவில் வரும் திருவருட் செயல்களைப் பிறர்க்குக் கூறினால் அத்தகு கனவுகள் மீண்டும் வாரா.*

44. ** இனற்கண்டு = சூரியனைத் தரிசித்து.

***(இரகசியத்துக்கே தேவர்கள் பிரியப்படுப வரென்பதையுஞ் சுருதிகள் சொல்லும்.)***

47. **தேவர்கண் மறைத்துக் கூறுஞ் செய்கையிற் பிரிய முள்ளோ**
**ராவரென் *றைத ரேயம் ** பிருகதா ரணியங் கூறுந்**
**தீவிர முடையா ரித்தைத் தேர்ந்தென திதயச் செவ்வேள்**
**சேவடி யருளை நேடிச் செல்வரன் னவரே செல்வர்.**

*தேவர்கள் இரகசியத்துக்கே பிரியப்படுபவர் என்னும் உண்மையை இருக்குவேத ஐதரேய உபநிடதமும் யசுர்வேத பிருகதாரணியக உபநிடதமும் கூறுவனவாம். இறைநெறியில் பேரார்வமுடையோர் இவ்வுண்மைதெளிந்து எமது உளக்குகையில் எழுந்தருளியிருக்கும் செவ்வேட்பரமனது திருவடியருளை நாடி ஒழுகுவர். அவரே உண்மைச்செல்வர் ஆவர். (என்னை? "அருட்செல்வம் செல்வத்துட் செல்வம், பொருட்செல்வம் பூரியார்கண்ணுமுள" என்பவாகலின்).*

*["பரோக்ஷப்ரியா இவஹிதேவாம் ப்ரத்யக்ஷத்விஷ" என்னும் சுருதி வசனத்தும் பெறப்படும் பிருஹதாரணியகோபநிஷத்தின் ஆறாம் அத்தியாயத்து இரண்டாம் பிராஹ்மணத்திலுள்ள இதன் பொருள் : 'தேவர்கள் மறைத்து வழங்குதலிற் பிரியமுள்ளவர்கள். வெளிப்படையாக வழங்குதலிற் பிரியமில்லாதவர்கள்' எனவாம். இச்சுருதி வசனத்திலுள்ள "பரோக்ஷப்ரியா இவஹிதேவா" (=தேவர்கள் மறைத்து வழங்குதலிற் பிரியமுடையோர்) என்பது ஐதரேயாரண்யகத்தின் நான்காம் அத்தியாய ஈற்றிலும் வருகின்றது. இவ்விரகசியநெறி நில்லாதமாந்தர் ஈசனுள னெனவுங் கூறிக்கொண்டு எவ்வறம் இழைப்பினும் அன்னோர் அவ்வீசன் விடயத்தும் மறுமைப் பயன் விடயத்தும் ஐயப்பாடுடையோரும், அவநெறி நிற்போரும் தமக்குத் தாமே கேடு இழைத்திருப்போருமாவர். ............... அவ்விரகசியமும் அகங்கார வொழிவின்பாற் படுதலின் அதற்குத் தேவர்கள் பிரியமுறலும் அதனைச் சுருதிகள் எடுத்து மொழிதலும் ஏற்புடையன வென்பது முணர்க. (இந்)நூலாசிரியரும் இதுபேணினார் என்பது "என்னாயக வேலிறையே", "நல்லபொன்மயிலூரு மென்னொரு", "என்னுவாரகநண்ணி" எனத் தொடங்கும் குமரவேள்*

47. * ஐதரேயம் = ருக்வேத **ஐதரேயோபநிஷதம்:** இது 2-வது ஆரண்யகத்து 4-ஆவது அத்தியாயம்.

** பிருகதாரணியம்=**பிருஹதாரண்யகோபநிஷத்தின்** 6-ஆவது அத்தியாயத்து 2-ஆவது பிராஹ்மணம்: வாக்கியம்- "பரோக்ஷப்ரியா இவஹிதேவா:" இதன்பொருளே செய்யுண் முதலடிக்கண்ணே வந்துளது.

பதிற்றுப்பத்தந்தாதி திருப்பாடல்களிலும் "வீணவாப் பாவி வெருக்கொள வெய்தருட்கே, வேணவா வுற்றேன் விமலா பரஞ்சோதீ" எனக் காசியாத்திரையிலும் அறியப்படுகின்றது. "உரைமல்கு சங்கம் விரும்பிலேன்" என்பது "பேச்சு மலிந்த பிரசங்கத்தையும் விரும்ப மாட்டேன்" எனும் பொருளிற் பிரயோகிக்கப்பட்டிருத்தலின் ஆசிரியர் தாம் பிரசங்கித்து வருமொருகாரியமும் அமனஸ்க விரோத சமய சம்பந்தமான ஒருவித மோக வியாபாரமாம் எனக் கருதி அதனின்றும் விலகுவோராயினர். அதுபற்றியே சமயத்தாபனம் ஒன்றும் அவர் செய்யாதவராயினார். சில சபைகளில் அவற்றினை ஆக்கியோர் விரும்பியவாறு தலைமை பொறுத்துக் கொள்ளவேனும் உடம்படாதவராயினார் என்பனவும் அங்ஙனம் பெறுக. பரிபூரணானந்த போதத்துத் துறவறவிளக்கப் படலத்தினைக் கூர்ந்து நோக்குவார்க்கும் இவை புலப்படும். இவ்வகலவுரை தகராலய ரகசியத்தில் ஸ்ரீமத் சுவாமிகள் அருளியது.]

## (ஐயமறுத் தருளல்)

**48 எக்கனா வையும்பொய் யென்போற் கிறையருட் செயலும் பொய்யை**
**ஒக்குமே நன்று தீதோர்ந் துஞற்றுவ வுஞற்ற மெய்க்கண்**
**தக்கவி ரேகை யாதி சாதனந் துடித்தன் மற்றுஞ்**
**செக்கர்வேள் செய்த வாறே கனவையுஞ் செய்த தாலோ.**

எந்தக் கனவையும் பொய் என்று கூறுவோர்க்கு கனவினில் அருள்செய்யும் இறைவனின் திருவருட் செயலும் பொய்யை நேர்வதாம். நன்மை தீமை அறிந்து செய்யவேண்டுவன செய்யுமாறு உடம்பில் தோள் முதலியனவும் கண்ணில் இமை முதலியனவும் துடித்தல் போன்றவற்றைச் செவ்வேட்பரமன் செய்துள்ளதைப் போலவே நன்று தீது அறிதற்குக் கனவையும் உண்டு பண்ணினான்.

**49 கனவிலு நனவி லுஞ்சொற் கதியிலு மறிந்த வாறே**
**நனவிலுங் கனவி லுஞ்சேர் நடுநெஞ்சம் வனைந்து கோடல்**
**மனவினை ஞாப கந்தான் *முதன்மன **நிமித்த மாலில்**
**முனமறி யாத காண்டன் முந்தைவா சனையா கும்மே.**

கனவிலேனும் நனவிலேனும் சொல்முறையிலேனும் அறிந்தபடியே நனவிலும் கனவிலும் கூடுகின்ற நேரிய வுள்ளமானது

49. * முதல் = முதற்காரணம்: இது குடத்திற்கு மண் போல்வது.
** நிமித்தம் = நிமித்தகாரணம்: இது குடத்தினை வனையுங் குலாலன் போல்வது.

*ஒருபக்கம் பற்றி நிற்றல் மனத்தின் செயலாகும். இது நிகழ்தற்கு ஞாபகம் முதற்காரணமாகவும் மனம் நிமித்த காரணமாகவும் ஆகும். கனவின்கண் முன்பு எப்போதும் காணாதவற்றைக் காணுதல் முற்பிறப்பின் தொடர்பால் உண்டாவதாகும்.*

50 வானிடைப் பறந்தார் செய்தி கேட்டவா மனமே தன்னை
வானிடைப் பறக்கச் செய்த தென்னவா யிலைக னாவில்
வானவன் செவ்வே ளாறு வதனங்க ளேயா வென்னும்
வானிறை நியாயத் தானே வான்செலுஞ் சூக்க மெய்யே.

*வானத்தில் பறப்பவர் செய்தியைக் கேட்டு அப்படித்தானும் பறக்கவிரும்பிய மனமே கனவில் நம்மை வானத்தில் பறக்கச் செய்கிறது என்று கூறுதல் உண்மையாகாது. என்னை? செவ்வேட் பரமனுக்கு ஆறு திருமுகங்கள் உள என்று கேட்டிருப்போரின் கனவில் அவர்க்கு ஆறு முகங்கள் தோன்றுவதில்லை, ஆகலின் நுண்ணுடம்பே வானில் பறப்பது என்பது தெளிக.*

51 உரைத்துள மனவி னைக்கே யுருவெளித் தோற்ற மென்போர்
வரைப்பெரும் புவியின் கண்ணே வழங்குத லுளதத் தோற்றம்
புரைக்குண ஞாப கத்தே பூத்தலிற் றூல சூக்க
நிரைப்பிர பஞ்சங் கட்கு வேறென நிகழ்த்த லாமால்.

*முன்பு கூறப்பட்ட மனத்தின் செயலுக்கு உருவெளித் தோற்றம் எனப்படும் பெயர் எல்லையுடைய இப்பெரிய பூமியினிடத்து வழங்குதல் உள்ளது. பருவுலகங்கட்கும் நுண்ணுலகங்கட்கும் வேறுபட்டதாகிய அந்தத்தோற்றம் இரகசியப் பண்பை உடைய நினைவிலே தோன்றுவதாகும் என்று கூறலாகும்.*

52 ஞாபக மாமு தற்கா ரணத்தெழு முருப்போன் ஞால
தாபர மனைத்துஞ் சித்தாந் தனிப்பொரு டோன்று மென்று
தாபனஞ் செய்கோட் பாட்டைத் தடியுமப் பவஞ்ச ஞால
மாபிர பஞ்சங் கட்கு வேறென வழங்கு மாறே.

*ஞாபகம் எனப்படும் முதற்காரணத்திலிருந்து தோன்றுகின்ற உருவெளித் தோற்றமானது மாயவுலகம் அனைத்தும் ஆகும்படி சித்து எனப்படும் ஒப்பற்ற பொருளே காட்சியளிக்கும் என்று கூறுவாருடைய கொள்கையைப் பிரபஞ்சம் ஆகிய உலகம் வேறு சித்தால் ஆகும் உலகம் வேறு என்று கூறும் முறையே ஒழித்து நிற்கும்.*

**53 அவ்வுரு வெளித்தோற் றக்காட் டானது மசித்தா யுள்ள**
**எவ்வுரு வினையுஞ் சிந்தை யிருந்தவா றெடுப்ப துந்தான்**
**தெவ்வற வசித்தே யீதுஞ் சித்தினி லசித்தா மென்றற்**
**கொவ்வுமா றின்றே சித்து மொன்றெனிற் பகுப டாதே.**

*அந்த உருவெளித் தோற்றக் காட்சியானது அசித்துப் பொருளாய் உள்ள எந்த உருவத்தையும் சிந்தை விரும்பியவாறு மேற் கொள்வதுமே பகைமையற்ற அசித்தே ஆகும். இதுவும் சித்துப் பொருளில் அசித்துப் பொருள் தோன்றுமென்பதாகி ஒவ்வாததாகி விடும். மேலும் சித்துப் பொருளும் ஒன்றே என்று கூறினால் அது பல பொருளாய்ப் பிரிந்து நிற்காது.*

**54 உயிருடம் பாகா தவ்வா றொருசித்து மசித்தா யேய்பல்**
**பெயருடைத் தாய விந்தப் பிரபஞ்ச மாகா தின்மை**
**குயிலொரு சூனி யத்துங் குணிப்பொரு ளெதுவுந் தோன்றா**
**தியல்புட னுளதி லுள்ள வியல்புட னுளதே தோன்றும்.**

*உயிர் என்னும் சித்துப் பொருள் எக்காலத்தும் உடம்பாகிய அசித்துப் பொருளாக முடியாது. அதே போல ஒரு சித்துப் பொருள் அசித்துத் தன்மை பொருந்திப் பல பெயர்களைக் கொண்ட இந்த உலகமாக முடியாது. ஒரு பொருளும் இல்லை என்று கூறப்படும் சூனிய நிலையிலும் பண்பை இன்றியமையாத பண்பியாகிய பொருள் எதுவும் தோன்ற முடியாது. உள்ளபொருள் என்ற இயல்புடைய உள்ளது என்ற பொருளில் உள்ளது போகாது இல்லது வாராது என்னும் நெறியின்படி உள்ள பொருள் என்ற இயல்புடைய உள்ளதே தோன்றும் என்க.*

**55. தூலமெ னுடம்பை யன்றிச் சூக்கும வுடம்புண் டென்று**
**ஞாலமன் பதைநன் கோர நவில்கன வெல்லாஞ் சான்றாங்**
**காலொடு கைகண் மற்றைக் கருவியு மியக்க மில்லாத்**
**தூலநித் திரைக்க னாவிற் றுலங்குடம் பவற்றின் வேறால்.**

*நாம் கண்ணால் காண்கின்ற பருவுடம்பு மட்டுமின்றி உயிர்களுக்கு நுண்ணுடம்பு என்பதும் உண்டு என்று உலகத்தில் உள்ள மக்கள் நன்கு தெளிந்து கொள்ளுமாறு சொல்லப்படும் கனவுகள் யாவுமே சான்று கூறி நிற்கும். கனவு காண்பவன் ஒருவன் தூக்கத்தின் வசப்பட்டு அவன் கைகளும் கால்களும் மற்றும் உள்ள பொறிகளாகிய கருவிகளும் யாதொரு அசைவுமில்லாமல் கிடப்பதால் அவனது கன வில் செயல்படும் உடம்பு இவைகட்கு வேறாய் உள்ள ஒன்றேயாகும்.*

56. சாக்கிரப் பவஞ்சந் தூல சரீரத்தின் புசிப்பாய் நிற்குஞ்
சூக்குமப் பவஞ்சந் தானே சொப்பனப் புசிப்பாய் நிற்குஞ்
சாக்கிரப் பவஞ்சந் தூல பூதத்தைச் சாரு மாறு
சூக்குமப் பவஞ்ச மெல்லாஞ் சூக்கும பூதஞ் சாரும்.

*விழிப்பு நிலையில் உள்ள உலகம் பருவுடம்பால் நுகர்பொருளாக விளங்கும். சூக்குமப் பிரபஞ்சமானது கனவில் உயிர் நுகர்பொருளாக விளங்கும். விழிப்பு நிலையுலகம் தூல நிலையிலுள்ள ஐம்பூதங்களைச் சாரும். அவ்வழியே சூக்குமப் பிரபஞ்சம் யாவும் சூக்கும நிலையிலுள்ள பூதங்களைச் சாரும்.*

57. நனவிற்குஞ் சுழுத்தி யிற்கு நடுவுறு கனவி லந்த
நனவது மறைதல் போல நனவினிற் கனவுஞ் சாம்பும்
இனையநி யாயத் தாலவ் விரண்டையும் பொய்யாய் மெய்யாய்ப்
பனவிட னுண்டென் பார்நற் பதிநிச முணர்ந்த மிக்கார்.

*சாக்கிர அவத்தைக்கும் சுழுத்தி அவத்தைக்கும் நடுவில் உள்ள சொப்பன அவத்தையில் அந்தச் சாக்கிர அவத்தை மறையும். அதுபோலச் சாக்கிர அவத்தையில் சொப்பன அவத்தையும் மறையும். இந்த நீதியினால் சாக்கிரம், சொப்பனம் ஆகிய இரண்டையும் உண்மையானவை அல்ல, பொய்யானவை என்று கூறவும் இடமுண்டு என்று நல்ல பதியின் உண்மையை உணர்ந்த பெரியோர் கூறுவர்.*

58. துயிலிட நீத்துப் போந்தோர் தோகையைக் கூடு ஞான்று
துயிலிடங் கிடக்கு டம்பிற் காமநீர் சொரியக் காணும்
இயல்புமக் கனவின் கண்ணே யெய்தலிற் றூலம் விட்டே
அயலுறல் போலாஞ் சூக்க மயல்சென்ற தாகா தன்றே.

*ஒருவன் தான் தூங்கிக் கொண்டிருக்கையில் உயிரானது வேறோர் இடம் சென்று அங்கு ஒரு பெண்ணைப் புணருங் காலத்து அவன் தூங்கிக் கிடக்கின்ற தூல வுடம்பில் விந்து வெளிப்படுதலைக் காணும் தகைமையால் கனவில் சூக்கும வுடம்பு தூல உடம்பை விட்டு வேறிடம் சென்றது போலிருந்தாலும் சூக்குமவுடம்பு தூல வுடம்பைப் பிரிந்து வேறிடம் சென்றது ஆகாது.*

## *கனவதிகார முற்றிற்று.*

குமரகுருபரன் றிருவடிவாழ்க.

உ

# சைவ மகிமை

## அணிந்துரை

(வித்துவான் - அம்பை, **இரா. சங்கரனார்,**
*தலைமைத் தமிழாசிரியர், பச்சையப்பன் கல்லூரிப்பள்ளி, சென்னை-1)*

பாம்பன் - ஸ்ரீமத் : குமரகுருதாச சுவாமிகள் அறுமுகச் சிவத்தின் அருளைக் கைவரப் பெற்ற ஒப்பற்ற ஞானியாராவர். அவர் முருகப் பெருமான்மீது பாடிய செய்யுள் நூல்கள் பல; பல சிறந்த உரைநடை நூல்களும் ஆராய்ச்சி நலம் வாய்ந்தவையாய் எழுதியுள்ளார்கள். அந்நூல்கள் பல உண்மைகளைத் தம்மகத்தே கொண்டு கற்பார்க்குப் பல பழம்பெருநூல்களிலுள்ள உண்மைகளை ஒருங்கே எடுத்து தர வல்ல கருவூலமாயமைந்துள்ளன என்னில் மிகையன்று. இவ்வாறு பல நூல்கள் எழுதியுதவியதோடன்றிப் பல அன்பர்கள் வேண்டுகோளின் படி அங்கங்கு பல அரிய சொற்பொழிவுகளு மாற்றியுள்ளார்கள். அவற்றுள் ஒன்றே இந்நூலில் காணும் **சைவ மகிமை** என்பதாம்.

இது சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில்17.2.1919-ல் ஸ்ரீமத் சுவாமிகளால் ஆற்றப்பட்ட விரிவுரை யாகும். அதனை சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி., அவர்கள், 'சித்தாந்தம்' மலர் 4; இதழ் 11-ல் குறிப் பெடுத்து எழுதியுதவினார்கள். அவர்கள் அவ்வாறு பயன்படச் செய்ய வில்லையேல் இதில் காணும் பல அரிய உண்மைகளைச் சைவ வுலகம் அறிய வாய்ப்பில்லாது போகும். இக்கட்டுரையின் மேம்பாடு கருதி மீண்டும் 'சித்தாந்தம்' 1964 மலர் 37; இதழ் 9, 10-ல் யான் வெளியிட லானேன். பல பெருமக்கள் இக்கட்டுரையைப் படித்துப் போற்றுரை கள் அனுப்பினர். இக்கட்டுரைபோன்ற பழம்பெருமை வாய்ந்தவையைச் சித்தாந்தத்தின் வாயிலாய் வெளியிடுமாறும் வேண்டினர்.

இச் 'சைவ மகிமை' என்னும் கட்டுரையுள் அருள் திரு சுவாமிகள் சைவர் யார்?, திருநீறு, அக்குமணி முதலிய சமயச் சின்னங்கள் அணித லின் இன்றியமையாமை, சிவமந்திரத்தின் பெருமை, ஒரு மூர்த்தி வழிபாட்டில் உறைப்பாயிருக்க வேண்டியதன் அவசியம், சிறு தெய்வ வழிபாட்டை ஏன் நீக்க வேண்டும்? சிவபிரானின் அளவிடற்கரிய பெருமை, மகேசுவர பூசைச் சிறப்பு, ஐம்முகச் சிவமும் அறுமுகச் சிவமும் ஒன்றாந் தன்மை முதலிய பல சிறந்த உண்மைகளைப் பல அரிய மேற்கோள்காட்டி எடுத்துக் கூறுந் திறம் மிகவும் போற்றத் தக்கது.

"அம்பையகம்" — இன்னணம்
7-A/1, கோவிந்தன் சாலை, சென்னை-33. — **இரா. சங்கரன்**
*(22.3.1967)*

உ

ஓம் குஹேசாய நம :

# "சைவ மகிமை" என்பதன் பதிப்புரை

*சைவ மகிமை என்னும் பொருள்பற்றி, பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் சென்னை இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் 17-2-1919ல் செய்த சொற்பொழிவின் சுருக்கத்தை மேற்படி சுவாமிகளின் சீடர் உயர்திருவாளர் - ச. சச்சிதானந்தம்பிள்ளை, பி.ஏ., அவர்கள் மேற்படி ஆண்டு சித்தாந்தம் (மலர்4, இதழ் 11) என்னும் இதழில் முதன் முதலாக வெளியிட்டு உதவினார். இப்பொருளின் சிறப்பு நோக்கிப் பல்லாண்டுகள் கழித்து மீண்டும் ஒருமுறை 1964 செப்டம்பர் (மலர்-37, இதழ் 9) மேற்படி சித்தாந்த இதழில் அதன் உதவிப் பத்திராசிரியர் உயர்திரு. வித்துவான் அம்பை சங்கரனார் அவர்களால் வெளியிடப்பட்டது. இதனைப் படித்துணர்ந்த சித்தாந்த உறுப்பினருட் பல அறிஞர்களிடமிருந்து இவ்வெளியீட்டினைப் பெரிதும் பாராட்டிப் பல கடிதங்கள் மேற்படி சமாஜத்துக்கு வந்ததாக மேற்படி வெளியீட்டாசிரியர் வாயிலாக யான் உணரலானேன். மேற்படி சித்தாந்த உறுப்பினர்கள் மட்டுமின்றி ஏனைய சைவ அறிஞர்கள் பலருக்கும் பயனளிக்கும் என்னும் நோக்கத்தால் இதனைத் தனி நூலாக வெளியிட இசைந்தேன்.*

*இதில் ஆசிரியரால் சைவம் என்பது யாது எனவும், உண்மைச் சைவன் யாவனெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சிவ மூர்த்தங்களாகிய ஐம்முகச்சிவனார், அறு முகச்சிவனார் ஆகிய இந்த மூர்த்திகளில் யாதேனும் ஒரு மூர்த்தியினையே சைவன் உபாசிக்கக் கடவன் என்றும், சிவமந்திரங்களில், பஞ்சாக்கரம், சடக்கரம் என்னும் இரண்டில் யாதேனும் ஒரு மந்திரமே ஜபிக்கத்தக்கது என்றும், ஒரு தெய்வ வழிபாடே சிறந்த தென்றும், நால்வர் பெருமான்களும் அருணகிரிநாதனாரும் அன்னெறியில் நின்று காட்டினார்களென்றும், இவர்களையே சைவர்கள் யாவரும் பின்பற்ற வேண்டுமென்றும் பெரிதும் வற்புறுத்தியுள்ளார். "பல தெய்வவழிபாடு வியபிசாரம் போன்றது" என்றும் கூறியுள்ளார். இதுவன்றி "வெளிப் பூசைகளினின்றும், உட்பூசைகளே சிறந்தவை" என்றும், வெளிப்பூசைகளில் மாகேச்சுர பூசை சிறந்ததென்றும், சிவனடியவர்களைத் திருவமுது செய்விப்பது மாகேச்சுரபூசை என்றும் தெரிவித்துள்ளார். இதனைச் சிறப்பித்து சுவாமிகள் இயற்றியுள்ள* ***சேந்தன் செந்தமிழ்*** *என்னும் நூலின் 34-ஆம் செய்யுளின் விசேட உரையில் சுவாமிகளே தெரிவித்துள்ளதை ஈண்டுக் குறிப்பிடுவது அத்தியாவசியமெனக் கருதினேன். அது வருமாறு :-*

***"இறைவனுடைய அருளைப் பெறுதற்குரிய வழி அவனை முற்றிலும் நம்பியுள்ள பெரியோர்கட்கு இனிய உணவையிட்டு அவர்களை வழிபடலென ஈண்டு அருளிச் செய்யப்பட்டது.***

**இறைவனருளைப் பெற அவனடியவரை வழிபடல் ஏனெனின் அவன் வேண்டுதல் வேண்டாமையிலானாகலின். அடியவர் வழிபாட்டையே அவன் வழிபாடாக உவந்து கொள்கின்றான். இந்நுட்பமுணர்ந்தோர், அடியவர் வழிபாடு ஆவின் வாயிற் புல்லைக் கொடுத்து மடியிற் பாலைக் கறப்பதையும், அடியவரை வழிபடாது நேரே இறைவனை வழிபடல், மடியிலேயே புல்லைக் கொடுத்து அம்மடியிலேயே பாலைக்கறக்க நினைப்பதையும் ஒக்குமென்று ஏற்புடைமை கூறுப" என்பதாம். ஆசிரியர் பசுவின் வாயினை அடியவர் ஸ்தானமாகவும், மடியினை இறைவனது ஸ்தானமுமாகவும் குறிப்பிடுகிறார்.**

*ஸ்ரீமத்-பாம்பன் அடிகளார் திருவிராமேச்சுவரத்திலுதித்து அதனைச் சார்ந்த பாம்பன் என்னும் பதியில்வதிந்தவர். நால்வர் பெருமான்கள், அருணகிரிநாதனார் இவர்களைப் போலவே அடிகளாரும் ஒருமூர்த்தி வழிபாட்டினையே மேற்கொண்டவர். சில வருடங்கள் இல்லறத்தை நடாத்திப் பின்னர் துறவு பூண்டவர். மாணிக்கவாசகப் பெருமானார் திருப்பெருந்துறையில் சிவபெருமானாரால் நேரில் ஆட்கொள்ளப்பட்டது போலவே பாம்பன் அடிகளாரும் இராமநாதபுரத்தைச் சார்ந்த பிரப்பன்வலசை என்னும் ஊரில் நிட்டையிலிருந்தபோது ஸ்ரீ முருகப்பெருமானாரால் ஆட்கொள்ளப்பட்டார். இந்நிகழ்ச்சியினைத் தொடர்ந்தே சுவாமிகள் துறவறத்தை மேற்கொண்டனர். ஸ்ரீசிதம்பர க்ஷேத்திரத்தில் பல வருடங்கள் தங்கியிருந்து கடைசியாக சென்னை எய்தி 1929-ல் ஸ்ரீமுருகப்பெருமான் திருவடிப்பேறெய்தினார்.*

*அடிகளாரின் சமாதி நிலையம் சென்னையைச் சார்ந்த திருவான்மியூரில் அமைந்துள்ளது.*

*அடிகளார் தோத்திர சாத்திர வடிவமாகப் பலசெய்யுள் நூல்களையும், வசனவடிவில் பல நூல்களையும் இயற்றியுள்ளார். செய்யுட்களின் தொகை 6666 ஆகும். இவை ஆறு மண்டலங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. சாத்திர நூல்கள்- உபநிஷத்துக்கள், தேவாரம் முதலிய பிரமாணங்களால் மிளிர்வன.*

*இந்நூலுக்கு அணிந்துரை தந்து பாராட்டிய பேரன்பரும், பேரறிஞருமாகிய வித்துவான் - அம்பை. இரா. சங்கரனார் அவர்கட்கு என் மனமார்ந்த நன்றி உரியதாக.*

*இங்ஙனம்*
*மேற்படி சுவாமிகளின் சீடர்களில்*
*ஒருவன்*
*"குமாரச்சிவம்" எனப் பெயரிய*
**தா. வேங்கடாசல முதலியார்.**

*சென்னை*
*24.3.1967*

உ

சிவமயம்

# சைவ மகிமை

“ஆடும் பரிவேலணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவில்
சாடுந் தனியானை சகோ தரனே”

“இதய பங்கய குகரமே குகை என்பதாரிய பாடையில்
அதனுளாய சிதம்பரத் துளி யமலஞான விண்மெய்யனாய்ச்
சததமுஞ் சுகநடன மேபுரிதம்பி ரானையொர் குகனெனாக்
கதறுமா மறையவனை யன்றொருக டவுணாமறி யோமரோ”

“பத்தியும் ஞானமும் பரவிடு மார்க்கம்
எத்தனை யோவகை யிருக்கினு மிகத்தில்
முத்திதந் தனுதின முழுப்பல னல்கச்
சத்திய மாவது சரவண பவவே”

*இவ்வுபந்நியாச அறிக்கைத் தாளின் தலைப்பிலுள்ள “உருவாயருவாய் உளதாயிலதாய்..... வருவாய் அருள் வாய் குகனே” என்னும் பாடல் அருணகிரியார் வாக்கன்று. புஷ்பரதச் செட்டியார் முதன் முதலில் அச்சிட்ட கந்தரனுபூதிப் பதிப்பினின்றும், “தூசாமணியும்... பேசா அனுபூதி பிறந்ததுவே” என்னும் பாட்டோடு முடியும் 43 பாடலை மட்டுங் கொண்டது அந்நூல் என்று உணரலாகும். அக்கரங்கள் 51 ஆதல்பற்றிப் போலும் எட்டுப் பாடல்கள் பின்னர்ச் சேர்க்கப்பட்டன.*

*மேற்சொன்ன 43-ஆம் செய்யுளோடு கந்தரனுபூதி முடிகின்ற தென்பதே என் கொள்கையும்.*

*ஆன்மாக்கள் சார்ந்ததன் வண்ண மாந்தன்மையுடையன. யான் இன்று கூறுவது மஹாத்மத் தன்மையை யடைந்த பேர்கள் நீங்கிய ஏனையோரைக் குறித்ததாகும். அதைக்கேட்டு அதன் பொருளைச் சார்ந்து பயனுறுவீர்களென்பது என் கருத்து.*

*இன்று யானெடுத்துக் கொண்ட விஷயம் சைவ மகிமை என்பது. சிவசம்பந்தம் சைவம். இச்சம்பந்தம் எதனால் ஏற்படுவது? தீக்ஷை யினாலா? அதீக்ஷதர் காணா துண்ணலினாலா? புலாலுண்ணாமை*

யினாலா? அல்லது பரம்பரையாய் ஒரு குலத்திற் பிறந்த தன்மையினாலா? என்று கவனிக்க வேண்டும்.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் எல்லோருக்கும் தீக்ஷை செய்யப்படவில்லை. ஆகையால் தீக்ஷையே சைவம் என்று சாதித்தல் கூடாது. இப்படிச் சொல்லுவதால் தீக்ஷைசெய்து கொள்ள வேண்டாமென்று யான் சொல்லியவனாகேன். அறுபத்து மூவருட் பலர் அதீக்ஷதர். அதீக்ஷதர் காணாமலுண்பதால் பெறும் ஞானமென்னோ? அதீக்ஷதரோடு விவாக சம்பந்தங் கூடாதென்னுங் கட்டுப்பாடு அவரவர் குடும்ப லக்ஷணத்தை யொட்டி எழுந்த தொரு வரம்பென்க. தீக்ஷை பெற்றாருள்ளும் பெறாதாருள்ளும் நல்லவரும் தீயவரும் இருக்கக் காண்கிறோம். ஆதலால் தீக்ஷை பெற்றுக் கொள்ளன் மாத்திரையாலேயே இச்சிவ சம்பந்த உணர்ச்சி ஏற்பட்டுவிடுமென்று சாதிக்க இயலாது.

இனிப் புலாலுண்ணாமையைப் பார்ப்போம். புலாலுண்ணல் அநாசாரம். ஆனால் புலான் மறுக்கும் ஆசாரம் ஒன்றால் மாத்திரமே ஒருவற்குச் சைவம் சொந்தமாய்விடாது. ஆகும் என்றால் ஆடு, மாடு, யானை, ஒட்டை முதலிய சாகபக்ஷிணிகளுக்குச் சிறப்புச் சொல்ல நேரிடும். ஆகையால் புலாலுண்ணாமையை நல்ல ஆகாரம் என்ற அளவிற் போற்ற வேண்டுமேயன்றி, அதுவே சைவம் என்னல் அடாது.

இவை போன்ற வேறு சில அருமைகள் தாமும் சைவமாகிவிட மாட்டா. 'பூமிக்குழிக்குள் யானிருப்பவன் ஆதலால் யான் சைவன்' என்னலாகாது. என்ன? குழிக்குள்ளிருக்கும் தவளையும் சைவமாகுமாதலின். ஒருவன், 'யான் தலையில் காலை மாட்டித் தலை கீழாய்த் தொங்கவல்லேன். இது சிவத்துமல்லவா' எனின், வௌவாலும் அவ்வாறு தொங்குகிறதே என்க. 'யான் ஊர்களில் வசிப்பதில்லை, மலை வனங்களிலேயே சஞ்சரிக்கின்றேன். ஆதலின் யான் சைவன்' எனின் பிராணிகள் பல அப்படி வசிக்கின்றனவே என்க. 'யான் தண்ணீரில் செபிக்கிறேன். ஆதலாற் சைவன்.' என்று கூறில், அவர் செபிப்பது யாது? சிவமந்திரந்தானா அன்றா என்று சோதிக்க வேண்டும். அஃதாயின் மீனைக் காட்டினும் விசேடமுண்டு என்று கூறலாம். 'புண்ணிய தீர்த்தத்தில் மூழ்குவதால் யான் சைவன்' என்னில், மீன்கள் ஏகதேசமாக வன்றி எப்போதும் அப்படி மூழ்கியுள்ளனவே என்க. 'நல்ல பாடல் பாடுகின்றேன். அதனால் யான் சைவன்' என்னில், வானம்பாடியும் குயிலும் இனிமையாய்ப் பாடுகின்றனவே என்க. 'சைவத்திருமுறை வைத்துக் கொண்டு

*பாராயணம் பண்ணுகின்றேன்' என்னில் அது மிக நல்லதேயாயினும் அஃதொன்றினால் மட்டும் ஒருவன் சைவனாய் விடுமாறில்லை என்க.*

*இவ்வாறே உள்ளானைப் போலும் மாடப் புறாவைப் போலும் நிற்றலாலும் சைவம் வாய்த்துவிடாது. பாம்புபோல் சின்னாள் வாயுபக்ஷணம் பண்ணுதலாலும், பட்டினியாயிருத்தலாலும், காட்டுக் கழுகுபோல் சருகுண்பதாலும், பறவைபோல் ஆகாயத்தில் பறத்தலாலும், பூசஞ்சாரம் செய்வதாலும் அது சித்திப்பதில்லை.*

*இப்படியே மூச்சடக்குவதனாலும் தனிச் சிறப்பில்லை. முத்துச் சலாபங் குளிப்பார்க்குமது கைவருமாதலின். "யோகிகள் பிராணாயாமம் பற்றி எழுதியுள்ளார்களே" என்னில், சிவயோகிகள் எழுதியிருந்தால் அது பற்றி யோசிப்பாம் என்க. தேகாப்பியாசத்தால் தேகம் வலுப்படுவது போலப் பிராணாயாமத்தால் வாதபித்த சிலேத்தும சமத்துவம் உண்டாகலாம். ஆனால் ஆபத்தும் விளையலாம். துருத்தியைக் கும்பித்து யானும் இளமையில் பிராணாயாமம் சிலகாலம் செய்தேன்; அது வேண்டா மென்று உணர்த்தப்பட்ட பின்பதை நிறுத்தினேன்.*

"எரிபெ ருக்குவ ரவ்வெரி யீசன
துருவ ருக்கம தாவ துணர்கிலார்
அரிய யற்கரி யானை அயர்த்துப்போய்
நரிவி ருத்தம தாகுவர் நாடரே"

"கான நாடு கலந்து திரியிலென்
ஈன மின்றி இருந்தவஞ் செய்யிலென்
ஊனை யுண்ட லொழிந்துவான் நோக்கிலென்
ஞான னென்பவர்க் கன்றிநன் கில்லையே"

"வேத மோதிலென் வேள்விகள் செய்யிலென்
நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதி யங்கமோ ராறு முணரிலென்
ஈசனை யுள்குவார்க் கன்றி யில்லையே"

"கூட வேடத்த ராகிக் குழுவிலென்
வாடி யூனை வருத்தித் திரியிலென்
ஆடல் வேடத்த னம்பலக் கூத்தனைப்
பாட லாளர்க்கல் லாற்பய னில்லையே"

"கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடினாலு மரனுக்கன் பில்லையேல்
ஓடு நீரினை யோட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்க னோடொக்குமே"

என்னும் அப்பர் திருவாக்குகளை ஊன்றிப் பார்க்க. யான் மேலே கூறியவை தவத்திற்குரியவை எனினும், அவை சிவத்தை முன்னிட்டுச் செய்யப்படாவிடின் சைவத்திற்குரியனவாகா.

"அவனை யொழிய வமரரு மில்லை
அவனன்றிச் செய்யு மருந்தவ மில்லை
அவனன்றி மூவரா லாவதொன் றில்லை
அவனன்றி யூர்புகு மாறறி யேனே"

என்ற திருமந்திரத் திருவாக்கை யுன்னுக.

சிவம் என்பது அந்வய நாமம். முத்திக்குச் சிவம் என்னும் பேருண்டு. எனவே **முத்திவிரும்புவோரெல்லாரும் சைவர் என்று கோடல் கூடும்.**

சிவத்திற்குத் தடத்த லக்ஷணம் எனவும், சொரூப லக்ஷணம் எனவும் இரண்டு லக்ஷணமுண்டு. இவற்றுள் தடத்த லக்ஷணச்சார்பாக மட்டும் இங்குச் சில விவகரிப்பேன். திருநீறு, திருக்கண்மணி, சிவமந்திரம், சிவனுருத் தியானம், சிவனடியவர் பூசை ஆகிய இவை சிவசம்பந்தமாகி ஒருவனைச் சைவனென நிறுவும். இவையுடையானைச் சைவனென அழைக்க யாதொரு தடையுமில்லை. இவற்றுள் ஒன்றிரண்டு பொருந்தாவிடினும், இரண்டு முக்கியம். அவை சிவநாமோச்சாரணமும் சிவனடியார் பூசையும். சிவமந்திரம் பல விருப்பினும் சிவ சப்தமுள்ள மந்திரமே சைவத்திற்குரியது. அச்சப்தம் முற்றும் சிவமந்திரம். அதனோடு ஒட்டி வேறு எதையும் சேர்க்கலாகாது. அச்சப்தம் சிவனை முன்னிட்டிருப்பது; சிவனாணை வழி நிற்றலும் கேட்கப்படும்; எனவே 'சைவன்' என்னுஞ் சொல் மிகச் சிறப்பாக ஏற்படுவது. சிவனது மகிமை எங்கெங்குச் செல்லுகின்றதோ அங்கெல்லாம் இச் சப்தமும் எழும்.

இச்சிவமூர்த்தியின் விடயமாக ஒரு நிலை எல்லாத் தத்துவங்கள் வரையிலுமுள்ளது. இது சமயநிலை. மற்றொன்று தத்துவாதீதமானது. இது சமயத்திற்குப் புறம்போ எனின், அன்று.

"சைவ சமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டுமிந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந்துழலும் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந்
தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே"

என்னும் தாயுமானார் திருவாக்கைக் கருதுக. பிறசமயங்களைப் பற்றி யான் பேசவரவில்லை. அவைகளைப் பற்றிப் "பொய்

வந்துழலும்'' என்று தாயுமானார் புகன்றதன் கருத்தை, 'சமயாதீதப்பழம்பொருள்' என்றதை விளக்கு முகத்தால் புலப்படுத்துகின்றேன்; சைவ சமயம் ஒரு மரம் போன்றது. அதில் இலை, அரும்பு, காய், கனி உண்டு. கீழ்நிலையினும் மேல்நிலை ஏற்றம். எங்கே ஆதி ஏற்பட்டதோ அங்கே அந்தமுமுண்டு. பழத்தில் வித்துண்டு. மேற்பாடலில், 'பழம்பொருளை' என்பதற்குப் 'பழமாகிய பொருளை' என்று பொருள் கொள்ளலாம். அதனைச் சைவம் தன்பாற் கொண்டுள்ளது. கிளையிலுள்ள வரை பழம் மரத்தோடு சேர்ந்தது. கிளையை விட்டு நீங்கின பின்பே புசிப்பர் மானிடர். அப்படி வேறுபடுத்துந் தன்மையில் சைவம் சமயாதீதமாகின்றது, ஆனால் அப்போதும் அது பழமே. கொம்பரை விட்டுக் களைந்தது தான் வேறுபாடு. சமயமே ''சமயங் கடந்தமோன சமரச''மாய் விடுகின்றது. ஆனால் பழந்தின்றவன் காய்தின்னான் என்னும் நுட்பத்தையு முணர்க*.

ஆயின், ஒவ்வொருவனும் வரிசையாகத்தான் சமய ஏணிப்படியிற் போக வேண்டுமோ? சாமுசித்தனாவான் முற்பிறப்பில் விட்ட விடத்திலிருந்து, இப்பிறவியில் தொடங்குவன். ''எப்போது விரத்தி தோன்றிற்றோ அப்போதே ஞானநெறி நிற்க'' என்பது சுருதி. இதற்குக் கால வரம்பில்லை. சரியை கிரியை யோகங்களை எந்நாளும் ஒவ்வொருவனும் செய்யவேண்டுமென்னல் தவறு. வேண்டு மென்னில், ஒரு நாளும் முத்தியில்லாமற் போம்.

இங்ஙனம் கூறிய சைவ சமயம் இறைவ னனுக்கிர கத்திற்கு நிலைக்களமாய் விளங்குவது. இவ்வநுக்கிரகத்தை ஐம்முகச் சிவம் அறுமுகச் சிவம் என்னும் இரண்டு மூர்த்தி விஷயமாய்ப் பெறலாகும். இங்கு ஐம்முகச்சிவனைப் பற்றி பேசுவல். சாதகற்குச் சமய ஏற்பாடு அவசியம். அஃதில்லா விடில் அவன் முயற்சி, காலில்லாதவன் நடக்க முயலுவதை யொக்கும். மக்கள் வாழ்க்கைக்கு ஏதோ ஒரு சமயம் வேண்டும்.

---

*இங்கு, கீழ்வரும் மேற்கோளைக் கருதிக் கோடல் பயனுடைத்தாம் :-
"சைவ சமயமே சமயம்" என்றதிலுள்ள ஏகாரம் - குழுவினின்று பிரிக்கும் பிரிநிலையாம். துணிதற் பொருடரு தேற்றே காரமெனினுமிழுக்காகாது. "சைவசமயம்" என்பது தளிர்த்துப் பூத்துக் காய்க்குமொரு தருவொக்கும். "சமயா தீதம்" என்பது அத்தருவிற் பழுக்கும் பழம் கொம்பரை விட்டு நீங்கி அனுபவிப்பார்க்கு அனுபவப் பொருளாதலொக்கும். "இல்லது வாராது" எனு நியாயத்தின்படி இருந்து பழம்போல் வெளிப்படத்தக்க அது "பழம்பொருள்" எனப்பட்டது.

-ஸ்ரீமத் சுவாமிகளே அருளிச் செய்த சைவ சமய சரபம் :
பக்கம் 306 (ச.ச.)

‘திக்பஸ்ம ரஹிதம்பாலம், திக்கிராமம் அசிவாலயம், திக் அநீசார்சனம் ஜன்ம, திக்வித்யா மசிவாச்ரயாம்’ என்னும் சுருதி யாரை நோக்கிக் கூறுகின்றது? பொதுவில் யாவரையும் நோக்கியே. இந்த பிருஹஜ்ஜாபாலச் சுருதியின் பொருள் : “பஸ்ம மணியாத நெற்றியைச் சுடு, சிவாலயமில்லாத கிராமத்தைக் கொளுத்து, சிவார்ச்சனை இல்லாத ஜன்மத்திலே தீயை வை, சிவனை யாச்சிரயிக்காத சாத்திரத்தை எரித்து விடு” என்பதாம். எனினும் சிவனடியார்க்கு அது சிறப்பு வகையில் முக்கியமாகும். “பூத்யின ப்ரமதி தவ்யம்” என்னும் தைத்திரீயம் திருநீற்றை விடக்கூடா தென்று வற்புறுத்தி ஆணையிடுகின்றது. சிலர், ‘மனக்குவிவைப் பற்றி இப்படி வற்புறுத்தாது சாம்பற் பூச்சுக்கு இந்த மகிமை தருவது எற்றுக்கோ? திருநீறணிதலென்னும் விதி அவசியம்தானோ?’ என்று ஆசங்கிப்பர். கடவுள் எதை எதை ஏன் அமைத்தார் என்று நாம் காரணஞ் சொல்ல முடியுமா? ஒரு மரத்தில் பூக்கள் பல நிறத்தோடு பூத்தற்குக் காரணங் கூற முடியுமோ? முகத்தில் இரண்டு கண்ணுமிருப்பானேன்? பின்புறமேன் இருகண்களில்லை? இப்படிப் பல கேட்கலாம். ஆகையால், எது சிவனால் கட்டளையிடப்பட்டதோ அதைச் செய்க. ‘செய்யாமலிருந்தாலென்ன’ என்பது ‘கடவுள் கட்டளையை மீறினாலென்ன’ என்று கேட்பதே யாகும்.

ஆனால் இங்குக் கவனிக்க வேண்டியது, இது கடவுள் கட்டளை தானோ என்பது. ‘மந்திரமாவது நீறு’ ‘வேதத் திலுள்ளது நீறு’ என்றெல்லாம் எழும் ஆளுடைய பிள்ளையார் திருவாக்கே சாக்ஷி. அவர் அது கொண்டு சமணக் கூன்பாண்டியன் சுரந்தீர்த்தார். அச்சுரத்தைத் தீர்க்க அவருக்கு வேறு வகையிருந்தும், சைவ சின்னமாகிய விபூதியைக் கொண்டு நீக்கி அதன் பெருமையை நாட்டினார். **நோயைக் கொல்ல விபூதி கருவியாயிற்று.** சிவபெருமான் திருவுள்ளத்தை நாமறியாவிடினும் இக்காரியத்தில் திடபத்தி யுண்டாக வேண்டும். வேறு மருத்துவ நூற்காரணங்களு மிருப்பினுமவை ஈண்டு வேண்டப்படா. சிவனாணைக்குக் கீழ்ப்படிக. “வெண்ணீறணிகிலாதவரைக் கண்டால் அம்ம நாமஞ்சுமாறே” என்றவிடத்து, சிவவழிப்பட்டார்க்கு இது போதிக்கத்தக்கது. படாதார்க்குப் போதிக்கத் தக்க தன்று என்பது மணிவாசகர் கருத்து. ஒரு சமய இனத்தவரென்னும் சமய ஒற்றுமை நோக்கி இங்ஙனம் அருளினாரென்று நினைக்கின்றேன்.

இங்கு ஒரு சிறிது சைவ சமய குரவர் பெருமையைக் குறிக்கக்கடவேன். அவர்கள் தெய்வ மகிமை பெற்று விளங்குவோராவர். வடமொழியில் பல ஆசிரியன்மார்கள்

நூல்களுள. ஆனால் அவையெல்லாம் அவ்வம் முனிவர்களருளிய மொழிகளே என்பதற்குச் சான்றில்லை. அன்றியும் அவை மிகவும் பண்டையன. ஆனால் நால்வர்கள் கருத்துக்களை அறிவிக்க அவர்கள் அருட்பாடல்களே உள்ளன. அவை எழுந்த காலமும் இரண்டல்லது மூன்றாயிர ஆண்டுகட் குட்பட்டதே. பதினெண் புராண வாக்கியங்களனைத்தையும் வியாசவாக்கியம் என்ன முடியாது. பிரம சூத்திரம் மட்டும் அவர் வாய்மொழி யென்னலாம். பாடியம் எழுதினோர் சுருதி துணைகொண்டு பலவாறு எழுதி, அவரவர் உரையையே 'சுருதி சம்மதித்தது' 'சரஸ்வதி ஒப்பியது' என்றெல்லாம் உயர்த்திக் கூறலாயினர். இந்நூல்களை யெல்லாம்விட நம் சமயாசாரியர் அருளிப்பாடுகள் சிறந்தவை. **அவர்கள் செயல்கள் சிவன் ஒருவனுளன் என்பதைக் காட்டுகின்றன.** இதையும் நம்பாத ஒருவன் வேறெதைத்தான் நம்புவான்? மற்ற பல நம்பிக்கை களினின்றும் அவர்கள் வாக்கியங்களை நம்பல் சிறந்ததாகும். அவர்கள் பாடல்களைச் சிவபெருமான் அங்கீரித்துள்ளார். அவர்களை நம்பினோர் அவர்கள் அடைந்த இடத்தை அடையலாம்.

இனி 'உருத்திராக்க' மென்பது 'ருத்ரம்' 'அக்ஷம்' என்னும் இரண்டு சொற்களாலாயது. அதன் வரலாறு நீவிரறிந்ததே. அதுவும் சிவசம்பந்த முடையது. திருநீற்றிற்குள்ளது போலவே இதற்கும் மகிமையுண்டு.

சிவ மந்திரமாவது மறக்கக்கூடாததோர் தெய்வவொலி யென்று சுந்தரமூர்த்தி நாயனார் "நற்றவாவுனை நான் மறக்கினும் சொல்லுநா நமச்சி வாயவே" என்னும் அரிய மொழிகளால் அறிவுறுத்தியருளினார். இம்மந்திரம் வேத இதயத்துள்ளது. சைவர்க்கு இது இன்றியமையாதது. **'மந்திரம்' என்னுங்கிளவி, 'நினைப்பவனைக் காப்பது' என்னும் பொருளுடையது.** இச்சிவமந்திரத்தைத் தூலம், சூக்குமம், காரணம் என்று நூல்கள் பிரிப்பினும் அவை யெல்லாம் உண்மையில் ஒரே பயனுள்ளவையே. ஆகமக்காரர் இதில் பதி பசு பாச லக்ஷணங் கூற முற்படுவர். எனக்கு இதில் தடையில்லை. இம்மந்திரம் செபிப்போர் பிறமந்திர மெதையுங் கையாளார். பின்னர்க் காரணங் காட்டுவல். எனது கோட்பாட்டை,

"மடமோட்டும் கருணைதனை மறவேன்
நெஞ்சுள வளவுமாற் றார்நூலைத்
தொடமாட்டே னவருரைக்கு முரைகேளே
னனியாயத் தொடக்கர் கோட்குட்

படமாட்டே னருள்சுரந்து வினாயவொரு
மொழிப்பயனிற் படரு நோக்கம்
விடமாட்டே னினிதளித்தி யெனதுகுகப்
பிரமமென விளங்கெம் மானே"

*என்னும் பாட்டுணர்த்தும்.*

*ஆசாரிய சுவாமிகள் நால்வரும் ஒரே தெய்வ உபாசகர் என்பதைச் சைவர்கள் கருத்தூன்றிப் பார்க்க வேண்டும். பின்வரும் எடுத்துக்காட்டுகளைக் கருதுக :.*

"கருமா னுரியாடைக் கரைசேர் கண்டத்தெம்
பெருமான் கழலல்லால் பேணா துள்ளமே" – **சம்பந்தர்.**

"சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்" – **அப்பர்.**

"மறிசே ரங்கையனே மழபாடியுண் மாணிக்கமே
அறிவே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே" – **சுந்தரர்.**

"கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடியா ரொடல்லால் நரகம் புகினும்
எள்ளேன் றிருவரு ளாலே இருக்கப்பெறி னிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல்லா தெங்க ளுத்தமனே" –
**மணிவாசகர்.**

*இங்ஙனமே அருணகிரிநாதரும்,*

"படிக்கின் றிலைபழ நித்திரு நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காவென் கிலைமுசி யாமலிட்டு
மிடிக்கின் றிலைபர மானந்த மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச மேது நமக்கினியே"

*என்று முடிவாகக் கூறுகின்றார். இன்னன பல்ல. இந்நிலை வடமொழி மறைக்கும் சம்மதமானது.*

உதாரணம் :–

(அ) "சிவ ஏகோத்யேயச் சிவம்கரஸ் ஸர்வமந்யத் பரித்யஜ்ய" **(அதர்வசிகை)**

*(பொருள் : அந்நியமான யாவையும் விட்டு, சிவ மெனும் பெற்றியால் மங்களத்தைச் செய்யும் சிவனையே தியானிக்க வேண்டும்.)*

**(ஆ) "தஸ்மாத் ஸர்வாந் பரித்யஜ்யத் யேயாந்**
**விஷ்ணவாதி காந்ஸுராந்**
**சிவஏவ ஸதாத் யேயஸ் ஸர்வ ஸம்ஸார மோசக :" (சரபோபநிஷத்)**

*(பொருள் : ஸம்ஸார துக்கநாச முக்திப் பிராப்தியின் பொருட்டு விஷ்ணு முதலிய சர்வ தேவர்களையும் விட்டு எஞ்ஞான்றும் தியேயனாகவுள்ள சிவனையே தியானிக்க வேண்டும்.)*

*இவை போன்ற பிரபலப் பிரமாணங்களால் ஒருவனுக்குப் பல மூர்த்தி வழிபாடு கூடாது என்று கூறுவது நன்றாய்த் தெரிகின்றது. ஒரே மூர்த்தியும் ஒரே மந்திரமும் வேண்டும். இதைச் சைவர் நன்கு கவனிப்பதில்லை. பல தெய்வ வழிபாடு அவர்கட்குக் கூடாது. சொரூப லக்ஷணத்திற்குப் போனால் எல்லை ஒன்றும் ஏற்படாது. அது ஞானிகட்குரியது. ஏனையோர் உருவத்தைப் பற்றிச் செல்வோர், சரியையாதி மூன்றும் மூர்த்தியைப் பற்றியவை யாதலின். சொரூபம் மூர்த்தமல்ல. மூர்த்தி அதற்கு ஆசாரியன். பெரும்பாலோர் சாரூபத்திற்குள் நிற்போர். இவர்கள் ஒரே மூர்த்தியை வழிபடாவிடின், பொதுக்கதிக்குரியராய் இந்திரபத மட்டும் கிடைக்கப் பெறுவர். தியானமென்பது ஒரு மூர்த்தி பாவனையிலாவது; இரண்டு மூர்த்தி யுபாசனை கூடாது. இப்படிச் செய்வது, ஒரு கோயிலை இடித்து இன்னொரு கோயிலைக் கட்டுவதையொக்கும். சிவனையே கதியாகக்கொள்பவன் விண்டுவாதி தேவர்களை விடவேண்டும். பிற மூர்த்தியுபாசகர்கட்கும் இதுபோன்ற நியமம் ஏற்றதே. ஆனால், மற்ற தேவர்களைக் கண்டால் பொதுவகையில் வழிபடுமின். பலசில்லரை மந்திரங்களை விரும்பன்மின். எத்துன்பம் வரினும் உம்மொரு மூர்த்தியையே கொண்மின். ஆசாரிய சுவாமிகள் நால்வரும் சிவனைத் தவிர வேறெத் தெய்வத்தின் மேலும் பாடவில்லை கருதுமின். அவர்கள் காலத்துக்கு முன்பு பல தெய்வ வழிபாடிருந்தது. அவர்கள் ஒரே தெய்வம் வேண்டுமென்று வற்புறுத்தினர்.*

*கிறிஸ்துவ மதத்தில் கிறிஸ்துநாதரே மூர்த்தி ஸ்தானத்திலுள்ளார். இஸ்லாத்தில் முகம்மது நபி அந்நிலையில் நிற்கின்றார். இவ்வுண்மைகளை யெல்லாம் கருதி, சைவ சமயாசாரியார்கள் உபதேசித்தருளியபடி சைவர் ஏகமூர்த்தி வழிபாட்டில் உறைத்து நிற்கக் கடவர்.*

*உங்கட்குச் சிவன்கூட வேண்டியதில்லை; சம்பந்தரைப் பற்றினால் சாலும். இவரைப் பற்றினால், சிவனைப் பற்றியுள்ள இவர், அவரிடம் உங்களைச் சேர்ப்பர். சீகாழிக் கண்ணுடைய வள்ளலார்க் கிம்முறை பயன்பட்டது.*

"என்னாணை யென்னாணை யென்னாணை யேகமிரண்
டென்னாமற் சும்மா இருவென்று - சொன்னான்
திருஞான சம்பந்தன் சீகாழி நாட
னருளாளன் ஞான வினோதன்"

*என்னும் அவர் திருவாக்கால் உணர்க.*

*முத்தியிலிருப்பவர் தோன்றுவரோ என்று ஐயுற வேண்டா. திருவுளப்பாட்டின்படி எதுவுமாம். அதனால் அவர் முத்திநிலை கெடாது. இப்படிப் பலரிருக்கலாம்.*

*இப்பெருநிலை இந்நாட் சைவர்க்கு வெகு தூரமாய் விட்டது. நால்வர் பாட்டைத் தாளம் போட்டுப் பலர் பாடுகிறார்கள். ஆனால் பல தெய்வங்களையும் கும்பிடுகிறார்கள். இச்சென்மம் கடைத் தேறுதற்கு ஒரு தெய்வ வழிபாடு அவசியம்.* **இது செய்யாதவன் முத்தி மார்க்கத்தின் முதற்படியிலும் கால் வைக்காதவன் என்று கட்டுரைக்கின்றேன்.** *அன்புடையீர்! காட்டேரி, மாரி முதலிய வற்றைக் கும்பிடாதீர்கள். அதனாலுங்கள் பக்தி கெடும். அத்தேவதை களே வந்து கேட்டால் உணவு கொடுங்கள். நீங்களாக வரவழையா தீர்கள்.* **நீங்கள் வணங்கற்குரிய ஏக மூர்த்தியை முற்றிலும் நம்புங்கள்.** *வினைவழி துன்பம் வரும். வந்தாலும் அம்மூர்த்தி வழிபாட்டில் நழுவாதீர்கள். வீடு வாசல் போகத்தான் வேண்டும்.*

"வானமிடிந்து தலையில் விழும்படி
வம்புவந்தாலும் என்னை - அந்தக்
கானமயில் முருகையன் திருவருள்
கைவிட மாட்டாதே"*

*என்னும் உறுதிப்பாட்டை உய்த்துணருங்கள். தன்னுயிர் போமளவும் இயேசுநாதர் கடவுளை விடவில்லையே! கருதுங்கள். பல தெய்வ வழிபாடுடை யானொருவனை நோக்கி, "நீ யாருடைய பக்தன்" என மற்றொருவன் வினவின், அவன் என்ன சொல்லுவான்? பசபசவென விழிப்பானன்றே! 'ஆண்டவன் பக்தன்' என்னலிற் சாரமில்லை! பொதுவாதலின். அன்னாற்குச், சிவ சந்நிதியிற் பாத்தியமில்லை.*

*இந்நாட்டில் எழுந்த அநந்த நூல்களில் சிவனே பிரபலமூர்த்தியாயுள்ளார்; அவருக்குப் பல வடிவமுண்டு. மண்டை மாலையும் கோரரூபமும் உள்ளனவே என்னில், அக்கோலம் சங்கார*

*இது சுவாமிகள் அருளிச் செய்த சமாதான சங்கீதத்தின் சரணங்களி லொன்று. (ச.ச.)

கிருத்திய மூர்த்தியாகிய ஒரு மூர்த்திக்குத்தான் உண்டு. சிவன் நிரம்பிய அழகிய மூர்த்தி. இரு கரங்களோடுங்கூட வருவார். இயமனுக்குக்கூட இச்சத்தி யுள்ளது. இராமர் ரிஷிபத்தராதலால் அவர் கடைசிக் காலத்தில் இயமன் ரிஷியாய் வந்தான். இயமனுக்குள்ள இச்சத்தி சிவனுக்கா இராது? சிவனுக்குத் தன்னுபாசகர் வேண்டு முருவமெல்லாம் எடுக்கும் ஆற்றலுண்டு. எப்போதுமே மண்டை மாலையுடைய வரவரென் றெண்ணற்க. எப்போதும் அவர் கொண்டுள்ள வடிவம் மகரிஷி வடிவம். ரிஷிகளால் வேண்டப்பட்டு அவர்கட்கு நாயகமாய்ச் சிவனார் விளங்குவர். ரிஷிகளை அரசர் வணங்குவர். "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே" என்று புகழப்படுந் தன்மையுடையரே யெனினும், அரசரை ரிஷிகள் வணங்கார். இப்பெருமையுடைய ரிஷிகளும் தேவர்களும் மனிதர்களும் வணங்கும் மஹரிஷி சிவனென்றுணர்மின். ஆதலின் அவரை வணங்குவோரே மோக்ஷம் பெறுவர். பிறதேவரெவரும் தம்முபாஸகர் மனிதராய் வந்த பிறகுதான் தம் கதிகொடுப்பர். ஆனால் கதி நாயகரான சிவனாரோ அஃறிணையுயிர்ப் பொருள்கட்கும் பரகதி கொடுத்துள்ளார். குரங்கு, கரிக்குருவி, பைஞ்ஞீலி, வாழை முதலியவற்றிற்கும் முத்திநல்கிய செய்தி கருதுக.

இதுகாறும் விவரித்த வாற்றால் சைவர்க்கு வாய்த்த சிவமாந் தெய்வமும், சிவமந்திரமும், உபகரணமும் பெருஞ் சிறப்புடையன என்பது போதரும். இப்பெரும் ஆதிக்கத்தைக் கைவிட்டு, சைவர் ஏன் விலகவேண்டும்? கிறிஸ்துவர், முகம்மதியர், புத்தர் முதலிய மதத்தினர் தத்தம் நிலை நல்லதென்று கொண்டு அதன் நெறியிற் செல்லா நிற்க, சைவர் மட்டும் ஏன் தங்கள் பெரும் பாக்கியத்தை உதைத்துத் தள்ளவேண்டும்? அதுபெரும் பாவமாகு மன்றோ!

இங்கோர் மறைபொருளாயுள்ள உண்மையை விளக்குவல்; திரிகால ஞானமுடையாரை அதுகொண்டே ஞானியென்னல் கூடுமோ என்பதுவிடயம். சிவஞானங் கொண்டு பார்த்தால் திரிகாலஞான மட்டுமல்ல, பதிஞானமுமுண்டாம். இப்பதிஞானத்தால் பார்ப்போர்க்கு உலகம் தோன்றாது. வெளியே பன்னிரண்டங்குலம் ஓடும் வாயுவை ஆறங்குலத்தி லடக்கும்போது, திரிகால ஞானமுதிக்கும். அந்நிலையிலும் ஆன்மதரிசனம் வாய்ப்பதில்லை. மனம் பக்குவப்பட்டு நிற்பதே கிட்டிய பயன். அது ஆத்மசக்தி; சிவசக்தியன்று. அது உட்கண்; மனநிரோதத்தில் திறக்கும். அதுவே சிவஞானமன்று. சிவஞானத்திற்கு மிகவும் தாழ்ந்தது. சிவனை விட்ட எந்த ஞானமும் பிரயோஜனப்படாது. உட்கண்

திறக்கப் பெற்றானொருவன் சிவனதுருவத்தைப் பார்க்கவும் கூடும். எனினும் அதனாலேயே அம்மூர்த்தியின் சிநேக பாத்தியம் கிடைத்துவிடாது. அப்பாத்தியத்தைச் சம்பாதிக்க வேண்டும். சிவனடியவன் என்னுந் தன்மைக்கு இந்தத் திரிகால ஞானமுங் குறைந்ததே.

இனிச் சிவனுடைய எட்டு மூர்த்தங்களாவன :- ஐந்து பூதங்கள், சூரிய சந்திரர்கள், ஆன்மா என்பன. சித்து, அசித்து, சிதசித்து எல்லாமிவற்றிலுண்டு. அநுக்கிரகார்த்தமாக அவர் கரசரணாதிகளோடு தோன்றி யருளுவார். ஆன்மாவில் அவர் அந்தரியாமியாயிருத்தலால் அவரைப் பற்றிப் பிடிக்குமாற்றலில் மனிதர்கள் வேறு பாடுடையராயுள்ளார்கள். சைவர் சிவனென்னு மூர்த்தியைச் செவ்வனே பற்றி வழிபடக் கடவர். இன்றேல் உயர்கதி வாய்க்காது. பல தெய்வ வழிபாடு வியபிசாரம் போன்றது. வெளிப்பூசைகளிலும் உட் பூசைகளே சிறந்தவை.

**“யதா சர்ம வதாகாசம் வேஷ்ட யிஷ்யந்தி மாநவா :**
**ததா சிவமவிஜ் ஞாயது : கஸ்யாந்தோ பவிஷ்யதி”**

என்ற சுவேதாசுவதரச் சுருதியைக் கருதுக.

(இதன் பொருள் : எப்பொழுது மனிதர்கள் ஆகாயத்தைச் சர்மமாக எடுத்துப் போர்த்துக் கொள்வார்களோ அப்பொழுதுதான் சிவஸேவை யின்றித் துக்கமற்ற மோக்ஷத்தை யடைவார்கள்.)

சிவ சேவை இல்வழி எந்த ஞானமும் கீழ்ப்பட்டதே.

சிவனை அறிந்தன்றி மிருத்தியுவைத் தாண்டவியலா தென்றும் பிரபல சுருதி முழங்கும் : ஆனால், “காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே” என்பதையும் மறக்கவியலாது. காணும் வேட்கைதேவை. பாவியாயினும் சிவ சப்தத்தால் சைவனாக வேண்டும்.

யானும் அறுமுகச் சிவனை வணங்கும் ஒரு சைவனே. யான் பிரப்பன்வலசைக் காட்டில் நிட்டை கூடியிருந்த காலத்து, ஒரு நாள் விடியுங்காலம் சுமார் 3 மணி வேளையில், ‘நிட்டையிலிருந் தெழுந்துவிடு’ என்னுமொரு சப்தம் எனக்குக் கேட்டது. ‘எழேன்’ என்று இருந்தவிடத்திருந்தேன். ‘நீ எழுந்துவிடவேண்டும்’ என்று முன்னிலும் பெருத்ததோர் தொனி உண்டாயது. அதற்கும் யானசையவில்லை. ‘ஏகாதச ருத்திரர் வருகின்றனர் எழுந்திரு’ என்னும்

*ஆணை பிறந்தது. 'முருகவே ளாணை வரினல்லது எழுந்திரேன்' என்று எனக்குள் விடையிறுத்தேன். பின்பு 'முருகனே இக்கட்டளை யிடுபவன்' என்று உணர்த்தப்பட்ட வளவில் வணங்கி எழுந்தேன். இது போன்றதோ ருறுதியோடு நின்றா லன்றி எப்பெரும் பேற்றையும் அடைய இயலாது. ஆதலின் நன்னெறியில் இயன்ற மட்டும் உறுதியோடு நின்மின்கள்.*

**வெளிப் பூசைகளில் மாகேச்சுர பூசை சிறந்தது.** *சிவனடியார்க்குத் திருவமுது செய்விப்பது மாகேச்சுரபூசை. மெய்யடியாரைக் கண்டு பிடித்தலருமை யாதலின், அப்பூசையைப் பொதுவாகச் செய்க. இதற்குபகாரமாக வேறெதைச் சேர்க்கினும் சேர்க்க. ஆனால் இதைக் கைவிடற்க.*

*உட்பூசை செய்யும் வழிகளைப் பற்றிப் பலர் பல கூறுப. விளக்குப்போல் பாவனை செய்யென்பாரும், காதிற் கேட்கு மோசையில் கருத்தை நாட்டுக வென்பாரும், சூரியனைப் போற் பாவனைசெய் யென்பாரும் இவைபோல் வேறுபல விளம்புவாறு முளர். ஆனால்* **இறைவனைக்கரசரணாதி அவயவங்களோடு தியானிக்கவென்றே யான் கூறுவேன். இரவு பகலாய் இந்நாட்டம் உங்களிடம் பெருகினால் நீங்கள் பரம யோகிகளாவீர்கள்.** *அநவரதமு முடியாவிடினும், உண்ணுமுன் மூன்று வேளையாவது சிவனைச் சிந்தை செய்மின். நாள்தோறும் விடியற்காலையில் கை கால் சுத்தி செய்து, அரைமணி நேரமேனும் அம்மூர்த்தியை : முறைப்படி நினைமின். அதனால் எல்லா நன்மையு முண்டாம். இவ்விருவகைப் பூசைகளையும் டம்பத்திற்காகச் செய்யன்மின். உள்ளும் புறமும் ஒத்த உண்மை அன்போடு செய்மின். முருகவேள் உங்களெல்லோர்க்கும் தன்னின்னருளை வழங்குமாக!*

**'சைவ மகிமை' என்னும் சொற்பொழிவின் சுருக்கம் முற்றிற்று.**

உ

ஸ்ரீ குமார ஜெயம்

பாம்பன் : ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள் ஜீவிய கால நிகழ்ச்சிக் குறிப்புகள்

(தொகுப்பு : **பழநி சாது தங்கவேல் சுவாமி**)

*ஸ்ரீமத் சுவாமிகள் அவதரித்த வருடம் கி.பி. 1850 1852க்குள்*

| | | | |
|---|---|---|---|
| 1. | சுவாமிகள் இராமேசுவரத்தில் கிருஸ்தவக் கல்விச்சாலையில் சேர்ந்தது. | கி.பி. | 1866 |
| 2. | சுவாமிகளுக்குத்திருமணம் நிகழ்ந்தது. | ” | 1878 |
| 3. | சுவாமிகள் பழநிக்கு யாத்திரையாகப் புறப்பட்ட ஞான்று என் உத்தரவு பெறாது பழநிக்குப் புறப் பட்டனையோ ? என குமாரபிரான் அச்சுறுத்தியது. | ” | 1891 |
| 4. | சண்முக கவசம் - பஞ்சாமிர்த வண்ணம் பாடியது. | ” | 1891 |
| | திருத்தொடையல் பாடியதும் - திருவலங்கற்றிரட்டு முதற்கண்டம் பாட ஆரம்பித்ததும். | ” | 1892 |
| 5. | தென்திசைத் தலயாத்திரை செய்தது. | ” | 1893 |
| 6. | திருவனந்தபுரத்தில் 22 நாட்கள் யாப்பிலக்கணம் படித்தது. | ” | 1893 |
| 7. | திருவலங்கற்றிரட்டு 2-ம் கண்டம் பல்சந்தப் பரிமளம் பாடியது. | ” | 1893 |
| 8. | இராமநாதபுரத்தின் கீழ்த்திசைக்கண் உள்ள பிரப்பன் வலசைக் காட்டில் பூமிக்குள் இருந்து தவம் தொடங்கியது. | ” | 17.3.1894 |
| 9. | பழநி ஸ்ரீ ஞானதண்டாயுதபாணிப் பெருமான், அகத்திய முனிவர் - அருணகிரிநாதருடன் குழந்தை உருவில் காட்சி தந்து ஞானோபதேசம் அருளியது. | ” | 23.3.1894 |
| 10. | பழநிப் பெருமான் உத்தரவுப்படி35-ம் நாள் சித்திரைப் பௌர்ணமி நாளில் தவத்தை முடித்து எழுந்தது. | ” | 20.4.1894 |
| 11. | பிரப்பன் வலசைத் திருப்பதிகம் அருளியது. | ” | 1895 |

| | | | |
|---|---|---|---|
| 12. | பாம்பன் நகரை விட்டு துறவறம் மேற்கொண்டு ஸ்ரீமத்-சுவாமிகள் சென்னை நகரம் சேர்ந்தது. | ” | 1895 |
| 13. | திருப்புலியூர் எனும் சிதம்பரம் அடுத்த வரகூர் குயவன் பேட்டையில் தங்கியிருக்குங் காலத்தில் பரிபூரணானந்த போதம் - தகராலய ரகசியம் இயற்றியது. | ” | 1896 |
| 14. | கும்பகோணம் மகாமக தீர்த்த ஸ்நானத்திற்கு குயவன் பேட்டை திரு.முத்துக்குமாரசுவாமி, வரகூர் திரு. ஆறுமுகப்பத்தர் ஆகியோருடன் சுவாமிகள் சென்று வந்தது. | ” | 1897 |
| 15. | ஆயிரத்துநூறு செய்யுட்களை கொண்ட ‘திருப்பா’ பாடியது. (மூலம் முதற்பதிப்பு 1899) | ” | 1897 |
| 16. | திருநெல்வேலி மாவட்டம் சிக்கநரசையன் கிராமத்தில் தங்கியிருந்தது. | ” | 1898 |
| 17. | அட்டாட்ட விக்கிரக லீலை பாடியது. | ” | 1898 |
| 18. | திருவாசகம் “குழைத்த பத்துக் கூறுமாறு இரண்டு முண்டு” என்பது பற்றி சுவாமிகள் விரிவுரை எழுதியது. | ” | 1899 |
| 19. | ‘திருவலங்கற்றிரட்டு’ முதல் கண்டம் அச்சிட்டது. | ” | 1901 |
| 20. | ‘திருவலங்கற்றிரட்டு’ 2-ம் கண்டம் அச்சிட்டது. | ” | 1902 |
| 21. | வாரணாசி முதலிய வடநாட்டுத் திருத்தல யாத்திரை செய்து ‘காசி யாத்திரை’ பாடியது. | ” | 1902 |
| 22. | 32-வியாசங்களில், வசனரூபமாக இருந்த ‘சீவயாதனா வியாசம்’ திருவனந்தபுரம் ந. சுப்பிரமணியபிள்ளை வேண்டுகோளின்படி கவி வடிவில் பாடியது. | ” | 1902 |
| 23. | சஷ்டி வகுப்பு அருளிச்செய்தது. | ” | 1903 |
| 24. | வேதங்களைக் குறித்த வியாசம் அச்சிட்டது. | ” | 1903 |
| 25. | திருப்புலியூர் கீழ்பால் பின்னத்தூர் திருத்தலம் “மாணிக்கவாசகேஸ்வரம்” இலங்கைப் புத்த மன்னன் புதல்வி ஊமைப் பெண்ணை சைவ சமயாச்சாரியர் ஸ்ரீவாதவூரடிகள் பேசுவித்த திருத்தலம் என்றறிவித்தது. | ” | 1904 |

| | | | |
|---|---|---|---|
| 26. | குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி அச்சிட்டது. | ” | 1905 |
| 27. | சிறு நூற்றிரட்டு அச்சில் பதிப்பித்தது. | ” | 1905 |
| 28. | பின்னத்தூர் வைணவர்கள் சிவதூஷணைப் பிரசுரம் அச்சிட்டு வெளியிட்டது. | ” | 1.9.1906 |
| 29. | வடமொழிகலவாத சுத்தத் தமிழ் செய்யுட்கள் கொண்ட ‘சேந்தன் செந்தமிழ்’ நூல் அச்சிட்டது. | ” | 1906 |
| 30. | ‘பத்துப் பிரபந்தம்’ அச்சிட்டது. | ” | 1907 |
| 31. | பின்னத்தூர் வைணவர்கள் மீண்டும் சிவதூஷணைப் பிரசுரம் வெளியிட்டது . | ” | 28.9.1908 |
| | வைணவர்களின் சிவதூஷணைக்குப் பதில்கூறும் ‘நாலாயிரப் பிரபந்த விசாரம்’ வெளியிட்டது. | ” | 1905 |
| 32. | ‘சைவ சமய சரபம்’ எழுதி அச்சிட்டு வெளியிட்டது. | ” | 1908 |
| 33. | வைணவர்கள் சிவதூஷணைப் பிரசுரங்களைத் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருந்ததால் வைணவர்கள் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஸ்ரீமத் - சுவாமிகள் வழக்குப் பதிவு செய்தது. | ” | 7.11.1908 |
| 34. | வைணவர்கள் 7 பேரில் ஒருவரான இராமானுச தாசர் என்பவர் ஸ்ரீமத்-சுவாமிகள் உள்ளிட்ட சைவர்கள் 3 பேர் மீது வழக்குப் பதிவு செய்தது. | ” | 15.12.1908 |
| 35. | வைணவர்கள் 7 பேரில் ஒருவர் ச.பு. குருசாமி நாயுடு என்பவர் ஸ்ரீமத்-சுவாமிகள் உள்ளிட்ட சைவர்கள் 24 பேர் மீது 2-வது வழக்குப் பதிவு செய்தது. | ” | 11.6.1909 |
| 36. | ஸ்ரீமத்-சுவாமிகள் தொடுத்த வழக்கில் கோர்ட்டார் திரு.பி. குன்சாயன் சாகேப் பகதூர் என்பவரால் அபராதம் ரூபாய் 950-ம் செலவு தொகையும், 13-ம் தேதிக்குள் கட்டத் தவறினால் சிறைக்காவலில் வைக்கப்படுவார்கள் எனத் தீர்ப்புக் கூறப் பெற்றது. | ” | 4.10.1909 |
| 37. | அபராத விபரம் நாகை - நீலலோசனி பத்திரிகையில் பிரசுரமாகிய தேதி. | ” | 22.10.1909 |
| 38. | ஸ்ரீமத்-சுவாமிகள் உட்பட மூவர் மீது இராமானுச தாசர் தொடுத்த வழக்கு விசாரிக்கப்பட்டு திருக் கோவலூர் சப்டிவிஷனல் மாஜிஸ்திரேட் கோர்ட் டாரால் தள்ளப்பட்டது. | ” | 6.12.1909 |

| | | | |
|---|---|---|---|
| 39. | சுவாமிகள் உட்பட 24 பேர் மீது ச.பு. -குருசாமி நாயுடு தொடுத்த வழக்கு விசாரணையாகி மஞ்சக் குப்பம் மாஜிஸ்திரேட் தி.ஸி.ஆர். இராகவாசா ரியார் என்ற வைணவப் பெரியாரால் தள்ளப் பட்ட தேதி. | ” | 31.10.1911 |
| 40. | திருப்பாவில் ‘பெருமிறைக்கவியுரை’ என்ற 14 விசேட அலங்காரங்களைக் கொண்ட விரிவுரை எழுதியது. | ” | 1913 |
| 41. | வழக்கிற்காகக் கோர்ட்டில் தாக்கல் செய்திருந்த சைவ சமய சரபம்- நாலாயிரப் பிரபந்த விசாரம் முதலிய புத்தகங்கள்- பத்திரிகைகள் ஆகிய ரிகார் டுகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டது. | ” | 2.1.1914 |
| 42. | பரிபூரணானந்தபோதம் அச்சிட்டது. | ” | 1914 |
| 43. | சென்னை- இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்த ஜன சபா நிலையத்திற்கு சுவாமிகள் அஸ்திவாரக்கல் நிறுவியது. | ” | 31.1.1915 |
| 44. | ‘தகராலய ரகசியம்’ அச்சிட்டது. | ” | 1916 |
| 45. | சென்னை ‘திராவிடன்’ பத்திரிகையில் சிவ நிந்தனைக் கட்டுரை வெளிவந்தது. | ” | 30.7.1917 |
| 46. | சிவநிந்தனைக் கட்டுரைகளைப் பிரசுரிக்கக் கூடாதென அன்பர்கள் பலரின் கையெழுத்துக் கொண்ட லிகிதம் ஒன்றை தம் சீடர்களோடு ஸ்ரீமத்- சுவாமிகள் சென்று கொடுத்ததும் திராவிடன் பத்திரிகை பொறுப்பாளர் பி. தியாகராசன் செட்டியார் தவறுக்கு வருந்தியதும் ஒப்புக் கொண்டதும். | ” | 17.8.1917 |
| 47. | ‘குமாரஸ்தவம்’ அருளிச் செய்தது. | ” | 1918 |
| 48. | ஸ்ரீமத்- அருணகிரிநாத சுவாமிகள் குருபூஜை உத்தராயணத்து 6-வது பௌர்ணமியில் நடத்துமாறு அன்பர்களுக்குக் கூறியது. | ” | 1918 |
| 49. | ஸ்ரீ சண்முக சகச்சிர நாமார்ச்சனை அச்சிட்டது. | ” | 1919 |
| 50. | திருப்பா திட்ப உரை எழுதியது. | ” | 1920 |
| 51. | திருப்பா திட்பஉரை அச்சிட்டது. | ” | 1921 |

| | | | |
|---|---|---|---|
| 52. | ஸ்ரீமத்- குமாரசுவாமியம் பாடியது. | ” | 1921 |
| 53. | ஸ்ரீமத்-சுவாமிகள் ‘என்னை எவரும் வணங்க வேண்டாம், தரிசிக்க வேண்டும் என்னும் கொள்கையையும் விட்டுவிடல் வேண்டும்” என்று அறிவிப்புச் செய்தது. | ” | 10.4.1921 |
| 54. | ‘சிவ ஞான தீபம்’ திருத்தி அச்சிட்டது. | ” | 1922 |
| 55. | ‘செக்கர்வேள் செம்மாப்பு’ ‘செக்கர்வேளிறுமாப்பு’ இயற்றியது. | ” | 1923 |
| 56. | சுவாமிகளுக்கு கால் முறிவு ஏற்பட்டதும் சென்னை- பெரிய ஆஸ்பத்திரி சேர்ந்ததும். | ” | 27.12.1923 |
| 57. | சுவாமிகள் கால்முறிவு குறித்து திரு. சின்னசாமி ஜோதிடர், திரு. ஞானசாகர முதலியார், திரு. சிவசங்கரத் தம்பிரான் ஆகிய மூன்று அன்பர்களும் சண்முக கவசம் ஓதத் தொடங்கியது. | ” | 28.12.1923 |
| 58. | ஆஸ்பத்திரியில் மயில்கள் காட்சியளித்தது. | ” | 6.1.1924 |
| 59. | ‘அசோக சாலவாசம்’ பாடி அருளியது. | ” | 1924 |
| 60. | சென்னை-நம்புலி அய்யர்தெருவில் சுவாமிகள் மயூர வாகன சேவன திருவிழா தொடங்கியது. | ” | 1924 |
| 61. | சுவாமிகள் ஸ்ரீமத்-குமாரசுவாமியத்திற்கு எழுவாயுரை எழுதியது. | ” | 1.3.1925 |
| 62. | ‘ஸ்ரீமத்-குமாரசுவாமியம்’ அச்சிட்டது. | ” | 1925 |
| 63. | ‘ஸ்ரீ சுப்ரமணிய வியாசம்’ அச்சிட்டது. (இரண்டாம் பதிப்பு 1925) | ” | 1899 |
| 64. | 10.4.1921ல் என்னை எவரும் வணங்கக் கூடாது தரிசிக்க வேண்டுமென்ற கொள்கையை விட்டுவிடல் வேண்டுமென்று அறிவிப்புச் செய்திருந்ததை அன்பர்கள், சீடர்கள் வேண்டுதலுக்கு இரங்கி அறிவிப்பை மாற்றிக் கொண்டது. | ” | 1925 |
| 65. | சுவாமிகள்- கோயம்புத்தூர்- நீலகிரி போய் வந்தது. | ” | 1926 |
| 66. | வில் சாசனம் எழுதிப் பதிவு செய்தது. | ” | 17.7.1926 |
| 67. | காடிசில் என்னும் வில் அனுபந்த சாசனம் எழுதியது. | ” | 19.12.1927 |

| | | | |
|---|---|---|---|
| 68. | காடிசில் வில் அனுபந்த சாசனம் பதிவு செய்தது. | ” | 21.12.1927 |
| 69. | கர்நாடக மாநிலம் - பெங்களூர் நகரம் சென்று தங்கியிருந்தது. | ” | 29.5.1928 |
| 70. | பெங்களூர் நகரிலிருந்து சென்னை நகரம் வந்து சேர்ந்தது. | ” | 15.7.1928 |
| 71. | சென்னை - நம்புலி அய்யர் தெரு சைவத் திருவாளர் பி. ஜெகந்நாத முதலியார் இல்லத்தின் மேல்மாடியில் பாம்பன் : ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் 80-வது வயதில் செவ்வேட்பரமன் திருவடியில் சித்தாந்த அத்துவித முக்தியடைந்த நாள். | ” | 30.5.1929 |
| 72. | சென்னை - திருவான்மியூர் - ஸ்ரீ பால்வண்ண மருந்தீஸ்வரர் திருக்கோயில் வடபால் திருவளர் மயூரபுரத்தில் சமாதித் திருக்கோயில் கொண்டருளியது.” | | 31.5.1929 |



